

# இளைய இளைஞர்களின் சக்திகளை விடுவித்தல்





ரூஹி பயிற்சிக்கழகம்



நூல் 5

# இளைய இளைஞர்களின் சக்திகளை விடுவித்தல்

ரூஹி பயிற்சிக்கழகம்

இத்தொடரிலுள்ள நூல்கள்:

ரூஹி பயிற்சியகத்தினால் வடிவமைக்கப்பட்ட தொடரிலுள்ள தற்போதைய தலைப்புகள் கீழே வழங்கப்பட்டுள்ளன. இந்த நூல்கள் தங்களின் சமூகங்களுக்குப் பணிபுரிவதற்கு இளைஞர்கள் மற்றும் முதியோர்களின் திறனாற்றலை மேம்படுத்துவதற்கான முறைமையான முயற்சியில் பயன்படுத்தப்படும் பிரதான தொடரின் பயிற்சிகளில் பயன்படுத்தப்படுவதை நோக்கமாகக் கொண்டுள்ளன. ரூஹி பயிற்சியகம் இத்தொடரின் மூன்றாவது நூலிலிருந்து கிளைக்கின்ற சில பயிற்சிகளை உருவாக்கி வருகின்றது; அவையும் இப்பட்டியலில் காண்பிக்கப்பட்டுள்ளன. (சேவைக்)களத்தில் அனுபவம் மேம்பாடு காண்கையில் இப்பட்டியல் மாற்றம் காணும் என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டும், மற்றும் உருவாக்கத்தில் இருக்கும் அதிகரித்துவரும் எண்ணிக்கையிலான பாடத்திட்ட கூறுகள் பரவலாகத் கிடைத்திடும் ஒரு கட்டத்தை அடையும் போது அவையும் இப்பட்டியலில் சேர்த்துக்கொள்ளப்படும்.

| | |
|---|---|
| நூல் 1 | *ஆன்மாவைப் பற்றி பிரதிபலித்தல்* |
| நூல் 2 | *சேவைக்காக எழுதல்* |
| நூல் 3 | *சிறுவர் வகுப்புகளுக்குப் போதித்தல், கிரேட் 1* |
| | *சிறுவர் வகுப்புகளுக்குப் போதித்தல், கிரேட் 2 (கிளை பயிற்சி)* |
| | *சிறுவர் வகுப்புகளுக்குப் போதித்தல், கிரேட் 3 (கிளை பயிற்சி)* |
| | *சிறுவர் வகுப்புகளுக்குப் போதித்தல், கிரேட் 4 (கிளை பயிற்சி)* |
| நூல் 4 | *இரட்டை அவதாரங்கள்* |
| நூல் 5 | *இளைய இளைஞர்களின் சக்திகளை விடுவித்தல்* |
| | *ஆரம்ப உந்தம்: நூல் 5'இன் முதல் கிளை பயிற்சி* |
| | *விரிவடையும் வட்டம்: நூல் 5'இன் இரண்டாவது கிளை பயிற்சி* |
| நூல் 6 | *சமயத்தைப் போதித்தல்* |
| நூல் 7 | *ஒரு சேவை பாதையில் ஒன்றாகப் நடப்பது* |
| நூல் 8 | *பஹாவுல்லாவின் திருவொப்பந்தம்* |
| நூல் 9 | *ஒரு வரலாறு சார்ந்த முன்னோக்கைப் பெறுதல்* |
| நூல் 10 | துடிப்பான சமூகங்களை நிர்மாணித்தல் |
| நூல் 11 | *லௌகீக வழிமுறைகள்* |
| நூல் 12 | *குடும்பமும் சமூகமும்* |
| நூல் 13 | *சமுதாய நடவடிக்கையில் ஈடுபடல்* |
| நூல் 14 | *பொது சொல்லாடல்களில் பங்கு பெறுதல்* |

பதிப்புரிமை © 2009, 2025 ரூஹி அறக்கட்டளை, கொலம்பியா
அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை. பதிப்பு 1.1.1.PP ஏப்ரல் 2009
பதிப்பு 2.1.2.PE ஜூன் 2025

Originally published in English as *Releasing the Powers of Junior Youth*
பதிப்புரிமை © 2006, 2014, 2022 - ரூஹி அறக்கட்டளை, கொலம்பியா
அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை. பதிப்பு 1.1.1.PP ஏப்ரல் 2014
பதிப்பு 2.1.1.PE ஜூலை 2022
ISBN 978-628-95102-1-8

ரூஹி பயிற்சிக்கழகம்
காலி, கொலம்பியா
மின்னஞ்சல்: instituto@ruhi.org
வலைத்தளம்: www.ruhi.org

# உள்ளடக்கம்

பயிற்சியாளருக்கான சில சிந்தனைகள் ........ v
வாழ்வின் இளவேனிற்காலம் ........ 1
வாக்குறுதிக்கான ஒரு காலம் ........ 57
ஓர் உயிர்ப்பூட்டுனராகப் பணிபுரிவது ........ 107

## பயிற்சியாளருக்கான சில சிந்தனைகள்

ரூஹி பயிற்சியகம், 1970-களில் அதன் உருவாக்கத்தின் ஆரம்ப காலத்திலிருந்தே, 12 வயது முதல் 15 வயது வரையிலான, சமுதாயத்தின் ஒரு விசேஷ பகுதியினரைப் பிரதிநிதிக்கும் "இளைய இளைஞர்" என குறிப்பிடப்படும் இளைஞர்களுக்கு அதன் கல்வியல் நடவடிக்கைகளின் மூலம் சேவை புரிந்திட முயன்றுவருகின்றது. இந்த வயது நெடுக்கத்திலுள்ள பலரின் இலட்சியம் மற்றும் ஆற்றலைக் கண்ட பயிற்சியகம், வாழ்க்கையின் பலக்கியங்களை எதிர்கொள்ளவும், எங்கிலும் வலுவடைந்துவரும் தார்மீக சீர்கேடுகளின் ஆற்றல்களை எதிர்த்துப் போராடவும், சமுதாய மாற்றத்திற்கான முகவர்களாகவும் ஆகிட, குறிப்பிட்ட எண்ணிக்கையுடைய கருப்பொருள்கள் மற்றும் கருத்தாக்கங்களை ஆராய்வதற்கான வாய்ப்புகளை அவர்களுக்கு வழங்குவதன் முக்கியத்துவம் குறித்து பயிற்சியகம் உறுதியாக நம்பியது. அடுத்த சில தசாப்தங்கள் அபிவிருத்தி சார்ந்த, மிகவும் குறிப்பிடத்தக்க வகையில் கல்வியறிவு சார்ந்த, துறைகளில், பலதரப்பட்ட பின்னணிகளிலிருந்து இளம் இளைஞர்களுக்கு சேவையாற்றுவதில் உலகளாவிய அனுபவத்தின் மூலம் அதிகரித்திடும் அளவில் பயன்பெற்ற செயல்பாட்டிற்கும், பிரதிபலிப்பிற்குமான காலத்தை உள்ளடக்கியது. வருடம் 2000-த்தின் போதெல்லாம், இளம் இளைஞர்களின் ஆன்மீக சக்தியளிப்பு குறித்த கருத்தாக்கம் வெளிப்பட்டிருந்தது, அதில் மனிதகுலத்திற்கான சேவையில் அவர்களது அறிவார்ந்த மற்றும் ஆன்மீக சக்திகளை வெளியிடும் நோக்கம் கொண்ட மூன்று-வருட திட்டத்தின் பல்வேறு பரிமாணங்கள் அடங்கியிருந்தது.

ருஹி பயிற்சியகத்தின் மற்ற முனைவுகள் போலவே, இளைய இளைஞர் ஆன்மீக சக்தியூட்டும் செயல்திட்டம் தொலைதூர கல்வி என்ற முறைமையில் அடித்தளங்களில்(grassroots), மூன்று பிரதான அம்சங்களுடன் வழங்கப்படுகிறது: அவை "இளைய இளைஞர் குழு", "உயிர்ப்பூட்டுபவர்", மற்றும் சில குறிப்பிட்ட உபகரணங்களின் தொகுப்பு ஆகியவை ஆகும். பயிற்சியகத்தின் பிரதானத் தொடரில் ஐந்தாவதாக விளங்கும் *இளைய இளைஞர்களின் சக்திகளை வெளியிடுதல்* என்னும் இந்த நூல், கிராமங்களிலும் அல்லது அண்டைப்புறங்களிலும் இளைய இளைஞர் ஆன்மீக சக்தியளிப்பு திட்டத்தை வழங்கிட விரும்புவோருக்கு உதவிடுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. "உயிர்ப்பூட்டுபவராக"(இந்த பெயரே அந்த சேவை நடவடிக்கையின் இயல்பை பற்றி கூறிவிடுகிறது) சேவைபுரிய தேவைப்படும் செயல்திறன்களை தனிநபர்கள் உருவாக்கிக்கொள்ள உதவிடும், பிரதானத் தொடரிலிருந்து கிளைத்திடும் பயிற்சித் தொடர்களில் இது முதலாவதாகும். இந்த நூலைப் பயிலும் எல்லாருமே (குறிப்பிட்ட) இந்த சேவைக்களத்தில் நுழைந்திட மாட்டார்கள் என்றாலும், அதில் கவனம் செலுத்தப்படும் கருப்பொருள்களிலிருந்து அகத்தூண்டல் பெறுவார்கள் எனவும், இளைய இளைஞர்களின் மேன்மையான இலட்சியங்களுக்குத் தேவையான கவனத்தை வழங்க வேண்டியதன் முக்கியத்துவத்தைக் கண்டுகொள்ளவும் செய்வார்கள் எனவும் எதிர்ப்பார்க்கப்படுகின்றது—இது, இளையோர்களின்பால், இன்று பல சமுதாயங்களில் நிரந்தரமாகிவிட்டவற்றிலிருந்து மிகவும் வேறுபட்ட மனப்பான்மைகளை ஊக்குவிக்கும் கலாச்சாரத்தை உருவாக்குவதன் ஓர் இன்றியமையா அம்சமாகும். பிறகு, இத்தகைய ஒரு சூழ்நிலையில், திட்டத்தில் ஈடுபடாதவர்கள் கூட, அதன் மலர்ச்சியுறும் முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதற்காகன வழிகளைக் காண்பர்.

நூல் 5ன் பயிற்சியாளர்களாக செயல்படுபவர்கள் அங்கீகரிக்க வேண்டியது என்னவெனில், இந்த நூலின் பங்கேற்பாளர்களில், பல இளைஞர்கள் தங்களது பதின்ம வயதின் இறுதியில் அல்லது இருபதுகளின் ஆரம்பத்தில் இருந்து, உயிர்ப்பூட்டுபவராக சேவையாற்றும் விருப்பத்துடன் மற்றும் அதற்கு தேவைப்படும் திறனாற்றல்களை உள்ளே வைத்துக்கொண்டும் பிரதான வரிசையில் நுழைந்திருப்பார்கள். சிலர் தங்களை விட இளைய தலைமுறைக்கு கல்வியளிப்பதில் தங்களது பங்கு

குறித்து தங்களது சகாக்களுடன் நடந்த உரையாடல்களின் விளைவாக சமயத்துடன் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டிருப்பார்கள். மற்றவர்கள் தாங்களே இளைய இளைஞர்களாக இந்த ஆன்மீக சக்தியளிப்பு செயல்திட்டத்தை படித்து பிறகு நூல் 1ஐ படிக்க முனைத்திருப்பார்கள். பயிற்சியக செயல்முறைக்குள் எப்படி நுழைந்திருந்தாலும், இப்போது தங்களது கிராமம் அல்லது அண்டைபுரத்தின் மேம்பாட்டிற்காக அர்ப்பணம் கொண்ட வளர்ந்து வரும் தனிநபர்களின் கருவில் ஒரு அங்கமாகி விட்டார்கள், அதனால் இந்த கண்ணோட்டத்தில், அவர்கள் நூல் 2ல் வழங்கப்பட்டிருக்கும் சேவை செயலான - சமயத்தின் மையக்கருத்துக்களை குடும்பங்களுடன் ஆராய இல்லங்களை விஜயம் செய்யும் அனுபவத்தை வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த மையக்கருவின் ஒரு அங்கமாக இருப்பதால், இதில் இருக்கும் பலர் தங்களது உள்ளூரில் நடக்கும் ஒரு இளைய இளைஞர் குழுவுடனாவது நெருக்கமாக தொடர்பு கொண்டு, அந்த உயிர்ப்பூட்டுபவர் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ள அவருக்கு துணை புரிந்து, திட்டத்துடன் தொடர்புடைய கருத்தாக்கங்கள் மற்றும் அணுகுமுறைகளை கலந்துரையாட பெற்றோர்களை கிரமமாக விஜயமளிப்பதில் உயிரிப்பூட்டுபவருடன் சேர்த்துக் கொண்டிருப்பார்கள். இத்தருணத்தில் அவர்கள் நூல்கள் 3 மற்றும் 4 படித்ததன் விளைவாக, பஹாய் போதனைகளை பற்றிய சில அறிவை அனைவரும் பெற்றிருப்பார்கள், மற்றும் தங்களது நண்பர்கள் அண்டையர்களுடன் அர்த்தமுள்ள உரையாடலைகளை ஆரம்பித்து தக்கவைப்பதற்கு தேவையான திறன்கள், ஆற்றல்கள், மனப்பான்மைகள் மற்றும் ஆன்மீக பண்புகளை வெளிப்படுத்துவார்கள். இந்த இடங்களில், அவர்கள் நூல் 5ஐ அடைந்தவுடன், ருஹி பயிற்சியகத்தின் மைய செயல் வரிசையின் உள்ளூர ஒன்றியிருக்கும், சேவை பாதையில் நடப்பதன் மூலம் கருத்தரித்திருக்கும், திறனாற்றல்-மேம்படும் செயல்முறையின் முக்கியத்துவம் நன்கு காணப்படுகிறது. ஒரு இளைய இளைஞர் குழுவை மூன்று வருட ஆன்மீக சக்தியளிப்பு திட்டத்திற்குள் ஈடுபடுத்துவது என்பது கடினமான சேவை நடவடிக்கையாகும், அதனால் உயிர்ப்பூட்டுபவர்களின் முளைவிடும் முயற்சிகள், எவ்வளவு சிறியதாக இருப்பினும், இதுவரை அந்த பாதையில் படிப்படியாக வளர்த்துக் கொண்ட திறனாற்றலை சார்ந்திருக்கும்.

"வாழ்வின் இளவேனிற்காலம்" எனும் இந்த நூலில் முதல் பாடப்பிரிவு சமயத்தின் திருவாசங்களில் குறிப்பிடப்பட்டுள்ள, இளமைப் பருவத்தை தனிசிறப்பிக்க வேண்டிய மனப்பான்மைகளின் மீது கவனம் செலுத்துகின்றது. இங்கு மேற்கொள்ளப்படும் ஆய்வின் மூலம், ஒவ்வொரு இளைய தலைமுறையும் இறைவனின் சமயத்திற்கும் மனிதகுலத்திற்குமான சேவையில் பங்களிப்பது பற்றிய ஒரு தொலைப்பார்வை படிப்படியாக மடிப்பவிழ்க்கிறது. பங்கேற்பாளர்கள் இந்த பாடப்பிரிவை படித்து வெளிவரும் போது, இத்தகைய ஒரு மடிப்பவிழும் தொலைப்பார்வையினால் தூண்டப்பட்டிருப்பதை பயிற்சியாளர் நிச்சயிக்க வேண்டும், ஏனெனில் இந்த தொலைப்பார்வை தான் இளைய இளைய ஆன்மீக சக்தியளிக்கும் செயல்திட்டத்தை பற்றி அறிவித்து,அதன் நடவடிக்கைகளின் இளையவர்களை ஈடுபடுத்தும் அவர்களது முயற்சிகளுக்கு திசையை கொடுக்க வேண்டியிருக்கும்.

உண்மையில், இப்பாடப்பிரிவானது பஹாய் போதனைகளில் முதிர்ச்சியின் நுழைவாயிலாகப் பார்க்கப்படும் 15 வயதில் மூன்றாண்டுப் பாடத்திட்டத்தை முடித்து – தங்களின் இளமைக்காலத்தின் "முதன்மை" பருவத்தில் நுழையும்  இளம் பருவத்தினர் என்னென்ன குணாதிசயங்களை வளர்த்துக்கொள்வார்கள் என்று அவர்கள் எதிர்பார்க்கிறார்கள் என்று பங்கேற்பாளர்களை கேட்பதன் வாயிலாக ஆரம்பமாகிறது. பயிற்சிக்குறிப்பின் நோக்கமானது, திட்டத்தின் விவரங்களை ஆராய்வதோ அல்லது இளைய இளைஞர்களின் திறன்களை, முறையே நூலின் மூன்றாவது மற்றும் இரண்டாவது பாடப்பிரிவுகளில் மேற்கொள்ளவிருக்கும் ஆய்வுகளைப் பற்றி சிந்திப்பதோ அல்ல என்பதை ஆசிரியர் புரிந்து கொள்ள வேண்டும்.மாறாக, கடவுளின் சமயத்தை முன்னிறுத்தி, நாகரிகத்தின்

முன்னேற்றத்திற்காகத் தம்மை அர்ப்பணிக்கின்ற அடுத்த தலைமுறையினருக்கிடையே ஓர் இடத்தை எடுத்துக்கொள்ளத் தயாராக இருக்கும் ஓர் இளைஞனின் பிம்பத்தை ஊடனடியாக கவனத்திற்குக் கொண்டு வருவதே இதன் நோக்கமாகும்.பங்கேற்பாளர்களுக்கு, இப்பயிற்சிக் குறிப்பானது, அவர்கள் விரைவில் மேற்கொள்ளவிருக்கும் செயல்பாட்டின் தன்மை குறித்த அவர்களின் மெச்சுதலை அதிகரிப்பதுடன் அதனைத் தொடர்ந்து வரும் அவர்களின் கலந்துரையாடல்களுக்கு இன்னும் ஆழமான அர்த்தத்தினை வழங்கிடும்.

இந்த பின்னணியில், பாடப்பிரிவானது இளமைக் காலகட்டம் தொடர்பான சில கருத்துக்களை தெளிவுபடுத்தும் திருவாசகங்களில் இருந்து பல பத்திகளை முன்வைக்கிறது. பாடப்பிரிவின் ஆரம்பத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட கருத்துக்களில் சேவை, கல்வி மற்றும் இளம் மனதை சில நேரங்களில் ஆக்கிரமிக்கக்கூடிய எதிர்காலத்திற்கான ஆயத்தம் ஆகியவற்றுக்கு இடையேயான தொடர்புறவு உள்ளது.வாழ்க்கையை ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது, அதன் பல்வேறு அம்சங்கள், ஒன்றுக்கொன்று முரண்படுவதைத் தவிர்த்து, ஒன்றையொன்று வலுப்படுத்த உதவும் என்பது தெளிவாகிறது. பிரிவு 10 இல் உள்ள பயிற்சிக் குறிப்பானது, நடைமுறை அடிப்படையில் இதன் பொருள் என்ன என்பதைக் கருத்தில் கொள்ள பங்கேற்பாளர்களுக்கு உதவும். அவர்கள் பயிற்சிக் குறிப்பினை இயந்திரத்தனமாகச் செய்து, சில வாழ்க்கைத் தேர்வுகள் மற்றும் சிந்தனை முறைகள் எப்படி கற்பனையான இருவேறுபாடுகள் மற்றும் அவை உருவாக்கும் பதட்டங்களுக்கு வழிவகுக்கும் என்பதைப் புரிந்து கொள்ளத் தவறிவிடாமல், கவனமாக இருக்க வேண்டும்.

இந்த பாடப்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள மற்றொரு கருத்தாக்கம், இந்த பிரிவின் நோக்கங்களில் மையமாக இருப்பது, இருமடங்கு தார்மீக நோக்கமாகும். பங்கேற்பாளர்கள், நிச்சயமாக முந்தய நூல்களை படித்ததன் மூலம் இந்த கருத்தாக்கத்தை பற்றி பரிச்சயமாக இருப்பார்கள். இங்கு இன்னும் ஆழமாக அது ஆராயப்படுகிறது, அதனால் அதன் ஆராய்விற்காக அர்ப்பணிக்கப்பட்ட பகுதிகளுக்கு அவர்கள் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும், அந்த பகுதிகள் முதலில், பஹாய் திருவாசகங்களில் குறிப்பிடப்பட்டுள்ளவற்றை கொண்டு இரட்டை தன்மைமாற்றம் - அதாவது தனிநபர் அளவில் மற்றும் சமுதாயத்தின் கட்டமைப்பு அளவில்- பற்றிய விவரணையுடன் தொடங்குகிறது. இதன் தொடர்பில், இளைய மக்கள் தங்களது சொந்த அறிவார்ந்த மற்றும் ஆன்மீக வளர்ச்சிக்கு பொறுப்பெடுத்துக்கொண்டு சமுதாயத்தின் வளர்ச்சிக்கு நிலைத்திருக்கும் பங்களிப்புகளை வழங்க வேண்டும் என்ற உறுதியான தார்மீக உணர்வால் நிரம்பியிருக்க வேண்டும் என்று இந்த பிரிவு பரிந்துரைக்கிறது. மேலும், தார்மீக நோக்கத்தின் இந்த இரண்டு அம்சங்களும் ஒன்றையொன்று ஆதரிக்கும் அடிப்படையில் பிரிக்கமுடியாத அம்சங்களாகும், ஏனெனில் தனிநபர்களின் செந்தரங்கள் மற்றும் நடத்தைகள் அவர்களது சுற்றுசூழலை வடிவமைக்கும், அதே போல, அவர்களது செந்தரங்கள் மற்றும் நடத்தைகள் சமுதாய கட்டமைப்புகள் மற்றும் செயல்முறைகளால் வார்க்கப்படும். பகுதி 16ன் பயிற்சி குறிப்பில் ஆராயப்படும் இந்த கூற்றின் தாத்பரியங்களை மதித்துணர்வதில் சில பங்கேற்பாளர்களுக்கு சவாலாக இருக்கும்.ஒருபுறம், தனிநபர்த்துவத்தின் மீதும் தனிநபர் சுதந்திரத்தின் மீதும் அதிகப்படியான முக்கியத்துவத்தை வைக்கிறது, மறுபுறம், சமுதாய விசைகள் மற்றும் அரசியல் செயல்முறைகள் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை அதிகமாக அழுத்தம் கொடுக்கும் - ஓங்கியிருக்கும் உலகப்பார்வைகளானவை, புலப்படாத வகையில், மெய்நிலையை திரித்து நம்பிக்கைகளை மற்றும் சிந்தனை மாதிரிகளை வடிவமைத்து விடுகிறது. ஒரு குழுவுடன் இந்த பயிற்சி குறிப்புகளை மேற்கொள்ளும் போது, பயிற்சியாளர் இந்த பயிற்சி குறிப்புகள் வழங்கும் சவால்களை பற்றி விழிப்போடு இருந்து, தேவைப்பட்டால், அந்த பகுதியில் இருக்கும் பாதுகாவலரின் வாக்கியத்துடன் ஒத்திசைவில்லாத கூற்றுகளை கண்டறிய, அந்த குழுவிற்கு துணை புரிய வேண்டும். அதனால்,

சேவைகளத்தில் மட்டுமே இத்தகைய நோக்கம் நிறைவேற்றப்படும் என்று முன்மொழிந்து, இருமடங்கு நோக்கம் என்ற கருத்தாக்கத்தின் ஆராய்வு முடிவிற்கு வரும். இந்த பிரிவு வாதிடுவது என்னவெனில், சேவை தனிநபர் உள்ளாற்றலின் நிறைவேற்றத்தை சமுதாய வளர்ச்சியுடன் ஒன்றிணைகிறது.

“வாக்குறுதிக்கான ஒரு காலகட்டம்” என்பது இரண்டாவது பாடப்பிரிவின் தலைப்பாகும், மற்றும் அது இளைய இளைஞர் மற்றும் அவர்களின் மகத்தான சாத்தியங்களின்பால் கவனம் செலுத்துகின்றது. இளைய இளைஞர்கள் என்பார், அதன் குறிப்பிட்ட சொந்தப் பண்புக்கூறுகளுடைய ஒரு தனித்துவமான வயதுத் தொகுதியைச் சார்ந்தவர்கள் என்பதை இந்த பிரிவை படிப்போரின் மனதில் பலப்படுத்த விழைக்கிறது — எனினும் இந்த பண்புக்கூறுகள் சந்தேகமின்றி குறிப்பது என்னவென்றால், இதனை தவறாக புரிந்துக் கொண்டால் அவர்கள் குழந்தைகளாக நடத்த அனுமதித்து விடும், அதே போல அவர்களை முதியவர்கள் போல நடந்து கொள்ள உற்சாகபடுத்துவது மேலோட்டமான ஒன்றாக மாறிவிடும், இதனை நாம் பல இடங்களில் காண முடிகிறது. சமயத்தின் திருவாக்குகளினால் வடிவமைக்கப்பட்டும், இளம் ரூஹுல்லா போன்ற உதாரணங்களினால் ஊட்டம் பெற்றுமுள்ள, இந்த வயதுத் தொகுதியினரின்பால் பஹாய் சமூகம் கொண்டுள்ள அணுகுமுறையானது, தற்போது நிலவுகின்ற அனுமானங்களின் அடிப்படையில் அமைந்துள்ள, அவற்றுள் பல கலகம் மற்றும் நெருக்கடி குறித்த அகக்காட்சிகளை பரப்பும் அணுகுமுறைகளிலிருந்து இப்பாடப்பிரிவு முற்றிலும் வேறுபட்டதாகும் என்பதை தெளிவுபடுத்துவதற்கு எதிர்பார்ப்பு கொண்டுள்ளது.

மேற்கூறிய இலக்குகளை மனதில் கொண்டு, பாடப்பிரிவானது இளமைப் பருவத்தின் இயல்பினை ஒரு நோட்டம் விட்டு, பின்னர் இந்த வயது வரம்பில் உள்ள இளைஞர்களின் அதிகரித்து வரும் விழிப்புணர்வை சரியான முறையில் வழிநடத்திடும் சவால் குறித்து சிந்திக்குமாறு பங்கேற்பாளர்களைக் கேட்கிறது.இதில், பாடப்பிரிவானது ஒரு எச்சரிக்கையை எழுப்புகிறது: இதுபோன்ற முயற்சிகள் சில திட்டங்களின் **புதைகுழியினைத்** தவிர்க்க வேண்டும், இது வாழ்க்கையின் இந்த உருவாக்கும் கட்டத்தில் உள்ளவர்களின் அதிகரிக்கும் சுய விழிப்புணர்வை மற்றவர்களுக்கு தன்னலமற்ற சேவையை நோக்கி செலுத்துவதற்குப் பதிலாக, அதை “சுயமாக இயக்கவும். "மற்றும், துரதிர்ஷ்டவசமாக, இறுதியில் அவர்களை "உறுதியான சுயத்தின்" கைதிகளாக ஆக்குகிறது. 5 முதல் 9 வரையிலான பிரிவுகள், பஹாய் திருவாசகங்களில் இருந்து தொடர்புடைய மேற்கோள்களின் தொடர் மூலம் பங்கேற்பாளர்களை இந்தப் புதைகுழியின் சில நுட்பமான ஆபத்துக்களைப் பற்றி எச்சரிக்க முயல்கின்றன. ஆரம்பகால இளம் பருவத்தினரின் வாழ்க்கையில் சமூகச் சூழலின் விளைவுகளை இந்தப் பாடப்பிரிவானது பரிசீலிக்கிறது, பரஸ்பர ஆதரவின் சூழலாக "இளைய இளைஞர் குழு" என்கிற கருத்தாக்கத்தை அறிமுகப்படுத்துகிறது, மேலும் அத்தகைய குழுக்களின் உயிர்ப்பூட்டுபவர்களாக சேவை செய்ய எழும் அனைவராலும் கருதப்படும் தோரணையை வரையறுக்கிறது.

“உயிர்ப்பூட்டுபவராக சேவை செய்தல்”, என்கிற இந்த மூன்றாவது பாடப்பிரிவானது, ஒரு வகையில், இரண்டாம் பாடப்பிரிவு முடிவடைகிற இடத்தில் இருந்து தொடர்ந்து இந்த சேவை செயலின் தன்மையை பங்கேற்பாளர்களுக்கு மேலும் அறிமுகப்படுத்த முயற்சிக்கிறது. இளைய இளைஞர் குழுவின் சில அம்சங்களை மதிப்பாய்வு செய்த பிறகு, பாடப்பிரிவானதுதிட்டத்தின் மையமாக விளங்கும் உபகரணங்கள் பற்றிய விவாதத்தை மேற்கொள்கிறது. பாடப்பிரிவின் பெரும்பகுதியானது இந்த விவாதத்திற்குக் கொடுக்கப்பட்டுள்ளது, மேலும் பயிற்சியாளர் அதன் நோக்கத்தை நன்கு புரிந்து கொள்ள வேண்டும், இது பங்கேற்பாளர்களுக்கான உபகரணங்களை விவரிப்பது மட்டுமல்ல, ஆன்மீக சக்தியூட்டும் செயல்முறை எதை உள்ளடக்கியுள்ளது, மற்றும் உளபகரணங்கள் எவ்வாறு அதன் இயக்கவியலை வளர்த்திட முயல்கிறது என்பது குறித்த நுண்ணறிவை அவர்களுக்கு வழங்குகிறது.

உபகரணங்களிலிருந்து எடுபகுதிகள் ஆரம்பம் முதல் கடைசிவரையில் சேர்க்கப்பட்டுள்ளன, ஆனால் இரண்டு உரைகள் முழுமையாக பகுப்பாய்வு செய்யப்படுகின்றன-*உறுதிப்பாட்டின் தென்றல்கள்* மற்றும் *நம்பிக்கையின் உள்ளாற்றல்*- பங்கேற்பாளர்கள் கையில் இவற்றின்பிரதிகள் இருக்க வேண்டும்.

ஆன்மீக சக்தியூட்டல் என்பது, பொதுவாக, ஆசிரியர்களின் அதிகப்படியான சிந்தனை மற்றும் பிரதிபலிப்பினைக் கோருகிறது. உண்மையில், பயிற்சியகத்தின் படிப்புகளால் இயக்கப்படும் கல்வி செயல்முறையானது, இறுதிப் பகுப்பாய்வில், தார்மீக மற்றும் ஆன்மீக சக்தியூட்டுவதற்கான ஒரு வழிமுறையாகக் கருதப்படுகிறது, இதன் மூலம் அனைத்து தரப்பு மற்றும் ஒவ்வொரு பின்னணியிலும் உள்ள மக்கள் எழுச்சி பெறவும், ஒரு சிறந்த உலகினை உருவாக்குவதில் பங்கேற்கவும் முடியும். இங்கு பயன்பாட்டில் உள்ள சக்தியின் கருத்தாக்கமானது, ஆதிக்கம் செலுத்தும் நோக்கத்துடன் அல்லது ஒருவரின் விருப்பங்கள் மற்றும் கோரிக்கைகளுக்கு இணங்க மற்றவர்களைத் தூண்டும் நோக்கத்துடன் தொடர்புபடுத்தும் நடைமுறையில் உள்ள வரையறைகளிலிருந்து பெரிதும் வேறுபடுகிறது. மாறாக, மனித ஆவியின் ஆற்றல்களின் வழிந்தோடலுக்கான வடிகால்களாக மாறுவதே இதன் நோக்கமாகும்: ஒற்றுமை, அன்பு, பணிவான சேவை, தூய செயல்கள் ஆகியவற்றின் ஆற்றல். அத்தகைய செயல்முறையை முன்னெடுப்பதற்குத் தேவையான இயக்கவியலுக்கு எவ்வாறு பங்களிப்பது-இல்லை, விரைவுபடுத்துவது-பயிற்சியாளராக சேவையாற்றும் செயலுக்கு மையமாகும், மேலும் பாடநெறிகளைப் படிப்பதில் குழு குழுவாக ஈடுபடும் அனுபவத்துடன், ஒவ்வொரு ஆசிரியரும் சம்பந்தப்பட்ட உண்மையான புரிதலை வளர்ப்பதைக் காட்டிலும் சக்திவாய்ந்திராத பல ஊடாடும் காரணிகளைப் பற்றிய ஒரு கணநேரக் கண்ணோட்டத்தைப் பெற முடியும்.

இந்தப் புத்தகத்தில், நிச்சயமாக, ஆசிரியரின் முன் உள்ள கவலையானது, அடுத்த தலைமுறையை நோக்கியும் அத்துடன் இளம் பருவத்தினருக்கு அவர்களின் வெளிப்பட்டு வரும் ஆற்றல்களை பலனளிக்கும் வகையில் செயல்படுத்தும் கல்வி செயல்முறையின் தன்மையை நோக்கியும் மேலும் விரிவடைகிறது. இந்த செயல்முறையின் மையத்தில் சிந்தனை மற்றும் வெளிப்பாட்டின் பரஸ்பர வலுவூட்டும் சக்திகள் உள்ளன. இளமைப் பருவத்தில் வியத்தகு முறையில் அதிகரிக்கும் சுருக்க சிந்தனையில் ஈடுபடும் மனதின் ஆற்றலானது இளைய இளைஞர்களிடம் வலுவடைகிறது, அவர்கள் தங்களைச் சுற்றியுள்ள உலகத்தைப் பற்றிய பகுப்பாய்வு செய்யவும் மற்றும் சமூகத்தின் மீது செயல்படவும் அவர்களின் ஆரம்ப முயற்சிகளில் தொடர்புடைய அறிவியல், தார்மீக மற்றும் ஆன்மீகக் கருத்துக்களைப் பயன்படுத்தக் கற்றுக்கொள்கிறார்கள். இருப்பினும், எவ்வளவு முக்கியமானதாக இருந்தாலும், பகுத்தறிவு பகுப்பாய்வின் சக்திக்கு ஆன்மீக உணர்வின் தேவை உள்ளது. அதன் மூலம், மன ஆற்றலைப் பயன்படுத்துவதன் மூலம் மட்டும் கிடைக்காத புரிந்துணர்வின் பாதைகள் திறக்கப்படுகின்றன. எனவே, இளைய இளைஞர்கள், ஆன்மீக சக்திகளை அடையாளம் கண்டுகொள்வதற்கும், அவர்கள் சரியான தார்மீகத் தேர்வுகளைச் செய்ய வேண்டுமானால், அவர்கள் எதிர்கொள்ளும் சூழ்நிலைகளில் ஆன்மீகக் கோட்பாடுகளை அடையாளம் காண்பதற்கும் உதவ வேண்டும்.ஒரு நபரின் எண்ணங்கள் மற்றும் நடத்தையை நிர்வகிக்கும் தார்மீக அமைப்பானது அவன் அல்லது அவள் தனது சிந்தனையை வெளிப்படுத்தும் மொழியின் கட்டமைப்போடு நெருக்கமாக இணைக்கப்பட்டுள்ளது என்பது கற்பனையான கல்விச் செயல்முறையின் அடிப்படைக் கருத்தாகும். நூல் 5 இன் முதல் இரண்டு பாடப்பிரிவுகள் இந்த செயல்முறையில் என்னென்ன நுண்ணறிவுகளை வழங்கியிருந்தாலும், மூன்றாவது அலகின் பிரிவுகள் 5 முதல் 19 வரை, திட்டத்தில் பயன்படுத்தப்படும் உரைகளிலிருந்து தேவையான உதாரணங்களை எடுத்துக்காட்டி, அதன் பல்வேறு பரிமாணங்களைத் தெளிவாக்க முயற்சிக்கிறது.ஒவ்வொரு ஆசிரியரும் இந்தப் பிரிவுகளின் மூலம் ஒரு குழுவை வழிநடத்துவதற்குத் தயாராவதில் கவனமாக மதிப்பாய்வு செய்வது நல்லது. பல்வேறு கலாச்சாரங்களில்

உள்ள இளைய இளைஞர்களை மேம்படுத்துவதற்கான நூல்களின் திறனைப் பற்றிய புரிதலை பங்கேற்பாளர்கள் தங்கள் ஆய்வில் இருந்து எடுத்துக்கொள்வார்கள் என்று நம்பப்படுகிறது.

இந்த விவாதத்தின் அடிப்படையில், பங்கேற்பாளர்களுக்கு இரண்டு முழு நூல்களை பகுப்பாய்வு செய்ய வாய்ப்பு அளிக்கப்படுகிறது, ஒன்று "பஹாய்-ஊக்கம்பெற்ற" வகையிலும் மற்றொன்று திட்டத்தின் தனித்துவமான பஹாய் கூறுகளை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையிலும் அடங்கும். இந்த இரண்டு பிரிவுகளும் பங்கேற்பாளர்களுக்கு ஆரம்பத்திலேயே அறிமுகப்படுத்தப்பட்டன, மேலும் *உறுதிப்பாட்டின் தென்றல்கள்* மற்றும் *நம்பிக்கையின் உள்ளாற்றல்* பற்றிய அவர்களின் மதிப்பாய்வு, பேசப்படும் கருப்பொருள்கள் மற்றும் கருத்துக்கள் மற்றும் பயன்படுத்தப்படும் மொழி ஆகியவற்றில், இரு நூல்களும் எவ்வாறு மேலே விவரிக்கப்பட்ட திட்டத்தின் நோக்கங்களுக்குப் பங்காற்றுகின்றன என்பதைப் பார்ப்பதற்கு அவர்களுக்கு உதவுவதாகும். உதாரணமாக, ஒருவன் தகுதியான இலக்குகளை நோக்கி முயற்சி செய்தால், தெய்வீக உறுதிப்பாடுகளை ஈர்க்க முடியும் என்ற உறுதிப்பாடு பற்றிய கருத்தானது, எல்லா இடங்களிலும் இளைஞர்களின் இதயங்களிலும் மனதிலும் எதிரொலிக்கிறது. உரைநடையைப் படிப்பதன் மூலம் அவர்கள் பெறும் புரிந்துணர்வானது, புதிய மற்றும் சவாலான பணிகளை மேற்கொள்ளும்போது ஏற்படும் பயம் மற்றும் தன்னம்பிக்கையின்மை ஆகியவற்றைக் கடந்திட , "சுய" த்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதால் தென்படும் ஆளுமைமிக்க நடத்தை உருவாகாமல் இருக்க உதவுகிறது.இப்படியாக, பொதுவாக இளைய இளைஞர்களால் ஆரம்பத்தில் படிக்கவிருப்பவைகளில் முதலாவதான இப்புத்தகத்தில் கூறப்படும் எளிய மற்றும் ஆழமான கதையானது, பலரை சமூகத்தின் கட்டமைப்பை சிதைக்கின்ற, உன்னத மனிதர்கள் என்ற அவர்களின் உண்மையான அடையாளத்தைப் பறித்துவிடுகின்ற சக்திகளில் இருந்து ஒரளவாவது பாதுகாக்கும் பாதையில் கொண்டு விடுகிறது.

இதேபோல், *நம்பிக்கையின் உள்ளாற்றலில்* வழங்கப்படும் கருத்துகளின் தெளிவானது ஒவ்வொரு பின்னணியிலிருந்தும் வரும் இளைய இளைஞர்களுக்கு வாழ்க்கையின் இந்த கட்டத்தில் மனதை ஆக்கிரமிக்கத் தொடங்கும் தத்துவ சிக்கல்களை ஆழமாகப் பிரதிபலிக்கவும், ஆன்மீகம் மற்றும் லௌகீகம் ஆகியவற்றுக்கு இடையே உள்ள சிக்கலான தொடர்புகளைப் பார்க்கவும் உதவுகிறது. இக் கருத்துக்களிடையே, உதாரணத்திற்குக் கூற வேண்டுமென்றால், உடல் பரிணாமம் மற்றும் மனித ஆவியின் தோற்றம் ஆகும். ஆசிரியர் பாராட்ட வேண்டிய விஷயம் என்னவென்றால், நூல் 5 ஐப் படிக்கும் மற்றும் உயிர்ப்பூட்டுபவர்களாக இருக்க விரும்பும் பல இளைஞர்களுக்கு, அவர்கள் இளைய இளைஞராக ஆன்மீக சக்தியூட்டும் திட்டத்தை முடிக்காத வரை, *நம்பிக்கையின் உள்ளாற்றலின்* மதிப்பாய்வு அவர்களுக்கு முறையாக முன்வைக்கப்பட்ட கருத்துக்களை ஆராய்வதற்கான முதல் வாய்ப்பாக அமையும் அத்துடன் , அதன் தாக்கங்கள் மூலம் சிந்திக்க தேவையான நேரம் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

இந்த மதிப்பாய்வின் முடிவில், பங்கேற்பாளர்கள் அறிவியலுக்கும் மதத்திற்கும் இடையிலான நல்லிணக்கக் கொள்கையின் மீது பிரதிபலிக்க ஊக்குவிக்கப்படுகிறார்கள், இது உரைநடையில் வெளிப்படையாகக் குறிப்பிடப்பட்டிருக்கும் கருத்தாக அல்ல ஆனால், அதன் முழு விவாதத்திற்கும் அடித்தளமாக உள்ள ஒன்றாக. அறிவியலும் மதமும் நாகரிகத்தின் முன்னேற்றம் நிகழும் அறிவு மற்றும் நடைமுறையின் இரு இணக்கமான அமைப்புகளாகக் கருதப்படலாம் என்று பரிந்துரைக்கப்படுகிறது. இந்த பிரதிபலிப்பின் முக்கியத்துவத்தை பங்கேற்பாளர்கள், குறிப்பாக இந்த சேவைத் துறையில் நுழையத் தயாராகும் நபர்கள் இழந்து விடக்கூடாது. எல்லாவற்றிற்கும் மேலாக, யதார்த்தத்தைப் பற்றிய முழுமையான புரிதலைப் பெறுவதானது, ஆன்மீக சக்தியூட்டும் செயல்முறைக்கு ஒருங்கிணைந்த

ஒன்றாக இருந்தால், இளைய இளைஞர்களுக்கான நூல்கள் இந்த இரண்டு அறிவு ஆதாரங்களிலிருந்தும் அவசியம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

உபகரணங்களின் ஆய்வானது திட்டத்தில் பங்கேற்கும் இளைய இளைஞர்களின் குழுவின் முதன்மை கவனக்குவிப்பாக இருக்கும் அதேவேளையில், அவர்கள் மற்ற செயல்பாடுகளையும் ஒன்றாக மேற்கொள்வார்கள். சேவை திட்டங்கள், விளையாட்டு, கலை மற்றும் கைவினைப்பொருட்கள் மற்றும் அவ்வப்போது நடைபெறும் சிறப்பு நிகழ்வுகள் ஆகியவை இதில் அடங்கும். பிரிவுகள் 25 மற்றும் 26 இந்த நடவடிக்கைகள் தொடர்பான சில கோட்பாடுகள் மற்றும் யோசனைகளை முன்வைக்கின்றன, ஆனால் அதிக விவரங்களுக்குச் செல்வதைத் தவிர்க்கின்றன, அவற்றின் பிரத்தியேகங்கள் உள்ளூர் சூழ்நிலைகளுக்கு ஏற்ப வெளிப்பட வேண்டும் என்பதைக் குறிப்பிடுகின்றன. ஆயினும்கூட, சேவைத் திட்டங்களின் வடிவமைப்பு மற்றும் செயல்படுத்துதல் திட்டத்தில் முக்கியத்துவம் கொடுக்கப்படும் என்று நம்பப்படுகிறது, ஏனெனில் சேவை என்பது முன்னர் குறிப்பிடப்பட்ட இரு மடங்கு தார்மீக நோக்கத்தை வெளிப்படுத்தக்கூடிய ஒரு தளத்தினை வழங்குகிறது. இதில், சக உயிர்ப்பூட்டுபவர்களுடனான சந்திப்புகளில் இதுபோன்ற திட்டங்கள் அடிக்கடி ஆலோசனைக்கு உட்படுத்தப்படும் என்பதை பங்கேற்பாளர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்த பாடப்பிரிவானது உயிர்ப்பூட்டுபவரின் பணி தொடர்பான பல விஷயங்களைப் பற்றி விவாதிப்பது, ஒரு இளைய இளைஞர் குழுவினை அமைக்க எவ்வாறு உதவுவது, எவ்வாறு முதல் சில கூட்டங்களை நடத்துவது, மற்றும் பெற்றோர்களுடன் திட்டத்தின் தன்மை குறித்தும் அவர்களின் மகன்கள் மற்றும் மகள்களின் முன்னேற்றம் குறித்தும் எவ்வாறு உரையாடுவது போன்ற சில அகப்பார்வைகளை பகிர்ந்து கொள்வதோடு முடிவடைகிறது தொடக்கத்திலிருந்தே, உயிர்ப்பூட்டுபவராகத் திறம்பட பணியாற்றத் தேவையான திறன்களாவன, நூல் 5 இருந்து பிரிந்திருக்கும் படிப்புகளின் தொடர்ச்சியான அனுபவம் மற்றும் படிப்பின் மூலம் காலப்போக்கில் வளரும் என்பதை பங்கேற்பாளர்கள் அங்கீகரிக்க வேண்டும். இளைய இளைஞர்களின் கல்விக்கான அர்ப்பணிப்பு நிலைக்கு இது அழைப்பு விடுக்கின்றது, அதனால் தமது பதின் பருவத்தின் பிந்தையக் கட்டத்திலும், இருபதுகளின் ஆரம்பத்திலும் – தங்கள் வாழ்வின் வசந்த காலத்தில் - இருக்கும் பலர் இதை அடைவதற்கான திறனை வெளிப்படுத்தியுள்ளனர். அப்படியானால், இந்த சிறப்புமிக்க சேவைப் பாதையைப் பின்பற்றுபவர்கள், ஆன்மீக அதிகாரமளிக்கும் திட்டத்தில் குழுவாக ஈடுபடுபவர்கள் மற்றும் அடுத்த தலைமுறையின் வாக்குறுதியை நிறைவேற்றுவதை உறுதிப்படுத்துபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவது அவர்களின் வரிசையில் இருந்துதான் இருக்கும்.



# வாழ்வின் இளவேனிற்காலம்

**நோக்கம்**

இளைய இளைஞர்களின் ஆன்மீக சக்தியளிப்புத் திட்டத்தில் அவர்களை ஈடுபடுத்துவதற்கான ஒரு முன்தேவையாக, இளைஞர்களைத் தனிச்சிறப்புபடுத்துவதற்கான சில பண்புக்கூறுகள் குறித்த ஒரு புரிதலைப் பெறுறவது

## பகுதி 1

12லிருந்து 15 வரையிலான வயது ஒரு தனி மனித வாழ்வில் தனிச்சிறப்புமிகுந்தக் காலமாகும், ஏனெனில், அந்த வருடங்களில்தான் அவனோ அவளோ தனது குழந்தைப் பருவத்தை விட்டுவிட்டு, ஆழமான தன்மை மாற்றத்தை அனுபவிப்பார். இளைஞர் பருவத்தை இன்னும் அடையாதிருக்கும், இந்த வயதில் உள்ள தனிநபர்கள் “இளைய இளைஞர்கள்” என அழைக்கப்படுவர். இளைய இளைஞர்களின் ஆன்மீக மற்றும் அறிவுத்திறன் ஆற்றல்களைத் தீவிரமாக்கி அவர்களுடைய சமூகங்களின் அலுவல்களில் பலன் தரும் வகையில் பங்கேற்க அவர்களை ஆயத்தமாக்கும் ஒரு செயல்திட்டத்தில் ஈடுபடுத்துவதானது ஒரு மிக முக்கியமான சேவையாகும். இந்த நூலின் மூன்று பாகங்களானவை, ருஹி பயிற்சியகத்தால் முன் வைக்கப்படும் இளைய இளைஞர்களுக்கான ஆன்மீக சக்தியளிப்பிற்கான அத்தகைய ஒரு திட்டத்தைச் செயல்படுத்த விரும்புகிறவர்களுக்குத் தேவையான, அனுபவம் மூலமாகக் காணப்பட்டச் சில கருத்துக்கள், திறமைகள், பண்புகள் மனப்பாங்குகள் ஆகியவற்றின் மீது கவனம் செலுத்துகின்றது.

பொதுவாகவே ரூஹி பயிற்சியகத்தினால் பரிந்துரைக்கப்படும் நடவடிக்கைகள் சிறு சிறு குழுக்களாக உள்ளூர் அளவிலேயே நடத்தப்படும். அத்தகைய குழுவை ஊக்குவிப்பவரான தாங்கள், கூடிய விரைவில் முதிற்சியின் வாயிலான, 15 வயதை அடையவிருக்கும், அதன் பின் புதியப் பொறுப்புக்களைத் தாங்கவிருக்கும், சில இளைஞர்களின் ஆன்மீக மற்றும் அறிவுசார் வளர்ச்சியில் அக்கறை கொண்டிருப்பீர்கள். இந்த முதல் பாகத்தில், நாம் இளைய இளைஞர்களின் பண்புகளைப் பற்றிப் பிரதிபலிப்பதற்குப் பதிலாக, அவர்கள் எப்படிப் பட்ட இளைஞர்களாக வளர்ந்தாக வேண்டும் என்பது குறித்துச் சமயத்தின் புனித வாசகங்கள் வழங்கும் கருத்துக்களை ஆலோசிப்போம். தாங்கள் பயிலவிருக்கும் பத்திகளிலிருந்து தெளிவாகத் தெரியவேண்டியது என்னவென்றால், ஒவ்வொரு இளையத் தலைமுறையையும் சிறப்பித்துக் காட்டும் சில சிறப்பான பண்புகளும், அவர்களுடைய வாழ்க்கையை உருபெறச் செய்திடும் ஆற்றல்களும் உள்ளன என்பதுதான். நிச்சயமாக, முடிவுறும் பதின்ம வயதினராகவோ, ஆரம்ப இருபதின் வயதிலேயோ உள்ள ஓர் இளைஞராகத் தாங்களும் ஒருவேளை இருக்கக்கூடும். அவ்வாறிருந்தால் நீங்களும் உங்கள் சொந்த இலக்குகளையும், எதிர்காலத்திற்கான முக்கியக் குறிக்கோள்களையும் மறு ஆய்வு செய்திட இந்த முதல் பாகத்தில் வழங்கப்பட்டப் பாடங்கள் ஒரு வாய்ப்பினை வழங்கிடும்.

## பகுதி 2

தொடக்கமாக, கூடிய விரைவில் நீங்கள் சேர்ந்து பணிபபுரியவிருக்கும் இளைய இளைஞர்கள் குழுவின் அங்கத்தினர்களைப் பற்றிச் சிந்தியுங்கள். அடுத்த மூன்று வருடங்களின் போது ஓர் உண்மையான நண்பராக அவர்களை அடிக்கடி சந்தித்தும் படிப்பிலும், கருத்துகளை ஒன்றாக ஆராய்வதிலும், எளிமையான சேவைத் திட்டங்களை திட்டமிடுதலிலும் செயல்படுத்துவதிலும், அந்த அனுபவத்தின் மூலம் ஒரு குழுவினராக என்ன கற்றுக்கொண்டனர் என்பதைப் பற்றி பிரதிபலிப்பதிலும் அவர்களுக்கு உதவிடுவீர்கள். அவர்கள் திட்டத்தை பூர்த்தி செய்திருக்கக்கூடிய மூன்று வருடத்தின் இறுதியைப் பற்றி நீங்கள் சிந்திப்பது பயனளிப்பதாக இருக்கும். அக்காலகட்டத்தில் உங்கள் இளம் நண்பர்களைத் தனித்துக்காட்டிடும் என நீங்கள் எதிர்பார்க்கும் பண்புக்கூறுகளை நீங்கள்

உங்களுக்குள்ளே தெளிவுபடுத்திக்கொள்ள உதவிட, உங்கள் சக பங்கேற்பாளர்களுடன் பின்வரும் பயிற்சிக்குறிப்புகளை மேற்கொள்வீராக.

1. உங்கள் மனதில் உள்ள இளைஞர்கள் இந்தத் திட்டத்தைக் கற்று முடித்தபின் ஓர் உயர்ந்த நோக்கத்தைக் கொண்டவர்களாகச் சிறந்திருப்பார்களா? அத்தகைய உயர்ந்த நோக்கம் எதுவென அவர்கள் கருதுவர்?________________________________________

____________________________________________________________

____________________________________________________________

2. அவர்கள் தங்களுடைய அதிகபட்ச ஆற்றலை எதன் மீது செலுத்திடுவார்கள் என நீங்கள் ஆர்வநம்பிக்கை கொள்கிறீர்கள்? ____________________________________

____________________________________________________________

____________________________________________________________

3. அவர்கள் தங்கள் இலட்சியங்களுக்காக முயற்சிக்க ஊக்கமூட்டுவது எதுவாக இருக்கும்?________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

4. மானிடம் இன்று எதிர்நோக்கும் சவால்கள் குறித்து கண்டு அவர்கள் எவ்வளவு விழிப்புணர்வோடு இருப்பார்கள்? உலகை ஒரு சிறப்பான இடமாக மாற்றுவதற்கு அவர்களும் பங்களிக்க முடியும் என்பதில் நம்பிக்கையோடு இருப்பார்களா?______________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

5. கற்றல் குறித்த மனப்பாங்குகளைப் பிரதிபலிக்கும் கூற்றுகள் பல கீழே வழங்கப்பட்டுள்ளன. நீங்கள் எதிர்பார்க்கக்கூடிய இளைஞர்கள் எந்த அளவிற்கு அவற்றில் வருணிக்கப்பட்டுள்ள மனப்பான்மைகளை பயிற்சியின் முடிவில் பெற்றிருப்பார்கள் என நினைக்கின்றீர்கள்.?

— அவர்கள் கல்வியார்வமுள்ளவர்களாக இருப்பார்கள் மற்றும் கற்றதைச் செயல்படுத்திட முயற்சி செய்வார்கள் .

— அவர்கள் தங்கள் செயல்களின் விளைவுகளைப் பற்றிச் சிந்திக்கும் பழக்கத்தைக் கொண்டிருப்பார்கள்

— அவர்களுக்கு ஒரு திறந்த மனப்பான்மை இருக்கும் மற்றும் கற்றலைப் பணிவான மனப்பாங்கோடு அணுகுவர்.

— அவர்கள் மானிடத்திற்கு சேவையாற்றிடுவதற்கு பெரும் ஆவல் கொண்டிருப்பார்கள்.

— அவர்கள் எதைச் செய்த போதும், அதில் சிறப்புற ஆவல் கொள்வார்கள்.

— அறிவியல் மற்றும் கலை ஆகியவற்றைக் கற்றுக்கொள்ள அவர்கள் தீவிர ஆர்வமுள்ளவர்களாக இருப்பார்கள்

— அவர்கள் தங்களின் ஆன்மீகப் புலனுணர்வை கூர்மைப்படுத்திக் கொள்வதன் முக்கியத்துவத்தை உணர்ந்திருப்பார்கள்.

— தனி மனிதனாகத் தங்களது சொந்த அறிவாற்றல் மற்றும் ஆன்மீக வளர்ச்சி பற்றி கற்றுக் கொள்வதில் பெற்றிடும் மகிழ்ச்சியைப் போன்றே, மனித இனத்தின் வளர்ச்சிக்காகச் செயல்புரிவதைக் கற்றுக் கொள்வதிலும் அதே அளவிலான மகிழ்ச்சியைப் பெற்றிடுவர

— ______________________________________________________________________

— ______________________________________________________________________

— ______________________________________________________________________

6. நீங்கள் மனதில் நினைத்திருக்கும் இளைஞர்கள் எவ்வாறு நடந்துகொள்வார்கள் என்பது குறித்த உங்களின் எதிர்ப்பார்ப்பை பின்வரும் கூற்றுகளில் எவை வருணிக்கின்றன?

_______ உலக இளைஞர்கள் பொதுவாக ஏற்றுக்கொண்டுள்ள அதே வாழ்க்கைத் தரத்தை போலவே அவர்களின் வாழ்க்கைத் தரமும் ஏறத்தாழ இருந்திடும்.

_______ அவர்கள் தங்கள் வாழ்க்கைக் கொள்கைகளுக்கு பிரபல ஊடகங்களையே நாடுவர்.

_______ கடினமான சவால்களின் எதிரில் உயர்வான தார்மீகத் தரங்களுக்கு ஏற்ப வாழ்வதற்கு முயல்வோரின் அடிச்சுவடுகளை அவர்கள் பின்பற்றி நடப்பர்.

_______ தங்களுடைய செயல்கள் எப்பொழுது அவர்களின் நம்பிக்கையோடு முரன்படுகின்றன என்பதனை, அத்தகைய முரண்பாடுகள் இருப்பின் அவற்றை அவர்கள் கண்டறியக்கூடும்.

_______ மனிதகுல ஒருமை, ஆண் பெண் சமத்துவம், நீதி ஆகிய இலட்சியங்களில் அவர்கள் நம்பிக்கை வைப்பார்கள், ஆனால் அவர்களின் செயல்கள், அத்தகைய இலட்சியங்களின் பசப்புரையில் சிறந்து விளங்கும் அதே வேளை அதை செயலில் கடைப்பிடிக்க தவறுகின்ற ஒரு சமுதாயத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மாதிரிகளையே பிரதிபலித்திடும்.

_______ உயர்தரமான வாழ்க்கையை வாழாத ஒரு சமுதாயச் சூழலில் சௌகர்யமாக வாழ்வதற்காக அவர்கள் அத்தகைய உயர்தரங்களை கைவிட்டுவிடுவார்கள்.

7. தூய்மையான கற்பு நெறியுடைய வாழ்வின் உட்பொருள் குறித்துச் சிந்திப்பதற்குப் பின்வரும் பல கேள்விகள் உங்களுக்கு உதவியாக இருக்கும். நீங்கள் கற்பனை செய்திருக்கும் இளையோர் இவை வரையறுபனவற்றை எந்த அளவிற்குப் புரிந்துகொள்ள இயலும்?

— அவர்களுடைய நடத்தை சண்டித்தனமானதாக இருக்குமா?

— அவர்கள் அற்பமானதும் தவறானதுமான இன்பங்கள் மீது பற்று வைப்பார்களா?

— உலக ஆசைகள் அவர்களின் கவனத்தைத் திசைத்திருப்பிடச் செய்திடுமா?

— அவர்கள் ஃபேஷன், அர்த்தமற்ற அலங்காரம் ஆகியவை கற்பு நெறிக்கு நேர்மாறானதாக இருந்த போதிலும், அதனைப் பின்பற்றுவார்களா?

— கற்புடைமை என்பது திருமணமாகாமல் உடலுறவுக் கொள்வது என்பது மட்டுமென்றே அவர்கள் கருதுவார்களா?

— அவர்கள் ஆடை அணிவதில் அடக்கத்தைக் கையாள்வார்களா?

— தங்கள்பேச்சில் அவர்கள் அடக்கத்தைக் கையாள்வார்களா?

— களிப்புக்காக அவர்கள் ஈடுபடும் நடவடிக்கைகளில் அவர்கள் அடக்கத்தைக் கடைப்பிடிப்பார்களா?

— வர்கள் தங்களுடைய அடக்கதிலும் பணிவிலும் சிறந்திருப்பார்களா?

— பொறாமை மற்றும் அழுக்காறு ஆகியவற்றிலிருந்து சுதந்திரமாக இருப்பதில் அவர்கள் சிறந்திருப்பார்களா?

— தங்கள் புனிதத்தன்மை, ஒழுக்கம் மற்றும் தூய சிந்தனை ஆகியவற்றில் அவர்கள்? சிறந்திருப்பார்களா?

— அவர்களுடைய கீழான உணர்ச்சிகளைக் கட்டுபடுத்துவதில் அவர்கள் விழிப்புடன் இருப்பார்களா?

— ______________________________________________________________

— ______________________________________________________________

— ______________________________________________________________

8. நீங்கள் அவர்களுடன் செலவிட்ட காலத்தினூடே, பின்வருபவற்றைச் சாதித்திட எத்துணை வலிமையான உறுதிப்பாட்டை இந்த இளைஞர்கள் கொண்டிருப்பார்கள்?

— சவால்களை வெல்வது

— இன்னல்கள், சோதனைகள் ஆகியவற்றைச் சந்திக்கும்போது விடாமுயற்சி செய்வது

— சமயத்தின் நெறிகளுக்கு எதிர்மாறாகச் செயல்படத் தூண்டிடும் வற்புறுத்தல்களை எதிர்த்து நிற்பது-

## பகுதி 3

புனித வாசகங்களின் சில பத்திகளின்பால் நாம் இப்போது கவனத்தைச் செலுத்தி, அவை ஒரு பஹாய் இளைஞனைப் பற்றி எவ்வாறு வருணிக்கின்றன என்பதை ஆராய்வோமாக. அப்துல் பஹா கூறுகிறார்:

> **"அப்துல் பஹாவின் அன்புக்குரியவர்களே! மனித வாழ்வானது அதன் வசந்த காலத்தைக் கொண்டிருக்கும் மற்றும் அற்புதமான மகிமையை வழங்கப் பெற்றிருக்கும். இளமைப் பருவமானது வலிமையும் சக்தியும் கொண்டவையாக இருக்கும் மற்றும் மனித வாழ்வின் மிகச் சிறந்த காலமாகச் சிறந்து நிற்கும். ஆகையால், இரவும் பகலுமாகத், தெய்வீக வலிமை வழங்கப்பட்டு, அறிவுக்கூர்மையான நோக்கங்களால் தூண்டப்பட்டு, மற்றும் அவரது விண்ணுலகச் சக்தி, தெய்வீக அருள், உறுதிப்படுத்தப்படுதல் ஆகியவற்றினால் துணைபுரியப்பட்டு, தாங்கள் மனித உலகின் ஆபரணங்களாக ஆகிடக்கூடுமாக, மற்றும் உண்மையான கற்றலிலும் இறை அன்பிலும் ஈடுபட்டுள்ளவர்களில் அதி உயர்வானவராக ஆகிடக் கூடுமாக. மனிதர்களின் மத்தியில் தாங்கள் தங்களுடைய புனிதத்தன்மையிலும் பற்றற்றத் தன்மையிலும், உயர்ந்த நோக்கத்திலும், பெருந்தன்மையிலும், உறுதிப்பாட்டிலும், உயர்ந்த எண்ணத்திலும், விடா முயற்சியிலும், உங்கள் நோக்கம் மற்றும் ஆன்மீகப் பண்புகள் ஆகியவற்றின் உயர் தன்மையிலும் தனித்துயர்ந்திருக்கக் கூடுமாக. தாங்கள் கடவுளின் சமயத்தின் மேன்மைக்கும் புகழுக்கும் காரணமாகவும் அவரது விண்ணுலக அருட்கொடைகளின் தோற்றுவாயாகவும் ஆகிடக் கூடுமாக. தாங்கள் ஆசீர்வதிக்கப்பட்ட பேரழகரின் -- அவரது அன்புக்குரியவர்களுக்காக எனது உயிர் அர்ப்பணிக்கப்படுமாக -- ஆலோசனைகளுக்கும் அறிவுரைகளுக்கும் ஏற்றவாறு நடந்துகொள்ளக் கூடுமாக, மற்றும் பஹாய் பண்புகளையும் குணங்களையும் பிரதிபலிப்பதன் வாயிலாகத் தாங்கள் மற்றவர்களைவிடத் தனிச்சிறந்து நிற்கக் கூடுமாக. தாங்கள் ஒவ்வொருவரும் மனிதப் பூரணத்தன்மை என்னும் புல்வெளிகளில் உலாவிடும் ஓர் அஞ்சாத சிங்கமாகவும், நற்பண்புகள் என்னும் பசுமையான நிலத்தில் வீசிடும் கஸ்தூரி மணம்கொண்ட ஒரு தென்றலாகவும் ஆகிடுவீராக."[1]**

1. பின்வரும் வாக்கியங்களைப் பூர்த்திச் செய்யவும்:

   a. மனித வாழ்வின் வசந்த காலத்திற்கு ________________________________________ வழங்கப் பட்டுள்ளது.

   b. இளமைப் பருவமானது ______________________________________ கொண்டதாகும்.

   c. இளமைப் பருவமானது மனித வாழ்வின் ____________________________ நிற்கும்.

   d. இளம் பருவத்தில் நாம், இரவும் பகலுமாக, _________________ வழங்கப்பட்டு, ____________________________ தூண்டப்பட்டு, மற்றும் அவரது __________________, _____________________________, _______________ ஆகியவற்றினால் துணைபுரியப்பட்டு, மனித உலகின் _______________ ஆகிடக்கூடுமாக.

   e. இளமைப் பருவத்தில் நாம், இரவும் பகலுமாக முயற்சித்து, ________________ கற்றலிலும் இறை _____________________ ஈடுபட்டுள்ளவர்களில் அதி உயர்வானவராக ஆகக் கூடுமாக.

f. இளமைப் பருவத்தில் நாம் நமது ____________ தன்மையிலும் ____________ தன்மையிலும் சிறந்து நிற்கவேண்டும்.

g. இளமைப் பருவத்தில் நாம் நமது __________________ நோக்கத்தில் தனித்துயர்ந்திருக்கக் கூடுமாக.

h. இளமைப் பருவத்தில் நாம் நமது __________, ____________ தன்மையிலும், __________ நோக்கத்திலும், ____________________, ________________________ , உயர்ந்த _____________, விடா ______________, நமது __________________, ஆன்மீக _______________________ தனித்துயர்ந்திருக்க வேண்டும்.

i. இளமைப் பருவத்தில் நாம் கடவுளின் சமயத்தின் மேன்மைக்கும் புகழுக்கும் ______________ அவரது __________________________ தோற்றுவாயாகவும் ஆகிட வேண்டும்.

j. இளமைப் பருவத்தில் நாம் ஆசீர்வதிக்கப்பட்ட பேரழகரின், ________________, _________________ ஏற்றவாறு நடந்துகொள்ள முயற்சிக்க வேண்டும்.

k. இளைஞர்கள் ஒவ்வொருவரும் மனித _________________________ என்னும் புல்வெளிகளில் உலாவிடும் ஒரு _____________________, ____________________ என்னும் பசும்புல் நிலத்தில் வீசிடும் கஸ்தூரி _______________________________ ஆகிடுவர் என அப்துல் பஹா ஆவலுடன் எதிர்பார்க்கின்றார்.

2. இளைஞர்கள் மகிழ்ச்சியை நாடுவதில் தங்கள் கவனத்தைச் செலுத்த வேண்டும் ஏனென்றால் கூடிய விரைவில் அவர்கள் வாழ்க்கையின் தீவிர காரியங்களை சந்திப்பார்கள் என்றெல்லாம் கூறப்படும் கூற்றுக்களையோ பரவலாக நம்பப்படும் நம்பிக்கைகளையோ தாங்கள் கேட்டிருப்பீர்கள். நிச்சயமாக இவை மேல்கூறப்பட்டுள்ள அப்துல் பஹாவின் வார்த்தைகளின் கருத்துக்கு ஒப்பானதாக இல்லை. இவ்வாறாகப் பரவலாகப் பேசப்படும் கருதுக்களின் அஸ்திவாரமாக இருக்கும் ஊகங்கள் என்னவாகும்? இக்கேள்வியை இன்று தங்களோடு சேர்ந்து கற்றுக்கொள்ளும் குழுவின் நண்பர்களோடு தாங்கள் கலந்தாலோசித்துத், தங்களுடையத் தீர்மானங்களை இங்கே எழுதிடவும்

_______________________________________________________________________________

_______________________________________________________________________________

_______________________________________________________________________________

_______________________________________________________________________________

_______________________________________________________________________________

## பகுதி 4

பின்வரும் பிரார்த்தனையில், பஹாய் இளைஞர்கள் மீதுள்ள தமது நம்பிக்கைகள் சிலவற்றை அப்துல் பஹா வெளிப்படுத்துகிறார்.

**“இரக்கமுடைய ஆண்டவனே! இந்தச் சிறு பறவைகள் ஒவ்வொன்றிற்கும் விண்ணுலகச் சிறகுகள் இரண்டை வழங்கிடுவீராக, மற்றும் அவர்களுக்கு ஆன்மீகச் சக்தியைக் கொடுத்தருள்வீராக, அதனால், அவர்கள் இந்த எல்லையற்ற இடப்பரப்பில் சிறகடித்து அப்ஹா இராஜ்ஜியத்தின் சிகரங்களை நோக்கி உயரப் பறக்கக் கூடுமாக.**

**“பிரபுவே! இந்த வலுவற்ற வித்துக்களை வலுபெறச் செய்வீராக, அதனால், அவர்கள் ஒவ்வொருவரும் ஒரு பசுமையானதும், வளமானதுமான கனிகொடுக்கும் மரமாக ஆகிடக் கூடுமாக. தங்களது வான்படைகளின் சக்தியைக் கொண்டு இந்த ஆன்மாக்களை வெற்றி பெறச் செய்வீராக, அதனால், அவர்கள் பிழை, அறியாமை என்னும் சக்திகளைத் தோல்வியுறச் செய்யக் கூடுமாக, மற்றும் நட்புடமை, வழிகாட்டல் என்னும் விருதுக் கொடியை மனிதர்கள் மத்தியில் பறக்கவிடக் கூடுமாக; வசந்த காலத்தின் உயிர்பெறச் செய்திடும் இளங்காற்றைப் போல, மனித ஆன்மாக்கள் என்னும் விருட்சங்களைப் புத்துணர்வுப் பெறச் செய்து உயிரூட்டக் கூடுமாக., மற்றும் இளவேனிற்கால மழைத் தூரலைப் போன்று அந்தப் பகுதிகளின் புல்வெளிகளைப் பசுமையாகவும் செழிப்பாகவும் ஆகச் செய்திடக் கூடுமாக.**

**“வலிமை மிக்கவரும் சக்திமிக்கவரும் நீரே; வழங்குபவரும் சர்வ அன்பு மிக்கவரும் நீரே ஆவீர்.”[2]**

1. பின்வரும் வாக்கியங்களைப் பூர்த்திச் செய்யவும்:

அ. இளம் வயதுடையோரை அப்துல் பஹா, இரண்டு ______________ தேவைப்படும் சிறு பறவைகள் என ஒப்பிடுகிறார், மற்றும் அவர்களுக்கு ________________ கொடுத்தருள வேண்டும் எனக் கடவுளிடம் கேட்கின்றார். அதனால், அவர்கள் இந்த ____________________ ____________________ அப்ஹா இராஜ்ஜியத்தின் ____________________ ____________________ பறிக்கக் கூடுமாக.

ஆ. இளம் வயதுடையோரை அவர் ___________________ என கருதி, அதனால் அவர்களை ___________________ எனக் கடவுளிடம் மன்றாடுகிறார், அதனால் அவர்கள் ஒவ்வொருவரும் ஒரு __________________, ______________, ________________ மரமாக ஆகிடக் கூடுமாக.

இ. அவர்களை வெற்றி பெறச் செய்திட வேண்டும் எனக் கடவுளிடம் அவர் கேட்கின்றார், அதனால் அவர்கள் ____________________, ________________ என்னும் சக்திகளை ___________________ செய்திடக் கூடுமாக, மற்றும் _______________, _______________________ என்னும் விருதுக் கொடியை மனிதர்கள் மத்தியில் பறக்கவிடக் கூடுமாக.

ஈ. அவர்கள் வசந்த காலத்தின் உயிர்பெறச் செய்திடும் ___________ _________________, மனித _________________ விருட்சங்களை _______________ பெறச் செய்து ___________ கூடுமாக, மற்றும் _____________________________ போன்று அந்தப் பகுதிகளின் புல்வெளிகளை ________________________________________ ஆகச் செய்திடக் கூடுமாக என்று அவர் பிராத்திக்கின்றார்.

2. இந்தப் பிரார்த்தனையில் இளைஞர்களுக்கு ஆன்மீகச் சக்திகளை வழங்கவேண்டும் என்று அப்துல் பஹா கடவுளிடம் கேட்கின்றார். பின்வருவனவற்றில் எதனை நீங்கள் ஆன்மீகச் சக்தியோடு தொடர்புள்ளவையாக கருதுவீர்கள்?

| | |
|---|---|
| ____ உயர்ந்த நோக்கம் | ____ பெருந்தன்மை |
| ____ இறைவன் மீது நம்பிக்கை | ____ கவர்ச்சி |
| ____ கற்புடமை | ____ பணிகளை முடித்திடும் உறுதி |
| ____ சூழ்ச்சி | ____ உன்னதமான எண்ணம் |
| ____ போட்டி | ____ தாராளமனப்பான்மை |
| ____ ஒற்றுமை | ____ பிறர் மீது ஆதிக்கம் செலுத்தும் ஆவல் |
| ____ நேர்மைத் தன்மை | ____ உறுதியும் தீர்மானமும் |
| ____ லௌகீக ஆசை | ____ பனிவு |
| ____ சமூக அந்தஸ்தை நாடுவது | ____ ஒருவரின் சாதனைகளில் பெருமை |
| ____ இறை அன்பு | ____ கர்வம் |
| ____ ஆடம்பரத்தின் மீது கவர்ச்சி | ____ தூய குறிக்கோள் |

3. இந்தப் பிரார்த்தனையில், இளைஞர்களுக்குத் தீமை மற்றும் அறியாமை ஆகிய சக்திகளைச் சிதைத்திட இயலச் செய்யும்படி இறைவனிடம் அப்துல் பஹா இறைஞ்சுகின்றார். அத்தகைய சக்திகளை எதிர்த்துப் போராடும் வேளையிள் பின்வருவனவற்றில் எவை எல்லாம் இளைஞர்களுக்கு உதவி புரிந்திடும் என்று தேர்வுச் செய்யுங்கள்.

_____ தவறான எண்ணங்களை வெல்லக்கூடியத் திறமை

_____ சிந்தனையில் ஒற்றுமையை உருவாக்கிட உதவக்கூடியத் திறமை

_____ மற்றவர்களை ஏமாற்றக் கூடியத் திறமை

_____ உண்மை எது பொய் எதுவென அறியக் கூடியத் திறமை

_____ ஆழமான கருத்துக்களைத் தெளிவாகப் பேசக் கூடியத் திறமை

_____ ஏராளமான செல்வங்களைச் சேர்த்துவைக்கக் கூடியத் திறமை

_____ மற்றவர்களைத் தன் கட்டுப்பாட்டுக்குள் அடக்கும் திறமை

_____ இச்சா ஆசைகளின் தூண்டுதல்களை வெல்லக் கூடியத் திறமை

_____ தீர்மானத்தில் பாரபட்சம் இல்லாமை இருக்கக் கூடியத் திறமை

_____ நீதியை நிலைநாட்டக் கூடியத் திறமை

4. மேற்காணப்படும் பிரார்த்தனையில் நட்புடைமையும் வழிகாட்டலும் என்னும் விருதுக் கொடியைப் பறக்கச் செய்திட இளைஞர்களை இயலச் செய்யும்படி அப்துல்-பஹா கடவுளிடம்

வேண்டிக் கேட்கின்றார். பின்வருவனவற்றில் எவை அத்தகைய முயற்சிகளில் உதவி புரிந்திடும் என்று தேர்வுச் செய்யுங்கள்:

____ நட்புடைமை என்னும் பந்தங்களை ஏற்படுத்திடும் திறன்

____ பிறரை கவனமாக செவிமடுக்கும் திறன்

____ சோதனைகளையும் இன்னல்களையும் வென்றிடும் திறன்

____ மனிதர்களின் தவறுகளையும் குறைபாடுகளையும் கண்டுபிடிக்கும் திறன்

____ மற்றவர்களின் குறைபாடுகளைப் பெரிது படுத்தாமல் இருக்கக் கூடிய திறன்

____ சமுதாயத்திற்குத் தன்னலம் கருதாமல் சேவையாற்றும் திறன்

____ மற்றவர்களின் சாதனைகளில் மகிழ்வடையக் கூடியத் திறன்

____ மற்றவர்களுக்கு நம்பிக்கையூட்டக் கூடியத் திறன்

____ பிறரோடு ஒத்துழைக்கும் திறன்

____ பிறரின் நலன் கருதாமல் தனது சொந்த நலனை மேம்படுத்திடும் திறன்

____ தனது சமூகத்தின் நலனை மேம்படுத்திடும் திறன்

## பகுதி 5

கடந்த இரண்டு பகுதிகளில் நாம் கற்றுக் கொண்டப் புனித வாசகப் பத்திகள் பஹாய் இளைஞர்கள் பெற்றிருக்க வேண்டிய சில தனிசிறந்த பண்புகளைப் பற்றி நமக்கு ஆழமான அறிவினை வழங்கின. நிச்சயமாகவே, இளையோர்கள் 15ஆம் வயதை அடைந்தவுடன், அவர்களிடமிருந்து அதிகமான செயல்பாடுகள் எதிர்பார்க்கப்படும். மெய்யாகவே, புனித வாசகங்கள் 15ஆம் வயதை முதிர்ச்சியின் ஆரம்பம் எனக் குறிப்பிடுகின்றன என்பதை நாம் அறிவோம். பிரார்த்தனை மற்றும் உண்ணா நோன்புக் குறித்த பஹாய் சட்டங்கள் இந்த வயதிலேயே ஒரு தனிநபருக்கு கண்டிப்பாகின்றன. முதிர்ச்சி குறித்த கடப்புப் பற்றி அப்து'ல்-பஹா பின்வருமாறு கூறுகின்றார்:

**"பாலருந்தும் குழந்தையானது உடல் வளர்ச்சியில், பல நிலைகளைக் கடந்து செல்லும், அதன் உடல் முதிர்ச்சி வயதை அடையும் வரை, ஒவ்வொரு கட்டத்திலும் வளர்ந்தும் மேம்பாடடைந்தும் வரும். இந்தக் கட்டத்தை அடைந்தவுடன், அது ஆன்மீக மற்றும் அறிவாற்றலின் பூரணத்துவங்களை வெளிப்படுத்தக் கூடிய தன்மையைப் பெற்றிருக்கும். புரிந்துகொள்ளும் திறன், அறிவாற்றல் மற்றும் அறிவு ஆகியவை அதனிடத்தில் காணக்கூடும் மற்றும் அந்த ஆன்மாவின் சக்திகள் மலர்ந்திடும்."**[3]

மேலும், ஒரு நபர் பருவ வயதை எட்டும்போது, அப்துல்-பஹா நமக்குக் கூறுவதாவது,

**"அவர் விஷயங்களின் யதார்த்தத்தையும், உள்ளார்ந்த உண்மைகளையும் புரிந்து கொள்கிறார். உண்மையில், அவரது புரிதலில், அவரது உணர்வுகள், அவரது அனுமானங்கள் மற்றும்**

**அவரது கண்டுபிடிப்புகள், முதிர்ச்சியடைந்த பிறகான அவரது வாழ்க்கையில் ஒவ்வொரு நாளுமே அதற்கு முந்தைய ஒரு வருடத்திற்குச் சமமாகிறது.”[4]**

1. மேல் குறிப்பிடப்பட்ட அப்துல் பஹாவின் கூற்றுகளின் அடிப்படையில் இளைஞர்கள் பற்றிய பல கருத்துக்களை நாம் ஆராயலாம். 15 வயதை அடைந்த ஓர் இளைஞருக்குப் பின்வருவனவற்றில் எவைப் பொருந்தக்கூடும் என நீங்கள் நினைக்கின்றீர்கள்: அவர்களுக்கு:

____ வாழ்வு மரணம் ஆகியவற்றைப் பற்றிச் சிந்திக்கக் கூடிய ஆன்மீகத் திறனைப் பெற்றிருப்பார் என்று சுட்டிக் காட்டுகிறது.

____ ஆழமான கருத்துக்களை அவை கேளிக்கை என்னும் ஆபரணத்தால் அணிவிக்கப் பட்டிருந்தால் மட்டுமே, அவர்கள் அதனைக் கருதுவார்கள் எனச் சுட்டிக் காட்டுகிறது.

____ தனது வாழ்க்கையின் மீது செல்வாக்குச் செலுத்திடும் சக்திகளை ஆய்வு செய்யக் கூடிய அறிவாற்றலைப் பெற்றிறுப்பர் எனச் சுட்டிக் காட்டுகிறது

____ கடுமையான வேலையில் ஈடுபடத் திறமை பெற்றிருப்பார் எனச் சுட்டிக் காட்டுகிறது.

____ சிரமமான சவால்களை வெல்லக்கூடிய ஆன்மீகத் திறனைப் பெற்றிருப்பார் என சுட்டிக் காட்டுகிறது

____ குழந்தைகளுக்காக ஆன்மீக மற்றும் நன்நெறிப் பாட வகுப்புக்களை நடத்தக்கூடிய திறனைப் பெற்றிருப்பார் எனச் சுட்டிக் காட்டுகிறது.

____ சமயத்தின் போதனைகளையும் கோட்பாடுகளையும் நாவன்மையுடனும் நம்பிக்கையூட்டக்கூடிய வகையிலும் விளக்கும் திறனைப் பெற்றிருப்பார் எனச் சுட்டிக் காட்டுகிறது.

____ பெற்றோர்களின் ஆதரவும் அன்பும் அவர்களுக்குத் தேவை இல்லை எனச் சுட்டிக் காட்டுகிறது.

____ பஹாய் சட்டங்களைக் கடைப்பிடிக்கும் பொறுப்பை மேற்கொள்ளஇயலும் எனச் சுட்டிக் காட்டுகிறது

____ சமூக செயல்முறைகளைப் புரிந்துகொள்ளும் அறிவாற்றல் திறனை பெற்றுள்ளார்கள் எனச் சுட்டிக் காட்டுகிறது.

____ சமுதாயத்திற்குப் பலன் தரும் சேவையில் ஈடுபட இயலும் எனச் சுட்டிக் காட்டுகிறது.

2. பின்வரும் பிரார்த்தனையை  நீங்கள் மனனம் செய்திட விரும்பலாம்.

**“பிரபுவே! இவ்விளைஞனைப் பிரகாசமுரச் செய்து, இவ்வரிய ஜீவனுக்கு உமது வளத்தினை வழங்குவீராக. அவனுக்கு அறிவை வழங்கி, ஒவ்வொரு காலைப் பொழுதிலும் அவனுக்குக் கூடுதலான பலமளித்து அவனை உமது பாதுகாப்பு எனும் புகலிடத்தினுள் காத்திடுவீராக; அதனால் அவன் தவறிலிருந்து விடுவிக்கப்பட்டு, உமது சமயச் சேவையில் ஈடுபட்டு வழி தவறியவர்களுக்கும் துரதிர்ஷ்டருக்கும் வழிகாட்டிடக் கூடும்; கட்டுண்டவர்களை விடுவிக்கக்**

**கூடும்; கவனமற்றோரை விழிப்படையச் செய்யக் கூடும்; அதனால் யாவருக்கும் உமது நினைவும் போற்றுதலும் அருளப்படுமாக. வல்லவரும் சக்தி மிக்கவரும் நீரே ஆவீர்.”[5]**

## பகுதி 6

இளைஞர்கள் முதிர்ச்சி வயதான பதினைந்தை அடைந்தவுடன், சில குறிப்பிட்ட உடல், அறிவு மற்றும் ஆன்மீகச் சக்திகள் கவனத்தை பெறுகின்றன. குழந்தைப் பருவத்தின் மனப்பாங்குகள், சிந்தனைகள், மற்றும் பழக்கங்கள் ஆகியவற்றைக் கைவிட்டு, அவர்கள் இப்போது புதியத் திறனாற்றல்களை பண்படுத்திக் கொள்ள வேண்டும். இந்தச் சக்திகளைச் சமயத்தின் சேவைக்காகப் பயன்படுத்துவதானது, ஒருவரின் இளம் வயதின் முழு நிறைவில் துவங்கவேண்டும். பஹாவுல்லா கூறுகிறார்:

**"தனது இளம் வயதின் முழு நிறைவிலும் தனது வாழ்க்கையின் அதி சிறந்த காலத்திலும் முதலும் முடிவுமான பிரபுவின் சமயத்திற்காகச் சேவை ஆற்றிட எவர் எழுகின்றாரோ, மற்றும் தனது இதயத்தை அவரது அன்பைக் கொண்டு அலங்கரித்துக் கொள்கின்றாரோ, அவர் ஆசீர்வதிக்கப் படுவாராக. அத்தகைய அருளின் வெளிப்படுத்தலானது, வானுலகங்கள் மற்றும் பூமி ஆகியவற்றின் படைப்பை விட மேலானதாகும். உறுதியுடையோர் ஆசீர்வதிக்கப்படுவாராக, மற்றும் நிலையாக இருப்போர் நன்மையைப் பெறுவாராக."[6]**

ஒவ்வொரு தலைமுறையைச் சார்ந்த இளைஞர்களும் சமயத்திற்காக ஆற்றிடும் சேவையானது அதன் வளர்ச்சிக்கு இன்றியமையாததாகும். இளைஞர்கள் வழங்கக்கூடிய பங்கின் முக்கியத்துவத்தைப் பற்றி வலியுறுத்தி ஷோகி எஃபெண்டியின் சார்பாக எழுதப்பட்ட கடிதம் இவ்வாறு கூறுவதாவது, “ கடவுளின் சமயத்தின் நோக்கங்களை முன்னெடுத்துத்துச் செல்பவர்களிடேயே, தன்னலமற்ற சேவையின் உணர்வைப் பேணுவதற்கான அத்தனைப் பொறுப்புகளையும் அவர் அவர்களது தோள்களில்தான் சுமத்துகிறார். “அத்தகைய உணர்வு இன்றி, எந்த ஒரு வேலையும் வெற்றிகரமாகச் செய்து முடிக்க முடியாது“, என அக்கடிதம் தொடர்ந்து குறிப்பிடுகிறது.

சேவைத் துறைக்கு இளைஞர்களை மிகவும் பொருத்தமானதாக மாற்றும் குணாதிசயங்களைப் பற்றி, உலக நீதி மன்றம் அனைத்து தேசிய ஆன்மீக சபைகளுக்கும் ஒரு செய்தியில் எழுதுகிறது:

**"கடினமான சூழ்நிலைகளிலும் இளைஞர்களின் திண்மை, அவர்களுடைய உடலுரமும் ஊக்கமும், உள்ளூர் சூழ்நிலைகளுக்கு ஏற்ப தங்களைத் பொருத்திக் கொள்ளும், புதிய சவால்களைச் சந்திக்கவும், தாங்கள் காணச் செல்வோரிடம் தங்களுடைய அன்பையும் உற்சாகத்தையும் காட்டக்கூடிய அவர்களின் திறன், மற்றும் இவற்றோடு சேர்த்து பஹாய் இளைஞர்களினால் நிலைநிறுத்திடும் நடத்தையின் உயர்ந்த தரம், ஆகிய அனைத்தும் அவர்களைத் திட்டமிடப் பட்டிருக்கும் பெரும்பணிகளுக்கு வலுமிக்கக் கருவிகளாக ஆக்குகின்றது. மெய்யாகவே, இந்த தனிச்சிறப்புமிக்க பண்புகள் தான், அவர்கள் எந்த ஒரு பெருந்திட்டத்தையும் முன்னெடுத்து செல்ல கூடியவர்களாகவும் மற்றும் தாங்கள் பங்கேற்கும் எந்த ஒரு காரியத்திலும், அவை உள்ளூர் அல்லது தேசிய அளவில் இருந்த போதிலும், அதன் உந்து சக்தியாகவும் ஆகச் செய்திடும். எங்களின் எதிர்பார்ப்புடைய கண்கள் பஹாய் இளைஞர்களின் மீது பதிக்கப் பட்டுள்ளது."[7]**

மேலும், உலகெங்கிலும் உள்ள இளைஞர்களை நோக்கி உரையாற்றுகையில், நீதி மன்றம் மேலும் விளக்குவதாவது:

**"உங்கள் யதார்த்தங்கள் பரந்த அளவிலான சூழ்நிலைகளால் வடிவமைக்கப்பட்டுள்ளன என்றாலும், ஆக்கபூர்வமான மாற்றத்தைக் கொண்டுவருவதற்கான ஆசை மற்றும் அர்த்தமுள்ள சேவைக்கான திறனாற்றல், உங்கள் வாழ்க்கையின் நிலை இரண்டும் எந்தஒரு இனம் அல்லது தேசத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டவையோ அல்லது பொருள் சார்ந்தவையோ அல்ல. . நீங்கள் பகிர்ந்தளிக்கும் இளமையின் இந்த பிரகாசமான காலம் அனைவராலும் அனுபவிக்கப்படுகிறது. . ."[8]**

1. மேற்கண்ட திருவாசகக் குறிப்புகளின் அடிப்படையில் பின்வரும் வாக்கியங்களைப் பூர்த்தி செய்யவும்:

   a. தனது இளம் வயதின் முழு நிறைவில் சமயத்திற்காகச் சேவை ஆற்றிட எழுகின்றவர் ______________________.

   b. தனது இளம் வயதின் முழு நிறைவில் மற்றும் தனது இதயத்தை அவரது அன்பைக் கொண்டு அலங்கரித்துக் கொள்கின்றவர் ________________________.

   c. அவர்களுடைய சக நம்பிக்கையாளர்களின் மத்தியில் தன்னலமற்ற சேவை என்னும் ஆற்றல் நிலைப்படுத்தப்படவேண்டும் என்னும் பொறுப்பு _____________________ தோள்களின் மீதுதான் சார்த்தப்பட்டுள்ளது.

   d. இளம் மற்றும் ஊக்கமிகு பஹாய்களின் தோள்களின்மீது சார்த்தப்பட்டுள்ள தன்னலமற்ற சேவை என்னும் ஆற்றல் இல்லையெனில் எவ்வித காரியமும் _________________________.

   e. இளம் மற்றும் ஊக்கமிகு பஹாய்களின் தோள்களின்மீது சார்த்தப்பட்டுள்ள தன்னலமற்ற சேவை என்னும் ஆற்றலின் வாயிலாக வெற்றி அரிதாய் அடையப் பெற்றிருந்தாலும், அது __________________________.

   f. கடினமான சூழ்நிலைகளை இளைஞர்களின் _______________________, அவர்களுடைய ______________________ _______________________, அவர்களைத் திட்டமிடப் பட்டிருக்கும் பெரும்பணிகளுக்கு வலுமிக்கக் கருவிகளாக ஆக்குகின்றது.

   g. பெருந்திட்டங்களுக்கு வலுமிக்கக் கருவிகளாக இருக்கும் இளைஞர்கள், தங்கள் ஆற்றல்களால் உள்ளூர் சூழ்நிலைகளுக்குத் தங்களைத் _______________ ____________________, புதிய சவால்களைச் ___________________, தாங்கள் காணச் செல்வோரிடம் தங்களுடைய அன்பையும் உற்சாகத்தையும் ______________________ அவர்களுக்குத் திறன் உள்ளது.

   h. இந்தத் தனிச்சிறப்புமிக்க பண்புகளின்வாயிலாக அவர்கள் எந்த ஒரு பெருந்திட்டத்திற்கும் ________________ ஆகவும், மற்றும் தாங்கள் பங்கேற்கும் எந்த ஒரு காரியத்திலும் அதன் ___________________ ஆகக்கூடும்.

## பகுதி 7

இளைஞர்களால் ஆற்றப்படும் சேவைகளோடு பொதுவாகவே சில கருத்துக்கள் ஒத்திருக்கும். அவற்றில் உட்தூண்டல், உற்சாகம், கற்பனையை ஈர்க்கச் செய்திடும் எவ்விதமான சாத்தியங்களையும் சுதந்திரமாக நாடுவது, ஆகியவை அடங்கும். இந்தக் கருத்துக்களைச் சேவையோடு சார்ந்திருக்கச் செய்வது சிறிதளவு ஏற்புடைமை கொண்டதாக இருந்த போதிலும் அவற்றிற்கு அதிக முக்கியத்துவத்தைத் கொடுப்பதிலிருந்து நாம் கவனமாய் இருக்க வேண்டும். கிராமங்கள் மற்றும் சுற்றுப்புறங்களின் ஆன்மீக அஸ்திவாரங்களை வலுப்படுத்த சமயத்தின் போதனைகள் மற்றும் கோட்பாடுகள் பயன்படுத்தப்படும் முறையான செயல்முறைகளைப் பற்றி சிந்தியுங்கள் - எடுத்துக்காட்டாக, குழந்தைகளின் ஆன்மீகக் கல்வி, சமூக வாழ்க்கையை ஒருங்கிணைத்தல் மற்றும் மனித வளங்களை மேம்படுத்துதல். இப்போது, இந்தப் படிப்பைப் படிக்கும் உங்கள் நண்பர்களுடன் சேர்ந்து, இந்த செயல்முறைகளுக்குப் பங்களிக்கும் இளைஞர்களால் மேற்கொள்ளக்கூடிய சில சேவை செயல்களை நினைவுகூருங்கள். இவை மகிழ்வைத் தரக்கூடியவையாக இல்லையா? இவை முன்னேற்பாடு எதுவும் இல்லாத சில தன்னிச்சையான நடவடிக்கைகளை அதனுள் அறிமுகம் செய்வதற்கு இடமளிக்கவில்லையா? அவை ஒரு ஒழுங்குமுறையிலான முன்முயற்சியின் மூலம் படைப்பாற்றலை ஊக்குவிக்கவில்லையா?

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

## பகுதி 8

இளமைக்காலம் என்பது ஆயத்த காலம் என்று அடிக்கடி கேள்விப்படுகிறோம். இந்த கூற்று நிஜமாகவே உண்மையாகும். இன்றைய உலகில் தேவையான மாற்றங்களைக் குறிப்பிடுகையில், உலக நீதி மன்றம் இவ்வாறு எழுதுகிறது, "சமூகத்தின் செயல்பாட்டில் ஏற்படவிருக்கும் மாற்றம் நிச்சயமாக இளைஞர்கள் மரபுரிமையாக பெறப்போகும் உலகத்திற்காக அவர்கள் செய்யும் ஆயத்தங்களின் செயல்திறனைப் பொறுத்ததாகும்." அப்படியானால், நாம் கேட்க வேண்டியது என்னவென்றால், இளைஞர்கள் வயது முதிர்ச்சி அடையும்போது தாங்கள் சுமக்க வேண்டிய பொறுப்புகளுக்கு எவ்வாறு தங்களைத் தயார்படுத்திக் கொள்ள முடியும் என்பதே. உலக நீதி மன்றத்தால் எழுதப்பட்ட ஒரு செய்தி விளக்குகிறது:

**“பஹாயாக இருந்தாலும் இல்லாவிட்டாலும், எந்த ஒரு நபருக்கும், அவரது இளமைப் பருவமானது, அவர் தனது வாழ்க்கையின் போக்கை அமைக்கும் பல முடிவுகளை எடுக்கும் காலமாகும். இந்த ஆண்டுகளில், அவர் தனது வாழ்க்கையின் வேலையைத் தேர்வுசெய்து, கல்வியை முடித்து, சொந்தமாக சம்பாதிக்கத் தொடங்குகிறார், திருமணம் செய்துகொண்டு தனது சொந்த குடும்பத்தை உருவாக்கத் தொடங்குகிறார். எல்லாவற்றிற்கும் மேலாக, இந்த காலகட்டத்தில்தான் மனதின் தேடுதல் மிகவும் அதிகமாகிறது மற்றும் அந்நபரின் எதிர்கால நடத்தைக்கு வழிகாட்டும் ஆன்மீக மதிப்பீடுகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. ”[9]**

இந்த அடிப்படையில், பாதுகாவலர் சார்பாக எழுதப்பட்ட கடிதம், இளைஞர்கள் எதிர்காலத்திற்கான ஆயத்தத்தின் ஒரு பகுதியாக அவர்களின் அறிவுசார் மற்றும் ஆன்மீக திறன்களை வளர்த்துக் கொள்ள வேண்டியதன் அவசியத்தைக் குறிக்கிறது. "நீங்கள் நல்லமுறையில் தயாராகியிருக்க வேண்டும்" என்று கடிதம் குறிப்பிடுகிறது. "உங்கள் அறிவுசார் மற்றும் ஆன்மீக பக்கமானது சமமாக வளர்ந்திருக்க வேண்டும்."

எப்போதாவது என்றில்லை, பிறகு, ஆயத்தம் குறித்த கேள்வியானது – அது பள்ளிக்கல்வியோ, தொழிற்கல்வியோ அல்லது தொழில்முறைக்கல்வியோ படிப்புக்கும் சமயத்திற்கான சேவைக்குமிடையேயான உறவு பற்றிய கேள்விக்கு வழிவகுக்கிறது. குறிப்பாக, இளைஞர்கள் ஒவ்வொருவருக்கும் எவ்வளவு ஆற்றலைச் செலவிட வேண்டும் என்பது சில நேரங்களில் தெளிவாகத் தெரியவில்லை. ஒரு தீவிரமான போக்கு என்னவென்றால், இளைஞர்கள் தங்கள் கல்விக்காக தங்களை முழுமையாக அர்ப்பணித்துக்கொள்ளவும், ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சேவைத் துறைகளில் தீவிரமாக ஈடுபடுவதற்கு முன்பு அவர்கள் அதிக வாழ்க்கை அனுபவத்தைப் பெறும் வரை காத்திருக்கவும் அறிவுறுத்துவது ஆகும். "எல்லா சந்தர்ப்பங்களிலும், ஒருவருடைய சாத்தியக்கூறுகளின் வரம்பிற்குள் கல்வியைப் பெறுவதற்கும், ஒருவரின் வாழ்வாதாரத்தைப் பெறுவதற்கு ஒரு வர்த்தகம் அல்லது தொழிலைப் பெற்றிருப்பது உரிய முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும்" என்பது உண்மைதான். ஆயினும், உலக நீதி மன்றம் தெளிவுபடுத்துவது போல, "இளைஞர்களின் பலனளிக்கும் ஆண்டுகளை பிரத்தியேகமாக வரையறுப்பது" ஒரு வர்த்தகம் அல்லது தொழிலை மேற்கொள்வதற்கான ஆயத்தநிலையின் ஒரு கட்டமாக இருப்பபது

**"இளைஞர்களுக்கு ஏராளமாக இருக்கும் படைப்பு ஆற்றல்களை கவனிக்காமல் இருப்பதாகும். எல்லாவற்றிற்கும் மேலாக, சமயத்தின் ஆரம்பகால கதாநாயகர்களில் பலர் தங்கள் அன்பானவரின் பாதையில் மிகப்பெரிய செயல்களைச் செய்ய எழுந்த இளைஞர்கள் மற்றும் பெண்கள் ஆவர். ”[10]**

மற்றொரு தீவிரமான போக்கு என்னவென்றால், இளைஞர்கள் பள்ளிக் கல்வி அல்லது தொழில் பயிற்சியை முற்றிலுமாக கைவிடவும், குறிப்பாக இந்த வாய்ப்புள்ள நேரத்தில், முழுவதுமாக சேவைத் துறையில் தங்கள் ஆற்றலைச் செலவிடவும் ஊக்குவிப்பதாகும். ஒவ்வொரு இளைஞனின் வாழ்க்கையிலும் சேவையானது மையமாக இருக்க வேண்டும் என்பது முந்தைய பிரிவுகளில் நாம் படித்தது போன்ற பல பகுதிகளிலிருந்து தெளிவாகிறது. ஒரு தீவிரமான சேவை காலம், அது படிப்பில் இடைவேளையை உள்ளடக்கியிருந்தாலும் இல்லாவிட்டாலும், "அவர்களின் ஆயத்தத்தின் மதிப்புமிக்க கூறு" ஆக இருக்கலாம் என்பதும் தெளிவாகிறது.

**"சேவையின் பாதையில் வழங்குவதற்கு அதிக அளவினைப் பெற்றிருப்பவர்களிடமிருந்து பெரிய விஷயங்களை எதிர்பார்ப்பது சரியானது என்றாலும், முதிர்ச்சிகான வளர்ச்சி என்ன என்பது பற்றிய குறுகிய கண்ணோட்டத்தை கடைப்பிடிப்பதில் இருந்து நண்பர்கள் காத்துக்கொள்ள வேண்டும். நடமாடும் சுதந்திரம் மற்றும் கைவசம் உள்ள நேரம் ஆகியவை சமூகத்தின் தேவைகளுடன் நேரடியாக தொடர்புடைய வழிகளில் பல இளைஞர்களுக்கு சேவை செய்ய உதவுகிறது, ஆனால் அவர்கள் இருபதுகளில் முன்னேறும்போது, அவர்களின் எல்லைகள் விரிவடைகின்றன. . . . பலருக்கு, உடனடி முன்னுரிமையானது, அவர்களுக்கு முன்னால் உள்ள சாத்தியக்கூறுகளின்படி, மேற்கொண்டு கல்வி கற்பதாக இருக்கும், அது கல்வியோ அல்லது தொழில்சார்ந்ததாகவோ இருக்கும், மேலும் சமூகத்துடன் தொடர்புகொள்வதற்கான புதிய தளங்கள் திறக்கப்படுகின்றன. . . . அவர்களின் வயதுவந்த வாழ்க்கையின் திசையைப் பற்றி அவர்கள் எடுக்கும் முக்கியமான முடிவுகள், கடவுளின் சமயத்திற்கான சேவை என்பது அவர்களின் இளமை பருவத்தின் சுருக்கமான மற்றும் மறக்கமுடியாத அத்தியாயமா அல்லது எல்லா செயல்பாடுகளும் கவனத்திற்கு வருகின்ற கண்கண்ணாடியாக இருக்கும் அவர்களின் இப்பூவுலக வாழ்வின் நிலையான மையமா இருந்ததா என்பதைத் தீர்மானிக்கும்."[11]**

கல்விக்கும் சேவைக்கும் இடையிலான உறவை நாங்கள் மேலும் கருத்தில் கொள்வதற்கு முன், நீங்கள் இங்கே இடைநிறுத்தப்பட்டு, இளமைப் பருவம் ஆயத்தமாவதற்கான காலகட்டம் என்பதன் அர்த்தம் என்ன என்பதைப் பற்றிய உங்கள் புரிதலைப் பிரதிபலிக்கும் ஒரு சுருக்கமான அறிக்கையை நீங்கள் எழுத விரும்பலாம்.

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

## பகுதி 9

நீங்கள் இதற்கு முன்பான பாடப்பகுதியில் பொதுக்கல்வி அல்லது ஒரு தொழில் அல்லது வேலை சார்ந்த ஒரு கல்வியைப் பெற்று அதன் வாயிலாக தாங்கள் வழிவழியாகப் பெறப்போகும் ஓர் உலகிற்காக தங்களைத் தகுந்த முறையில் தயார் செய்துகொள்வது இளைஞர்களுக்கு எவ்வளவு இன்றியமையாதது என்பதை நீங்கள் எழுதிய வரிகள் வலியுறுத்துகின்றன என்பதில் சந்தேகமில்லை. ஆனால் சமயத்திற்கான சேவை நீங்கள் கல்வி பெறும் காலங்களில் "தள்ளிவைக்கப்படமுடியாது" என்பதையும் நீங்கள் கண்டுகொண்டிருப்பீர்கள். வயதாக வயதாக இத்தகைய மனப்பான்மை மேலும் மேலும் வளர்ந்தவன்னமாகத்தான் இருக்கப்போகின்றது, மற்றும் ஊக்கத்துடன் சேவை செய்வதற்கு அனுகூலமான காலத்திற்காக நாம் காலமெல்லாம் காத்திருக்கவேண்டியதுதான். கல்வியென்பது

பாடப்புத்தகங்கள் வாயிலாக அடையப்படக்கூடிய ஒன்றென வரையறுக்கப்படும் போது கல்விக்கும் சேவைக்கும் இடையில் உள்ள இத்தகையக் கண்ணோட்டமே எழக்கூடும். மாறாக சேவை என்பது கல்வியறிவு பயன்படுத்தப்படும் மற்றும் பகுத்தறிவு மேம்படுத்தப்படும் ஒரு களம் எனக் காணப்படும்போது, இத்தகைய சிந்தனை தவிர்க்கப்பட்டும், எதிர்கால ஆயத்தங்களுக்கான எத்தகைய வலுவான செயற்பாட்டின் ஒரு பகுதியாக மட்டும் அல்லாமல், மாறாக அதன் மையமாகவே அது கருதப்படும். உண்மையில், இளமையின் ஆரம்பக்காலத்திலேயே சேவை துவங்கப்படும்போது, அது ஒருவரின் வாழ்க்கை முழுவதும் வழிகாட்டியாக விளங்கி, எதிர்காலத்திற்குத் தேவையான ஒரு முறையான பாதையை வடிவமைத்திடவும் செல்லும் வழியை தெளிவாக்கிடவும் அது வழிவகுக்கின்றது.

இயல்பாகவே இத்தகைய கண்டுகொள்ளல் இளைஞர்கள் சேவைக்கான தங்கள் ஆற்றலை மேம்படுத்துவதற்குத் தேவையான எத்தகைய ஆயத்தங்களை செய்வது என்பது குறித்தக் கேள்விகளுக்கு வழிகாட்டும். இளைஞர்களுக்கே இயல்பான ஓர் உந்துதலான தன் சகநண்பர்களுடன் ஒன்றாகச் சந்தோஷமாகக் பொழுதுபோக்க வேண்டும் எனும் ஆவலைப் பூர்த்தி செய்யக்கூடியவற்றை உள்ளடக்கிய பஹாய் சமூகத்தின் பல நடவடிக்கைகளில் கலந்துகொள்வதன் வாயிலாக, இளைஞர்கள் தங்கள் ஆற்றல்களை மேம்படுத்தியும் சமயத்திற்கு வாழ்நாள் முழுவதுமான சேவைக்குத் தங்களைப் போதுமான வகையில் தயார் செய்துகொள்வார்கள் எனும் ஒரு சிந்தனை நிலவுகின்றது. இருந்தபோதிலும் இத்தகைய முறையாக அமையாத கல்விச் செயற்பாடு, தேவையாக இருந்தபோதிலும், அது போதுமானதாகாது என புனித வாக்குகள் எடுத்துக்காட்டுகின்றன.

நாம் சற்று உன்னிப்புடன் கவனித்தோமானால், இளைஞர்கள் சமயத்தின் போதனைகளில் "நன்கு கல்வியளிக்கப்பட்டும் பயிற்றுவிக்கப்பட்டும் இருப்பார்கள் எனவும் மற்றும் சமயம் குறித்து முழுமையான மற்றும் வலுவான அறிவு பெற்றிருப்பார்கள் என ஷோகி எஃபெண்டி நம்பிக்கைத் தெரிவித்துள்ளார். கூடுதலாக, தங்களின் சமூகங்களின் நடவடிக்கைகளில் "ஆக்கரகமான, முழுமனதுடனான, மற்றும் தொடர்ந்தாற் போன்ற பங்கேற்பின்" மூலம் கற்றுக்கொள்ளும்படி அவர் ஊக்குவிக்கின்றார். இதன் தொடர்பில், சமயத்தைப் பற்றி கற்பதன் மூலம் அவர்கள் கற்றுள்ள "கோட்பாடுகளை ஜீவனுள்ள மற்றும் ஆணித்தரமான செயல்களாக" இளைஞர்கள் உருமாற்றுவதற்கான ஓர் இன்றியமையா ஆய்வுக்கூடத்தை" சமூக வாழ்வானது வழங்குகின்றது, என அவர் விளக்குகின்றார். "அந்த உயிருள்ள ஜீவனின் ஓர் உண்மையான பகுதியாக ஆவதன் மூலமே," அவர்கள் "பஹாய் போதனைகளினூடே இழையோடும் உண்மையான ஆவியை கிரகித்திட முடியும்," என அவர் குறிப்பிடுகின்றார். ஆதலால், இளைஞர்கள் சேவைக்காகத் தங்களை தயார் செய்துகொள்வதற்கு உதவியாக சமூக வாழ்வின் மெய்ம்மையில் பதிந்துள்ள, ஒரு முறையான கல்வியல் செயல்முறை தேவைப்படுகின்றது. வெறுமனே நடவடிக்கைக்காக நடவடிக்கையும், வெறுமனே படிப்பிற்காக படிப்பும் தேவைப்படுவதை ஈடுசெய்ய முடியாது.

உலக நீதி மன்றத்தின் பல செய்திகளும் இச் சாயலிலேயே அமைந்துள்ளன. "கற்றலும் சேவையும் இணைக்கப்பட்டு உடன் செயல்படுத்தப்படும் போது," புரிந்துகொள்ளல் பெரிதும் அதிகரிக்கின்றது, என ஒரு செய்தி தெளிவுபடுத்துகின்றது. அச்செய்தி மேலும் குறிப்பிடுவதாவது, "அங்கு சேவைக் களத்தில், அறிவு சோதிக்கப்படுகின்றது, நடைமுறையிலிருந்து கேள்விகள் எழுகின்றன, மற்றும் புரிதலில் பல மட்டங்கள் அடையப்படுகின்றன. உலகம் முழுவதுமுள்ள நாடுகளில், ஒரு முறைப்படியான படிப்பின் மூலம் மனிதவளங்களை உருவாக்குவதெனும் வெளிப்படையான நோக்கத்திற்காக பயிற்சிக்கழகங்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. சேவைக்கான தங்களின் திறனாற்றலை அதிகரித்துக்கொள்வதற்கான ஒரு

முறைமையான கல்வியல் செயல்முறையில் அதிகரிக்கும் எண்ணிக்கையிலான மக்கள் ஈடுபட்டுவருவதோடு, இந்த செயல்முறையின் முன்னணியில் இளைஞர்களே நிலையாக இருக்கின்றனர். பயிற்சிக்கழக முகவாண்மையைப் பொறுத்த வரை, உலக நீதிமன்றத்தின் சார்பாக எழுதப்பட்ட ஒரு கடிதம் பின்வருமாறு விளங்குகின்றது:

**“அது கற்றல், வழிபாடு, போதனை, சமூக நிர்மாணிப்பு மற்றும் பொதுவாக, சமுதாயத்தைத் தன்மை மாற்றமுறச் செய்திடுவதைக் குறிக்கோளாகக் கொண்ட பிற செயல்முறைகளை ஒன்றாய்ப் பின்னும் ஒத்திசைவான, மகிழ்ச்சியான வாழ்க்கை முன்மாதிரி தோற்றத்திற்குத் துணைபுரிய, நல்லொழுக்கமுள்ள நடத்தை, சுய-கட்டுப்பாடு ஆகியவற்றை மேம்படுத்தும் ஒரு கல்விசார்ந்த செயல்முறையில் தனிநபர்களை ஈடுபட வைத்திட முயல்கிறது. இறை மொழியுடன் தொடர்பு, கல்வியளிக்கும் செயல்முறையின் மையத்தில் இருக்கின்றது. இந்த இறை மொழியின் ஆற்றலானது ஒவ்வொரு தனிநபரும் தனது உள்ளத்தைத் தூய்மைப்படுத்துவதற்கான முயற்சிகளையும் "பற்றின்மையெனும் கால்களோடு" ஒரு சேவைப் பாதையில் நடப்பதையும் பராமரிக்கின்றது.”[12]**

உலக நீதிமன்றத்தின் சார்பாக எழுதப்பட்ட மற்றொரு கடிதத்தில்:

**“குறிப்பாக, பயிற்சியகத்தின் பாடங்கள், சேவையாற்றுவதன் மூலமாக, வற்புறுத்தும் அகங்காரத்தை அடக்குவதை நோக்கமாகக் கொண்ட, அதன் எல்லகளுக்குள் அகப்பட்டுக்கொண்டிருக்கும் தனிநபர் விடுபடுவதற்கு உதவியளித்தும் அவரைச் சமூக நிர்மாணிப்பு குறித்த ஓர் ஆற்றல்மிகு செயல்முறையில் பங்கேற்றிட உதவும் சேவையின் மூலமாகப், படிப்படியாகப் பண்புகள், மனப்பான்மைகள், செயல்திறன்கள், திறமைகள் ஆகியவை அடையப்படக்கூடிய ஒரு பாதையைத் தனிநபர்கள் பின்தொடர்வதை நோக்கமாகக் கொண்டுள்ளன.”[13]**

உலகம் முழுவதுமுள்ள இளைஞர் அணியினரைக் குறிப்பிட்டு உலக நீதிமன்றம் பின்வருமாறு எழுதுகின்றது:

**“இவ்விவரங்கள் எதுவாக இருப்பினும், அவர்கள் அனைவரும், தங்களுடைய சமூகங்களுக்குச் சேவையாற்ற வேண்டும் எனும் தங்களுடைய ஆவலுக்குத் தங்களுடைய நேரத்தையும், சக்தியையும் அர்ப்பணிக்கின்றனர். வாய்ப்பு வழங்கப்படுகையில், உருவாகி வரும் தலைமுறைகளின் ஆன்மீகக் கல்விக்கு அர்ப்பணிக்க அவர்களில் பலர் தங்களுடைய வாழ்வுகளின் சில வருடங்களை அர்ப்பணிப்பதில் மகிழ்ச்சியடைவர். உலகின் இளைய வயதினரிடத்தில் சமுதாயத்தை புரணமைபப்புச் செய்வதற்கான ஆற்றலின் களஞ்சியம் புதைந்துள்ளது. அது பயன்படுத்தப்படுவதற்காகக் காத்துக் கொண்டுமிருக்கின்றது. இந்த ஆற்றலை வெளிக்கொண்டுவரும் செயல் ஒரு புனிதமான பொறுப்பு என்பது ஒவ்வொரு பயிற்சிக் கழகத்தினாலும் கருதப்பட வேண்டும்.”[14]**

## பகுதி 10

நாம் இதற்கு முன் வந்த இரு பகுதிகளிலும் பார்த்தது போன்று நாம் மனதில் கருதக்கூடிய சூழ்நிலைகளை தேவையற்ற எதிர்மாறுகளுக்கு வழிவகுக்கக்கூடிய வகையில், நமது வாழ்க்கைக் கூறுகளை தனிக்கட்டங்களாக பிளந்துபார்ப்பதைத் தவிர்க்கவேண்டும். பொதுவாகவே, மனிதனின் சிந்தனை, தாம் சந்திக்கும் உலகினை வெவ்வேறு அம்சங்களாகப் பிரித்து பார்க்கும் போக்கு உள்ளது. மெய்ம்மையானது -- பௌதீக, சமூக அல்லது ஆன்மீக மெய்ம்மை யாவும் -- முழுமையாக அறிவதற்கு மிகவும் பரந்தவையாகும். புரிந்துகொள்வதற்காக, அதைப் பாகங்களாகப் பிரிப்பதென்பது தகாத ஒன்றல்ல. ஆனபோதிலும், அவ்வாறு செய்கையில், மெய்ம்மையின் முழுமைத் தன்மையை நாம் கருத்தில் கொள்ளாவிட்டால், சிரமங்கள் உண்டாகும். பல இன மக்கள், நிறம், நாடுகள் மற்றும் மதங்கள் ஆகியவற்றிற்கிடையே ஏற்படும் சச்சரவுகள், வாழ்க்கையைப் பிரித்துப் பார்க்கும் தன்மையிலிருந்து தோன்றிய பிரச்சனைகளின் சில உதாரணங்களாகும். ஏனெனில், மனித இனத்தின் முழுமைத் தன்மை மெய்யானது, மற்றும் அதை இன, ஜாதி அல்லது தேசிய வேற்றுமைகளின் வழியாகப் பிரித்துப் பார்ப்பது என்பது மனித கற்பனையின் படைப்பே ஆகும் மற்றும் அது வரலாறு சம்பந்தமான ஒரு சூழ்நிலையின் விளைவே ஆகும்.

நாம் கவனக்குறைவாக இருந்து இத்தகைய சிதறலான அணுகுமுறையை நமது வாழ்க்கையில் கடைப்பிடித்தால், பெரிதும் கற்பனை சார்ந்த பல விதமான இருபிளவுக் கோட்பாடுகளை உருவாக்கிவிடுவோம். வேலை, ஓய்வு, குடும்ப வாழ்க்கை, ஆன்மீக வாழ்க்கை, பொருளாதார வாழ்க்கை, நமது உடல் ஆரோக்கியத்தைக் கவனிப்பது, அறிவுத்திறன்களை நாடுவது, குழந்தைகளின் கல்வி, தனிநபர் மேம்பாடு, சமூக மேம்பாடு போன்றவை நமது வாழ்க்கையின் பல கூறுகளாகும். அவ்வாறான பிரிவுகள் உண்மை என நாம் ஏற்றுக் கொண்டால், நாம் பல திசைகளில் இழுக்கப் பட்டு வாழ்க்கையின் பல்வேறு அம்சங்களின் தேவைகள் என நாம் கருதிடும் இவைகளுக்குப் பதிலளிக்க முயல்கின்றோம். இதுபோன்ற கேள்விகளால் நாம் குழப்பம் அடைகின்றோம்: சமயத்திற்குச் சேவை செய்வதற்காக நான் என் குடும்ப வாழ்க்கையைத் தியாகம் செய்ய வேண்டுமா? சமயத்திற்கு சேவை செய்வது, நான் என் குழந்தைகளை நன்றாக வளர்க்கும் முயற்சிகளைத் தடை செய்வதில்லையா? இவை இதுபோன்ற கணக்கிலடங்கா கேள்விகளில் இரண்டாகும்.

நாம் உருவாக்கியுள்ள இந்த வெவ்வேறு பிரிவுகளை வெல்வதற்காகச், சில வேளைகளில் நாம் நமது நேரத்தை இந்தப் பல்வேறு தேவைகளுக்குச் சரி சமமாக பிரித்து விடுகிறோம். மற்ற வேளைகளில், நாம் எது முக்கியம் என முடிவுச் செய்து, ஒரு குறிப்பிட்டக் கால கட்டத்தில் எது நமது முக்கியமான குறிக்கோள் எனக் கருதுகிறோமோ அதன் மீது நாம் நமது ஆற்றல்கள் அனைத்தையும் செலுத்துகிறோம். பல்வேறு நடவடிக்கைகளுக்கு நேரத்தையும் ஆற்றலையும் கவனமாக வகுப்பது போற்றத்தக்கது என்ற போதிலும், நம் வாழ்க்கையின் பல்வேறு அம்சங்களின் ஒன்றிணைந்த முழுமைத்தன்மையை உணர்ந்து, மெய்யாகவே இல்லாத பிரிவுகளின் மீது அளவற்ற முக்கியத்துவத்தை நாம் காட்ட மறுத்தாலன்றி, அது தேவையற்ற பதற்றத்தையும் மனக்கவலையும் ஏற்படுத்திடக்கூடும்.

வாழ்க்கையின் பல்வேறு அம்சங்கள், ஒன்று மற்றொன்றுக்கு வலுவூட்டிடும் ஜோடிகளாக, ஆனால் ஒன்று மற்றொன்றோடு வேற்றுமையானது என சில வேளைகளில் கருதப் படும் வாழ்க்கையின் பல்வேறு அம்சங்கள் பின்வருமாறு குறிப்பிடப் பட்டுள்ளன. பின்தொடரும் வாக்கியங்களை அடுத்துவரும் ஒவ்வொரு ஜோடியான வாக்கியவரியிலும், எது வாழ்க்கையை ஓர் ஒன்றிணைந்த

பாதையாகப் பார்க்கும் சிந்தனையைத் பிரநிதிக்கின்றது என்றும், எது வாழ்க்கையைப் பிரித்துப் பார்க்கும் போக்கினைப் பிரதிநிதிக்கின்றது என்பதை முடிவு செய்யவும். அவற்றை "ஒ" அல்லது "பி" எனக் குறியிடவும்.

1. குடும்பமும் தொழிலும்

— நான் என் தொழிலில் கடுமையாக வேலை செய்தால், என் குடும்ப வாழ்க்கைப் பாதிப்படையும்.

— என் தொழிலில் நான் செய்திடும் சாதனைகளைப் பற்றியும் நான் சந்திக்கும் சவால்களைப் பற்றியும் நான் என் குடும்பத்தோடு கலந்து பேசிடுவேன்.

— நிச்சயமாகப் பெண்கள் தங்கள் தொழிலில் சிறந்துவிளங்கலாம், ஆனால் அவர்களுடைய குழந்தைகள் தான் பாதிக்கப்படுவார்கள்.

— நான் சிறந்த பிள்ளைகளை வளர்க்க வேண்டும் என்றால், நான் என் தொழில் மீது அக்கறை செலுத்தக் கூடாது.

— நான் எனது தொழிலில் முன்னேற முடியும், அதே சமயம் என் குடும்பப் பொறுப்புகளையும் முழுமையாக நிறைவேற்ற முடியும்.

2. கல்வியும் மனித இனதிற்காகச் சேவையாற்றுவதும்

— நான் முன்னோடியாகச் செல்வதா கல்விக் கற்பதா என்ற இரண்டில் ஒன்றைத் தேர்ந்தெடுக்க வேண்டும், ஏனெனில் இரண்டையும் செய்வது சாத்தியமாகாது.

— கல்விக்கற்றலில் சாதனை பெறுவது, சேவைக் களத்தில் நுழைவதற்கு ஒரு முன்தேவையாகும்.

— என் கல்விக்கற்றலில் நான் பெற்றுள்ள அறிவு என் சேவைக் களத்திற்குத் துணைபுரியும், மற்றும் சேவைக் களத்தில் நான் பெற்றுள்ள அனுபவம் என் திறன்களை அதிகரிக்கும்.

— உண்மையாக என்னை நான் சமயத்திற்காக அர்ப்பணிக்க வேண்டும் என்றால் நான் என் கல்வியைக் கைவிட வேண்டும்.

— நான் இளைஞனாக இருக்கும் வேளையில், என் படிப்பின் மீது நான் கவனம் செலுத்த வேண்டும்; வயதாகியவுடன் எவ்வேலையிலும் நான் சேவையாற்றலாம்.

— உலகின் மேம்பாட்டை நாடிடும் முயற்சிகளில் சமயத்தின் போதனைகளை எப்படி பயன்படுத்துவது என்று கற்றுக்கொள்வதே எனது ஆவல்.

— நமது சமூகங்களின் நல்வாழ்வை மேம்படுத்துவதற்காக சேவையின் பாதையில் நாம் வளர்க்கும் திறனாற்றல்கள், பொருத்தமான படிப்புத் துறைகளைத் தேர்ந்தெடுப்பதில் நமக்கு உதவிடும்.

3 அறிவாற்றல் மேம்பாடும் ஆன்மீக பண்புகளின் மேம்பாடும்

— தன்னிச்சையாக உண்மையை ஆராய்வதென்பது, அறிவாற்றலை மேம்படுத்துவதும், ஆன்மீகப் பண்புகளைப் பெறுவதும் ஆகிய இரண்டையும் வேண்டிடும்.

— மற்றவர்களுக்குச் சமயத்தைப் போதிக்கும் வேளையில் நாம் அவர்களுக்கு அன்புச் செலுத்தினால் மட்டுமே போதும். நாம் என்ன சொல்கிறோம் என்பது முக்கியமல்ல.

— அறிவாற்றலை மேம்படுத்துவதற்கு, நீதி, நேர்மைத்தன்மை, மற்றும் வேற்றுமை பார்க்காமல் இருக்கும் தன்மையும் தேவைப்படும்.

— ஆன்மீகத் தன்மையை மேம்படுதுவதற்கு, ஒருவர் தன் அறிவாற்றலைக் கைவிட வேண்டும்.

— நமது மனங்களும் சிந்தனைகளும் ஒன்று மற்றொன்றிலிருந்து பிரிந்திருக்கவில்லை: அவை நம் ஆன்மாவின் - ஒன்று மற்றொன்றுக்குத் துணைபுரியும், இணைவாக இயங்கும் ஒரே மெய்ம்மையாகும்.

— விழிப்புணர்வுடனான அறிவின் வழியாகவும் நற்செயல்களைச் செய்வதின் வழியாகவும்தான் ஆன்மீகப் பண்புகள் மேம்படுத்தப் படுகின்றன.

4. லௌகீக வாழ்வும் ஆன்மீக வாழ்வும்

— ஆன்மீகத்தில் நான் வளரவேண்டும் என்றால் நான் உடலளாவிய இன்பங்களைக் புறக்கனிக்கவேண்டும்.

— நாம் முதியோர்களாக ஆகும் வரை ஆன்மீக விஷயங்கள் ஒதுக்கி வைக்கப் படவேண்டும்; நமது இளம் வயதில், பொருளாதாரத்தில் வளர்வதற்கான எல்லா வாய்ப்புக்களையும் நான் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

— மனிதர்கள் ஆன்மீக விஷயங்கள் மீது கவனம் செலுத்துவதற்கு முன் அவர்கள் பொருளாதாரத்தில் வளர்ச்சியடைய வேண்டும்.

— இந்த பௌதீக உலகில் என் வாழ்க்கையின் நோக்கமானது, என் ஆன்மீக பண்புகளையும் சக்திகளையும் வளர்த்துக் கொள்வதே ஆகும்.

— இந்த பொருள்சார் தளத்தில் வாழ்க்கையின் நோக்கமானது எப்போதும் முன்னேறிச் செல்லும் நாகரிகத்தை முன்னோக்கிக் கொண்டு செல்வதாகும்.

— கடவுள் இவ்வுலகை நமக்காக படைத்துள்ளார். நமது இதயம் அவருக்கே சொந்தமாக இருக்கும் வரை மற்றும் இவ்வுலகம் நம்மை அவரிடம் தொடர்ந்து நெருங்குவதிலிருந்து தடுக்காமல் இருக்கும் வரை, நாம் இவ்வுலகம் வழங்கிடும் கொடைகளைக் கொண்டு மகிழ வேண்டும்.

## பகுதி 11

இப்பாடப்பிரிவில் இளைய இளைஞர்களைக் கற்பித்துக்கூறுவனவற்றை மட்டும் நாம் இங்கு அவ்வளவாகக் கருதவில்லை, ஆனால் புனித எழுத்துக்களில் கருத்துரைக்கப்பட்டுள்ளபடி இளம் ஆண்கள் பெண்கள் ஆகியோரின் தனியியல்புகளை நாம் இங்கு கருத்தில் கொள்கின்றோம். இவ்வியல்புக்கூறுகள் சில குறித்து நமக்கு உடபார்வைகள் அளித்த இரண்டு எடுத்துக்காட்டுகளைப் பார்வையிட்டதன் மூலம் நாம் இந்த ஆய்வை ஆரம்பித்தோம். தொடர்ந்து 15 வயது என்பது ஒரு தனிநபரின் வாழ்வில் ஒரு சிறப்புமிகுந்த காலம் என்பதையும் நாம் கண்டோம், ஏனெனில், புதிய ஆற்றல்களும் திறன்களும் கூர்கவனத்திற்குக் கொண்டுவரப்படும் தருணமான, முதிர்ச்சியின்

நுழைவாயிலை அது பிரதிநிதிக்கின்றது. சமயத்தின் வாழ்வுமுறையில் இளைஞர்கள் எத்தகைய குறிப்பிடத்தக்க பங்கை ஆற்றமுடியும் என்பதும் அவர்களுடைய மாபெரும் ஆற்றல்கள் சமயத்தின் சேவையின்பால் வழிநடத்தப்படவேண்டியதன் அவசியத்தின் முக்கியத்துவமும் நமக்குத் தெரியும். இளைஞர்கள் தங்களுடைய வருங்கால வாழ்க்கைக்குத் தங்களை விழிப்புணர்வோடு தயார்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதை நாம் அங்கீகரித்துள்ளோம், மற்றும் இத்தயாரிப்புச் செயல்பாட்டிற்கு, அறிவைப் பெருக்கிக்கொள்வது மற்றும் வாழ்வாதாரத்திற்கான திறன்களைப் பெறுவது, சமயச் சேவைச்செயல்கள் புரிவதற்கான திறமையாற்றல்களை மேம்படுத்திக்கொள்வது ஆகிய அவர்களின் இருவிதமான கல்வியுடன் கூடி, சேவையின் இன்றியமையாமையையும் நாம் அறிந்துகொண்டோம்.

இங்கு சற்று நிறுத்தி நீங்கள் இதுவரை கற்றுக்கொண்டுள்ளவற்றை மீளாய்வு செய்வது பயனளிப்பதாக இருக்கக்காணலாம். கீழே பல வாக்கியங்கள் உள்ளன. ஒவ்வொன்றையும் படித்து அது உண்மையா என்பதைத் தீர்மானிக்கவும். சில தருணங்களில் விடைகள் வெளிப்படையானவையாக இருப்பினும், இப்பயிற்சி முழுமைக்கும் போதுமான கவனமளிப்பீர்கள் என எதிர்ப்பார்க்கின்றோம். அவை நீங்கள் இதுவரை பயின்றுள்ள விஷயங்கள் குறித்து உங்கள் சிந்தனைகளை சீர்படுத்திட உதவக்கூடிய ஒரு கருத்துவரிசையினூடே உங்களை வழிநடத்திட உதவிடும் நோக்கம் கொண்டுள்ளது.

_____ ஒரு தனிநபருக்கு, 15 வயதென்பது முதிர்ச்சி வயதை அடைவதென்பது அர்த்தமாகும், ஆனால் இது ஓர் அடையாளக்குறியே தவிர சம்பந்தப்பட்டவர் வாழ்வில் இது எவ்வித உள்பாதிப்பையும் ஏற்படுத்தப்போவதில்லை.

_____ பெரும்பாலான இளைஞர்கள் மனமுதிர்ச்சியற்றவர்கள் மற்றும் அவர்களால் முக்கிய பொருப்புக்களை ஏற்க முடியாது; அவர்கள் எளிதில் கவனம் குறைந்துவிடுவார்கள் மற்றும் அவர்களை நாம் நம்பியிருக்க முடியாது.

_____ சமயம் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளில் இளைஞர்கள் ஈடுபட ஆர்வம் கொண்டுள்ளனர், ஆனால் அவர்களின் அனுபவக்குறைவு மற்றும் முதிர்ச்சியின்மையினால் அவர்களால் பெரிய அளவில் எதையும் நிறைவேற்ற இயலவில்லை.

_____ இளைஞர்கள் எழுச்சி பெறுவதற்கும், மனித குலத்திற்கு நிலையான மற்றும் தன்னலமற்ற தன்மையுடன் சேவை செய்வதற்கும் தேவையான ஆற்றலைக் கொண்டுள்ளனர்.

_____ இளைஞர்கள் தங்கள் சமூகங்களுக்கான சேவையில் முறையான செயலில் ஈடுபட தேவையான மன உறுதியையும் அர்ப்பணிப்பையும் காட்ட முடியும்.

_____ தங்கள் இளமைப் பருவத்தில் சமயத்திற்கு சேவை செய்ய முன்னெழுந்தவர்கள் பெரிதும் ஆசீர்வதிக்கப்படுவார்கள்.

_____ சமயத்திற்குச் சேவைச் செய்திட இயல எல்லா பஹாய் இளைஞர்களும் உயர்ந்த அளவு பொதுக்கல்வி பெற வேண்டும்.

_____ பஹாய் இளைஞர்களுக்கு எல்லா மானிட முனைவுக்களங்களும் திறந்தே உள்ளன; அவர்கள் தங்களின் திறனாற்றல்களுக்கும் சூழ்நிலைகளுக்கும் ஏற்றவற்றைத் தேர்ந்தெடுத்து, சேவை உணர்வோடு அவற்றை மேற்கொண்டு, தனிச்சிறப்புற முயலவேண்டும்.

_____ சமயத்தை பயன்மிக்க வகைகளில் போதனை செய்திட இளைஞர்களுக்குப் போதுமான அனுபவமோ அறிவோ கிடையாது; அவர்கள் வேறு வழிகளில் சேவை செய்திடுவதே சாலச் சிறந்தது.

_____ சமயத்தின் போதனைகளைப் புரிந்து கொள்வதற்கு அவற்றைத் தங்கள் சகநண்பர்களுடன் பகிர்ந்து கொள்வதற்கும் இளைஞர்களுக்குப் பெரும் ஆற்றல் உள்ளது.

_____ சயமத்தைப் போதிப்பதற்குத் தேவையான அறிவையும் திறன்களையும் பெற்றிட இளைஞர்கள் ஆர்வம் கொண்டுள்ளனர்.

_____ சமயத்திற்கு இளைஞர்கள் பெரும் மனிதவளங்களுள் ஒன்றாவர். அவர்கள் ஒழுங்கான பயிற்சித்திட்டங்கள் மற்றும் ஊக்கமளிப்பின் வாயிலாக, சமயத்திற்கான ஆற்றல் மிக்க போதகர்களாகிட உதவப்படவேண்டும்.

_____ கேளிக்கைகளுக்கு வழிவகுக்கும் விசேஷ நடவடிக்கைகள் இளைர்களுக்குத் தேவை; நீண்ட நேரங்களுக்கு அவர்களால் உன்னிப்பான கவனம் செலுத்த முடியாது.

_____ இயல்பான தன்னெழுச்சி வாழ்க்கையில் குறைந்த பிறகே, முறைப்படி செயல்பட கற்றுக்கொள்வதென்பது தோன்றும்.

_____ சிரமமான சூழ்நிலைகளைத் தாங்கிடவும் புதிய சூழ்நிலைகளுக்குத் தங்களை மாற்றியமைத்துக்கொள்ளவும் kum,வழிவகுக்கும் திறன்களை செயல்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் இளைஞர்களுக்கு அளிக்கப்பட வேண்டும்.

_____ இளைஞர்கள் ஆர்வமிக்க மனதைக் கொண்டுள்ளனர், மேலும் அவர்கள் தங்கள் கேள்விகளுக்கான பதில்களை படிப்பதன் மூலமும் சமூகத்தின் வாழ்க்கையில் முழுமையாகப் பங்கேற்பதன் மூலமும் தெரிந்து கொள்ளலாம்.

_____ இளைஞர்கள் வெளிப்படுத்தும் தன்னலமற்ற சேவையுணர்வின் வாயிலாக நமது சமூகத்தில் உள்ளடங்கியிருக்கும் பெரும் உள்ளாற்றல்கள் வெளிப்பாடு காணமுடியும்.

_____ இறைமொழியின் சக்தியானது இளைஞர்களைத் தூய்மையுடனும் பற்றின்மையுடனும் சேவையின் பாதையில் செல்ல பலப்படுத்துகிறது.

_____ பயிற்சியகப் படிப்புகளைக் படிப்பதன் மூலம், அதற்கேற்ப சேவையில் ஈடுபடுவதன் மூலமும் இளைஞசர்கள் வளர்த்துக் கொள்ளும் மனப்பான்மை மற்றும் ஆன்மீகப் பண்புகள், திறன்கள் மற்றும் திறனாற்றல்கள் ஆகியவை சமூகக் கட்டமைப்பின் ஆற்றமிக்க செயல்பட்டிற்கு உறுதியான பங்களிப்பை வழங்குகின்றன. [சேர்க்கப்பட்டுள்ள விருப்பத் தேர்வு ]

_____ உலக இளைஞசர்களிடையே இருக்கும் சமுதாயத்தை மாற்றியமைக்கும் திறனின் நீர்த்தேக்கம், படிப்பு மற்றும் சேவையில் சேரும் முறையான கல்விச் முடியும் செயல்பாட்டில் அவர்கள் பங்கேற்பதன் மூலம் தட்டியெழுப்ப முடியும்.[சேர்க்கப்பட்டுள்ள விருப்பத்தேர்வு].

## பகுதி 12

கடைசிப் பகுதியில் உள்ள பயிற்சியானது, இளமைக் காலத்தைப் பற்றிய உங்கள் சிந்தனையை ஒருங்கிணைக்க உங்களுக்கு உதவியது என்றும், வாழ்க்கையின் இந்தக் கட்டத்தில் நீங்கள் பெற்றிருக்கும் பிம்பமானது, படிப்போடு இணைந்த துடிப்பான சேவையாகும்-இரண்டும் எதிர்காலத்திற்கான கடுமையான ஆயத்தங்களாகவும் இருக்கும் என்று நம்பப்படுகிறது. இவ்விஷயத்தை நாம் மேலும் ஆழமாக யோசிப்போம்:

நாம் இதுவரை கலந்தாலோசித்த சேவை, கல்வி, ஆயத்தம் ஆகியவற்றிற்கிடையே நிலவும் இடைச்செயல்பாடு என்பது ஒரு குறிப்பிட்ட சூழல்முறையிலேயே வெளிப்பட வேண்டும். குறிப்பாக, சமயத்தின் புனிதவாக்குகளில் எதிர்நோக்கப்பட்டுள்ள தன்மைமாற்றம் குறித்த இரு செயல்பாடுகளுக்கு அது வழிவகுக்கவேண்டும்: அதாவது தனிமனிதனின் தெளிவான நுண்ணறிவு ஆன்மீகம் ஆகியவற்றின் வளர்ச்சி மற்றும் சமுதாயத்தின் தன்மைமாற்றம். “ஒரு புதிய மனித இனத்தின் உருவாக்கத்தை கூவியழைப்பதே,” பஹாவுல்லாவின் சமயவெளிப்பாட்டின் “அதிமேன்மைமிகு மற்றும் தனிச்சிறப்பித்துக்காட்டும்” செய்கடமை என்பது நமக்குத் தெரியும். ஆகையால், நாம் ஒவ்வொருவரும் புனித வாக்குகளில் சித்திரிக்கப்பட்டுள்ளவாறு தங்களின் சிந்தனைகளையும் செயல்களையும் நேர்ப்படுத்திட அனுதினமும் முயலுகிறோம். அதே போன்று, சமுதாயத்தின் கட்டமைப்பிலும் ஓர் ஆழ்ந்தத் தன்மைமாற்றத்தை புனிதவாக்குகள் வலியுறுத்துகின்றன. “விரைவில் இக்கால அமைப்புமுறை சுருட்டப்பட்டும், ஒரு புதிய அமைப்புமுறை அங்கு அதற்குப்பதிலாக பரப்பப்படவும் உள்ளது,” என பஹாவுல்லா கூறுகின்றார். “மனிதர்கள் அனைவரும் என்றென்றும் முன்னேறிச்செல்லும் ஒரு நாகரிகத்தைத் தாங்கிச் சென்றிடவே படைக்கப்பட்டுள்ளனர்,” என அவர் நமக்குக் கூறுகின்றார்.

இந்த இரட்டைத் தன்மைமாற்றம் விழிப்புணர்வுடன் கூடிய முயற்சியால் மட்டுமே உருவாக முடியும். ஆகவே, இளையோர் தங்கள் வாழ்க்கைகளுக்கான அதன் குறிப்புகளைக் கண்டுணர்ந்து, தங்களின் சொந்த வளர்ச்சி, சமுதாயத்தின் தன்மைமாற்றத்திற்கான தங்களின் பங்களிப்பு ஆகியவற்றிற்கு பொறுப்பேற்பதற்கான ஒரு வலுவான குறிக்கோளுணர்வைப் பெற்றிடவேண்டும். இயல்பாகவே, சேவைமிகு ஒரு வாழ்க்கையின் வாயிலாகவே இத்தகைய இரட்டை நன்னெறி குறிக்கோள் வெளிப்பாடு காணும்.

நமது சொந்த நுண்ணறிவாற்றல் மற்றும் ஆன்மீக வளர்ச்சியுடன் உறவுகொண்ட இந்த நன்னெறி குறிக்கோளுணர்வின் ஓர் அம்சத்தின் மீது பின்வரும் திருவாசகக் குறிப்புகள் விளக்கமளிக்கின்றன:

> **"ஒரே மெய்க்கடவுளாகிய அவர் தன்னை வெளிப்படுத்திக் கொள்வதன் ஒரே நோக்கம் மனித இனம் அனைத்தையும் வாய்மை, உண்மையாய் இருத்தல், பக்தி, நம்பகம், ஆகியவற்றின்பாலும், இறைவனின் விருப்பத்திற்குப் பணிதல், கட்டுப்படுதல், பொறுமை, இரக்க மனப்பான்மை, நேர்மை, விவேகம் ஆகியவற்றின்பாலும் அழைப்பதுவேயாகும். அவரது குறிக்கோள், ஒவ்வொரு மனிதனையும் புனிதருக்கு உகந்த நடத்தை என்னும் ஆடையை அணிவிப்பதும், தெய்வத்துக்குரியதும் நேர்த்தியானதுமான நடத்தை என்னும் ஆபரணத்தைக் கொண்டு அலங்கரிப்பதுவுமேயாகும்."**[15]

**"நல்லொழுக்கச் சிறப்புகளை நாடுவதும், அவரது பார்வையில் மகிழ்வூட்டுகிற பண்புகள் வழங்கப்பட்ட ஒரு குணவியல்பைப் பெறுவதும் கடவுளின் பாதையில் வாழப்படும் ஒரு வாழ்வின் அடிக்கல்லாகும்."[16]**

**"அறிவுபெறுவது, பேரான்மீக முழுநிறைவடைவது, மறைந்துள்ள உண்மைகளை கண்டுபிடிப்பது, இறைவனின் தன்மைகளையும்கூட வெளிப்படுத்துவது… ஆகியவை மனிதனுக்கு உரியவையாகும்."[17]**

**"தனது படைப்பாளரை அறிந்துகொள்வது, அவரது அருகாமையை அடைவது ஆகியவையே இறைவன் மனிதனைப் படைத்த நோக்கமாக இருந்துள்ளது மற்றும் இனி என்றென்றும் இருந்துவரும்."[18]**

1. பின்வரும் வாக்கியங்களை மேற்கண்ட திருவாக்குக் குறிப்புகளுக்கிணங்க பூர்த்தி செய்யவும்:

   a. ஒரே மெய்க்கடவுளாகிய அவர் தன்னை வெளிப்படுத்திக் கொள்வதன் ஒரே நோக்கம் மனுக்குலம் முழுவதையும் ______________________________________________
   ______________________________________________
   ______________________________________________
   ______________________________________________
   அழைப்பதற்கே.

   b. ஒவ்வொரு மனித உயிரையும் ____________________ மற்றும் அவனை அல்லது அவளை ____________________ அலங்கரிப்பதுமே ஆகும்.

   c. ____________________ ம் ____________________
   __________ ம் கடவுளின் பாதையில் வாழப்படும் ஒரு வாழ்வின் அடிக்கல்லாகும்

   d. ______________, ______________, ______________
   ஆகியவை மனிதனுக்கு உரியவையாகும்.

   e. ______________, ______________ ஆகியவையே இறைவன் மனிதனைப் படைத்த நோக்கமாக இருந்துள்ளது மற்றும் இனி என்றென்றும் இருந்துவரும்

2. மனித ஆன்மாவில் உள்ளார்ந்திருக்கும் சாத்தியக்கூறுகளைப் பற்றிய பார்வையானது ஒரு நபரின் நோக்கத்தை வடிவமைத்து வழிநடத்துகிறது. அது எப்படி என்பதை விளக்க முடியுமா?
______________________________________________
______________________________________________
______________________________________________

3. ஒரு தனிமனிதனின் குறிக்கோள் உணர்வுக்கும் இவ்வுலக வாழ்வு இறைவனின் அருகாமையை நோக்கிய ஒரு நிரந்தரப் பயணத்தின் ஒரு சிறு பகுதியே எனும் அறிவுக்கும் இடையிலும் ஒரு

வலுவான தொடர்புள்ளது. இது எப்படி என்பதை உங்களால் விளக்கமுடியுமா? _______________

_______________________________________________________________________________

_______________________________________________________________________________

_______________________________________________________________________________

_______________________________________________________________________________

அடுத்து வரும் திருவாக்குக் குறிப்புகள் சமுதாயத்தின் தன்மைமாற்றத்திற்கான பங்களிப்பு எனும் நன்னெறியுணர்வு குறித்த மற்றொரு அம்சத்தின் மீது விளக்கமளிக்கின்றன:

**“மரணத்துக்குரிய மனிதர்கள், முற்றிலும் இல்லா நிலையிலிருந்து, உயிருரு என்னும் உலகினுள் அடி எடுத்து வைத்ததற்கான நோக்கம், அவர்கள் உலகின் சீர்திருத்தத்திற்காக உழைக்க வேண்டும் என்பதும், நட்புறவோடும் இணக்கத்தோடும் ஒன்றாக வாழ வேண்டும் என்பதே என்று இந்தத் தவறிழைக்கப் பட்டோன் சாட்சியம் பகர்கின்றான்.”**[19]

**“ஒரு தனி மனிதனின் புகழும் தனிச்சிறப்பும் இதில்தான் அடங்கும், அதாவது, உலகின் எண்ணற்றோரின் மத்தியில் அவன் சமூக நன்மைக்குக் காரணமானவனாக ஆகிட வேண்டும் என்பதே ஆகும்.  இதை விடப் பெரிய கொடை ஒன்றைக் கற்பனை செய்துபார்க்க இயலுமா? அதாவது, ஒரு தனி மனிதன், தன்னுள் தாம் பார்க்கும்போது, கடவுளின் உறுதி செய்திடும் அருளின் வழியாக, அவன் அமைதிக்கும் செழிப்பிற்கும், மகிழ்வுக்கும், மற்றும் தனது சக மனிதர்களின் மேன்மைக்கும் காரணமாக ஆகியுள்ளான் என்பதைக் கண்டறிவதை விட எதுவும் உண்டா? ஒரே உண்மையான கடவுளின் பெயரால், இல்லை, இதைவிடப் பெறும் பேரின்பம் இல்லை, இதைவிட பூரணமான மகிழ்ச்சியும் இல்லை.”**[20]

**"தனது பொறுப்புகளை நிறைவேற்ற எழுந்திடுவானாயின் மனிதன் எத்துணை சிறந்தவன், எத்துணை பெருமதிப்புக்கு உரியவனாவான்; அவன் தனது பார்வையைச் சமுதாயத்தின் நலனின்பால் மூடிக் கொண்டும், தனது மதிப்புயர்ந்த வாழ்க்கையைத் தனது சொந்தச் சுயநல விருப்பங்களுக்காகவும் தனிப்பட்ட நன்மைக்காகவும் வீண் செலவிட்டான் என்றால், அவன் எத்துணை துயருக்குரியவனும் வெறுக்கத் தக்கவனும் ஆவான்."**[21]

**“உங்களின் சொந்தக் காரியங்களிலேயே கருத்தாய் இராதீர்; எவை, மனித இனத்தின் நற்பேரினைச் சீர்ப்படுத்தி, மனிதரின் உள்ளங்களையும் ஆன்மாக்களையும் புனிதப் படுத்துகின்றனவோ அவற்றின் மீதே உங்கள் சிந்தனையை நிலைக்க விடுங்கள்.”**[22]

**“இறைவனின் மக்களாகிய அவர்களுக்கு, உலகைப் புத்துயிர்ப்பெறவும், வாழ்க்கையை உயர்வுபடுத்தவும், அதன் மக்களை மீண்டும் உயிர்த்தெழவும்  செய்வதைத்தவிர வேறெந்த விருப்பமுமே கொண்டிருக்கவில்லை.”**[23]

1. பின்வரும் வாக்கியங்களை மேற்கண்ட திருவாக்குக் குறிப்புகளுக்கிணங்க பூர்த்தி செய்யவும்:

   a. மரணத்துக்குரிய மனிதர்கள், முற்றிலும் இல்லா நிலையிலிருந்து, உயிருரு என்னும் உலகினுள் அடி எடுத்து வைத்ததற்கான நோக்கம், ________________________________

_______________ ம், ________________________________________________ ம் என்பதே என்று இந்தத் தவறிழைக்கப் பட்டோன் சாட்சியம் பகர்கின்றான்.

b. ஒரு தனி மனிதனின் புகழும் தனிசிறப்பும் இதில்தான் அடங்கும், அதாவது, ____________________________________________________________________________

c. ஒரு தனி மனிதன், தன்னுள் தாம் பார்க்கும்போது, __________________, அவன் அமைதிக்கும் செழிப்பிற்கும், மகிழ்வுக்கும், ____________________ ___________________________________ ஆகியுள்ளான் என்பதைக் கண்டறிவதை விட வேறு கொடை கிடையாது.

d. ______________________________________ மனிதன் எத்துணை சிறந்தவன்; அவன் தனது _____________________________ மூடிக் கொண்டும், ______________________________________ _____________________________________________ அவன் எத்துணை துயருக்குரியவனும் வெறுக்கத் தக்கவனும் ஆவான்

e. நாம் __________________________________ கருத்தாய் இராமல்; எவை, ______________________ ________________ அவற்றின் மீது நமது சிந்தனையை நிலைக்க விடவேண்டும்.

f. இறைவனின் மக்களாகிய அவர்களுக்கு, ___________________________________________, _____________________________________ செய்வதைத்தவிர வேறெந்த விருப்பமுமே கொண்டிருக்கவில்லை.

2. மனிதகுலமானது ஒரே குடும்பமாக ஒன்றிணைவது ஒரு நிச்சயமான சாத்தியக்கூறாக இருக்கின்ற வளர்ச்சியின் இந்த காலகட்டத்தில் அதற்காகத் திறந்திருக்கும் சிறந்த வாய்ப்புகளைப் பற்றியத் தொலைநோக்கினைக் கொண்டிருப்பதென்பது ஒஒரு தனிநபரின் குறிக்கோள் உணர்வினை வடிவமைத்து வழிநடத்தப்படுகிறது. இது எவ்வாறு நடைபெறுகிறது என்பதை விளக்க முடியுமா? ___________________________________________________________________

________________________________________________________________________________________

3. ஒரு தனிநபரின் குறிக்கோள் உணர்வுக்கும் மனுக்குலம் ஒரு தெய்வீக நாகரிகத்திற்கு வழிவகுக்கும் ஒரு நீண்ட பரிணாமப் பாதையில் சென்றுகொண்டிருக்கின்றது எனும் அறிவுக்கும் இடையில் ஒரு தொடர்புள்ளது. இது ஏன் என்பதை உங்களால் விளக்கமுடியுமா?

________________________________________________________________________________________

________________________________________________________________________________________

________________________________________________________________________________________

________________________________________________________________________________________

## பகுதி 13

கடந்த பாடப்பகுதியின் பயிற்சியின் கருத்துக்களுக்கு இணங்க, இளையோர் பெற்றிருக்க வேண்டிய குறிக்கோள் உணர்விற்கு அடிப்படையாக திருவாக்குகளில் ஒரு தனிநபரிடத்திலும் சமுதாயத்திலும் ஏற்பட வேண்டிய மாற்றத்தின் இயல்பு குறித்த ஓர் அறிவு உள்ளது. "தங்களின் தன்னகங்களின் ஆழத்திற்குள் மறைந்துகிடக்கும்" இரத்தினங்கள் போன்ற பண்புகளை அடைந்திடவும் பொருள் மற்றும் ஆன்மீக ரீதிகளிலான செழிப்பான ஓர் உலக நாகரிகத்தின் உருவாக்கத்திற்குப் பங்காற்றிடவும், அவர்கள் பஹாவுல்லாவினால் விளிக்கப்பட்டுள்ள தன்மைமாற்றத்தின் பரும அளவை அறிந்துகொள்ளவேண்டும். எங்கெங்கிலும் உள்ள மக்கள் இன்று மாற்றத்தின் தேவை குறித்து கருத்துரைக்கின்றனர்தான். ஆனால், பஹாவுல்லாவின் திருவெளிப்பாட்டின் நேரடி ஆதிக்கத்தின் கீழ் நிகழப்போகின்ற தன்மைமாற்றம் பெரும்பாலான மக்கள் தாங்கள் கற்பனை செய்யமுடிந்ததைவிட வெகு மேன்மையுடையது என்பதை நாம் உணரவேண்டும்.

பல திருவாக்குக் குறிப்புகள் மீது ஆழ்சிந்தனை செய்து ஒரு தனிநபர் அளவில் நிகழ வேண்டிய மாற்றத்தின் பரும அளவு குறித்த குறுங்காட்சி ஒன்றைப் பெற முயலுவோம். பஹாவுல்லா கூறுவது:

> **"பற்றின்மையெனும் பாதங்களுடன், விண்ணுலகு மண்ணுலகு ஆகியவற்றில் உள்ள அனைவரையும் கீழ்மிதித்தும், நீர் களிமண் ஆகியவற்றிலிருந்து உருவாக்கப்பட்ட அனைத்தின்மீதும் புனிதத்தன்மையெனும் அங்கியைப் போர்த்திடும் நற்பண்புகளில் தன்னிகரற்ற ஒரு மனித இனம் உருபெறச்செய்யப்படும்."[24]**

மற்றொரு வாசகப்பகுதியில் அவர் கூறுவதாவது:

> **"கூறுங்கள்: தனது லௌகீக ஆசைகளைப் பின்தொடர்ந்து அல்லது உலகம் சார்ந்த விஷயங்களில் தனது உள்ளத்தைப் பதித்தும் உள்ள ஒருவன் பஹாவின் மக்களோடு கணக்கிடப்படக் கூடாதவனாவான். சொக்கத் தங்கம் நிறைந்த ஒரு பள்ளத்தாக்கை அடைந்து அதை திரும்பிப்பார்க்காமல் அல்லது தயங்கி நிற்காமல் ஒரு மேகத்தைப் போன்று படாமலேயே கடந்துசெல்லும் அவனே எனது உண்மையான நம்பிக்கையாளனாவான். இத்தகைய மனிதனே எம்மைச் சார்ந்தவனாவான். விண்கூட்டத்தினர் அவனது அங்கியிலிருந்து புனிதத்தன்மையின் மணத்தையே நுகர இயலும்."[25]**

மற்றொரு பகுதியில் அவர் பின்வருமாறு அறிவிக்கின்றார்:

> **"இந்நாளில் உலக மக்களைப் புரையூட்டவேண்டிய பொருளாக இறைவனின் துனைவர்களே உள்ளனர். அவர்கள் வெளிப்படுத்த வேண்டிய நம்பகம், வாய்மை மற்றும் விடாமுயற்சி, நடத்தை மற்றும் பண்பு எத்தகையதாக இருக்கவேண்டுமெனில், அவற்றின் உதாரணத்தின் வாயிலாக மனுக்குலம் முழுவதுமே பயனடைதல் வேண்டும்."[26]**

அவர் மேலும் விளக்கமளிக்கின்றார்:

**“தூய்மையும் புனிதத்தன்மையும் உடைய ஆன்மாக்களின் மூச்சுக்காற்றிற்குள்ளேயே தீர்க்க விளைவுகளுடைய உள்ளாற்றல்கள் மறைந்துள்ளன. இவ்வாற்றல்களின் மகத்துவமானது அவை படைக்கப்பட்ட பொருட்கள் அனைத்தின் மீதும் தங்கள் செல்வாக்கைச் செலுத்திடும் அளவிற்கு உள்ளது.”[27]**

அப்துல்-பஹா கூறுகின்றார்:

**“கடவுளின் நண்பர்களே! உலகின் அனைத்து மக்களும் இனங்களும், எதிரிகளும் கூட, உங்களில் தங்களின் நம்பிக்கையை வைத்திட ஒரு மகத்தான முயற்சியை மேற்கொள்ளுங்கள். ஓர் ஆன்மா, ஒரு நூறாயிரம் தீச்செயல்கள் புரிந்திருப்பினும், அவர் மன்னிப்பை எதிர்பார்த்து, சோர்வும் துக்கமும் அடையாதிருப்பாராக. பஹாவின் மக்களுடைய ஒழுக்கமும் நடத்தையும் இத்தகையதே. மேன்மை பாதையின் அடித்தலம் இத்தகையதே. உங்களின் நடத்தையும் செய்கைகளும் அப்துல்-பஹாவின் அறிவுரைகளுக்கு ஏற்ப இருந்திடுமாக.[28]**

புனித எழுத்துக்களில் வருணிக்கப்பட்டுள்ள அப்புதிய மனிதனை சிறப்பித்துக்காட்டும் பண்புக்கூறுகளின் சுடரொளியானது, கண்களைக் கூசச் செய்வதாகவும், “அப்புதிய மனித இனத்தின்” சக்திகளும் திறமையாற்றல்களும் குறித்த குறுங்காட்சிகளால் நாம் திக்குமுக்காடவும் செய்கின்றோம். இத்தகைய பகுதிகளைப் படித்துவிட்டு நாம் வெவ்வேறு வகைகளில் நம் உணர்வுகளை வெளிப்படுத்தலாம். திருவாசகங்களால் நிர்ணயிக்கப்பட்ட தரநிலைகள் நம் எல்லைக்கு அப்பாற்பட்டவையாக இருப்பதனால் அதன்படி வாழ்வதற்கு அதிக முயற்சி எடுப்பது பயனற்றது என்று நாம் நினைக்கக்கூடும்; இத்தகைய நிலையில் உடன்பாடற்ற செயல்களைத் தவிர்த்தால் மட்டும் போதும் எனும் எண்ணத்தை நாம் அடையலாம். இருந்தபோதிலும், ஒருவர் ஆழ்ந்த குறிக்கோளுணர்வு உடையவராக இருந்தால், மேற்கண்ட வாசகங்கள் அவருக்கு நிலையான உற்சாகமளித்து அவரை மேலும் மேலும் முன்னேற்றமடையத் தூண்டக்கூடியனவாகும்.

இருந்தும் அவரது தந்தையாரின் போதனைகளின் முழுநிறை எடுத்துக்காட்டாளரான அப்து’ல்-பஹாவின் உருவில் உற்சாகத்திற்கான மேலும் ஒரு தோற்றுவாயினால் நாம் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளோம். அப்து’ல்-பஹா தமக்கே சொந்தமான ஒரு நிலையில் செயல்படுகிறார் மற்றும் எந்த மனிதனும் அவரது சிறப்புயர்வான நிலைக்கு உயரமுடியாது என்பதை நாம் உணர்ந்திருந்தாலும், ஒவ்வொரு பஹாய் தனிச்சிறப்பு நிலையின் உருவமாகவே அவரை நாம் கண்டும், அவர் எடுத்துக்காட்டிய நடத்தை முன்மாதிரியைப் பின்பற்றிடவும் முயலுகின்றோம். இப்பயிற்சியில் ஈடுபட்டுள்ள நீங்களும் உங்கள் நண்பர்களும் மேற்கண்ட வாசகப்பகுதிகளிலிருந்து சில சொற்றொடர்களைத் தேர்ந்தெடுத்து அப்து’ல்-பஹாவின் வாழ்வில் நடந்த அத்தகைய குறிப்புகளில் காணப்படும் பண்புகளைப் பிரதிபலிக்கும் சில குறுநிகழ்வுகள் குறித்து சிந்திப்பது உங்களுக்கு பயனளிக்கக் காண்பீர்கள். எடுத்துக்காட்டாக, “பற்றின்மையெனும் பாதங்களுடன்” நடப்பது குறித்து கற்பனை செய்திடும்போது, படைக்கப்பட்ட பொருட்களிலிருந்து பற்றற்று இவ்வுலகில் வாழ்வது என்றால் என்ன என்பது குறித்த அவரது வாழ்வில் நடந்த சில சம்பவங்கள் நமது ஞாபகத்திற்கு வரும். “புனிதத்தன்மையின் நறுமணம்” என்பது குறித்து சிந்திக்கும்போது, அஃது அவரது “அங்கியிலிருந்து” தோன்றுகின்றது, மற்றும் “விண்ணவக்கூட்டத்தினர்”

அதன் இனிமையை நுகரமுடியும் என்பதை நாம் அறிகின்றோம், மற்றும் அவரது முற்றான புனிதத்தன்மையை எடுத்துக்காட்டும் கதைகளையும் நாம் ஞாபகப்படுத்திக்கொள்கின்றோம்.

## பகுதி 14

சமுதாய அளவில் நிகழ வேண்டிய ஆழ்ந்த தன்மைமாற்றச் செயல்பாடு குறித்து இப்போது சிந்திப்போம். பஹாவுல்லா கூறுவது:

**“எம் மூலமாக, உலகையும் அதில் உள்ளடங்கிய அனைத்தையும் சுருட்டிவிட்டு, அவ்விடத்தில் புதிய முறை ஒன்றை யாம் விரித்திருக்கக்கூடிய நாள் அனுகிக்கொண்டிருக்கின்றது.”[29]**

அவர் மேலும் கூறுவது:

**“உலகின் நிலைத்தன்மை இவ்வதிவுயரிய, இப்புதிய உலக அமைப்புமுறையின் அதிர்வலைகளின் தாக்கங்களினால் நிலைதடுமாறச் செய்யப்பட்டுள்ளது. மனித இனத்தின் முறையான வாழ்க்கையில், மனிதக் கண்கள் என்றுமே இது போன்ற ஒன்றைக் கண்டிராத, தனிச் சிறப்புடைய இவ்வற்புதமான முறையின் வாயிலாக, புரட்சியுறச் செய்யப்பட்டுள்ளது.”[30]**

அப்துல்-பஹா உறுதிப்படுத்துகிறார்:

**". . . நீதியும் நேர்மையான நடத்தையும் உலகை சூழ்ந்து கொள்ளும்; வெறுப்பும் பகைமையும் நீங்கும்; மக்கள், இனங்கள் மற்றும் நாடுகளுக்கு இடையே பிளவு ஏற்படுவதற்கான காரணம் எதுவோ அது அழிக்கப்படும்; மேலும் ஒற்றுமை, நல்லிணக்கம் மற்றும் உடன்பாட்டினை உறுதிப்படுத்துவது ஊக்குவிக்கப்படும். கவனக்குறைவானவர்கள் தூக்கத்திலிருந்து விழித்துக்கொள்வார்கள்; குருடர் பார்வை பெறுவார்கள்; செவிடர் செவிமடுப்பர்; ஊமையர் பேசுவர்; நோயுற்றோர் குணமடைவர்; மாண்டோர் உயிர்பெறுவர்; மேலும் போர் அமைதிக்கு வழி வகுக்கும். பகைமை அன்பாகமாற்றப்படும்; சச்சரவு மற்றும் வாக்குவாதங்களுக்கான மூல காரணங்கள் அகற்றப்படும்; மனிதகுலம் உண்மையான மகிழ்ச்சியை அடையும்; இந்த உலகம் பரலோக ராஜ்யத்தை பிரதிபலிக்கும்; மேலும் கீழே உள்ள பூமி மேலே உள்ள சாம்ராஜ்யத்தின் சிம்மாசனமாக மாறும். ”[31]**

மற்றொரு பகுதியில் அவர் பின்வருமாறு விளக்குகிறார்:

**“மனித இனத்தின் ஆரம்பகால வரலாற்றின் போது, மானிடத் தேவைகளுக்குத் தகுதியானது புதுமை மற்றும் நிறைவுடைய இக்காலத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்திட இயலவில்லை. மானிடம் தனது பண்டைய குறைபாட்டு நிலை மற்றும் ஆரம்பப் பயிற்சிகளிலிருந்து மீண்டுவிட்டது. மனிதன் புதிய நெறிமுறைகள் மற்றும் ஆற்றல்கள், புதிய ஒழுக்கநெறிகள், புதிய திறமையாற்றல்களால் ஊடுருவப்படவேண்டும். புதிய கொடைகள், வெகுமதிகள் மற்றும் முழுநிறைவுகள் அவனுக்காகக் காத்திருக்கின்றன மற்றும் அவன் மீது கீழிறங்கிக் கொண்டும் உள்ளன.”[32]**

அவர் மேலும் அறிவுறுத்துவதாவது:

**"...விதிக்குட்பட்ட இவ்வுலகின் இருள் அகற்றப்படுமாறும், அரசின் ஒளிகள் தொடுவானங்கள் அனைத்தின் மீதும் வீசிடவும், மானிட உலகு ஒளிபெற்றும், மனிதம் எனும் கண்ணாடிகள் மீது கடவுளின் பிரதிபிம்பம் கண்களுக்கு புலப்படவும், கடவுளின் விதிமுறைகள் நன்கு ஸ்தாபிக்கப்பட்டு உலகின் எல்லா பிரதேசங்களும் அமைதி, சுகம், அமைவடக்கம் ஆகியவற்றை கடவுளின் நியாயமான பாதுகாப்பின் கீழ் சுவைத்திடவும் நாம் உளபூர்வமாகவும் ஆன்மபூர்வமாகவும் உழைத்திடவேண்டும்."**[33]

ஒரு தனிமனிதனைப்போல் தோன்றவிருக்கும் உலகநாகரிகத்தின் சுடரொளியை முழுமையாக நம்மால் கற்பனைச் செய்வது கடினம். உண்மையில், அதன் அம்சங்களைக்கூட நம்மால் வர்ணிப்பது பெரிதும் இயலாததாகும். இருந்தும் தேவைப்படும் தன்மைமாற்றத்தின் பரும அளவைக் கண்டு நிலைக்குத்திப் போய், நம்முடைய முயற்சி ஏதுமின்றியே இத்தகைய மாற்றம் மாயாஜாலமாகவே நடைபெறும் எனவும் நாம் எண்ணக்கூடாது. நமது கண்கள் பஹாவுல்லாவின் உலக அமைப்புமுறையின்மீது தொடர்ந்து நிலைப்படுத்தப்பட்டிருக்கவேண்டும், மற்றும் நமது ஆகச் சிறு செயல்கூட அதன் கட்டுமானத்திற்குப் பங்காற்றிட முடியும் என்பதையும் நாம் கண்டுகொள்ள வேண்டும். சமுதாயத்தில் நிகழவிருக்கும் மாற்றத்தின் பருமனின் மீது மேலும் ஆழ்சிந்தனை செய்திட, பின்வரும் வார்த்தைகளில் ஒன்றையோ சொற்றொடரையோ பயன்படுத்தி கீழ்க்காணும் வாக்கியங்களை நிறைவு செய்யவும்.

> மறைந்துவிடும், அழிந்துபோகும், வழிவிடும், விரிக்கப்படும், ஒளிரும், நிறுவப்படும், மாற்றப்படும், அகற்றப்படும், சுருட்டப்படும், மறைந்துவிடும், அடையப்படும், சூழ்ந்துகொள்ளும், முன்னேற்றப்படும், அனுபவித்திடும், பிரதிபலிக்கும், ஒளிவீசிடும்.

a. உலகையும் அதில் உள்ளடங்கியிருக்கும் அனைத்தும் ______________ நாள் நெருங்கிக்கொண்டிருக்கின்றது.

b. இப்போதிருக்கும் உலகமுறைக்குப் பதிலாக ஒரு புதிய உலகமுறை _______________ நாள் அனுகிக்கொண்டிருக்கின்றது.

c. நீதியும் உண்மையும் இவ்வுலகைச் _______________.

d. பகைமையும் கடுவெறுப்பும் _________________.

e. மக்களிடையிலும், இனங்களிடையிலும், தேசங்களிடையிலும் பிரிவினைகளுக்குக் காரணமான அனைத்தும் __________________.

f. ஐக்கியம், இணக்கம் மற்றும் நட்புறவுக்கான காரணங்கள் _____________.

g. போர் அமைதிக்கு ____________________.

h. பகைமைக்குப் பதிலாக அன்பு _______________.

i. சச்சரவு மற்றும் கடுவாக்குவாதங்களுக்கான காரணங்கள் முற்றாக ___________________.

j. மனிதகுலம் உண்மையான கழிபேருவகையை _______________.

k. இவ்வுலகம் தெய்வீக அரசினைப் _______________..

l. விதிக்குட்பட்ட இவ்வுலகின் இருள் ________________.

m. மானிட உலகு _______________ மாறும்.

n. அரசின் ஒளிகள் தொடுவானங்கள் அனைத்தின் மீதும் ____________.

o. இறைவனின் விதிமுறைகள் நன்கு _______________.

p. உலகின் எல்லா பிரதேசங்களும் அமைதி, சுகம், அமைவடக்கம் ஆகியவற்றை கடவுளின் நியாயமான பாதுகாப்பின் கீழ் _________________.

## பகுதி 15

மேற்கண்ட கடைசி இரு பாடப்பகுதிகளிலும் உள்ள வாசகக்குறிப்புகளும் பயிற்சிகளும் பஹாவுல்லாவின் வெளிப்பாட்டின் காரணமாக தனிநபரிலும் சமுதயாத்திலும் உருவாகவிருக்கும் ஆழ்ந்தத் தன்மைமாற்றம் குறித்த ஆழ்காட்சியை வழங்குகின்றன. அவர் தூரநோக்காகக் கண்ட தன்மைமாற்றத்தின் பருமனை மேலும் கண்டறிய, பின்வரும் வாக்கியங்களைப் படிக்கவும். அவை ஒவ்வொன்றும் தனிநபர் அல்லது சமுதாயம் குறித்த, நீதி, சமத்துவம், அல்லது அன்புக்கருணை போன்ற போற்றத்தக்கப் பண்புக்கூறு ஒன்றை வெளிப்படுத்துகின்றன. இருந்தபோதிலும் முன்வந்த பகுதிகளில் பஹாவுல்லா மானிடத்தை தனிநபர் மற்றும் கூட்டு நடத்தைக் குறித்த மேலும் அதிமேன்மைமிகு நடத்தைக்கு அறைகூவி அழைக்கின்றார் என்பது குறித்து எந்தச் சந்தேகமும் இல்லை. அவரது திருவெளிப்பாட்டில் பதிக்கப்பட்டுள்ள நடத்தைமாதிரியை அவை ஒவ்வொன்றும் மேலும் தெளிவுடன் எடுத்துக்காட்டும் வகையில் அவற்றை மறுசீரமைப்புச் செய்ய முயலவும். முதல் வாக்கியத்திற்கான எடுத்துக்காட்டு உங்கள் உதவிக்காக வழங்கப்பட்டுள்ளது.

a. ஒருவர் பொறாமை உணர்வுகளை அடக்கியாளவேண்டுமே ஒழிய அவற்றுக்கு அவர் அடிமையாகிவிடக் கூடாது.

b. நாம் நமது உள்ளங்களிலிருந்து பொறாமை உணர்வுகளின் சிறுசுவடுகளைக்கூட அழித்துவிடவேண்டும்.

a. நண்பர்களோ அன்னியர்களோ, நாம் அனைவரிடமும் பணிவாகவே நடந்துகொள்ள முயலவேண்டும்.
b. ______________________________________________________________________
______________________________________________________________________
______________________________________________________________________

a. இறைவன் நமக்களித்துள்ள செல்வங்களுக்காக நாம் நன்றியுடையவர்களாக இருந்து கேட்டபோதெல்லாம் பரோபகாரக் காரியங்களுக்கு நிதிவழங்கிட வேண்டும்.
b. ______________________________________________________________________
______________________________________________________________________
______________________________________________________________________

a. ஒருவர் பிறருடன் முரண்பாடு கொள்ளாமல் இருப்பதற்கு கடுமுயல்வு மேற்கொள்ளவேண்டும்.
b. ______________________________________________________________________
______________________________________________________________________
______________________________________________________________________

a. எவருக்கும் பாதகம் செய்யாமல் இருப்பதே ஒழுக்கநெறிமிக்க வாழ்வு வாழ்வதன் குறிப்பாகும்.
b. ______________________________________________________________________
______________________________________________________________________
______________________________________________________________________

a. அமைதியாக வாழ்ந்திட, நாம் பல்வேறு கலாச்சாரங்கள், பின்னனிகள், மற்றும் சமயங்கள் சார்ந்த மக்களைச் சகித்துக்கொள்ள கற்றுக்கொள்ளவேண்டும்
b. ______________________________________________________________________
______________________________________________________________________
______________________________________________________________________

a. மக்கள் தங்கள் உரிமைகளுக்காக போராடக் கற்றுக்கொள்ளவேண்டும்.
b. ______________________________________________________________________
______________________________________________________________________
______________________________________________________________________

a. அரசாங்கங்கள் வருங்காலத் தலைவர்களின் சிந்தனைகளைப் பயிற்றுவிக்கும் பள்ளிகள் அதற்கான அதிசிறந்தத் திட்டங்களை வகுப்பதற்கான பொருள் வளங்களை ஒதுக்கீடு செய்யவேண்டியது இன்றியமையாததாகும்.
b. ______________________________________________________________________
______________________________________________________________________
______________________________________________________________________

a. குற்றவாளிகளை மறுசீரமைப்புச் செய்வதற்குச் சிறைச்சாலைகள் நவீனமாக்கப்படவேண்டும்.
b. ____________________________________________________________________________
____________________________________________________________________________
____________________________________________________________________________

கீழ்க்காணப்படும் வாசகங்களின் அடிப்படையில் நீங்கள் எழுதியுள்ள வாக்கியங்களை மீளாய்வு செய்யவும். முதல் வாசகம் நமது இதயங்கள் எந்த அளவுக்கு உலக ஆசைகளிலிருந்து தூய்மைப்பட்டிருக்கவேண்டும் என்பது குறித்துச் சிந்தித்திட நமக்கு உதவுகின்றது:

**"மண்ணின் மைந்தனே! மெய்யாகவே, உள்ளத்தினில் மிகச் சிறிதளவு பொறாமையேனும் எஞ்சி இருக்குமாயின், அது, எனது நித்திய அரசினை அடையவோ, எனது தூய்மை என்னும் இராஜ்ஜியத்தினின்று வெளிவரும் இனிய மூச்சின் நறுமணத்தினை உள்ளிழுத்திடவோ இயலாது என்பதை அறிவாயாக."[34]**

நாம் ஒருவரை ஒருவர் நடத்தும் விதம் குறித்துப், பின்வரும் திருவாசகக்குறிப்பு சில நுண்ணறிவுகளை வழங்குகின்றது:

**"அன்பு மற்றும் அன்புக் கருணையின் ஆவி அத்துனை தீவிரமாக இருப்பதானது, அவர்களுக்கிடையில் எவ்வித வேறுபாடும் இன்றி, அன்னியன் தனக்கொரு நண்பனையும், எதிரி ஓர் உண்மையான சகோதரனையும் கண்டிடுவர்."[35]**

கொடுத்தல் குறித்த ஒழுங்கான மனப்பான்மை பற்றி இந்த மேற்கோள் விளக்கமளிக்கின்றது:

**"புழுதியின் குழந்தைகளே! ஏழைகளின் நடுநிசிப் பெருமூச்சினைக் குறித்துச் செல்வந்தர்களிடம் எடுத்துக் கூறுங்கள்; இல்லையெனில், கவனமின்மை அவர்களை அழிவுப் பாதையில் அழைத்துச் சென்று, செல்வமெனும் விருட்சத்தினை அவர்களிடமிருந்து பறித்திடப் போகின்றது. அளிப்பதுவும் தாராளமாக இருப்பதுவும் எனது பண்புகளாகும்; எனது பண்புகளினால் தன்னை அலங்கரித்துக் கொள்ளும் ஒருவன் நன்மை பெறுவான்."[36]**

பிறருடன் சேர்ந்து நாம் செயல்படும் விதம் குறித்துப் பின்வருமாறு படிக்கலாம் :

**"அன்பின்பால் அறைகூவலிடுபவராகவும் இருப்பீராக, மற்றும் மனித இனம் அனைத்துடனும் பரிவுடையவராக ஆகிடுவீராக. மனிதர்கள் என்னும் குழந்தைகளை நேசிப்பீராக, மற்றும் அவர்களின் துயரங்களில் பங்குக் கொள்வீராக. அமைதியை மேம்படுத்துபவருள் ஒருவராக ஆகிடுவீராக. உமது நட்பை வழங்குவீராக, நம்பிக்கைக்கு பாத்திரமாக நடந்துகொள்வீராக. ஒவ்வொரு காயத்திற்கும் களிம்பாக ஆகிடுவீராக, ஒவ்வொரு நோயுக்கும் ஒரு மருந்தாக ஆகிடுவீராக. ஆன்மாக்களை ஒன்றாக இணைப்பீராக. வழிகாட்டல் என்னும் வசனங்களை ஒப்புவிப்பீராக. உமது பிரபுவை வழிபடுவதில் ஈடுபடுவீராக, மற்றும் மக்களை நேர்வழிக்கு வழிநடத்திச் செல்ல எழுந்திடுவீராக. உமது நாவினைத் தளரவிட்டு போதனைச் செய்வீராக, மற்றும் கடவுளின் அன்பென்னும் தீயினால் உமது வதனத்தைப் பிரகாசிக்கச் செய்வீராக. ஒரு கண நேரங்கூட ஓய்வெடுக்காதீர், ஓர் இளைப்பாறும் மூச்சினை இழுத்திடவும் நாடிடாதீர்.**

**அவ்வாறுதான் கடவுளின் அன்பின் ஓர் அடையாளமும் சான்றாகவும், மற்றும் அவரது அருளின் ஒரு விருதுக் கொடியாகவும் ஆகிடக் கூடும்."**[37]

ஒழுக்கநெறிமிக்க நடத்தை குறித்து பின்வருமாறு காணப்படுகின்றது:

**"சோம்பிய வழிபாடே போதுமானது எனக்கருதப்பட்ட நாட்கள் முடிந்துவிட்டன. அப்பழுக்கற்ற தூய்மையான செயல்களால் துணைப்புரியப்பட்ட தூய குறிக்கோள்களே அதிஉயர்ந்தவரின் அரியனையை ஏரிடவும் அவரால் ஏற்றுக்கொள்ளப்படவும் முடியும்."**[38]

பலதரப்பட்ட மக்களை எவ்வாறு நடத்துவது என்பது குறித்து, பின்வரும் வாசகப்பகுதி நமக்கு நுண்ணறிவு வழங்குகிறது:

**"உலகின் எல்லா மக்கள், இனம் மற்றும் மதங்களோடும் இயன்ற அளவு வாய்மையுடனும், நேர்மைத் தன்மையுடனும், விசுவாசத்துடனும், நல்லெண்ணத்தோடும் நட்புடைமையோடும் தோழமைக் கொள்வீராக; அதனால், உயிரின உலகம் முழுவதும் பஹாவின் அருள் என்னும் தெய்வீகப் பரவசத்தினால் நிரப்பப் படுமாக, அறியாமை, பகைமை, விரோதம், மற்றும் வெறுப்பு ஆகியவை உலகிலிருந்து மறைந்து, உலக மக்கள் இனங்கள் ஆகியோருக்கிடையே உள்ள வேற்றுமை என்னும் இருள் ஒற்றுமை என்னும் ஒளிக்கு வழிவிடக் கூடுமாக. மற்ற மக்களும் நாடுகளும் உங்களிடம் விசுவாசமற்று நடந்துகொண்டால், அவர்களிடம் மெய்ப்பற்றைக் காட்டுவீராக, உங்கள்பால் அவர்கள் நீதி தவறி நடந்து கொண்டால், அவர்கள்பால் நீதியைக் காட்டுவீராக, உங்களிடமிருந்து அவர்கள் விலகிச் சென்றால், அவர்களை உங்கள்பால் கவர்ந்திடுங்கள், உங்கள்பால் அவர்கள் விரோதத்தைக் காட்டினால், அவர்களிடம் அன்பைக் காட்டுங்கள், அவர்கள் உங்கள் உயிருக்கு விஷம் வைத்தால், அவர்களுடைய ஆன்மாக்களுக்கு இனிப்பூட்டுவீராக, அவர்கள் உங்களுக்கு ஒரு காயமுண்டாக்கினால், நீங்கள் அவர்களுடைய புண்களை ஆற்றிடும் மருந்தென்றாகுவீராக. அவ்வாறானவைதான் நேர்மையுடையோரின் பண்புகள்! அவ்வாறானவைதான் உண்மையானவர்களின் பண்புகள்!."**[39]

கீழ்கண்ட வாசகக்குறிப்பு சமுதாய உறவுகளை மானிட ஒருமைத்தன்மை குறித்த விழிப்புணர்வைப் புரிந்துகொள்வதற்கு நமக்கு உதவியாக இருக்கின்றது:

**"நீங்கள் ஒவ்வொருவரும் நியாமிகுந்தவர்களாகி, உங்கள் எண்ணங்களை மானிட ஐக்கியத்தின்பால் செலுத்திடுவீர்கள்; நீங்கள் உங்கள் அண்டையர்களுக்குத் தீங்குசெய்யமாட்டீர்கள் அல்லது எவரைப்பற்றியும் தரக்குறைவாகப் பேசமாட்டீர்கள்; எல்லா மனிதர்களின் உரிமைகளையும் நீங்கள் மதித்திடுவீர்கள், மற்றும் உங்கள் நலனைவிட மற்றவர்களின் நலனிலேயே நீங்கள் அதிகம் அக்கரைக்கொள்வீர்கள் என்பதே என் ஆவலாகும்."**[40]

கல்விவசதி குறித்துப், பின்வரும் வாசகப்பகுதி அப்பிரச்சினையை விவாதிக்கின்றது:

**“மனுக்குலத்தினரிடையே அறியாமையும் கல்வியற்றமையும் தடைகளாக விளங்குகின்றன என பஹாவுல்லா அறிவித்துள்ளார் மற்றும் எல்லாருமே பயிற்சியும் கல்வியூட்டலும் பெறவேண்டும் என அவர் அறிவித்துள்ளார்.இவ்வாறான சலுகைகளின் வாயிலாக பரஸ்பர இணக்கமின்மை சரிசெய்யப்பட்டு மனுக்குலத்தின் ஐக்கியம் மேலும் மேம்படுத்தப்படும். சர்வலோகக் கல்வி ஒரு சர்வலோக சட்டமாகும்.”[41]**

நீதி நிர்வாகம் குறித்து, நாம் பின்வருமாறு படிக்கலாம்:

**“இருந்தபோதிலும், தெய்வீக நாகரிகமானது, வெகு சிலரைமட்டும் தவிர்த்து, சமுதயாத்தின் ஒவ்வொரு அங்கத்தினரையும் பயிற்றுவிக்கும் விதமானது, எவருமே குற்றம்புரிய துனியமாட்டார்கள். குற்றத்தடுப்பைப் பொருத்தவரை மூர்க்கத்தனமான மற்றும் பழிக்குப்பழியான நடவடிக்கைகளுக்கும், மக்களைப் பயிற்றுவித்தும் அவர்களுக்கு கல்வியளியூட்டி, அவர்களை ஆன்மீகத்தன்மை உடையவர்களாக்கி கிடைக்கக்கூடிய தண்டனை அல்லது பழிக்குப்பழி போன்றவற்றின் பயமின்றி எல்லா குற்றச் செயல்களையும் தவிர்க்கச் செய்யும் விதத்திற்கும் இடையில் பெரும் வேறுபாடு உண்டு. உண்மையில் அவர்கள், குற்றம் புரிவதை பெரும் வெட்கக்கேடாகவும், அச்செயலைப் புரிவதையே கடும் தண்டனையாகவும் கருதுவார்கள்.”[42]**

மேலே உள்ள பத்திகளைப் பிரதிபலித்த பிறகு, நீங்கள் எழுதிய கூற்றுகளை மறுபரிசீலனை செய்து அவற்றை எவ்வாறு விரிவாக்கலாம் என்பதைக் கருத்தில் கொள்ளலாம்.

## பகுதி 16

தங்கள் சொந்த ஆன்மீக மற்றும் நுண்ணறிவாற்றல் வளர்ச்சிக்குப் பொறுப்பேற்று சமுதாயத்தின் பொதுநலனுக்குத் தனிநபர்கள் பங்காற்றுவதை உந்திவிடும் இருவித குறிக்கோள் உணர்வுகள் பற்றி நாம் பேசினோம். இன்றைய இளைஞர்களுக்கு மிகவும் இன்றியமையாததாக விளங்கும், இருவிதமான இத்தகைய குறிக்கோளுணர்வு, புனிதவாக்குகளில் தூரநோக்காகக் காணப்பட்டுள்ள தன்மைமாற்றத்தின் இயல்பு மற்றும் பரும அளவு குறித்த அறிவால் வலுவூட்டப்படுகின்றது என்பதை நாம் கண்டுள்ளோம். மாற்றம் குறித்த இவ்விரு செயல்பாடுகளும் மிக நெறுக்கமாகப் பிணைக்கப்பட்டுள்ளன என்பதை நாம் உணரவேண்டும். ஒரு தனிநபர் தனது உள்ளாற்றல்களை மேம்படுத்திக்கொள்வது, சமுதாயப் பொதுநலனுக்குப் பாடுபடுவது ஆகிய இரண்டும் பிரிக்கப்பட முடியாது. ஏனெனில், ஒரு மனிதனின் நல்லொழுக்கத் தரநிலைகள் மற்றும் நடத்தையானது அவனது சூழலை வடிவமைக்கிறது அதனால் அது ஆழமாக பாதிக்கப்படவும் செய்கிறது.: பாதுகாப்பாளரால் எழுதப்பட்ட ஒரு கடிதம் பின்வருமாறு கூறுகிறது:

**“நமக்கு வெளியே நிலவும் சூழ்நிலையிலிருந்து நமது உள்ளத்தைப் பிரித்து இவை இரண்டிலும் ஏதாகிலும் ஒன்று மறுமலர்வு பெறுமானால் எல்லாமே மேம்பாடு காணும் எனக் கூறமுடியாது. மனிதன் என்பவன் வெளியுலகத்தோடு ஜீவபந்தம் உடையவன். அவனது அகவாழ்வு சுற்றுச்சூழலை வடிவமைக்கின்றது மற்றும் அதுவும் அச்சூழலால் ஆழமாக பாதிப்புறுகின்றனது. ஒன்று மற்றதின் மீது செயல்படுகின்றது மற்றும் மனித வாழ்வின் ஒவ்வொரு நிலையான மாற்றமும் இத்தகைய பரஸ்பர செயல்பாடுகளின் விளைவாகும்.”[43]**

மேலே உள்ள மேற்கோளின் அடிப்படையில், பின்வரும் கூற்றுகள் உண்மையானவையா என்பதைத் தீர்மானிக்கவும்:

_____ சமுதாயம் முழுமையாக மாற்றம் அடைந்த பிறகுதான் தனிமனிதன் தன்மை மாற்றம் அடைய முடியும்.

_____ அதன் அங்கத்தினர்களின் நடத்தை எவ்வாறாக இருந்த போதிலும், நியாயமான சட்டங்கள் அமுலாக்கப்பட்டவுடன், சமுதாயம் கொடுமைகளிலிருந்து சுதந்திரம் அடையும்.

_____ ஒவ்வொரு தனி மனிதனும் நீதியுடன் நடந்திட முயற்சிக்கும்போது சமுதாயம் கொடுமைகளிலிருந்து சுதந்திரம் பெறும்.

_____ அதன் சட்ட அமைப்பு முறை நீதிக்குப் புறம்பாக இயங்கிய திலும், ஒரு சமுதாயத்தின் அனைத்து அங்கத்தினர்களும் நியாயமாக நடந்துகொள்ள இயலும்.

_____ ஒவ்வொரு மனிதனும் தன்மை மாற்றம் அடைந்தவுடன்தான் மனித இனம் வளர்ச்சியடையும்.

_____ ஒரு தனி மனிதனின் நடத்தை சமூகச் சூழ்நிலையின் மீது தாக்கத்தைச் செலுத்துகின்றது.

_____ நியாயமற்ற அமைப்பு முறைகளை விட்டொழிப்பதும், தனி மனிதர்களை நியாமாக நடந்துகொள்வதற்கும் உண்மையைத் தேடுவதற்கும் கற்றுக் கொடுக்கப்படும் முயற்சிகளின் விளைவாகத்தான் ஒரு நீதியுடைய சமுதாயம் அமைக்கப் படும்.

_____ எவராலும் சமூக சுற்றுச் சூழலின் தாக்கதிலிருந்து தப்பிக்க முடியாது.

_____ ஆன்மீகச் சக்திகளால் உதவப்பட்டு, மனிதர்கள், சமூகச் சூழ்நிலையின் கெட்டத் தாக்குதல்களை வென்றிடக் கூடும்.

_____ ஒவ்வொருவரும் மற்றவர்களை நேசிக்க கற்றுக் கொண்ட பிறகு, இன துவேஷங்கள் நீங்கிவிடும்.

_____ அதன் சட்டங்களிலும் ஸ்தாபனங்களிலும் எல்லா விதமான வேற்றுமைகளின் அடையாளங்கள் நீக்கப் பட்டவுடன் தான் இன வேற்றுமை மறையக்கூடும்.

_____ நியாயமான சட்டங்கள் அமுல்படுத்தப் படுவதினாலும், மற்றும் உண்மையை ஆராய்வதற்கு அனைவரோடும் அன்பும் தோழமையோடும் உறவாட ஆன்மாக்கள் பயிற்சி வழங்கப்பட்டவுடனும் இன வேற்றுமை அழிக்கப்படக்கூடும்.

_____ மனித இனம் ஒன்று என அனைவரும் நம்பிக்கைக் கொண்டவுடன், நாம் ஒற்றுமை அடையக் கூடும்.

_____ உலகில் ஒற்றுமையை நிலைநாட்ட தனிமனிதனின் தன்மைமாற்றம் மற்றும் சமூகத்தின் கட்டமைப்பு தேவைப்படுகிறது.

## பகுதி 17

நாம் இறுதியாகப் பயின்ற பகுதியில் வழங்கப்பட்ட கருத்துக்கள் சேவை குறித்த கேள்விக்கு நம்மை மீண்டும் கொண்டுச் செல்கின்றன, ஏனெனில் சேவைக் களத்திலேதான் நாம் நமது உள்ளாற்றல்களை மேம்படுத்தி சமுதாயத்தில் மாற்றங்களை ஏற்படுத்திட முடியும். சமுதாயத் தன்மைமாற்றச் செயல்பாட்டில் பங்கெடுப்பதென்பது சேவைக்கே அர்ப்பணிக்கப்பட்ட ஒரு வாழ்வை அது உள்குறித்துக்காட்டுகிறது என்பதை நாம் அதிகம் விளக்க வேண்டியதில்லை. இருந்தபோதும், சேவை எவ்வாறு தனிநபரின் நுண்ணறிவாற்றலுக்கும் ஆன்மீக வளர்ச்சிக்கும் பங்காற்றுகின்றது பற்றி நாம் சற்று மேலும் அதிகமாக சிந்திக்க வேண்டியிருக்கும். கீழே நடவடிக்கைகளின் பட்டியல் ஒன்று வழங்கப்பட்டுள்ளது. அவை ஒவ்வொன்றும் திறம்பட செயல்படுத்தப்படுவதை உறுதிசெய்ய பல ஆன்மீகப் பண்புகள் ஒன்று சேர வேண்டும் என்பதைப் பற்றி சற்று சிந்திக்க முயலவும். இந்த குறிப்பிட்ட பயிற்சிக்காக, ஒவ்வொரு நடவடிக்கைக்கும் குறிப்பான என்பதைப் பொருத்தமுடையதாகத் தோன்றும் ஒன்று அல்லது இரண்டு நற்பண்புகளை தேர்ந்தெடுத்து, அதைச் செயல்படுத்துவதற்கான தனிநபரின் திறனாற்றலுக்கு அவை எவ்வாறு பங்களிக்கின்றன என்பதை விவரிக்கவும்.

a. ஓர் அண்டைப்புறம் அல்லது கிராமத்தில் ஒரு வாடிக்கையான வழிபாட்டுக் கூட்டம் நடத்துவது:

______________________________________________________________________________

______________________________________________________________________________

b. சமயத்தின் போதனைகளிலிருந்து பெறப்பட்ட ஆன்மீகக் கருப்பொருள்களைப் பற்றி விவாதிப்பதற்கும் தோழமை உறவுகளை வலுப்படுத்துவதற்கும் நண்பர்கள் மற்றும் அண்டை வீட்டாரின் வீடுகளுக்குத் தொடர்ச்சியாக விஜயம் செய்யும் திட்டத்தில் பங்கேற்பது: _________

______________________________________________________________________________

______________________________________________________________________________

c. ஒரு கிராமம் அல்லது அண்டைப்புறத்தில் உள்ள குழந்தைகளின் ஆன்மீகக் கல்விக்காக கிரமமான முறையில் வகுப்புகளை நடத்துவது:_ ______________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

d. ஒரு இளைய இளைஞர் குழுவின் முயற்சிகளுக்கு, அதன் செயல்பாடுகளை வழிநடத்தும் ஒரு உயிர்ப்பூட்டுபவருடன் சேர்ந்து, நீண்ட காலத்திற்கு உதவி செய்வது: _____________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

e. பயிற்சியகத்தால் ஊக்குவிக்கப்படும் கல்வித் திட்டங்களில் இளைஞர்களைக் கொண்ட பெற்றோரை அடிக்கடிச் சந்தித்து அவர்களின் மகன்கள் மற்றும் மகள்களின் வளர்ச்சிக்கான மையக் கருப்பொருள்களில் அவர்களை உரையாடலில் ஈடுபடுத்துதல்: __________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

சேவைச் செயல்களை மேற்கொள்வதற்கான தனிநபர்களின் திறனாற்றலுக்கு எவ்வாறு ஆன்மீகப் பண்புகளும் மனப்பான்மைகளும் பங்களிக்கின்றன என்பதைப் பற்றி சிந்தித்திட மேற்கண்ட பயிற்சி நமக்கு உதவியுள்ளது. ஆனாலும், சேவை செய்திடும்போது, அத்தகைய பண்புகளை ஒருவர் உருவாக்கிக்கொள்ளவும் வலுப்படுத்திக்கொள்ளவும் முடியும் என்பதும் உண்மை. கீழே நாம் எல்லாரும் மேம்படுத்திட முயலும் சில ஆன்மீகப் பண்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு சொற் தொகுதிக்கும், அதை மேற்கொள்வோரில் அவ்வான்மீகப் பண்புகளை மேம்பாடுகாணச் செய்யக்கூடிய மேற்கண்ட நடவடிக்கைகளில் ஒன்றைத் தேர்வு செய்யவும்.

a. வாய்மை, நம்பகம், நீதி: ________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

b. பொறுமையும் இரக்கமனப்பான்மையும்: ________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

c. புனிதத்தன்மை, நேர்மைத்தன்மை, மற்றும் பிரகாசம்________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

d. தைரியம், கடவுளிடம் நம்பிக்கை மற்றும் பணிவு: ________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

e. இறைவனின் திருவிருப்பத்தின்பால் சரனடைதல் மற்றும் கீழ்ப்படிதல்: ____________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

## பகுதி 18

சேவை என்பது நமது வாழ்வின் ஒவ்வொரு அம்சத்தோடும் தொடர்பு கொண்ட யாவற்றையும் உள்ளடக்கும் கருப்பொருளாகும். நாம் தன்னலமற்ற சேவையுணர்வால் ஆட்கொள்ளப்படும்போது, நமது தொழில்சார்ந்த வாழ்விலும், மற்றவர்களுடனான நமது தொடர்புகளிலும், பஹாய் சமூகத்தின் உறுப்பினர்கள் எனும் முறையிலும், நமது ஒவ்வொரு பிரதிச்செயல்பாடும், நாம் எடுக்கும் ஒவ்வொரு நடவடிக்கையும் அதனால் பாதிக்கப்படவே செய்யப்படுகின்றன. இருந்தபோதிலும், நாம் என்ன சேவையில் ஈடுபட்டாலும், உலக மக்களுக்கான, மானிடத்தின் ஒருமையை பறைசாற்றும், அதன் ஒற்றுமைக்கு கோரிக்கை விடுக்கும், சட்டங்களையும் கோட்பாடுகளையும், ஆன்மீக மற்றும் சமுதாய போதனைகளையும் வழங்கிடும், கடந்தகாலத்தில் காணப்படாத, முற்றிலும் வேறுபட்ட வருங்கால சமுதாயத்திற்கான ஒரு முறையை ஸ்தாபிக்கக்கூடிய பஹாவுல்லாவின் செய்தியின் விரிவுக்குக் கட்டமைக்கப்பட்ட ஒரு திட்டம் உள்ளதெனும் பொருண்மை குறித்து நாம் என்றும் விழிப்புணர்வோடு இருக்கவேண்டும். அப்துல்-பஹாவினால் வரையறுக்கப்பட்ட இத்திட்டம், உலகின் புனரமைப்பிற்குக் குறைந்து வேறெதனையும் நாடவில்லை. மற்றும், இத்தெய்வீகத் திட்டம், தெளிவான கட்டங்களாக மடிப்பவிழ்கையில், மேன்மேலும் அதிகமான மக்கள் அதன் அமுலாக்கத்தில் பங்கேற்கின்றனர், “சமுதாயத்தின் பரிச்சயமான சச்சரவுகளுக்கான வெளிப்படையான மாற்று ஒன்று வெளிப்படுகின்றது.” மற்றும் நாம் அதற்காக—தெய்வீகத் திட்டத்திற்கு—நம்மையே அர்ப்பனித்திடவும் வேண்டும். “அதிபெரும்நாமத்தின் படைப்பாற்றலின் வாயிலாக உருவாக்கப்பட்ட அதிவலிமைமிகு திட்டம்,” என பாதுகாப்பாளர் அதைக் குறிப்பிடுகின்றார். “அது முன்னோக்கி செல்கின்றது,” என அவர் நமக்குக் கூறுகின்றார்,

> **“கடந்துசெல்லும் ஒவ்வொரு நாள்தோறும் உத்வேகம் அடைந்து, எல்லா தட்பவெட்பநிலைகளிலும் பலதரப்பட்ட மக்கள் மற்றும் இனங்களிலும் உள்ளத் தடைகளை உடைத்தெரிந்து, அதன் நன்மைமிகு நடவடிக்கைகளின் பரப்பெல்லையைத் தடையில்லாமல் விரிவுபடுத்தி, இக்கோள் முழுவதையும் ஆன்மீகவெற்றிகொள்ளும் இலக்கை நோக்கி அனிவகுத்துச்செல்வதில் அதன் உள்வலிமைகளின் வலிமிகு அடையாளங்களை மேலும் மேலும் அதிகமாக வெளிப்படுத்தி, அது தொடர்ந்து முன்னோக்கிச் செல்கின்றது,” என அவர் நமக்குக் கூறுகின்றார்.”[44]**

தனி மற்றும் கூட்டு வாழ்வுகளைத் தன்மைமாற்றுவிக்கும் பஹாவுல்லாவின் திருவெளிப்பாட்டின் ஒளியானது தெய்வீகத் திட்டத்தின் வாயிலாக உலகின் எல்லா பாகங்களிலும் உள்பாய்ச்சப்படும். ஷோகி எஃபெண்டி பின்வருமாறு வலியுறுத்தியுள்ளார்:

> **“மானிடத்திற்காகத் தனியே கடவுளால் இயற்றப்பட்ட இத்திட்டத்தின் பரிணாமத்தின் இறுதியும் சிகரமுமான காலகட்டம், மனுக்குலத்தின் சரித்திரத்தில் அதன் குறியிலக்குவரிசை, அதன் தனியியல்பு, ஆற்றல் ஆகியவற்றில் நிகரற்ற ஓர் உலக நாகரிகத்தின் தோற்றத்தை குறித்துக்காட்டுவதாக அமையும்—வருங்காலத்தினர், ஒருமனதான குருலில், பஹாவுல்லாவின் திருவெளிப்பாட்டின் பொற்காலத்தின் சிறந்த கனியென பாராட்டும் ஒரு நாகரிகம்...”[45]**

தெய்வீகத் திட்டத்தின் வெளிப்பாட்டின் ஒவ்வொரு கட்டமும் சமயத்தின் தலைமையால் தொடங்கப்பட்ட உலகளாவிய திட்டங்களில் ஒன்றினால் குறிக்கப்படுகிறது. ஒவ்வொரு திட்டத்திற்கும் சில தேவைகள் உள்ளன அத்துடன் முந்தையதில் செய்த சாதனைகள் மற்றும் அதில் கற்றுக்கொண்ட பாடங்கள் மீது கட்டமைக்கப்படுகிறது. தொடர்ச்சியான திட்டங்களின் மூலம் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளின் மூலம், நாம் ஈடுபட்டுள்ள சாகசமுயற்சிக்கு "பல்வேறு கொள்கைகள், கருத்துக்கள் மற்றும் உலகளாவிய பொருத்தத்தின் உத்திகள்" "செயல்பாட்டிற்கான ஒரு கட்டமைப்பாக" படிமாக்கப்பட்டுள்ளன. இந்தக் கட்டமைப்பே நமது கூட்டு செயல்பாட்டிற்கு வடிவம் கொடுப்பதுடன் நாம் செய்யும் செயல்களில் நாம் சீராக இருப்பதையும் உறுதி செய்கிறது. வருங்காலத்தில் வழங்கப்படும் பயிற்சிகளில் இந்த வளரும் கட்டமைப்பின் தன்மையை ஆராய உங்களுக்கு வாய்ப்பு கிடைக்கும். இப்போதைக்கு, அதன் இருப்பானது உள்ளூர் மட்டத்தில் "ஒரு புதிய உலக ஒழுங்கின் இலக்கை நோக்கி" மக்கள்தொகையின் இயக்கத்தை உருவாக்க "தனிநபர்களின் விரிவடையும் மையக்கருவை" சாத்தியமாக்குகிறது என்பதை உணர வேண்டியது அவசியம். இதன் அடிப்படையில், 2013 இல் உலகம் முழுவதும் நடைபெற்ற இளைஞர் மாநாடுகளின் தொடரில் பங்கேற்றவர்களுக்கு உலக நீதி மன்றம் எழுதிய செய்தி பின்வருமாறு விளக்குகிறது:

**“பல தசாப்பதங்களுக்குப் பிறகு, பஹாவுல்லாவின் திருவெளிப்பாடு குறித்து போதிய அளவு மேலும் அதிக புரிந்துகொள்ளலை அடைவது, அவ்வெளிப்பாட்டினுள் கோவில் கொண்டிருக்கும் கோட்பாடுகளைப் பயன்படுத்துவது ஆகியன குறித்த இப்பரந்து கிடக்கும் சமூகத்தின் உலகந்தழுவிய முயற்சிகள் அனுபவத்தின் மூலமாகப் பண்படுத்தப்பட்ட, செயல்பாட்டுக்கான ஓர் ஆற்றல்மிக்க கட்டமைப்பை உருவாக்கியுள்ளன. இப்போது நன்கு ஸ்தாபிக்கப்பட்டுள்ள அதன் முறைமைகள், அணுகுமுறைகள் ஆகியவற்றுடன் பழக்கப்படும் அதிர்ஷ்டத்தை நீங்கள் பெற்றுள்ளீர்கள். அவற்றின் விடாமுயற்சியுடனான அமலாக்கத்தின் மூலமாக, உங்களில் பலர் தெய்வீகப் போதனைகளின் சமுதாய-நிர்மாணிப்பு ஆற்றலின் அறிகுறிகளை ஏற்கனவே கண்ணுற்றிருப்பீர்கள். நீங்கள் கலந்துகொள்ளப்போகும் மாநாட்டில், பஹாவுல்லாவின் அழைப்பாணைகளுக்கு மறுமொழியளிக்கவும் அவ்வாற்றல்களை விடுவிக்க உதவிடவும் விரும்பும் எந்த இளையவர்களாலும் ஆற்றப்படக்கூடிய பங்களிப்பைப் பரிசீலிக்குமாறு நீங்கள் அழைக்கப்படுகிறீர்கள்.”[46]**

அதே செய்தி பின்வருமாறு குறிப்பிடுகின்றது:

**“கூட்டுச் செயல்பாடு வழங்கக்கூடிய சாத்தியங்களை சமூக நிர்மாணிப்பு நடவடிக்கையில் குறிப்பாகக் காணலாம். உலகம் முழுவதும் தீவிர நடவடிக்கைக்கான மையங்களாகியிருக்கும் பல கிலஸ்டர்களிலும் அண்டைப்புறங்களிலும் கிராமங்களிலும் இச்செயல்பாடு தீவிரமடைந்துவருகின்றது. இத்தகைய சூழலில் இளைஞர்களே நடவடிக்கைகளின் முன்னணியில் இருக்கின்றனர். ஆனால், அவர்கள் பஹாய் இளைஞர்கள் மட்டுமல்லர், மாறாக பஹாய்கள் ஆரம்பித்துள்ளவற்றின் பயன்விளைவுகளைக் கண்ணுறவும் ஐக்கியம், ஆன்மீகத் தன்மைமாற்றம் ஆகியவற்றை அடிக்கோலிடும் தூரநோக்கை கிரகிக்கவும் முடிந்த ஒத்தமனதுடையோரும் அதில் உள்ளடங்கியுள்ளனர். இத்தகைய இடங்களில், ஏற்பிசைவுடைய உள்ளங்களுடன் பஹாவுல்லாவின் திருவெளிப்பாட்டைப் பகிர்ந்துகொள்வதன் அவசியமும் இன்றைய உலகிற்கு அவருடைய செய்தி தாங்கி வரும் தாத்பரியங்களை ஆய்வுச் செய்யவேண்டியதும் உன்னிப்புடன் உணரப்படுகின்றது.**

**சமுதாயத்தின் பெரும்பான்மையினர் செயலின்மை, அக்கறையின்மை ஆகியவற்றையே வரவேற்றும், அதைவிட மோசமாகத், தனக்கும் பிறருக்கும் ஆபத்தை விளைவிக்கும் நடத்தையை ஊக்குவிக்கும் போது, ஆன்மீக ரீதியில் வளமாக்கும் ஒரு சமூக வாழ்வுமுறையை பேணவும் பராமரித்திடவுமான ஒரு மக்கள்தொகையினரின் திறனாற்றலை மேம்படுத்துவோரினால் ஒரு வெளிப்படையான மாற்று வழங்கப்படுகின்றது.”[47]**

இந்த வார்த்தைகளுடன் நீதி மன்றம், மற்றொரு செய்தியில், பஹாய் இளைஞர்கள் மற்றும் சேவை வாழ்க்கையின் உயரங்களை அளப்பதில் அவர்களுடன் இணைய விரும்புபவர்களின் பார்வையை உயர்த்துகிறது:

**“அன்பார்ந்த நண்பர்களே: இளம் நம்பிக்கையாளர் தலைமுறை ஒவ்வொன்றிற்கும், மனிதகுலத்தின் செழுமைக்குப் பங்களிப்பதற்கு, தங்களின் வாழ்நாள் காலத்திற்கே உரிய தனித்தன்மை வாய்ந்த ஒரு வாய்ப்பு ஏற்படும். நிகழ்கால தலைமுறையினர்க்கு, ஆழச்சிந்திக்கவும், ஈடுபாடுகொள்ளவும், பேரளவிலான ஆசிகள் வழிந்தோடவல்ல அர்ப்பணிப்புத் தன்மை மிக்க வாழ்விற்காகத் தங்களைத் தாங்களே வலுப்படுத்திக்கொள்ள வேண்டிய காலம் கனிந்துவிட்டது. தெளிவான பார்வையுடைய தூய ஆன்மாக்களை, பிறரின் தவறுகளினூடே குடியிருந்தபோதிலும் தங்களின் நேர்மைத்தன்மையும் மனச்செம்மையும் பாதிக்கப்படாதவர்களும், தங்கள் சொந்த குறைபாடுகளால் நிலைகுத்திப் போகாதவர்களுமான இளைஞர்களை; மாஸ்டரின்பால் தங்கள் பார்வையைத் திருப்பி "விலக்கப்பட்டோரை வெகு அணுக்கமான நண்பர்கள் வட்டத்தில் சேர்க்கும்" இளைஞர்களை; சமுதாயத்தின் குறைபாடுகளின்பால் கொண்ட விழிப்புணர்வினால் தங்களைத் தூர விலக்கிக்கொள்ளாமல், அச்சமுதாயத்தின் தன்மை மாற்றத்திற்காக உழைத்திடத் தூண்டப்படும் இளைஞர்களை; பலவிதங்களில் நிகழும் நேர்மையின்மையைக் கண்டு ஒதுங்காமல், "நீதியின் ஒளி உலகம் முழுவதின் மீதும் பிரகாசித்திட" எத்தகைய தியாகமே ஆனாலும், அதற்காக உழைக்கும் இளைஞர்களை கவனம் சிதறிய மற்றும் தடுமாற்றமடைந்துள்ள ஒரு மானிடத்திலிருந்து அவர் வடித்தெடுத்திட வேண்டும் என்பதே புனிதத் திருவாயிலில், ஆதி அழகரிடம் நாங்கள் இறைஞ்சுகின்றோம்.”[48]**

மேற்கண்ட வாசகக்குறிப்புகள் தெய்வீகத்திட்டத்தில் பங்காற்றுவோரின் வரிசைகளில் முன்வரிசையினராக பொறுப்பேற்பதின் இன்றியமையாமையை உங்களுக்கு உணர்த்திடும். இப்பகுதியை முடிக்கும் முன், லத்தீன் அமெரிக்கா நெடுகிலும் நடைபெற்ற இளைஞர் மாநாட்டு தொடர்களுக்கு உலக நீதி மன்றம் எழுதிய பின்வரும் செய்தியின் மீது ஆழ்சிந்தனை செய்வது உங்களுக்கு உதவியாக இருக்கும்:

**“இத்தலைமுறை இளைஞர்கள் சமுதாயத்தின் அலுவல்களைச் செயல்படுத்துவதற்கான கடமைகளைப் பொறுப்பேற்கும்போது, அவர்கள் கிறுகிறுக்க வைக்கும் வேறுபாடுகளைக் கொண்ட ஒரு காட்சியமைப்பை எதிர்கொள்ள நேரிடும். ஒரு பக்கம், நுண்ணறிவாற்றல், தொழில்துறை மற்றும் பொருளாதாரத் துறைகளில் பிரகாசமிக்க சாதனைகளை அப்பிரதேசங்கள் மெய்யாகவே அடைந்திருக்கக்கூடும். மறுபுரம், பரவலான வறுமை அல்லது அதன் மக்களை முழுமையாக மூழ்கடிக்கக்கூடிய அராஜகங்களை அடக்குவதில் தோல்வியுற்றிருக்கலாம். அதன் பிணைப்புக்களை அறுத்தெறிந்துகொண்டிருக்கும்**

**அநியாயங்களை ஒழிப்பதில் பெரும் செல்வங்கள் பெற்றுள்ளதான இச்சமுதாயம் ஏன் செயலற்றுள்ளது, எனும் கேள்வி வெளிப்படையாகவே கேட்கப்பட வேண்டும்.”**

**“பலப் பத்தாண்டுகளாக நன்றாகவே உணரப்பட்டுள்ளதுபோல், இக்கேள்விக்கான பதில், அரசியல் உணர்வெழுச்சிகளிலோ, வகுப்பின இலாபங்கள் குறித்த முறனான வாதங்கள் அல்லது தொழில்நுட்ப வழிவகைகளில் காணப்படமுடியாது. அரசியல், பொருளாதார மற்றும் தொழில்நுட்ப கருவிகளை பயன்மிக்க வகைகளில் பயன்படுத்தும் முயற்சியின் முன்னோடியாக இங்குக் கோரப்படுவது ஆன்மீக மறுமலர்ச்சியே ஆகும். ஆனால், இதற்கான தூண்டுவிசை ஒன்று தேவைப்படுகிறது. எண்ணிக்கையில் நீங்கள் சிறிதாக இருந்தபோதிலும், அத்தகைய தூண்டுவிசையை அழிக்கக்கூடிய வழிகளாக நீங்கள் இருக்கின்றீர்கள் என்பது குறித்து நீங்கள் உறுதியோடு இருங்கள்.”[49]**

1. அத்தகைய நுண்ணறிவாற்றல், தொழில்நுட்பம், பொருளாதார வளம் ஆகியவற்றைப் பெற்றுள்ள ஒரு சமுதாயம், அதை **சீர்குலைத்துக்கொண்டிருக்கும் அநியாயங்களை ஏன் ஒழிக்கமுடியவில்லை என இக்கடைசிச் செய்தி** கேள்வியெழுப்புகின்றது. அதாவது, இதற்கான பதில், அரசியல் உணர்வெழுச்சிகளிலோ, வகுப்பின இலாபங்கள் குறித்த முரணான வாதங்கள் அல்லது தொழில்நுட்ப வழிவகைகளில் காணப்படமுடியாது என்பதை அது குறித்துக்காட்டுகின்றது. நீங்கள் வாழும் சமுதாயத்தைப் பற்றி சற்று சிந்தித்து, பின்வரும் ஒவ்வொன்றுக்கும் ஓர் உதாரணம் வழங்கவும்:

   a. சமுதாயத்தைப் அடையாளப்படுத்தும் ஓர் அரசியல் உணர்வெழுச்சி ________________________

   ____________________________________________________________________________________

   ____________________________________________________________________________________

   ____________________________________________________________________________________

   b. சமுதாயத்தில் விளங்கும் வகுப்பின நலன்களின் முரணான வெளிப்பாடுகள்: _______________

   ____________________________________________________________________________________

   ____________________________________________________________________________________

   ____________________________________________________________________________________

   c. சமுதாயம் இதுவரைப் பின்பற்றிவந்துள்ள ஒரு தொழில்நுட்ப வழிமுறை: ___________________

   ____________________________________________________________________________________

   ____________________________________________________________________________________

   ____________________________________________________________________________________

2. சமுதாய சீர்கேடுகளை அழிப்பதில் அரசியல், பொருளாதார மற்றும் தொழில்நுட்பக் கருவிகளின் வெற்றிகரமான பயன்பாட்டிற்கு எது முன்தேவையென உலக நீதி மன்றம் கூறியுள்ளது? __________

   ____________________________________________________________________________________

   ____________________________________________________________________________________

3. சமுதாயத்தின் ஆன்மீக மறுமலர்வை ஏற்படுத்துவதற்கு எது தேவைப்படுகிறது என உலக நீதி மன்றம் கூறுகிறது? ______________________________________________________________

______________________________________________________________

4. மானிடத்திற்கான பஹாவுல்லாவின் செய்தியை வழங்குவதற்கான ஒரு வழியாக உலக நீதி மன்றம் யாரைக் குறிப்பிட்டுள்ளது ______________________________________________________________

______________________________________________________________

இப்பொழுது, மேற்கண்ட சிந்தனைகளை மனதில் கொண்டு, இப்பயிற்சியைப் பயிலும் உங்கள் நண்பர்களுடன், தெய்வீகத் திட்டத்தின் அமுலாக்கத்தில் பங்கேற்பதானது சமுதாயத்தின் ஆன்மீக மறுமலர்ச்சிக்கு இளைஞர்கள் கால்வாய்களாகிட எவ்வாறு உதவுகின்றது என்பதைக் கலந்துரையாடவும்.

## பகுதி 19

சமயத்தின் முன்னேற்றத்தில் இளைஞர்கள் ஆற்ற வேண்டிய இன்றியமையா பங்கு குறித்து மேற்கொண்டு சிந்தித்திட கடந்த பகுதியில் நடந்த நமது கலந்துரையாடல் உங்களைத் தூண்டியிருக்கும் என்பதில் சந்தேகமில்லை. 'கடவுள் கடந்து செல்கிறார்' என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்ட பின்வரும் வாசகப் பகுதியில், ஷோகி எஃபெண்டி சமயத்தின் ஆரம்பகால வீரர்களைப் பற்றி ஒரு காட்சியை வழங்குகிறார். அவர்களுடைய வீரச் செயல்கள் யுகங்கள் தோறும் பஹாய்களை உற்சாகப் படுத்தக் கூடியவையாகும். அவர்களுள் பெரும்பாலானவர்கள் இளையோராக இருந்திட்ட காரணத்தால், அவர்களுடைய தனிச்சிறந்த தன்மைகளை வரைவதற்காக பாதுகாவலரால் பயன்படுத்தப்பட்ட வார்த்தைகளைப் பற்றி ஆழமாகச் சிந்திப்பது பொருத்தமானதாகும். இதைச் செய்வதற்கு முன், பின்வரும் அருஞ்சொற்களை வாசிப்பது உங்களுக்குப் பயன்தரக்கூடும்:

| | |
|---|---|
| விண்கல்லைப் போல்: | வானத்தில் தோன்றி வெகு விரைவாகச் சென்றிடும் ஓர் ஒளிமிக்க ஒளிக்கோடு |
| கடந்துசெல்லல்: | குறுக்கே செல்லல் |
| இருளார்ந்த: | இருண்டதும் மங்கலானதுமான |
| துணை கோள்: | ஒரு பெரிய கோளை வலம் வரும் ஒரு சிறு கிரகம். |
| அண்டம்: | பல விண்மீன்களைக் கொண்ட ஒரு விண்மீன் கும்பல் |
| ஒளிவீசு: | ஒளிக்கதிர்களை வீசுவது |
| வெண்சுடர்: | பெரும் வெப்பத்துடன் ஒளிர்வது |
| தோற்றநிலை: | சமீபத்தில்தான் தலையெடுத்திருப்பது |
| போட்டி: | வெற்றிக்கான ஒரு போராட்டம் |
| பாதை பதிப்போர்: | முன்னோடிகள் |
| சதி: | இரகசிய சூழ்ச்சி |
| ஒழுக்கமற்ற: | பண்பற்ற, முறையற்ற |
| சர்வந்தழுவிய | பரந்துவிரிந்த, திணறச்செய்கின்ற |
| இறைபக்தி: | கடவுள் மீது பயபக்தியும் சமயக் கடமைகள் மீது ஈடுபாடும் |
| பேரார்வம்: | தீவிர உணர்ச்சியோடு |

| | |
|---|---|
| அரிமா போன்ற: | ஒரு சிங்கத்தைப் போல் |
| மறுத்தலித்தல்: | அர்ப்பனித்தல், கைவிடுதல் |
| மனவுறுதி: | திட நோக்கம் |
| பாறை போன்று: | தளர்விலா உறுதியுடனும், தாங்கக்கூடியதும் |
| பிரமிக்கத்தக்க: | அற்புதமிகு பிரம்மாண்டம் |
| ஆழ்ந்த மதிப்பு: | மரியாதையும் வியப்பும் |
| உணர்வைக் குலை: | மலைக்க வைக்கும், குழப்புகின்ற |

பாதுகாவலர் இவ்வாறு எழுதுகின்றார்:

**“இந்த வியப்பூட்டும் நாடகத்தின் முதல் காட்சியின் உபகதைகளை ஆராயும் வேளையில், நாம் அதன் தலையாய வீரரான பாப் பெருமானாரைக் காண்கின்றோம். ஷிராஸ் நகரின் தொடுவானத்தின் மேல் ஒரு வானவெளி விண்மீனைப் போல் எழுந்து, தெற்கிலிருந்து வடக்கு வரை பாரசீகத்தின் இருண்ட வானத்தைக் குறுக்கே கடந்து சென்று, துயர்மிக்க வேகத்தோடு கீழே சரிந்து, ஒரு பேரொளி என்னும் தீச் சுவாலையாக மடிந்தார். நாம் அவரது இறை மதி மயக்கங் கொண்ட துணைக் கோளங்களைக் காண்கிறோம். அவர்கள் அதே தொடுவானத்தின் மீது மேலுயர்ந்து, அதே வெப்பமான ஒளியை வீசி, அதே வேகத்தோடு தங்களை எரித்துக் கொண்டு, கடவுளின் துளிர்விடுகின்ற சமயத்தின் படிப்படியாக அதிகரிக்கும் உந்துவிசைக்கு ஓர் அதிகரித்த ஊக்கத்தைத் தங்கள் சார்புக்கு செலுத்தினர்.”**

**“பொது மக்கள், மத குருமார்கள், அரசர்கள் ஆகியோருடன், அரசாங்கத்தையும் ஈடுபடுத்திய, இந்தக் கொடூர ஆன்மீகக் போராட்டத்தின் வரலாற்றில் ஒளிவீசும் செயல்களுக்குரிய வீரர்கள், ஒரு புதிய நாளின் முன்னோடிகளான, பாப் பெருமானாரின் தேர்ந்தெடுக்கப்பட்ட சீடர்களான உயிர் எழுத்துக்களும், அவர்களுடைய அன்பர்களும் ஆவர். இவர்கள் யாவரும், உயர்வான, தணியச் செய்யவியலாத மற்றும் வியப்பூட்டிடும் ஆற்றலோடும், அதிர்ச்சியூட்டும் அளவிற்கு ஆழமான அறிவோடும், அதன் வேகத்தில் வீசி எரியும் சொல்லாற்றலோடும், அதன் வெறியார்வத்தில் விஞ்சிட இயலாத பக்தியோடும், அதன் மூர்க்கத்தில் அரிமா போன்ற ஒரு துணிவோடும், அதன் புனிதத்தில் புனிதர்களைப் போன்ற தன்னல மறுத்தலோடும், அதன் உறுதியில் பாறையைப் போன்ற முடிவோடும், அதன் பரந்த அளவில் வியத்தகு ஓர் அகக்காட்சியோடும், அவர்களது எதிரிகளை குழப்பமடையச் செய்திடும் அளவிற்கு நபிகள் பெருமானாரும் அவரது இமாம்கள் மீதுமான ஓர் ஆழ்ந்த மதிப்போடும், அவர்களுடைய பகைவர்களைப் பயமுறுத்திடும் நம்ப வைக்கும் சக்தியோடும், அவர்களுடைய நாட்டினரின் வாழ்வை சவாலிட்டுப் புரட்சி செய்திடும் நம்பிக்கையின் உயர் தரமும் நடத்தையின் ஒழுக்க முறையோடும், அத்துணை சதி செயல்களையும், அறியாமையையும், ஒழுக்கச் சீர்கேட்டையும், கொடுமைகளையும், மூட நம்பிக்கைகளையும் மற்றும் கோழைத்தனத்தையும் எதிர்த்து நின்றனர்.”[50]**

1. பின்வரும் கோடிட்ட இடங்களை நிரப்பவும்.

   a. உயிர் எழுத்துக்களானவர்கள் ஒரு _______________________ போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

b. இந்தப் போராட்டத்தில் அவர்கள், பொது__________, மத __________, __________ மற்றும் ____________, ஆகியோரின் சதி ___________, __________, ஒழுக்கச் ____________, _______________, மூட ____________, மற்றும் _______________ எதிர்த்து நின்றனர்.

c. அவர்கள் அத்துணை சதி செயல்களையும், அறியாமையையும், ஒழுக்கச் சீர்கேடையும், கொடுமைகளையும், மூட நம்பிக்கைகளையும் மற்றும் கோழைத்தனத்தையும் இவற்றைக் கொண்டு எதிர்த்தனர்:

— உயர்வான, _______________________ மற்றும் ______________ ஆற்றலோடும், ____________________ அளவிற்கு ஆழமான _________________________,

— அதன் வேகத்தில் ___________________________________________________,

— அதன் வெறியார்வத்தில் ____________________________________________,

— அதன் மூர்க்கத்தில் அரிமா___________________________________________,

— அதன் புனிதத்தில் ___________________________________________________,

— அதன் உறுதியில் ________________________________________________,

— அதன் பரந்த அளவில் _______________________________________________,

— அவர்களது எதிரிகளை ______________________________________________

— நபிகள் பெருமானாரும் அவரது இமாம்கள் மீதுமான ____________________,

____________________

— அவர்களுடைய பகைவர்களைப் பயமுறுத்திடும் ________________________,

— அவர்களுடைய நாட்டினரின் _______________________________________

— நம்பிக்கையின் ______________________________ ஒழுக்க

— முறையோடும்.

2. பாதுகாவலரால் மேல் குறிப்பிடப்பட்ட வாசகப் பகுதியில் வருணிக்கப்பட்ட ஆன்மீகப் போராட்டத்தில் எக் காரணத்திற்காகச் சமயத்தின் ஆரம்பகால வீரர்கள் ஈடுபட்டனர்? ___________

_______________________________________________________________________________

_______________________________________________________________________________

_______________________________________________________________________________

3. தெய்வீக திட்டத்தை செயல்படுத்துவதில் பங்கேற்கும் இன்றைய இளைஞர்கள், தங்கள் முன்னோடிகளைப் போலவே, ஆன்மீகப் போரில் ஈடுபட்டுள்ளனரா? __________________________

4. அவர்களுடைய போராட்டமானது, எவ்வகையில் சமயத்தின் ஆரம்பகால வீரர்களின் போராட்டத்தைப் போன்று இருக்கின்றது? __________________________________________________

____________________________________________________________________________________

____________________________________________________________________________________

____________________________________________________________________________________

5. வீரர் யுகத்தில் வாழ்ந்த தங்களுடைய சகோதரர்களையும் சகோதரிகளையும் போலவே, அவர்களும் தாங்கள் ஈடுபட்டுள்ள ஆன்மீகப் போராட்டத்தில் வெற்றி பெறுவதை, இக்காலத்தின் இளைஞர்கள் எவ்வாறு உறுதிச் செய்யக் கூடும்? ________________________________________

____________________________________________________________________________________

____________________________________________________________________________________

____________________________________________________________________________________

____________________________________________________________________________________

அடுத்த பகுதிக்குச் செல்வதற்கு முன், உலக நீதி மன்றம் எழுதிய செய்தியிலிருந்து பின்வரும் பத்தியைப் பற்றி சிபிரதிபலித்திட  நீங்கள் விரும்பலாம்:

**“இருபத்து ஐந்தே வயதை எட்டியிருந்த மேன்மைமிகு பாப் அவர்களின் திருமேனி உலகத்திற்குத் தனது புரட்சிகரமான செய்தியை அறிவித்திட முன்னெழுந்தபோது, அவரது போதனைகளை ஏற்கவும் பரப்பவும் செய்தோரில் பலர் இளைஞர்களாக இருந்தனர். பாப் அண்ணலைவிட வயதில் இளையவர்களாக இருந்தோரும் அவர்களுள் அடங்குவர். உதயத்தை வென்றவர்கள் நூலில் கண்ணைப் பறிக்கும் தீவிரத்துடன் அமரத்துவம் அடைந்துள்ள அவர்களின் வீரத்தன்மை, மனித வரலாற்று ஏடுகளை பல நூற்றாண்டுகளுக்கு ஒளியூட்டக்கூடியவையாகும். இவ்வாறாகவே இளைஞர்களின் ஒவ்வொரு தலைமுறையும், உலகத்தைப் புதுப்பிக்கும் தெய்வீக உந்துசக்தியிலிருந்து ஊக்கவுணர்வைப் பெற்றுவந்துள்ளனர்; மனிதவர்க்கத்தின் வாழ்க்கையைத் தன்மைமாற்றமுறச் செய்திடக்கூடியதும் மடிப்பவிழ்ந்துவருவதுமான ஒரு செயல்முறையின் அணிமக் கட்டத்திற்குப் பங்களித்திடுவதற்கான வாய்ப்பைப் பற்றிக்கொள்ளவும் செய்துள்ளது. இத்தகைய செயல்மாதிரியானது பாப் அவர்களின் காலம் முதல் இந்நாள் வரையிலும் எவ்வித குறுக்கீடுகளுக்கும் ஆளானதில்லை.”[51]**

## பகுதி 20

நெருக்கடியும் வெற்றியும் என்னும் தொடர்ச்சியான சுழற்சிகளின் வழியாக, உதயத்தை வென்ற வீரர்களினால் பதிக்கப்பட்ட பாதையைப் பின்பற்றி பஹாவுல்லாவின் சமயத்தை மானிடத்திற்கு வழங்கிட ஒவ்வொரு தலைமுறையையும் சார்ந்த பஹாய் இளைஞர்கள், பஹாய் நடவடிக்கைகளின் முன்னணியில் இருந்துவருகின்றனர். உலக நீதிமன்றம் இவ்வாறு எழுதியுள்ளது:

**"பஹாய் உலகத்தின் ஆரம்பத்திலிருந்தே, கடவுளின் திருவெளிப்பாட்டைப் பிரகடணம் செய்வதில் இளைஞர்கள் ஒரு முக்கியப் பங்கினை ஆற்றியுள்ளார்கள். பாப் பெருமானார் தாமே, அவர் தம் சமயத்தைப் பிரகடனம் செய்யும்போது, இருபத்து ஐந்து**

**வயதுடையவராகத்தான் இருந்தார். அதே சமயம், உயிர் எழுத்துக்களில் பலர் அதை விட வயதில் குறைவானவர்களாக இருந்தனர். மாஸ்டரும், ஈராக் மற்றும் துருக்கி நாடுகளின் தமது தந்தையின் சேவையில் பெறும் பொறுப்புக்களைத் தாங்கும்படி அழைக்கப்படும் வேளையில், மிக இளைய வயதுடைய மனிதராக இருந்தார். அவருடைய சகோதரரான, அதி புனிதக் கிளை, இருபத்திரண்டு வயதில், கடவுளின் ஊழியர்கள் "உயிரூட்டப் படுவதற்கும், மற்றும் உலகில் வசிப்போர் யாவரும் ஒன்றிணைக்கப் படுவதற்கும்" அதி பெரும் சிறையில் தமது உயிரைக் கடவுளிடம் அர்ப்பணித்தார். பாதுகாவலர் அரியாசனத்தில் அமரும்படி அழைக்கப் படும்போது ஷோகி எஃபெண்டி ஆக்ஸ்பஃர்ட் பல்கலைக் கழகத்தில் ஒரு மாணவனாக இருந்தார், மற்றும் பத்தாண்டு சிலுவைப் போர் திட்டத்தில் அழியாப் புகழை வென்றிட்டப் பஹாவுல்லாவின் வீரத்திருத்தகையினரில் பலர், இளைஞர்களாக இருந்தனர்."[52]**

மற்றும் 1984 எனத் தேதியிடப்பட்ட ஒரு செய்தியில், அண்மைக் கால வீரர்களைப் பற்றி உலக நீதிமன்றம் புகழ் பாடியது:

**"உதாரணமாக, கடந்த கோடைக் காலத்தின்போது, ஷிராசில் ஆறு இளம் பெண்மணிகள், அவர்களுடைய வயது 18லிருந்து 25 வரை உள்ளவர்கள், அவர்களுடைய உயிர், தூக்கிலிடுபவனின் சுறுக்குக் கயிற்றினால் பறிக்கப் பட்டதை எண்ணிப் பாருங்கள். அவர்கள் அனைவரும் தங்கள் சமயத்தை மறுத்து விலகும்படி பல முறை வற்புறுத்தப் பட்டனர்; அனைவரும் தங்கள் இறை அன்பரை நிராகரிக்க மறுத்தனர். ஆசிரியர்களாலும் முல்லாக்களினாலும் விசாரணைகள் செய்யப் பட்டுப், பழிக்கப் பட்டு, மற்றும் தங்களுடைய நம்பிக்கையை நிலைநிறுத்திக் கொண்டதனால் பள்ளிக்கூடத்திலிருந்து வெளியேற்றப் பட்டக் குழந்தைகளும் இளைஞர்களும் மீண்டும் மீண்டும் காட்டியுள்ள திகைப்பூட்டும் உறுதியைப் பற்றியக் கதைகளையும் கவனியுங்கள். தங்கள் சமூகத்தின் மீது அத்துணை கொடுமையாக விதிக்கப்பட்டக் கட்டுப்பாடுகளின் கீழ், இளைஞர்கள், தங்கள் ஆற்றல்களை நாடு முழுவதிலும் உள்ள பஹாய் ஸ்தாபனங்களிடம் பயன் படுத்திட ஒப்படைத்து, குறிப்பிடத்தக்க சேவையை ஆற்றினார்கள் என்பதைக் கருதிப்பார்ப்பது மேலும் முக்கியமாகும். இந்தத் தன்னலமற்றதும் பக்தியுடையதுமான தூய செயல்களைவிட, அவர்களுடைய ஆன்மீக கடப்பாட்டையும், மெய்ப்பற்றையும் பற்றிப் பொறுத்தமுற புகழ்பாடிட எவ்வித சொல்வன்மைமிக்க பேறுரையும் தேவையில்லை. பஹாய்களிடம் தேவைப்படும் நம்பிக்கைக்கு, அத்துணை உயர்வான விலையீட்டை, அனேகமாக உலகில் வேறெந்த இடத்திலும் கோரப்பட்டதில்லை. துணிவுள்ள ஈரானிய பஹாய் இளைஞர்களை விட, மேலும் தயாராயுள்ள, மேலும் பிரகாசமிக்கத் தியாகம் என்னும் கோப்பையை ஏந்துபவர்களைக் கண்டிடவும் இயலாது. ஆகையால், இத்தகையதொரு அசாதாரணமான காலத்தில் வாழ்ந்து, உங்கள் ஈரானிய சகோதரர்களின் வீரத்தின் உருகச் செய்திடும் உதாரணத்தைக் கண்டுகளித்து, இடமாறி பயணம் செய்வதற்கு அத்துணை சுதந்திரத்தைக் கையில் கொண்டுள்ள, இளைஞர்களும் இளைய முதியவர்களுமாகிய நீங்கள், பஹாய் செயலென்னும் களத்தினுள் "காற்றைப்போல தடுத்திட இயலாதவண்ணம்" விரைந்து செல்வீர்கள் என்று முறையாக எதிர்பார்ப்பது நியாயமானதுதானே?"[53]**

உலக முழுவதிலுமுள்ள பஹாய் இளைஞர்களின் வாழ்வில் நிகழ்ந்த முக்கியச் சம்பவங்களைப் பற்றிச் சிந்திப்பதற்காக வாய்ப்பு வழங்கப்பட்டால், அது ஒவ்வொரு இளையத் தலைமுறையினரையும்

ஒரு சாதனைப் புரிய வேண்டும் எனும் உணர்ச்சியைப் பெற உதவிடும். பஹாய் பாலர் வகுப்புகளிலும், வீ ட்டிலும் சொல்லப்படும் கதைகளின் வாயிலாகக், குழந்தைப் பருவத்திலேயே இந்த அற்புதமான வீரர்களோடு ஒரு நெருக்கமான பந்தம் ஏற்படுத்தப்படக் கூடும். ஆனால், இந்தத் தேவையை இளமைப் பருவத்திலும், நிச்சயமாகவே, வாலிபப் பருவம் முழுவதிலும், பூர்த்தி செய்வதற்கு, மேலும் ஆழமான முயற்சி தேவைப்படும். ஒரு சில மற்றதைவிட உணர்ச்சியைத் தூண்டக் கூடியதாக இருக்கும், மற்றும் கவனமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட எடுத்துக்காட்டுகள், இளைஞர்கள் தங்களுள் முன்மாதிரியாகக் கொண்டு காட்டவேண்டியத் துணிவு, உறுதிப்பாடு, உத்வேகம், தன்னலங்கருதாமை ஆகிய குணங்களை முன்மாதிரிப்படுத்தக்கூடும்.

1. வாலிபர்களும் இளைஞர்களும் சிந்தித்துப் பார்க்க வேண்டிய, சமயத்தின் ஆரம்பகால வரலாற்றிலோ அல்லது அண்மையக் காலத்தில் நிகழ்ந்தவற்றில் இருந்தோ, சில சம்பவங்களைத் தேர்ந்தெடுக்கவும். ______________________________________________________________

______________________________________________________________

______________________________________________________________

______________________________________________________________

2. இந்தக் குறிப்பிட்டச் சம்பவங்களை நீங்கள் தேர்ந்தெடுத்ததற்கான காரணத்தைக் குறிப்பிடவும்.

______________________________________________________________

______________________________________________________________

______________________________________________________________

______________________________________________________________

## பகுதி 21

மேலே எடுத்துக்காட்டப்பட்டுள்ள சிறிய அளவிலான மாதிரி வாசகக் குறிப்புகளிலிருந்துகூட, சமயத்தின் ஆரம்பக்கால போராளிகளும் அவர்களைப் பின்தொடர்ந்த வீர ஆன்மாக்களும் ஒரு குறிக்கோளுணர்வின் வாயிலாக தனிச்சிறப்புற்றிருந்தனர் என்பதைக் காணமுடிகிறது. அவர்கள் வாழ்ந்துகொண்டிருந்த வரலாற்றுச் சிறப்புமிக்க காலம் பற்றியும், அதே வேளை மானிடம் ஏற்படுத்திக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்ட மாற்றங்களின் பரும அளவு குறித்த அகக்காட்சி பற்றியும் அவர்கள் நன்கு புரிந்திருந்தனர் என்பதும் தெளிவாகவே புனலாகின்றது. தெய்வீகச் செய்தியைப் பரப்புவதற்காகவே அர்ப்பணிக்கப்பட்ட வாழ்வின் வாயிலாக இவ்வித உணர்வு வெளிப்பாடு கண்டது என்பதும் தெளிவு. இருப்பினும், அவர்கள் வெளிப்படுத்திய வீரச்செயல்கள் குறித்தும், அவர்களில் பலர் செய்திட்ட இறுதித் தியாகம் குறித்தும் நாம் ஆழ்ந்து சிந்திக்கும் போது இத்தகைய பண்பியல்களால் மட்டுமே இப்புனித ஆன்மாக்கள் தனிச்சிறப்புற்றிருந்தனர் என்பதை நம்மால் நம்பமுடியவில்லை. அவர்களின் வாழ்க்கைகளை பெரும்பாலும் தனிச்சிறப்பித்துக் காண்பித்தது எது? அவர்களை ஆட்டுவித்த உணர்வெழுச்சி எது, அத்தகைய தன்னலமற்ற சேவையின் உச்சங்களை அடைந்திட அவர்களை உந்தித்தள்ளியது எது? அவர்களின் இதயங்களில் கொழுந்துவிட்டு எரிந்தது கடவுள் மீதான அன்பல்லவா? அவர்கள் தங்கள் அன்பரின் பேரழகில் போதைக்கொண்டிருந்தனர் அல்லவா?

அழகின்பால் அவர்களின் ஈர்ப்புணர்வைப் பேணாமல், உன்மையான அறிவெனும் மெனோடைகளில் பங்கேற்கும் அவர்களது உள்ளார்ந்த ஆவலை பேணாமல், அவர்கள் தங்கள் படைத்தவரின் மீது ஓர் அனுக்கமான உறவு பூண்டிடும் முயற்சியை மேம்படுத்துவதற்கும் உதவாமல் அடுத்தத் தலைமுறை இளைஞர்கள் ஆன்மீக சக்திபெறுவதில் நமது பங்கை ஆற்றிட நாம் எவ்விதம் எதிர்பார்க்க முடியும்? இப்பயிற்சியை பின்வரும் திருவாசகங்களை ஆழச் சிந்திப்பதன் வழியாக முடித்திடுவோம்:

**“மெய் அன்பனும் அர்ப்பணிப்புமிக்க நண்பனும் அன்பரின் முன்னிலையை அடையும் போது, அன்புக்குரியவரின் பிரகாசமான அழகும், நேசிப்பவனின் நெஞ்சகத் தீயும் கொழுதுவிடும் ஒரு நெருப்பைத் தூண்டியும் மூடுதிரைகளையும் மேலுறைகளையும் எரித்திடவும் செய்யும். ஆம், நெஞ்சகத்திலிருந்து தோல் வரை அவன் கொண்டிருக்கும் அனைத்தும், அன்பரைத் தவிர எதுவுமே மிஞ்சியிறாதவாறு தீப்பற்றிக்கொள்ளும்.”[54]**

**“அன்பர்களே! நிச்சயம் அழியக் கூடிய அழகிற்காக நித்திய அழகினைத் துறந்திடாதீர்; புழுதி என்னும் இவ்வநித்திய உலகின்மீது பாசங் கொண்டிடாதீர்.”[55]**

**“எமது திருவெளிப்பாட்டை அங்கீகரித்தவனும், எமது அறிவெனும் சமுத்திரத்திலிருந்துப் பருகியவனும், எமது அன்பெனும் வான்மண்டலத்தில் உயரப்பறந்தவனும், எம்மைத் தவிர அனைத்தையும் விட்டொழித்தவனும், எமது அற்புத வாய்மொழிகள் எனும் அரசிலிருந்து கீழனுப்பிவைக்கப்பட்டவற்றை இருகப்பற்றியவனுமே உண்மையில் கற்றவனாவான் என்பதை அறிவாயாக. மெய்யாகவே, அவன் மனுக்குலத்திற்கு ஒரு கண் போன்றவனும், படைப்பினம் அனைத்தின் உடல்கூற்றிற்கு உயிராவி போன்றவனும் ஆவான். அவனுக்கு அறிவொளியூ ட்டியும், அவரது மாபெரும் மற்றும் ஆற்றல்மிகு சமயத்திற்குச் சேவைச் செய்திட அவன் எழுவதற்குக் காரணமானவருமான சர்வ-கருணைமிக்கவர் மகிமைப்படுத்தப்படுவாராக. மெய்யாகவே, சர்வவல்லவர், வலிமைமிக்கவர் எனும் எமது திருநாமத்தின் பெயரால் எமது முத்திரையிடப்பட்ட மதுரசத்தைப் பருகிய இத்தகைய மனிதன், விண்ணவத் திருக்கூட்டத்தினராலும், மேதகைமை எனும் கூடாரத்தினுள் வாசம் செய்பவர்களாலும் ஆசிர்வதிக்கப்படுவான்.”[56]**

**“இறைவனின் தோழர்களே! இறைவனின் சமயத்தின்பால் ஓர் ஆன்மா தனது முகத்தை முழுமையாக திருப்பி, அவனது குறிக்கோள் கடவுளின் வார்த்தையின் ஆழ்பதிப்பின் மீது மையப்படுத்தப்பட்டு, மிகுந்த விசுவாசத்துடன் அவன் சமயத்திற்காக இரவுபகலாக சேவைச் செய்து, அவனது பழக்கவழக்கங்களிலும் செயல்களிலும் தன்னலத்தின் வாடை நுகரப்படாமலும், அவனது தனித்தன்மையில் கர்வம் அல்லது தப்பெண்ணத்தின் அடையாளமேதும் இல்லாதிருக்கவும், பார்க்கப்போனால் அவன் கடவுளின் அன்பெனும் கானகத்தில் அலைந்துத்திரிபவனாகவும், இறைவனின் அறிவெனும் மதுரசத்தால் போதைகொண்ட ஒருவனாகவும், கடவுளின் நறுமணங்களை பரப்புவதிலேயே முழுமையாக ஈடுபட்டவனாகவும், கடவுளின் அரசின் அடையாளங்கள்பால் ஈர்க்கப்பட்டவனாகவும் இருக்கக் காண்பீர்களாயின், அவன் அருளரசின் ஆற்றல்களால் உறுதிப்படுத்தப்பட்டும் வலிமைமிகு சுவர்க்கத்தினால் துணைசெய்யட்டும் உள்ளான் என்பதை உறுதியாக அறிவீர்களாக; மற்றும் அவன் காலை நட்சத்திரம் போல் பெரும் பிரகாசத்துடனும் சுடரொளியுடனும் நிலையான வெகுமதியெனும் தொடுவானத்தில் ஒளிவிட்டும், சுடர்விடவும் செய்வான். ஆனால், அவன்**

தாபம், பேராசை, படாடோபம் அல்லது தன்னலம் ஆகியவற்றின் சிறு அறுகுறிகளாலும் தரங்குறைவானேயானால், அனைத்து முயற்சிகளின் முடிவுகளும் பயனற்றவையாகும் என்பது உறுதி, மற்றும் அவன் பேரிழப்புக்கு உட்பட்டவனாகவும், நம்பிக்கையற்றவனாகவும் ஆவான்."[57]

"அருளரசின் அரியனையின்பால் இறையருளின் திருக்கரம் உம்மை ஈர்த்துள்ளது, மற்றும் நீர் மேலுறைகளையும் மூடுதிரைகளையும் தெய்வீக அழகின் வதனத்திலிருந்து அகற்றி, உமது அகக்கண்களின் வாயிலாக சுடரொளிமிகு திருமுகத்தைக் கண்டும், இத்தெய்வீகச் சமயத்தில் தூய்மை மற்றும் புனிதத்தன்மையின் மர்மங்கள் குறித்து விழிப்புணர்வு அடையுமளவிற்குத் தெய்வீக நற்செய்திகள் உமக்குள் களிப்புணர்வும் மகிழ்ச்சியையும் உருவாக்கியுள்ளன!

"இப்போது, கடவுளின் அன்பு பெருக்கெடுத்தோடும் இதயத்துடன், முழு களிப்புணர்வுடன் கடவுளை இறைஞ்சி, இவ்வழிகாட்டலுக்கும் இவ்வுயரிய பரிசிற்கும் கடவுளுக்கு நன்றி நவிலுங்கள். மெய்யாகவே, அருட்பாதையில் உங்கள் பாதங்கள் உறுதிப்படும்போது உமது பிரபுவின் பரிசுகளின் தலைப்பாதுகாப்புக்கள், உங்களை எல்லா பக்கங்களிலிருந்தும் சூழ்ந்து முன்செல்லும்."[58]

"என் தெய்வமே! என் தெய்வமே! உமது சேவகனான, இவன், உம்மைநோக்கி முன்னேறி வந்துள்ளான், உமது கொடைகளை எதிர்ப்பார்த்தும், உமது அருளரசில் நம்பிக்கை வைத்தும், உமது பரிசெனும் மதுவினால் போதைகொண்டும், உமது அன்பெனும் பாலையில், உமது சேவை எனும் பாதையில் நடந்தவாறு, அவன் தாபத்துடன் அலைந்துத்திரிகின்றான். என் கடவுளே! உம்மீதான அவனது வாஞ்சையின் ஆர்வத்தையும், அவன் உம்மைப் போற்றுவதின் நிலைத்தன்மையையும், உம்மீதான அவனது ஆன்பின் ஆழத்தையும் அதிகரிப்பீராக

"மெய்யாகவே, நீரே அதிகொடையாளியும், அருள்மிகு பிரபுவும் ஆவீர். மன்னிப்பவரும், கருணையாளருமான கடவுள் உம்மையன்றி வேறு கடவுள் இல்லை."[59]

## குறிப்பீடுகள்


1. 'Abdu'l-Bahá, in *Bahá'í Prayers and Tablets for the Young* (Wilmette: Bahá'í Publishing Trust, 1978), no. 38, p. 30.
2. 'Abdu'l-Bahá, in *Bahá'í Prayers: A Selection of Prayers Revealed by Bahá'u'lláh, the Báb, and 'Abdu'l-Bahá* (Wilmette: Bahá'í Publishing Trust, 2002, 2017 printing), pp. 246–47.
3. *Selections from the Writings of 'Abdu'l-Bahá* (Wilmette: Bahá'í Publishing Trust, 2010, 2015 printing), no. 225.9, p. 394.
4. 'Abdu'l-Bahá, cited in a letter dated 11 April 1985 written on behalf of the Universal House of Justice to an individual, published in *Messages from the Universal House of Justice, 1963–1986: The Third Epoch of the Formative Age* (Wilmette: Bahá'í Publishing Trust, 1996), no. 426.3a, p. 665.
5. 'Abdu'l-Bahá, in *Bahá'í Prayers,* p. 248.
6. Bahá'u'lláh, cited in the Riḍván 1982 message to the Bahá'ís of the world, published in *Messages from the Universal House of Justice, 1963–1986*, no. 321.5a, p. 538.
7. From a message dated 25 May 1975 written by the Universal House of Justice to all National Spiritual Assemblies, ibid., no. 162.34, p. 310.
8. From a message dated 1 July 2013 written to the participants in the forthcoming 114 youth conferences throughout the world, published in *Framework for Action: Selected Messages of the Universal House of Justice and Supplementary Material, 2006–2016* (West Palm Beach: Palabra Publications, 2017), no. 27.3, p. 176.
9. From a message dated 10 June 1966 written to the Bahá'í youth in every land, published in *Messages from the Universal House of Justice, 1963–1986*, no. 37.2, p. 92.
10. From a letter dated 23 February 1995 written on behalf of the Universal House of Justice to selected National Spiritual Assemblies.
11. From a message dated 29 December 2015 written to the Conference of the Continental Boards of Counsellors, published in *Framework for Action*, no. 35.39, p. 226.
12. From a letter dated 23 April 2013 written on behalf of the Universal House of Justice to a National Spiritual Assembly, ibid., no. 52.3, p. 296.
13. From a letter dated 19 April 2013 written on behalf of the Universal House of Justice to a small group of individuals, ibid., no. 51.9, p. 293.
14. From a message dated 12 December 2011 written by the Universal House of Justice to all National Spiritual Assemblies, ibid., no. 20.21, p. 138.
15. *Gleanings from the Writings of Bahá'u'lláh* (Wilmette: Bahá'í Publishing, 2005), CXXXVII, par. 4, p. 338.
16. From a letter dated 8 December 1923 written by Shoghi Effendi to a Bahá'í community, in "Trustworthiness: A Cardinal Bahá'í Virtue", compiled by the Research Department of the Universal House of Justice, published in *The Compilation of Compilations* (Maryborough: Bahá'í Publications Australia, 1991), vol. 2, no. 2075, p. 345.
17. *'Abdu'l-Bahá in London: Addresses and Notes of Conversations* (London: Bahá'í Publishing Trust, 1987), p. 66.
18. *Gleanings from the Writings of Bahá'u'lláh,* XXIX, par. 1, p. 78.
19. Bahá'u'lláh, in "Trustworthiness", published in *The Compilation of Compilations,* vol. 2, no. 2032, p. 332.
20. 'Abdu'l-Bahá, *The Secret of Divine Civilization* (Wilmette: Bahá'í Publishing, 2007), par. 5, p. 5.

21. Ibid., par. 6, p. 6.
22. *Gleanings from the Writings of Bahá'u'lláh,* XLIII, par. 4, p. 105.
23. Ibid., CXXVI, par. 2, p. 306.
24. Bahá'u'lláh, cited by Shoghi Effendi, *The Advent of Divine Justice* (Wilmette: Bahá'í Publishing Trust, 2006), par. 48, p. 47.
25. *Gleanings from the Writings of Bahá'u'lláh*, LX, par. 3, p. 133.
26. Bahá'u'lláh, cited by Shoghi Effendi, *The Advent of Divine Justice,* par. 39, p. 34.
27. Ibid., par. 39, pp. 34–35.
28. *Tablets of Abdul-Baha Abbas* (New York: Bahá'í Publishing Committee, 1915, 1940 printing), vol. 2, p. 436. (authorized English translation)
29. *Gleanings from the Writings of Bahá'u'lláh,* CXLIII, par. 3, p. 354.
30. Ibid., LXX, par. 1, p. 154.
31. 'Abdu'l-Bahá, *Some Answered Questions* (Wilmette: Bahá'í Publishing, 2014, 2016 printing), no. 10.8, p. 58.
32. *The Promulgation of Universal Peace: Talks Delivered by 'Abdu'l-Bahá during His Visit to the United States and Canada in 1912* (Wilmette: Bahá'í Publishing, 2012), par. 4, p. 618.
33. From a talk given by 'Abdu'l-Bahá on 29 August 1912, ibid., par. 4, p. 405.
34. Bahá'u'lláh, *The Hidden Words* (Wilmette: Bahá'í Publishing Trust, 2003, 2012 printing), Persian no. 6, p. 24.
35. *Will and Testament of 'Abdu'l-Bahá* (Wilmette: Bahá'í Publishing Trust, 1944, 2013 printing), pp. 26–27.
36. *The Hidden Words,* Persian no. 49, p. 39.
37. *Selections from the Writings of 'Abdu'l-Bahá,* no. 10.2, pp. 41–42.
38. The Báb, cited in *The Dawn-Breakers: Nabíl's Narrative of the Early Days of the Bahá'í Revelation* (Wilmette: Bahá'í Publishing Trust, 1932, 2018 printing), p. 93.
39. *Will and Testament of 'Abdu'l-Bahá,* pp. 27–28.
40. From a talk given on 17 November 1911, published in *Paris Talks: Addresses Given by 'Abdu'l-Bahá in 1911* (Wilmette: Bahá'í Publishing, 2006, 2016 printing), no. 49.17, pp. 199–200.
41. From a talk given by 'Abdu'l-Bahá on 1 September 1912, published in *The Promulgation of Universal Peace*, par. 7, p. 417.
42. *Selections from the Writings of 'Abdu'l-Bahá*, no. 105, p. 186.
43. From a letter dated 17 February 1933 written on behalf of Shoghi Effendi to an individual, in *Social Action: A Compilation Prepared by the Research Department of the Universal House of Justice* (Wilmette: Bahá'í Publishing Trust, 2020), no. 90, p. 44.
44. From a message dated April 1955 written by Shoghi Effendi, published in *Messages to the Bahá'í World, 1950–1957* (Wilmette: Bahá'í Publishing Trust, 1971, 1999 printing), p. 76.
45. From a letter dated 4 May 1953 written by Shoghi Effendi, in ibid., p. 155.
46. From a message dated 1 July 2013 written by the Universal House of Justice to the participants in the forthcoming 114 youth conferences throughout the world, published in *Framework for Action*, no. 27.2, p. 175.
47. Ibid., no. 27.6, p. 177.
48. From a message dated 8 February 2013 written by the Universal House of Justice to the Bahá'ís of the world, ibid., no. 22.4, p. 147.
49. From a message dated 8 January 2000 written to the friends gathered at the youth congress in

Paraguay, published in *Turning Point: Selected Messages of the Universal House of Justice and Supplementary Material, 1996–2006* (West Palm Beach: Palabra Publications, 2006), no. 20.3–4, pp. 123–24.

50. Shoghi Effendi, *God Passes By* (Wilmette: Bahá'í Publishing Trust, 1974, 2010 printing), pp. 4–6.
51. From a message dated 1 July 2013 written by the Universal House of Justice to the participants in the forthcoming 114 youth conferences throughout the world, published in *Framework for Action*, no. 27.1, p. 175.
52. From a message dated 10 June 1966 written to the Bahá'í youth in every land, published in *Messages from the Universal House of Justice, 1963–1986*, no. 37.1, p. 92.
53. From a message dated 3 January 1984 written by the Universal House of Justice to the Bahá'í youth of the world, in ibid., no. 386, p. 616.
54. *The Call of the Divine Beloved: Selected Mystical Works of Bahá'u'lláh* (Haifa: Bahá'í World Centre, 2018), no. 2.76 p. 46.
55. *The Hidden Words,* Persian no. 14, p. 26.
56. *Tablets of Bahá'u'lláh Revealed after the Kitáb-i-Aqdas* (Wilmette: Bahá'í Publishing Trust, 1988, 2005 printing), no. 14.4, pp. 207–8.
57. *Selections from the Writings of 'Abdu'l-Bahá,* no. 35.7, pp. 103–4.
58. *Tablets of Abdul-Baha Abbas* (New York: Bahá'í Publishing Committee, 1909, 1930 printing), vol. 1, p. 182.
59. 'Abdu'l-Bahá, in *Bahá'í Prayers,* p. 173.



# வாக்குறுதிக்கான ஒரு வயது

**நோக்கம்**

பன்னிரண்டு முதல் பதினைந்து வயதுகளுக்கு இடையே உள்ள இளைய மக்களின் அளப்பரிய ஆற்றல்களை ஆராய்வது மற்றும் அவர்களின் ஆன்மீக சக்தியளிப்புக்கு பொருத்தமான சூழலை அவர்களுக்கு வழங்குவதன் அவசியத்தை மதித்துணர்வது

## பகுதி 1

கடந்தப் பிரிவில், இளைஞர்களை தனித்துவப்படுத்தும் சில குணவியல்புகளை நாம் கலந்துரையாடினோம். இந்த பிரிவின் நோக்கம், இளைய இளைஞர்களின் அளவில்லா உள்ளார்ந்த ஆற்றல்களை பற்றியும் அவர்களின் வாழ்வுகளை வடிவமைக்கும் விசைகளை பற்றியும் பிரதிபலிப்பதாகும். இங்கு நீங்கள் ஆராய போகும் கருத்தாக்கங்கள் பல பத்தாண்டுகளாக படிப்படியாக சேகரிக்கப்பட்ட அனுபவங்களாகும். பன்னி**ர**ண்டு முதல் பதினைந்து வயதுகள் வரை உள்ளவர்களின் விசேஷ தேவைகளை பல காலமாக பஹாய் ச**மு**தாயம் அங்கீகரித்து வந்துள்ளது. இந்த வயது குழுவின் உறுப்பினர்களுக்கு கல்வியளிக்கும் ஆரம்ப முயற்சிகள் முதல் அதனை தொடர்ந்து அவர்களின் திறனாற்றல்களை எவ்வாறு கட்டவிழ்ப்பது என்பதைக் கற்றுக் கொள்வதற்கும் அவர்களின் ஆர்பரிக்கும் சக்திகளை கால்வாயிடுவதற்கும் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளின் மூலம், இந்த நூலில் நாம் ஆராயும் இளைய இளைஞர் ஆன்மீக சக்தியளிப்பு திட்டம் படிப்படியாக வெளிவந்தது. நீங்கள் இளையவர்களாக இருந்த போது நீங்களே இதில் பங்கெடுத்துக்கொண்டதன் மூலமாகவோ அல்லது உங்களின் நண்பர்களில் ஒருவர் உங்களுடைய கிராமம் அல்லது அண்டைபுரத்தில் இந்த நடவடிக்கையை மேற்கொண்ட போது அவர்களுடன் பனிப்புரிந்ததன் மூலமாகவோ, ஏற்கெனவே இந்த திட்டத்தைப் பற்றி நீங்கள் தெரிந்துவைத்திருக்கக் கூடும். நீங்கள் இப்போது படிக்கும் இந்த உபகரணத்தின் நோக்கம் என்னவெனில், ஆரம்பத்தில் மூன்று வருடங்களை நீங்கள் அர்பணிக்க உதவி, பிறகு அதற்கும் மேல், இந்த போற்றத்தக்க சேவைக் களத்தில் உங்களுக்கு உதவுவதேயாகும், அதனால் வாக்குறுதிகள் நிரம்பி இருக்கும் இந்த வயது குழுவில் உள்ள உறுப்பினர்களுக்கு அவர்களின் வாழ்வின் இக்கட்டான கட்டத்தைக் கடந்து செல்ல உங்களால் உதவ முடியும். நீங்கள் இளம் வயதினராக இருந்தபோது அதில் நீங்களே பங்கேற்றிருந்து உங்கள் நண்பர்களில் ஒருவருடன் இளைய இளைஞர்கள் குழுவுடன் சேர்ந்து வேலை செய்திருக்கலாம் அல்லது மற்றவர்களுடன் சேர்ந்து அதன் அணுகுமுறைகள் மற்றும் கருப்பொருள்கள் பற்றி விவாதித்திட உங்கள் கிராமம் அல்லது அண்டைப்புறத்தில் உள்ள பெற்றோர்களைச் சென்று சந்தித்ததன் மூலமாக இந்தத் திட்டத்தைப் பற்றி நீங்கள் நன்கு அறிந்திருக்கலாம். நீங்கள் இப்போது படித்துக்கொண்டிருக்கும் பாடமானது, ஆரம்பத்தில் மூன்று வருடங்களை ஒருவேளை இன்னும் கூடுதலாக இந்த மெச்சத்தக்க சேவைத்துறையில் அர்ப்பணிக்க உங்களுக்கு உதவும் நோக்கத்துடன் உள்ளது, அதன்மூலம் வாக்குறுதிகள் நிறைந்த சமவயதுடைய ஒரு குழுவின் பல உறுப்பினர்களை அவர்களின் வாழ்க்கையின் ஒரு முக்கியமான கட்டத்தில் வழிநடத்திட உங்களுக்கு ஏதுவாகிறது.

இளைய இளைஞர்களின் ஆன்மீக சக்தியளிப்பு திட்டத்தைக் குறித்து, உலக நீதி மன்றம் எழுதுவது:

> **“இளைய இளைஞர்களுக்கான ஆன்மீக சக்தியளிப்பிற்க்கான கல்வித் திட்டம் துரிதமாக பரவுதலானது, பஹாய் சமூகத்தினுடைய கலாச்சார முன்னேற்றத்தின் மேலுமொரு வெளிப்பாடாகும். உடல் ரீதியாகவும், உணர்ச்சி ரீதியாகவும் கொந்தளிப்புக் கடலில் மூழ்கிய நிலையில் இந்த இளைய வயதினர் பிரச்சனைகளை உருவாக்குபவர்கள் எனும் பொதுவான கருத்து உலகம் முழுவதும் நிலவி வரும் அதே வேளையில், பஹாய் சமூகம் அந்த வயதினரை வருணிப்பதிலும், அணுகுமுறைகளை விவரிப்பதிலும் பயன்படுத்தும் மொழியில் அந்த உலகளாவிய கருத்துக்கு எதிர் திசையில் அச்சமூகம் செல்கின்றது. அதாவது, அவர்களிடத்தில் அந்த கொந்தளிப்பு உணர்வுகளுக்குப் பதிலாக, பொதுநலப் பண்புகளையும், நீதிக்கான ஒரு சீரிய உணர்வையும், இப்பிரபஞ்சத்தைப் பற்றி நன்கு**

**தெரிந்து கொள்ள வேண்டும் எனும் ஆர்வத்தையும், ஒரு மேம்பட்ட உலகை உருவாக்குவதில் பங்களிப்புச் செய்வதில் ஆர்வம் உள்ளவர்களாகவும் பஹாய் சமூகம் அவர்களைக் காண்கின்றது. இளைய இளைஞர் பயிற்சிக் குழுவில் உலகெங்கிலும் பங்கெடுத்துக் கொள்ளும் அவர்கள் தங்கள் எண்ணங்களுக்குக் குரல் கொடுக்கின்றனர் என்பதை எடுத்துக் காட்டும் அறிகுறிகள், அந்த கல்வித் திட்டத்தினுடைய இலட்சியக் காட்சியின் செல்லுபடியாகும் தன்மைக்குச் சாட்சியமளிக்கின்றன. சமுதாயத்தில் இன்று இயங்கிக் கொண்டிருக்கும் ஆக்கம் மற்றும் அழிவு எனும் ஆற்றல்களை பகுப்பாய்வு செய்திட உதவுவதையும், அவை தங்களுடைய எண்ணங்களிலும், செயல்களிலும் செலுத்தும் தாக்கங்களின் அடையாளங்களை கண்டு கொள்ளச் செய்து, தங்களுடைய கூருணர்வை செம்மைப்படுத்தி, தங்களுடைய கருத்துகளை வெளிப்படுத்தும் ஆற்றல்களை அதிகரிக்கச் செய்து, தங்களுடைய வாழ்நாள் முழுவதிலும் தங்களுக்கு உதவவல்ல தார்மீகக் கட்டமைப்பை அதிகரித்த நிலையில் வழங்குவதையும் இந்தக் கல்வித் திட்டம் உள்ளடக்கியிருக்கின்றது. அறிவார்ந்த, ஆன்மீக மற்றும் பௌதிக சக்திகள் கைவசம் பரவலாகக் கிடைத்திடும் ஒரு காலத்தில் வாழ்ந்து வருகின்ற அந்த இளைய இளைஞர்களுக்கு, உயரிய மானிடர்கள் எனும் அவர்கள் நிலையை அபகரிக்கக் கூடிய சக்திகளுக்கெதிராக போராடி பொதுநலத்திற்குப் பணியாற்றுவதற்கு தேவையான கருவிகள் அக்கல்வித் திட்டத்தில் அவர்களுக்கு வழங்கப்படுகின்றன.“[1]**

மேற்கண்ட பத்தியில் உலக நீதி மன்றத்தால் குறிப்பிடப்பட்டுள்ள பல கருத்தாக்கங்களும் சிந்தனைகளும் தான் இந்த பிரிவின் கவனமாகும், இதனை நீங்கள் படிக்க படிக்க, அவையனைத்தும் உங்களுடைய மனதில் மேலும் தெளிவடையும். இப்போதைக்கு, கீழுள்ள கேள்விகளுக்கு நீங்கள் பதிலளிக்க விரும்பலாம்.

1. இளைய இளைஞர்கள் எந்த வயதினரைச் சேர்ந்தவர்கள் என்பதைப் பற்றிய உலகளாவிய போக்குகள் என்ன பிம்பத்தை முன்வைக்கின்றன? ____________________________________
______________________________________________________________________________
______________________________________________________________________________

2. மாறாக, பஹாய் சமூகமானது இந்த வயதினரிடம் என்ன பார்க்கிறது? ____________________
______________________________________________________________________________
______________________________________________________________________________
______________________________________________________________________________

3. யதார்த்தத்தை ஆராய்வதில் இளைய இளைஞர்களின் விரிவடைந்து வரும் உள்ளுணர்வினை ஈடுபடுத்துவதன் மூலம், அவர்களின் ஆன்மீக சக்தியூட்டும் திட்டம் என்ன செய்ய உதவுகிறது? _____________________________________________________________
______________________________________________________________________________
______________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

4. திட்டத்தின் மூலம் இளைய இளைஞர்கள் பெறும் **கருவிகள்** அவர்களுக்கு என்ன செய்ய உதவுகின்றன? ________________________________________________________

   ____________________________________________________________________________

5. பன்னிரண்டு முதல் பதினைந்து வயதுக்குட்பட்ட இளைஞர்கள் ஏன் இத்தகைய சிறப்புக் குழுவை பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள் என்று நினைக்கிறீர்கள்? ______________________

   ____________________________________________________________________________

   ____________________________________________________________________________

   ____________________________________________________________________________

6. மேற்கூறியவற்றின் அடிப்படையில், உங்களுக்கு ஏற்கனவே தெரிந்த சில இளைய இளைஞர்களை நினைவு கூர்ந்து, இந்த இளைய தலைமுறையினரின் சில தனித்துவமான தேவைகளை உங்களால் அடையாளம் காண முடியுமா? ________________________________

   ____________________________________________________________________________

   ____________________________________________________________________________

   ____________________________________________________________________________

7. இந்தக் குறிப்பிட்ட சேவைக் களத்தில் ஈடுபட உங்களைத் தூண்டியது எனது? ______________

   ____________________________________________________________________________

   ____________________________________________________________________________

   ____________________________________________________________________________

   ____________________________________________________________________________

   ____________________________________________________________________________

## பகுதி 2

பதினைந்து வயதின் போது, ஒரு தனிமனிதன் முதிர்ச்சியின் ஆரம்பத்தை அடைகிறான் என பஹாவுல்லா நம்மிடம் கூறுகின்றார், அப்பொழுது, கட்டாயப் பிரார்த்தனை மற்றும் உண்ணா நோன்புப் போன்ற சட்டங்கள் கட்டாயக் கடமைகளாக ஆகிவிடும். இந்த கண்ணோட்டத்தில் பார்க்கும்போது, அந்த வயதிற்கு முந்திய வருடங்கள் குறிப்பிடத்தக்க சிறப்பைப் பெறுகின்றன. இந்த கால கட்டத்தில் தான் குழந்தைப் பருவத்திலிருந்து இளமை பருவத்திற்குச் செல்லும் நிலைமாற்றம் நிகழ்கின்றது. உடல், அறிவு, உணர்ச்சி -ஆகிய நிலைமாற்றங்களுடன் தொடர்புடைய திடீர் மற்றும் துரிதமான மாற்றங்கள், பல வழிகளில் நடத்தையின் மீது விளைவுகளை ஏற்படுத்துகின்றது.

பன்னிரண்டு வயதடையும் போது, நிலைமாற்றங்களின் அறிகுறிகள் தோன்ற ஆரம்பிக்கின்றது. பல வாலிபர்கள் அடுத்த மூன்று அல்லது நான்கு வருடங்களில் தங்கள் வாழ்வின் மற்ற அனைத்து கட்டங்களைவிட மேலும் அதிகமான அளவிற்கு உடல் ரீதியாக வளர்ந்திடுவார்கள். அவர்கள் உயரமாக வளர்வார்கள், உடல் எடை கூடும் மற்றும் ஹார்மோன்களில் மாற்றத்தையும் அனுபவிப்பார்கள். ஆண்கள் உரக்கமான குரலைப் பெறுவார்கள், மற்றும் பெண்கள் ஒரு இளம் பெண்ணின் உடல் உருவை அடையத் துவங்கிடுவார்கள். இருவருமே பருவமடைய தொடங்கி, குழந்தைகளை ஈன்றெடுக்கக்கூடிய சரீரத் தன்மைகளைப் பெற்றிடுவார்கள்.

இந்தக் கால கட்டத்தில் ஒருவர் அனுபவிக்கும் உடல் மற்றும் உணர்ச்சி மாற்றங்களானது ஒன்றுடன் ஒன்று தொடர்புடையதாகும். புதிய சக்திகளின் தோற்றத்தில் ஒரு உற்சாகம் மற்றும் அதனை பயன்படுத்தும் ஆர்வம் ஆகியவற்றுடன் சேர்ந்து தடுமாற்றமும், கூருணர்வும், மற்றும் அச்ச உணர்ச்சிகள் ஆகியவையும் இருக்கும். இந்த உணர்ச்சிகள் ஒருவரின் நடத்தையில் முரண்பாடுகளை ஏற்படுத்திடக் கூடும். ஒருவர் வெட்கப் படுபவராக தெரியலாம், ஆனால் அதே சமயம் சகஜமாக பழகுபவராக இருக்கவும் கூடும்; தான் தனியாக இருக்க விரும்புவதாக கூறலாம், ஆனால் அதே சமயம் தன் மீது கவனம் ஈர்க்கப்படுவதை வரவேற்பார்; சில சூழ்நிலைகளில் நம்பமுடியாத துணிவைக் காட்டக்கூடும் மற்றும் அதே வேளையில் மற்ற சூழ்நிலைகளில் அச்சத்தைக் காட்டிடுவார். ஒருவரின் சொந்த திறமைகள் மற்றும் ஆற்றல்கள் குறித்த அதிகரிக்கும் அக்கறையும், அதே போல உலகில் ஒருவரின் இடத்தை பற்றிய, குறிப்பாக தனது சகாக்கள் மற்றும் முதியவர்களின் உறவுமுறையின் பொருத்தத்தில், அதிகரிக்கும் விழிப்புனர்வு படிப்படியாக தன்னையே வெளிப்படுத்தும். மற்றவர்கள் அவரது தோற்றத்தைக் காணும் விதம், அவரது கருத்துகளின்பால் காட்டும் பிரதிச் செயல்கள் ஆகியவை ஒரு முக்கியத்துவத்தைப் பெற்றிடும்.

நாம் பதினைந்து வயதை அடைந்திடுவதற்கு முன் உள்ள சில ஆண்டுகளின் போதுதான், தனி மனித மற்றும் கூட்டு வாழ்வைப் பற்றிய அடிப்படைக் கருத்தாக்கங்கள் நமது மனதில் உருவாக்கப் படும். ஆய்வு செய்யும் நமது சக்திகள் மிகவும் வலுவடையும், நமக்கு இதற்கு முன் கற்றுத்தரப்பட்ட பலவற்றைக் குறித்து கேள்விக் கேட்கவும், மற்றும் இதற்கு முன் கண்டுகொள்ளாமல் விடப்பட்ட நம்மைச் சுற்றியுள்ள முரண்பாடுகளை கண்டுகொள்ளவும் துவங்கிடுவோம். இதற்கு முன் இருந்தது போல், முதியோர்களினால் நிர்ணயிக்கப்பட்ட தரநெறிகளை நாம் தன்னிச்சையாக பின்பற்ற விரும்புவதில்லை. இந்த நிலைமாற்றக் காலத்தில், நாம் கேள்விகளுக்கு பதில்களைத் தொடர்ந்தாற்போல் தேடிடுவோம், பல வேளைகளில் தத்துவங்கள் குறித்த கேள்விகளும் இதிலடங்கும், ஒரு புதிய உணர்வு நிலை வேகமாக வளர்ந்திடும்.

இந்த மலர்ந்திடும் சக்திகளைப் பயனுள்ள வகையில் அமல்படுத்திக் கொள்ள இளையோருக்கு உதவிட வேண்டுமென்றால், ஒரு புறம் குழந்தைப் பருவத்தை நீடிக்கச் செய்திடும் வகையில் அவர்களைக் கையாளுவதைத் தவிர்ப்பதும் மறுபுறம் பல அம்சங்களில் மேலோட்டமாக இருக்கும் முதிய பருவத்தின் ஒரு மாதிரியை பிரதிபலிக்க அவர்களை உற்சாகப்படுத்துவதை தவிர்ப்பதும் அவசியமாகும், இவ்வாறான முறைகள் தான், துரதிஷ்டவசமாக, மென்மேலும் அதிகமான சமூகங்களில் வேரூன்றிக் கொண்டு வருகிறது. அப்துல் பஹா குறிப்பிடுவது:

> **“சில காலத்திற்குப் பிறகு அவன் இளமைப் பருவத்திற்குள் நுழைகின்றான், அப்பருவத்தில், தனது கடந்த நிலைகளும் தேவைகளும், தனது நிலையின் மேம்பாட்டுக்கு ஏற்புடைய புதியத்**

**தேவைகளினால் தள்ளிவைக்கப் படுகின்றது. அவனது அவதானிக்கும் தன்மைகள் விசாலமாக்கப் பட்டு ஆழப் படுத்தப்படுகிறது; அவனது அறிவுத் திறன்கள், பயிற்றுவிக்கப் பட்டு விழிப்பூட்டப்படுகிறது; குழந்தைப் பருவத்தின் கட்டுப்பாடுகளும் சூழ்நிலைகளும் இனி அவனது சக்திகளையும் சாதனைகளையும் கட்டுப்படுத்துவதில்லை."[2]**

குழந்தைப் பருவம் வாலிபப் பருவம் ஆகியவற்றிற்கிடையே உள்ள வேறுபாடுகளைப் பற்றிய உங்கள் புரிந்துணர்வை ஆழப்படுத்திட, பின்வரும் கோள்விகளைப் பற்றி உங்கள் குழுவில் கலந்துரையாடவும்:

1. அவதானிக்கும் தன்மைகள் விசாலமாக்கப் பட்டு ஆழப் படுத்தப்படுகிறது என்பதற்கு என்ன பொருள்? சில உதாரணங்களைக் கொண்டு உங்கள் கருத்துக்களை நீங்கள் விவரிக்க முடியுமா? ______________________________________________

   ______________________________________________

   ______________________________________________

   ______________________________________________

   ______________________________________________

2. ஓர் இளைய இளைஞரின் அறிவார்ந்த திறனாற்றல்கள், ஒரு குழந்தையின் அறிவார்ந்த திறனாற்றல்களை விட எவ்வாறு வேறுபடுகிறது? ______________________________________________

   ______________________________________________

   ______________________________________________

   ______________________________________________

   ______________________________________________

3. ஒரு இளைய இளைஞரின் சக்திகளை இனி கட்டுப்படுத்தாத, குழந்தைப் பருவத்தின் சில வரம்புகள் யாவை? ______________________________________________

   ______________________________________________

   ______________________________________________

   ______________________________________________

   ______________________________________________

## பகுதி 3

வாலிபப் பருவத்தின் உள்ளார்ந்த ஆற்றல்களை வெளிப்பட அனுமதித்திடும் வகையிலான கல்வியும் பராமரிப்பும், பதினைந்து வயதிற்கு முன்புள்ள காலத்தில், ஒவ்வொரு தனி மனிதனும் பெற்றுக் கொள்ள வெண்டும். அத்தகைய கல்வியின் தேவை எப்போது தெளிவாகிறது என்றால், பதினைந்து வயதை அடையும் போது, ஒரு தனி மனிதனின் பல சிந்தனை அமைப்பு முறைகளும்

நடத்தையும்  உறுதியாகி விடும் என்பதை அங்கீகரிக்கும் போது தான்.  அப்துல் பஹா கூறியுள்ளதைப் போல:

**“பருவமடையும் காலம் கடந்தவுடன் ஒரு தனி மனிதனுக்குக் கற்பிப்பதும் அவனது குணத்தை சீர்ப்படுத்துவதும் மிகச் சிரமமானதாகும்.  அந்த வயதை அடைந்த் பிறகு, அனுபவங்கள் காட்டியுள்ளதைப் போல, அவனது சில போக்கினை மாற்றி அமைப்பதற்கு ஒவ்வொரு முயற்சி மேற்கொள்ளப்பட்டாலும், அவை யாவும் எந்தப் பயனையும் தராது.  ஒருகால், அவன், இன்று சிறிதளவு முன்னேற்றம் காணலாம்;  ஆனால், சில நாட்கள் கடந்தபின் அவன் அதை மறந்து விடுவான், மற்றும் அவனது பழக்கப்பட்ட நிலைக்கும் வழக்கமான வழிக்கும் பின்னோக்கி திரும்பிடுவான்.”** [3]

“வளரிளம் பருவம்” என்ற வார்த்தை உங்களுக்கு மிகவும் பரிட்ச்சயமாக இருக்கும், உலகெங்கும் பன்னிரண்டு வயது முதல் பதினெட்டு வயது வரை உள்ள வாலிபர்களை குறிக்க இந்த வார்த்தை பயன்படுத்தப்படுகிரது. சில சமயங்களில் நாம் பொதுவாக “இளைய இளைஞர்கள்” என்று அழைக்கும் வயதினரை குறிக்க “ஆரம்ப வளரிளம் பருவம்” என்ற சொற்றொடர் பயன்படுத்தப்படுகிறது. இங்கே நாம் இந்த விஷயத்தில் அதிக கவனம் செலுத்தவில்லை, மேலும் பன்னிரெண்டு முதல் பதினைந்து வயதுக்குட்பட்ட இளைஞர்களைக் குறிக்கும் சொற்றொடர்களை ஒன்றுக்கொன்று மாற்றாகப் பயன்படுத்துகிறோம். வளரிளம் பருவத்தின் போது, கல்வியின் முக்கியத்துவத்தை பற்றி சிந்திப்பதற்காக, கீழ்வரும் வாக்கியங்கள் உண்மையா என்பதைத் தீர்மானிக்கவும்:

_______ குழந்தைப் பருவத்தின் போது, சரியான கல்வி கிடைக்காத போதிலும்,  வளரிளம் பருவத்தின் போது பொருத்தமான பரமாரிப்பானது முன்பு ஸ்தாபிக்கப்பட்ட விரும்பத்தகாத நடத்தை மாதிரிகளை  சரி செய்திட உதவும்.

_______ குழந்தைப் பருவத்தில் ஆன்மீகக் கல்வி மற்றும் தார்மீக கல்வி பெற்ற தனி  மனிதர்கள் மட்டும் தான் தங்களது முழு ஆற்றல்களை வளர்த்தக்கொள்ள இயலும்.

_______ வளரிளம் பருவத்தில் முறையான கவனமும் பாதுகாப்பும் இல்லாமல், தனது குழந்தைப் பருவம் முழுவதும் நன்னெறி மற்றும் ஆன்மீகக் கல்வியைப் பெற்றிருந்த போதிலும், ஒரு மனிதன் எளிதில் வழி தவறிச் செல்லக் கூடும்.

_______ வளரிளம் பருவத்தின் போதுதான், தனி மனிதர்கள் தங்களின் வாழ்வை சமூகத்தை முன்னேற்றும் விசைகளுடன் ஒத்திசைந்து வாழ ஆரம்பிப்பார்கள் அல்லது சமூகத்தை சிதைக்கும் சக்திகளால் அடித்து செல்ல தங்களை அனுமதித்துக் கொள்கிறார்கள்.

## பகுதி 4

வளரிளம் பருவத்தில் உயர்ந்தெழும் விழிப்புநிலையானது இரண்டு எதிரான திசைகளில் ஏதாவது ஒன்றிற்கு வழிநடத்தப் படலாம்: ஒன்று கடவுளின் திரு விருப்பத்திற்கு அடிபணிந்து மனித இனத்திற்குத்

தன்னையே அர்ப்பணம் செய்திடும் சேவையை நோக்கிப் போகலாம், அல்லது தன்னலம் மற்றும் தீவிர உணர்ச்சி என்னும் சிறையினுள் அகப்படுவதை நோக்கிப்_போகலாம். அப்துல் பஹா கூறுகின்றார்:

> **“ஒவ்வொரு படைப்பு பொருளின் தனித்தன்மை தெய்வீக விவேகத்தைச் சார்ந்திருக்கும், ஏனெனில், கடவுளின் படைப்பில் குறை எதுவுமில்லை. ஆயினும், தனிமனிதனின் மனோபாவத்திற்கு நிரந்தரத் தன்மை இல்லை. அது மனிதனின் சற்று மாறக்கூடிய பண்பாகும்; அதை ஏதேனும் ஒரு திசைக்குத் திருப்பிடக் கூடும். அவன் போற்றத்தக்க பண்புகளைப் பெற்றுக் கொண்டாள், அது மனிதனின் தனித் தன்மையை வலுபடுத்தி அவனது மறைந்திருக்கும் ஆற்றல்களை வெளிக்கொணர்ந்திடும்; ஆனால் அவன் குறைகளைப் பெற்றுவிட்டான் என்றால், அந்தத் தனித்தன்மையின் அழகும் எளிமையும் அவன் இழந்து மற்றும் இறைவனால் அருளப்பட்ட அதன் பண்புகள், தான் என்னும் அருவருக்கத் தக்க சூழ்நிலையில் அணைக்கப் படும்.”** [4]

ஒரு தீவிரமான பொருளாதாரக் கலாச்சாரம் வாழ்வின் ஒவ்வொரு அம்சத்தையும் தாக்கிக்கொண்டிருக்கும் ஒரு யுகத்தில் நாம் வாழ்ந்து வருகிறோம். எங்கும் பரவியுள்ள இந்த கலாச்சாரத்தின் ஆடையினுள் தைக்கப்பட்டுள்ள தன்னலத்தில் மிகுதியான ஈடுபாடானது, இளைய இளைஞர்களின் திறன்களை மேம்படுத்திட உதவிடும் வேளையில் நமக்கு எண்ணற்ற சவால்களை வழங்குகின்றது, இளைஞர்களின் ஆற்றல்களை வெளிப்படுத்தி அவர்களின் சக்திகளை பொது நலனின் பக்கம் திருப்பிட முயலும் உண்மையான முயற்சிகள் கூட, தனித்தன்மையை தனது மையத்தில் வைத்திருக்கும் உலகளாவியக் கருத்தின் எதிர்மறைத் தாக்குதலினால் பாதிக்கப்படுகின்றன. இந்தப் பிரச்சினை பலக்கியமிக்கது. இன்றைய உலக அமைப்பு முறையானது பயனுள்ள வாழ்வின் பால் இட்டு செல்வதற்கு தேவைப்படும் அரணிலிருந்து பெரும் எண்ணிக்கையிலான மனிதர்களை தடுத்து வைத்துள்ளது; ஆகையால், ஒருவரின் தார்மீக வலுவின் மீது தன்னம்பிக்கையென்பது ஆராயப்பட வேண்டிய விஷயமாகும். இது மக்களின் உயர் அழைப்பை மறைக்கிறது; ஆகையால், ஒருவரின் உன்னத நோக்கங்களை உணர்தல் என்பது ஓர் அத்தியாவசியக் கவலையாகும். அது பேரெண்ணிக்கையிலான மக்களை, ஆன்மாவின் வாழ்வைப் பற்றி மறக்கச் செய்கிறது; ஆகையால், ஒருவரின் உண்மையான ஆற்றல்களை கண்டுபிடிப்பதென்பது கவனத்தை வேண்டுகிறது. இருப்பினும், “தன்னலம்” என்பதன் மீது கவனம் செலுத்தும் பயிற்சித் திட்டங்கள் இந்தச் சூழ்நிலைக்கு மருந்தாக இருக்க வேண்டியத்தில்லை. பொதுவாக நடப்பது என்னவென்றால், சுய-உணர்வு பெருதல், சுய-கண்டுபிடிப்பு, மற்றும் சுய-மரியாதை என்கின்ற பேரில், அத்தகைய செயல்திட்டங்கள் ஒரு தனிநபரை உயர்த்தி பிடித்து அகந்தையை வலுப்படுத்துகின்றன. நமது சவாலானது இளைஞர்களின் ஆன்மீக உணர்வுகளை பேணுவதாகும், அதனால் அவர்களுடைய மென்மையான இதயங்கள் அதி பெரும் பேரழகரின்பால் உள்ள கவர்ச்சியினால் தூண்டப்பட்டு மானுடத்திற்கான தன்னலம் கருதாத சேவை என்னும் உயரிய நோக்கத்தின்பால் திரும்பிடக் கூடும். அவர்களின் வாழ்வின் உருவாக்க காலத்தின் கல்வியளிப்பு தேவைகளை பூர்த்தி செய்யும் நமது முயற்சிகள் விடாப்படியான தன்னலம் தன்னையே வற்புறுத்துவதிலிருந்து பாதுகாக்க வேண்டும். இந்த சவாலின் இயல்பைப் பற்றி ஆராய்வதற்காக, அடுத்த சில பகுதிகளில், தான் என்னும் தன்மையைக் குறிப்பிடும் சில புனித வாசகப் பகுதிகளை நீங்கள் ஆழ்ந்து பிரதிபலிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். எனினும், முதலில், உங்களது குழுவில் “விடாப்படியான தன்னலம் தன்னையே வற்புறுத்திக் கொள்வது” என்ற சொற்றொடரின் அர்த்தத்தைப் பற்றி உங்களது குழுவில் கலந்துரையாடவும். தன்னலமானது உயர்வடையக் கூடிய ஒரு தளமாக சேவை மாறாமல் இருப்பதை எவ்வாறு ஒருவர் நிச்சயிக்க முடியும்?

## பகுதி 5

கீழ்க் காணப்படும் முதல் வரிசையான வாசகப் பத்திகள், கடவுளுக்கு மகிழ்வூட்டக் கூடிய மற்றும் வளர்த்துக் கொள்ள வேண்டிய நமது “தனித்தன்மை”யின் அம்சங்களைச் சார்ந்தவையாகும்.

**“எனது ஊழியர்களே! எத்தகைய வள்ளன்மை மற்றும் அருள் ஆகியவற்றின் அதிசயங்களை நான் உங்களின் ஆன்மாக்களிடம் ஒப்படைக்க விரும்பியிருக்கின்றேன் என்பதை நீங்கள் உணர்வீராயின், உண்மையாகவே, நீங்கள், எல்லாப் படைப்புப் பொருட்களின்பால் உள்ள பற்றுகளையெல்லாம் துறந்து, உங்களைக் குறித்த உண்மை அறிவைப் பெற்றிடுவீர் – அவ்வறிவானது எனது மெய்நிலையை புரிந்துக் கொள்வதற்கு சமமானதாகும். உங்களை நீங்கள், என்னைத் தவிர மற்றனைத்தினின்றும் சுதந்திரமடைந்தோராகக் கண்டிடுவீர், உங்களின் அகக்கண் மற்றும் புறக்கண் ஆகியவற்றினால், அவை சுடரொளி வீசும் எனது திருநாமத்தின் வெளிப்படுத்துதலைப் போன்று தெளிவாய்த் தோன்றி, எனது அன்புக் கருணை மற்றும் அருள்பாலிப்பு என்னும் கடல்கள் உங்களுள் அசைவுறுவதைக் காண்பீர்.”[5]**

**“உமது பேரொளியானது, மரணத்துக்குரிய மனிதனானவன் உம்மைக் குறித்து ஒப்புதலளிப்பதற்கும், உம்மைச் சார்ந்துரைப்பதற்கும், உம்மை மகிமைப்படுத்துவதற்குமான அவனது புகழுரைக்கும் அப்பால் வெகு வெகு தொலைவில் உள்ளது! உமது மாட்சிமையையும் மகிமையையும் மேன்மைப்படுத்திட நீர் உமது ஊழியர்களுக்கு விதித்துள்ள கடமை எதுவாயினும், அது, அவர்கள்பால் உமது கருணையின் ஓர் அடையாளமேயாகும், அதனால் அவர்கள் தங்களின் சொந்த, உள்ளார்ந்த மெய்மைக்கு அளிக்கப்பட்ட ஸ்தானத்தின்பால் - தங்களின் சொந்த அகநிலையைக் குறித்த அறிவு என்னும் ஸ்தானத்தின்பால் - உயர்ந்தெழுந்திட உதவப்படக் கூடும்.” [6]**

**“முதல் தாராஸும் தாய் நூலின் அடிவானத்திலிருந்து உதித்துள்ள முதல் சுடரொளியுமானது மனிதன் தன்னையே அறிந்து கொள்ள வேண்டும் என்பதும், மேன்மைக்கோ அல்லது தாழ்மைக்கோ, புகழுக்கோ அல்லது இழிவுக்கோ, செல்வத்திற்கோ அல்லது வறுமைக்கோ கொண்டு செல்லக் கூடியவற்றை அறிய வேண்டும் என்பதே ஆகும்.” [7]**

**“ஆவியின் புத்திரனே! உன்னைச் செல்வந்தனாகப் படைத்தேன், நீ ஏன் உன்னை ஏழ்மை நிலைக்குத் தாழ்த்திக் கொள்கின்றாய்? உன்னை மேன்மைமிக்கவனாய் படைத்தேன், நீ ஏன் உன்னை இழிவுபடுத்திக் கொள்கின்றாய்? அறிவின் சாரத்திலிருந்து உனக்கு உருவளித்தேன், எதனால், நீ என்னைத் தவிர வேறொருவரிடம் இருந்து மெய்யறிவு தேடுகின்றாய்? அன்பு என்னும் களிமண்ணிலிருந்து நான் உன்னை ஆக்கினேன், எவ்வாறு நீ வேறொருவருடன் ஈடுபாடு கொள்கின்றாய்? உனது பார்வையை உன்னுள் செலுத்துவாயாக, அதனால் வலிமையுடையவனாய், சக்திமிக்கவனாய், சுயஜீவியாய் யான் உன்னுள் நின்று கொண்டிருப்பதைக் கண்டிடக் கூடும்.” [8]**

பின்வரும் வாக்கியங்களைப் பூர்த்தி செய்யவும்:

a. எத்தகைய வள்ளன்மை மற்றும் அருள் ஆகியவற்றின் அதிசயங்களைக் கடவுள் நமது ஆன்மாக்களிடம் ஒப்படைக்க விரும்பியிருக்கின்றார் என்பதை நாம் உணர்ந்தோம் என்றால், உண்மையாகவே, நாம், ______________________________ ______________________________, நம்மைக் __________________________________ __________________________________

b. உங்களை நீங்கள் ____________________________________ நாம் நமது அகக்கண், புறக்கண், ஆகியவற்றினால் ________________________________________________

________________________________________________________________________________________

__________________________________________________________________ காண்பீர்;

c. கடவுளின் மாட்சிமையையும் மகிமையையும் மேன்மைப்படுத்திட நமக்கு விதித்துள்ள கடமை எதுவாயினும், அது நம்பால் அவரது கருணையின் ஓர் அடையாளமேயாகும், அதனால் நாம்

________________________________________________________________________________________

________________________________________________________________________________________

உயர்ந்தெழுந்திட உதவப்படக் கூடும்.

d. நாம் நம்மையே அறிந்துகொண்டு, ____________ அல்லது ______________, ______________, _____________ அல்லது _______________, ___________ அல்லது ________________ கொண்டு செல்லக் கூடியவற்றை அறிந்துக் கொள்ள வேண்டும்.

e. நாம் _________________ படைக்கப் பட்டுள்ளோம்; மற்றும் _______________ படைக்கப்பட்டுளோம்; ________________________ சாரத்திலிருந்து கடவுள் நமக்கு உருவளித்துள்ளார் மற்றும் __________ என்னும் களிமண்ணிலிருந்து அவர் நம்மை _______________. அவர் நமது பார்வையை நம்முள் செலுத்திடச் சொல்கிறார்;அதனால், _________________________________

________________________________________________________________________________________

கண்டிடக் கூடும்.

மேல் குறிப்பிடப்பட்டப் புனித வாசகப் பத்திகள் யாவும் நமது உண்மையான மெய்ம்மைத் தன்மையைப் பற்றியும், அதன் இயல்பை அறிந்து கொள்ள வேண்டிய முக்கியத்துவத்தையும் குறிப்பிடுகின்றன. நிச்சயமாக, நமது மேன்மையை பற்றிய அறிவு நம்மைத் தற்பெருமை கொண்டவர்களாக ஆகிடச் செய்யாது, மாறாக அது நம்மைக் கடவுளின்பாலும் அவரது ஊழியர்களின்பாலும் பணிவாக நடந்துகொள்ளச் செய்திடும் என்பதை நாம் உணர வேண்டும். நமது உண்மையான மெய்ம்மைத் தன்மையை அறிந்திருப்பது, நமது தான் என்னும் அகந்தையோடு போராடி வெல்வதில் நமக்கு எவ்வாறு உதவிடும் என்பதைப் பற்றி உங்கள் குழுவினரோடு கலந்துரையாடவும்.

## பகுதி 6

இந்த இரண்டாம் வரிசையான புனித வாசகப் பத்திகள் தன்னலத்தில் ஈடுபடுவதன் விளைவுகளைப் பற்றி நமக்கு எச்சரிக்கின்றன.

“ஒவ்வொரு பூரணமற்ற ஆன்மாவும் தன்னையே மையப்படுத்தி தனது சொந்த நலனைப் பற்றி மட்டுமே சிந்திக்கும்.” [9]

“ஆனால், அவன் தன்னல ஆசைகள் மற்றும் சுய நேசம் ஆகியவற்றைக் குறித்து மிகச் சிறிய அளவிலான கரையை காட்டினால் கூட, அவனது முயற்சிகள் எந்தப் பலனையும் கொண்டுவராது மற்றும் அவன் அழிக்கப் பட்டு இறுதியில் நம்பிக்கை இழந்தவனாக ஆகிவிடுவான்.”[10]

“தற்செருக்கிலிருந்து விடுவிக்கப்பட வேண்டும் என்று குறிப்பாக நீங்கள் விரும்புகிறார்கள். பெருமை என்ற இந்த பண்பானது, உலகின் மிக முக்கிய மக்களை அழித்துள்ளது. ஒரு நபர் போற்றுதற்குரிய பண்புகளை ஒரு நபர் பெற்றிருந்து ஆனால் ஆனவத்துடன் இருந்தால், அந்த அனைத்து நெறிகளும் நல்ல குணவியல்புகளும் அழிந்துவிடும், இறுதியில் அவை மிகவும் மோசமான குறைகளாக மாறிவிடும்.”[11]

“தன்னலத்திற்கு ஆளாகுவதினால் தாங்கள், இம்மையிலும் மறுமையிலும், மனதளர்ச்சியை மட்டுமே பெறுவீர்கள்; மதவெறியினாலும், மதி கெட்டவர்களையும், அறிவில்லாதவர்களையும் நம்புவதன் மூலமாகவும் தாங்கள் அறுவடைச் செய்யக் கூடியது வெறுப்பும் துயரமும் மட்டுமே ஆகும்.”[12]

“இன்று உலக மக்கள் அனைவரும் சுய விருப்பத்தில் ஊடுருவியுள்ளார்கள் மற்றும் தங்கள் சொந்தப் பொருளாசைகளை மேம்படுத்திட மிகுந்த முயற்சிகளையும் உழைப்பையும் செலுத்துகின்றனர். தெய்வீக மெய்மையையுமல்லாமல், மனித உலகத்தையும் அல்லாமல் , அவர்கள் தங்களையே வழிப்படுகின்றனர்.”[13]

“தாங்கள் எழுதியுள்ளதைப் போன்று, இந்தச் சோதனைகள், உண்மைச் சூரியன் தனது ஒளிக் கீற்றுகளைச் வீச இயன்றிடும் வரை, இதயம் என்னும் கண்ணாடியில் இருந்து தன்னலம் என்னும் கறையை அகற்றிடும்; ஏனெனில் தன்னலத்தை விட தடை செய்திடக் கூடிய வலிமையான திரை வேறெதுவுமில்லை, மேலும் அந்தத் திரை எத்துணை மெல்லியதாக இருந்த போதிலும், இறுதியில் அது ஒரு மனிதனை முற்றிலும் வெளியே தள்ளி வைத்து, மற்றும் நித்திய அருளிலிருந்து அவனைத் தனது பங்கினைப் பெறுவதிலிருந்து இழக்கச் செய்திடும்.”[14]

“எவ்வாறு படைப்பனைத்தின் மீதும் சூரியன் பிரகாசிக்கிறது என்பதை கண்ணுறுவீராக, ஆனால் தூய்மையானதும் பளபளக்கும் தரைகள் மட்டுமே அதன் மகிமையும் ஒளியையும் பிரதிபலிக்க இயலும். இருளடைந்துள்ள ஆன்மாக்கள் மெய்மையின் பேரொளிமிக்கப் பொழிவின் வெளிப்படுத்தலிலிருந்து ஒரு பங்கைக் கூடப் பெறவியலாது; மற்றும் தன்னலம் என்னும் மண்ணானது, அந்த ஒளியைப் பயன் படுத்த இயலாமல், வளர்ச்சியை உண்டாக்குவதில்லை. “[15]

**“தன்னில் மட்டுமே சிரத்தையுற்ற, தன்னலம் மற்றும் தீவிர உணர்ச்சி ஆகியவற்றின் கைதியாக, பொருள் உலகம் என்னும் சேற்றில் புரண்டு, இந்த இருளில் மகிழ்வை அனுபவித்திடும் ஆன்மா எத்துணை இழிவானதாகும்!”[16]**

"தன்னையே மையப்படுத்துதல்", "சுய நேசம்","சுய வழிப்பாடு", "சுயநலத்தில் ஊடுருவி இருப்பது", மற்றும் "தன்னலம் மற்றும் தீவிர உணர்ச்சி ஆகியவற்றின் கைதியாக இருப்பது" ஆகிய அனைத்தும் இறைவனால் வழங்கப்பட்ட நமது தனித் தன்மையின் பண்புகளுக்கு எதிரான ஒரு சூழலுக்கு வழிவகுக்கிறது. மேல் குறிப்பிட்ட வாசகப் பகுதிகளின் அடிப்படையில், தன்னலத்தில் ஈடுபட்டிருப்பது எவ்வாறு ஆன்மீக வளர்ச்சியையும் தார்மீக முன்னேற்றத்தையும் தடுத்து சேவையின் பயனைக் குறைத்திடக் கூடும் என்பதைப் பற்றி ஒரு சில வாக்கியங்களைக் கொண்டு வருணிக்கவும்.

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

## பகுதி 7

இந்த மூன்றாம் வரிசையான வாசகப் பத்திகள், விடாப்பிடியான தன்னலத்தை எப்படி கையாள வேண்டும் எனப் புனித வாசகங்களில் காணப்படும் பல ஆலோசனைகளில் ஒரு சிறு தொகுப்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

**“இன்று அப்ஹா இராஜ்ஜியத்தின் உறுதிப்பாடுகள், தங்களைத் துறந்து, தங்கள் சொந்த அபிப்பிராயங்களை மறந்து, தனிமனித அம்சங்களை ஒதுக்கி விட்டு, மற்றவர்களின் நலனைப் பற்றியே சிந்திக்கும் மனிதர்களிடம் இருக்கின்றன. தன்னையே தொலைத்து விட்ட எவரொருவரும் பிரபஞ்சத்தையும் அதில் வசிப்பவர்களையும் கண்டுப்பிடித்தவர் ஆவார். தன்னில் மட்டுமே ஈடுபட்டுக் கொண்டுள்ள எவரொருவரும், கவனமின்மை மற்றும் வருத்தம் என்னும் பாலைவனத்தில் அலைபவர் ஆவார். தன்னை வெல்வதற்கான "தலையாயத் திறவுகோல்" தன்னையே மறப்பதாகும். வாழ்வென்னும் மாளிகைக்குச் செல்லும் வழி, தன்னையே துறப்பது என்னும் பாதையின் வழியில் உள்ளது.”[17]**

**“பொருள்களின் மெய்மைகளை ஊடுருவுவதற்கான ஒரு சக்தியை அவர் நமக்கு வழங்கியுள்ளார்; ஆனால், நாம் சுய-தியாகத்தை கையாள வேண்டும், நாம் தூய உள்ளாற்றலையும், தூய எண்ணங்களையும் கொண்டிருக்க வேண்டும், மனித உலகில் வாழும்**

போதே, என்றும் நிலையான பெரும் புகழை அடைந்திட இதயத்தாலும் ஆன்மாவாலும் போராட வேண்டும்."[18]

"எனவே, சாத்தானிய சுயத்தின் திரைகள் அன்பெனும் தீயில் எரிக்கப்பட வேண்டும், அதனால் ஆவியானது தூய்மைப்படுத்தப்பட்டு சுத்திகரிக்கப்படவும் கூடுமாக, மேலும் அதன் விளைவாக எவரின்றி இந்த உலகம் படைக்கப்படாமல் போயிருக்குமோ அவரது ஸ்தானத்தை அறியக்கூடுமாக."[19]

"தன்னலம் என்னும் அனைத்து சிந்தனைகளையும் விட்டுவிட்டுக், கடவுளின் திருவிருப்பத்திற்கு மட்டுமே கட்டுப்பட்டு அடிப்பணிந்திட முயற்சியுங்கள். இவ்வழியால் மட்டுமே நாம் கடவுளின் இராஜ்ஜியத்தின் பிரஜைகளாக ஆகிடக் கூடும், மற்றும் நித்திய வாழ்வையும் அடைந்திடக் கூடும்."[20]

"தன்னலத்திலிருந்து முற்றிலும் சோர்வுற்றிடத் தங்களால் இயன்ற அனைத்தையும் செய்யுங்கள், பிறகு உங்களைப் பேரொளிகள் என்னும் திருவதனத்தோடு பிணைத்துக் கொள்ளுங்கள்; நீங்கள் அத்துணை உயர்வான சேவகத்தை அடைந்த பிறகு, எல்லா படைப்புப் பொருள்களும், உங்கள் நிழலின் கீழ், ஒன்று திரண்டு இருப்பதை நீங்கள் காண்பீர்கள். இதுவே எல்லையற்ற கிருபையாகும்; இதுவே மிக உயரிய இறைமையாகும்; இதுவே முடிவில்லா வாழ்வும் ஆகும். இதைத் தவிர மற்றனைத்தும், இறுதியில் தெளிவான நரகமும் மாபெரும் இழப்பும் ஆகும்."[21]

"ஆகையால், நன்பனே, உன்னையே நீ துறந்துவிடு அதனால் ஒப்பற்ற அவரை நீ காணக்கூடும்; இந்த இறப்புக்குரிய உலகத்திற்கு அப்பால் உயர்ந்திடு, அதனால் சொர்க்கத்தின் வாசஸ்தலத்தில் உனது கூடு இருப்பதைக் காணலாம். உருவெனும் தீயை நீ மூட்டிட விரும்புவாயானால், அன்பு எனும் பாதைக்கு நீ தகுதியானவனாக இருப்பாயானால், நீ இல்லாதது போல் ஆகிவிடு."[22]

"தன்னலம் என்னும் எல்லாச் சிந்தனைகளையும் நாம் ஒதுக்கி வைப்போமாக; உலகில் உள்ள அனைத்தின் மீதும் நமது கண்களை மூடிக் கொள்வோமாக, நமது துயரங்களைப் பற்றி அறிவிக்காமலும், அல்லது நமது தவறுகளைப் பற்றிக் குறை கூறாமலும் இருப்போமாக. மாறாக, நம்மைப் பற்றியே மறந்தவர்களாக நாம் ஆகிடுவோமாக, மற்றும் வானுலக அருள் என்னும் மதுரசத்தைப் பருகிக் கொண்டு, நமது மகிழ்வைப் பற்றி உரக்கக் கூவிடுவோமாக, மற்றும் சர்வ ஒளிமிக்கவரானவரின் அழகில் நம்மையே இழக்கச் செய்வோமாக. "[23]

"உலகின் மக்களே! தன்னலத்தின் தூண்டுதல்களை பின்பற்றாதீர், ஏனெனில் அது கொடுமைக்கும் காமத்திற்கும் விடாப்பிடியாக அழைத்திடும்; மாறாக, உங்களை, புனிதத் தன்மையைக் காட்டிடவும், இறை அச்சத்தை வெளிப்படுத்திடவும் உங்களுக்குக் கட்டளை இடுபவரான, எல்லாப் படைப்புப் பொருள்களுக்கும் உரிமையாளராகிய அவரைப் பின்தொடருங்கள்."[24]

மேல் காணப்படும் வாசகப் பகுதிகளில் அடங்கியுள்ள மனப்பான்மைகளானது, இக்காலச் சமுதாயத்தின் பண்பாக இருந்து வரும் சுய நேசிப்பு, சுய விருப்பம் ஆகியவற்றில் மனமகிழ்வு கொள்வதும் ஆகியவற்றிற்கு முற்றிலும் மாறுபட்டதாக உள்ளது. தன்னலம் குறித்து, நாம் வளர்த்திட கற்றுக் கொள்ள வேண்டிய சில மனப்பாங்குகளை இந்த வாசகப் பகுதிகளிலிருந்து அடையாளங் காண்பீர்களாக. உங்களுக்கு உதவி செய்ய இரண்டு உதாரணங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

- நாம் நம்மையே துறந்து, நமது சொந்த அபிப்பிராயங்களை மறந்து, தனிமனிதச் சிறப்புகளை ஒதுக்கி விட்டு, மற்றவர்களின் நலனைப் பற்றியே சிந்திக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்.

- நாம் கற்றுக்கொள்ள வேண்டியது சுய-தியாகத்தையாகும்.__________________________________

  ________________________________________________________________________

- நாம் கற்றுக்கொள்ள வேண்டியது ________________________________________________

  ________________________________________________________________________

- நாம் கற்றுக்கொள்ள வேண்டியது ________________________________________________

  ________________________________________________________________________

- நாம் கற்றுக்கொள்ள வேண்டியது ________________________________________________
- ________________________________________________________________________

- நாம் கற்றுக்கொள்ள வேண்டியது ________________________________________________
- ________________________________________________________________________

- நாம் கற்றுக்கொள்ள வேண்டியது ________________________________________________

  ________________________________________________________________________

- நாம் கற்றுக்கொள்ள வேண்டியது ________________________________________________

  ________________________________________________________________________

நீங்கள் அடையாளம் கண்டுள்ள மனப்பாங்குகள் எவ்வாறு, ஒரு மேன்மையான மனிதனாக ஆவதற்கும் சேவைச் செயல்களுக்குச் சக்தியையும் வழங்குவதற்கும் பங்களிக்கின்றது என்பதை பற்றி உங்கள் குழுவில் கலந்தாலோசிப்பீராக.

## பகுதி 8

இறுதியாகப், பின்வரும் புனித வாசகங்கள், தன்னலத் தியாகத்திற்கும், சமுதாயத்தின் தன்மை மாற்றத்திற்கு பங்கினை ஆற்றுவதற்குமான பரஸ்பர உறவைப் பற்றி நமக்கு நினைவூட்டுகிறது.

**“பெரும்பான்மையான மக்கள் தன்னல மற்றும் உலக ஆசைகளில் ஈடுபட்டுள்ளார்கள், நரக உலகின் சமுத்திரத்தினுள் மூழ்கியுள்ளார்கள் மற்றும் இயற்கை உலகின் கைதிகளாக ஆகியுள்ளார்கள், ஆனால் பௌதீக உலகின் சங்கிலிகளிலிருந்தும் விலங்குகளிலிருந்தும் விடுபட்டு, விரைந்து சிறகடித்திடும் பறவைகளைப் போல, இந்தத் தடையில்லா ராஜ்ஜியத்தில் உயரப் பறக்கின்ற ஆன்மாக்களைத் தவிர. இவர்கள் விழிப்புடனும் உறங்காமலும் உள்ளனர், இயற்கை உலகின் இருளை வெறுக்கின்றனர், அவர்களுடைய மிக உயரிய ஆவல், மனிதர்கள் மத்தியில் வாழவேண்டும் என்னும் போராட்டத்தைத் துடைத்தொழிப்பதிலும், ஆன்மீகம் என்னும் ஒளியை மற்றும் மேலுலகின் அன்பை வீசுவதிலும், மக்கள் மத்தியில் மிக உயரிய அன்புடைமையையும், சமயங்களிடையே பரஸ்பர மற்றும் நெருக்கமான இணக்கத்தை உணர்வதையும், சுய தியாகம் என்னும் எண்ணத்தைச் செயலாற்றுவதிலும் மையம் கொண்டிருக்கும். அப்பொழுது தான் மனித உலகம் கடவுளின் இராஜ்ஜியமாகத் தன்மை மாற்றம் அடைந்திடும்.”[25]**

**“கடவுளின் சேனையே! இன்று, இவ்வுலகில், எல்லா மக்களும் அதன் சொந்த பாலைவனத்தில் திசை தெரியாது அலைகின்றனர், அவர்களது சொந்த வீண் கற்பனைகளாலும் எண்ணங்களினாலும் தூண்டப்பட்டு, அதன் சொந்தக் குறிப்பிட்ட மனப் போக்கை விரட்டிக் கொண்டு இங்கும் அங்குமாக சென்றுக் கொண்டிருக்கின்றனர். உலகின் ஒன்று திரண்ட மக்கள் அனைவரின் மத்தியில், அதி உயரிய நாமத்தின் சமூகம் மட்டுமே மனித சூழ்ச்சிகளிலிருந்து சுதந்திரமாகவும் தெளிவாகவும் உள்ளது, மற்றும் பரைசாற்றுவதற்கு எவ்வித சுயநல நோக்கமும் இல்லாமல் இருக்கிறது. அனைவரின் மத்தியில், இந்த மக்கள் தன்னந்தனியாக, தான் என்னும் தன்மையில் தூய்மைப்படுத்தப்பட்ட குறிக்கோள்களைக் கொண்டு முன்னெழுந்து, கடவுளின் போதனைகளைப் பின்பற்றி, ஒரே ஒரு இலக்கை நோக்கி பாடுபட்டும் முயற்சி செய்கின்றனர், அது என்னவெனில்: இந்த நரகமென்னும் புழுதியை உயர்வான சுவர்க்கமாக ஆக்கிடவும், இவ்வுலகினை இராஜ்ஜியத்தின் கண்ணாடியாக ஆக்கிடவும், இவ்வுலகை வேறொரு உலகமாக ஆக்கிடவும், மற்றும் மனித இனம் அனைத்தும் நேர்மைத்தன்மையின் வழிகளைப் பின்பற்றவும் ஒரு புதிய வாழ்வு முறையைப் பின்பற்றவும் செய்வதாகும்.”[26]**

**“கடவுளின் அன்புக்குரியவர்களே! இந்த பஹாய் சகாப்தத்தில், கடவுளின் சமயமானது மாசற்ற ஆவியாகும். அவரது சமயமானது லௌகீக உலகை சார்ந்ததல்ல. அது போராடுவதர்கோ போரிடுவதற்கோ தோன்றவில்லை, அதே போல தீங்கு அல்லது அவமானச் செயல்களை புரிவதற்கோ தோன்றவில்லை; அது மற்ற சமயங்களோடு சண்டை செய்வதற்கோ, அல்லது நாடுகளுடன் பூசலிடுவதற்கோ தோன்றவில்லை. அதன் ஒரே படை கடவுளின் அன்பாகும், அதன் ஒரே மகிழ்ச்சி அவரது அறிவென்னும் தெளிவான மதுரசமாகும், அதன் ஒரே யுத்தம் உண்மையை விவரிப்பதேயாகும்; அதன் ஒரே போர், விடாப்பிடியான தன்னலம், மனித இதயத்தின் தீய தூண்டுதல் ஆகியவற்றிற்கு எதிரானவையாகும். அதன் வெற்றி அர்ப்பணமும் சமர்ப்பனமும் ஆகும், மற்றும் தன்னலம் இல்லாதிருப்பதே அதன் என்றும் அழியாத பேரொளியாகும்.” [27]**

மேல் குறிப்பிடப்பட்ட வாசகப் பகுதிகள் "கடவுளின் படையில்" அங்கத்தினராக இருப்பவர்கள் என அப்துல் பஹா கருதிடும் அன்பர்களின் சில தனிச்சிறப்பான பண்புகளாகும். இவர்களை அவர் "கடவுளின்

அன்புக்குரியவர்கள்" என்றும், "படைப்புலகின் சங்கிலிகளிலிருந்தும் விலங்குகளிலிருந்தும் விடுப்பட்டவர்கள்" என்றும் குறிப்பிடுகிறார். பின்வரும் வாக்கியங்களைப் பூர்த்தி செய்யும் வேளையில், இந்தச் சிறப்புகளைப் பற்றி பிரதிபலிக்கவும்.

1. பெரும்பான்மையான மக்கள் ______________________________ ஈடுபட்டுள்ளார்கள், ________________________________________________ மூழ்கியுள்ளார்கள், ______________________ கைதிகளாக ஆகியுள்ளார்கள்.

2. பௌதீக உலகின் சங்கிலிகளிலிருந்தும் விலங்குகளிலிருந்தும் விடுபட்டு, விரைந்து சிறகடித்திடும் பறவைகளைப் போல, இந்தத் தடையில்லா ராஜ்ஜியத்தில் உயரப் பறக்கின்ற ஆன்மாக்கள் ________________னும் ______________னும் உள்ளனர்; ___________________________ வெறுக்கின்றனர், அவர்களுடைய மிக உயரிய ஆவல், ______________________________ ________________________, _______________________ , மற்றும் _________________________________, ____________________________________________________ உணர்வதையும், ____________________ _________________________ செயலாற்றுவதிலும் மையம் கொண்டிருக்கும்.

3. இன்று, இவ்வுலகில், எல்லா மக்களும் _________________________________ ________________________________________, _______________________________________________ _______________________________________ தூண்டப்பட்டு, _________________________________ _______________________________சென்று கொண்டிருக்கின்றனர்.

4. அதி உயரிய நாமத்தின் சமூகம் மட்டுமே ____________________________________________ மற்றும் ________________________ ___________________________________ இருக்கிறது. அனைவரின் மத்தியில், இந்த மக்கள் தன்னந்தனியாக, _______________________________________________ முன்னெழுந்து, _________________ பின்பற்றி, ________________________________ முயற்சி செய்கின்றனர், அது என்னவெனில்: இந்த ___________________________________________ _________________ ஆக்கிடவும், இந்த __________________________________________________ ஆக்கிடவும்_________________ஆக்கிடவும், மற்றும் மனித இனம் அனைத்தும் ________________________________

5. கடவுளின் சமயமானது ________________________. அவரது சமயமானது ___________________. அதன் ஒரே படை ___________________, அதன் ஒரே மகிழ்ச்சி __________________________________, அதன் ஒரே யுத்தம் _______ _______________________; அதன் ஒரே போர், _________________________________, _________ ____________________ ஆகும். அதன் வெற்றி ________ _________________________, மற்றும் _______________________________________________.

## பகுதி 9

பஹாவுல்லாவினால் வெளிப்படுத்தப்பட்ட பிரார்த்தனைகளிலிருந்து எடுக்கப்பட்ட பின்வரும் பகுதிகளை நீங்கள் மனனம் செய்ய விரும்பலாம்:

> **“என் பிரபுவே, தங்கள் மெய்மையின் அவதாரமான அவர் முன், தங்களது சொந்த வலிமையின்மையின் ஓர் உணர்வைக் கொண்டு அவர்களுக்கு ஊக்கமளிப்பீராக, தங்களது சுய ஜீவியத் தன்மை மற்றும் செல்வம் ஆகியவற்றின் எண்ணற்றச் சின்னங்களின் முன், தங்கள் சொந்த தன்மையின் வறுமையை உணர்ந்திட அவர்களுக்குக் கற்பிப்பீராக. அதனால் அவர்கள் தங்கள் சமயத்தைச் சுற்றி ஒன்றுகூடவும், தங்கள் கருணையின் அங்கியைப் பற்றிக் கொள்ளவும், தங்கள் நோக்கத்தின் நல்விருப்பமெனும் கயிற்றை இறுகப் பற்றிக் கொள்ளட்டுமாக.”[28]**

> **“ஆகையால், என் கடவுளே, தான் மற்றும் ஆசை என்னும் ஆடைகளைத் தங்கள் ஊழியர்களின் மீதிருந்து அகற்றுவீராக, அல்லது தங்கள் மக்களின் கண்கள் அத்துணை உயர்வான சிகரங்களை நோக்கிடச் செய்வீராக, அதனால், அவர்கள் தங்கள் ஆசைகளுள் தங்கள் நித்தியப் பேரொளியின் மெல்லியக் காற்றுகள் அசைவதைத் தவிர வேறெதனையும் அறியாதிருக்கக் கூடுமாக, மற்றும் தங்கள் சொந்தத் தன்மையில் தங்களது கருணைமிக்கத் தன்மையின் வெளிப்பாட்டைத் தவிர வேறெதனையும் கண்டறியாதிருக்கக் கூடுமாக. அதனால் இவ்வுலகமும் அதிலுள்ள அனைத்தும் தங்களுக்கு அன்னியமான அனைத்திலிருந்தும், அல்லது தங்கள் மெய்யியல்பைத் தோற்றுவிக்கும் எதனையும் தவிர வேறெதிலிருந்தும் தூய்மைப் படுத்தப் படுமாக.”[29]**

## பகுதி 10

இளைய இளைஞர்களைப் பேணி வளர்க்க வேண்டும் என்ற உங்கள் ஆவல் ஆழப்படும் வேளையில், இளைஞர்களை வருணிக்க முயற்சி செய்திடும் பல கருத்துக்களைப் பற்றித் தாங்கள் நன்கு அறிய விரும்பிடுவீர்கள். இதைத் தொடர்ந்து தாங்கள் மீண்டும் மீண்டும் காணவிருக்கும் ஒரு வார்த்தையானது "நெருக்கடி" ஆகும் –அதாவது, தங்கள் அடையாளம், கண்ணோட்டம், உணர்ச்சிகள், பெற்றோர்களுடனான உறவும், அதிக்காரத்தின்பால் செவிசாய்ப்புப் போன்ற விஷயங்களைச் சார்ந்த நெருக்கடிகளாகும். இந்தக் கருத்துக்களைத் தாங்கள் திறனாயும் கண்களோடு காணவேண்டும். இல்லை என்றால் நீங்கள் நெருக்கடி நிலை என்பது எல்லா இளைஞர்களையும் சார்ந்த ஒன்றாகும் என நீங்கள் எண்ணிவிடப் போகிறீர்கள். ஒவ்வொரு இளைஞனின் வாழ்வும் ஏதாவது ஒரு வித நெருக்கடியினால் ஆட்கொள்ளப் பட்டிருப்பது உண்மையிலேயே தேவையான ஒன்றா? மனித வரலாறு முழுவதும் இளைய இளைஞர்கள் இவ்வாறான நெருக்கடிகளைச் சந்தித்துள்ளார்களா? மேலும், இந்நாளிலும், எல்லாக் கலாச்சாரத்திலும் எல்லாச் சமூகங்களிலும் அவர்கள் நெருக்கடிகளைச் சந்திக்கின்றார்களா?

இந்தக் கேள்விகளுக்குப் பதிலளிக்க முயற்சிக்கும் வேளையில், தான் என்னும் தன்மை, மனவிருப்பங்களை பூர்த்திச் செய்வது, உடலளாவிய மாற்றங்கள், பால் உணர்வு மற்றும் பொருளாதாரச் சாதனைகள் ஆகியவற்றின் மீது அளவுக்கு அதிகமான முக்கியத்துவம் வழங்கிடும் கருத்துகளின்

அடிப்படையில்தான் இப்பொழுதுள்ள பெரும்பாலான இளையோரைப் பற்றிய ஆய்வுகள் சார்ந்துள்ளன என்பதை நீங்கள் மனதில் கொள்ளவேண்டும். அவை பெரும்பாலும் இனம், மதம், ஆண், பெண் அடையாளம், ஆகியவற்றின் மீது ஒரு குறுகியக் கண்ணோட்டத்தைக் கொண்டிருக்கும், மனித ஆன்மாவின் இறைவனால் வழங்கப்பட்டப் பண்புகளின் மீது கவனத்தைச் செலுத்தி இருக்காது. நிச்சயமாக, இந்த ஆய்வுகளிலிருந்து தாங்கள் பெறக்கூடிய சில ஆழமான கருத்துக்கள், தாங்கள் உதவிடும் இளைய இளைஞர்கள் குழுக்களின் பண்புகளைப்பற்றித் தாங்கள் புரிந்துகொள்ளவிருக்கும் முயற்சியில் உதவிடும். ஆனால், இந்த ஆய்வுகள், இந்த இளைஞர்களை இக்காலச் சமூக ஒழுக்கத் தரங்களோடு தங்களை அடையாளம் கண்டுகொள்வதைத் தவிர வேறெதுவும் செய்திட உதவிடும் என்பது ஐயத்துக்குறியதுதான். இக்காலத்தின் லௌகீகக் கண்ணோட்டம், ஆன்மீகப் புலன்களை அழித்திடும் என்பதை நாம் அறிவோம். ஆனால் தாங்கள் பெற்றிருக்க வேண்டிய இளைய இளைஞர்களைப் பற்றியக் கண்ணோட்டமானது, தனிநபர்களின் ஆன்மீக அடையாளத்தை மேம்படுத்துவதைக் குறித்துக் காட்டும். இவர்கள் "என்றும் மேம்பாடு அடைந்துவரும் ஒரு நாகரிகத்தை மூன்னேற்ற வருவார்கள்" மற்றும் "ஒருமையை உருவாக்குபவர்களாகவும்", "நீதிக்காகப் போராடுபவர்களாகவும்" இருப்பார்கள்.

இளைய இளைஞர்களுக்கு ஓர் உயிர்ப்பூட்டுனராகச் செயல்படும் உங்கள் முயற்சியின் போது, மற்றவர்கள் அவர்களை எப்படிப் பட்டவர்களாகக் காண்கின்றார்கள் என்னும் முறையானது அவர்கள் மீது ஒரு பெரும் விளைவை ஏற்படுத்தும் என்பதை நீங்கள் மனதில் கொள்ள வேண்டும். ஆகையால், இவ்வாறு சமூகத்தில் மிகவும் பரவலாக இருக்கும் இளமைப் பருவத்தின் இருண்ட படமானது, விரும்பத்தகாத நடத்தை முறைகளை பரப்புவதற்கான சூழ்நிலைகளை வளர்க்க உதவுகிறது.உதாரணமாக ‘சிக்மண்ட் ஃப்ரேய்ட்’ என்ற அறிஞர், முன்வாலிபப் பருவம் ஒரு தற்காலிக மனோ வியாதி என்று அவர் கூறியுள்ள கருத்தை ஓர் உதாரணமாக கவனியுங்கள், அல்லது ‘என்னா ஃப்ரேய்ட்’ அவர்கள், முன்வாலிப சாதாரணமாக இருப்பதே அசாதாரணமானது என்னும் கருத்தையும் கவனியுங்கள். இத்தகையக் கருத்துக்கள், இளைய இளைஞர்களின் உண்மையான திறனை மக்கள் பார்த்திடாமல் செய்திடும் ஒரு திரையாக இருக்கின்றனவா? இத்தகைய விரிவான முடிவுகளை இந்த விஞ்ஞானிகள் எடுப்பதற்கு எத்தகைய ஆதாரங்களைக் கொண்டு சென்றன? நிச்சயமாக, இளைஞர்களைச் சிறந்த வகையில் வருணிக்கும் கல்விமான்களும் உள்ளனர், ஆனால் அவர்களுடைய கருத்துக்கள், இந்த விஷயத்தைக் குறித்த ஆராய்ச்சிகளில் முன் நிற்பதில்லை. பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஆகியோரின் மனதில் நிலையாக் நிற்கும் காட்சிகள், கிளர்ச்சி செய்பவர்கள், அறிவுக்குப் பொருந்தாதவற்றைச் செய்பவர்கள், மற்றும் அற்பமான செயல்களைச் செய்பவர்கள் ஆகியவையே ஆகும். அதன் இரத்த நாடிகளுள் ஓடும் இத்தகையக் கருத்துக்களைக் கொண்ட ஒரு சமுதாயம், எவ்வாறு, இளைய இளைஞர்களை, இந்நூலின் முதல் பகுதியில் வருணிக்கப் பட்ட இளைஞர்களக ஆவதற்கு உதவிடக் கூடும்?

## பகுதி 11

மேல் காணப்படும் ஆய்வுரையின் அடிப்படையில், நீங்கள் பின்வரும் மனப்பாங்கை கொண்டிருக்க வேண்டும் என நாங்கள் ஆலோசனை கூறுகின்றோம்: இயல்பான வளர்ச்சியின் நெருக்கடியும் வெற்றியும் என்னும் தொடர்ச்சியான கட்டங்களிலிருந்து இயல்பாகத் தோன்றக்கூடியதற்கு மேலாக -- ஒரு குறிப்பிட்ட இளைய இளைஞர்கள் வெறுக்கத்தக்கப் பழக்கங்களை

கொண்டிருந்தார்கள் என்றால் -- அததகைய விளைவின் காரணங்கள் சமுதாயச் சூழ்நிலைகளில் காணப்பட வேண்டும். ஒருவேளை, தாங்கள் முன்பு முழுமையாக நம்பியிருந்த முதியவர்களின் வாழ்க்கையில் வளர்ந்துவரும் இளைய மனங்கள் கண்டிடும் தெளிவாகத் தோன்றிடும் முரண்பாடுகளில், அல்லது, குழந்தைப் பருவத்தின் பழக்கங்களை ஒதுக்கிவிட்டு வரவிருக்கும் ஒரு தனி நபரின் பகுத்தறிவை, முதியோர்களின் உணரமுடியாதத் தன்மைகளில், அதற்கான காரணங்கள் காணப்பட வேண்டும்.

நிச்சயமாக, இந்தக் கண்ணோட்டமானது, இளைஞர்களின் குணத்தில் மூர்க்கத்தன்மையும் எதிர்க்கும் குணமும் இருப்பதை மறுக்கவில்லை. எத்தகையக் கருத்து முன்வைக்கப் படுகிறதென்றால், பெரும்பாலும், சுற்றுப்புறச் சூழ்நிலையும், குறிப்பாக முதியோர்களின் நடத்தையும் தான் இந்த வயதுடன் தொடர்புடைய விரும்பத்தகாத பண்புகளுக்கு பெரிதும் காரணமாக உள்ளது. இந்தக் கோரிக்கையின் தாத்பரியங்களை ஆராய்வதற்காகப், பின்வரும் கூற்றுக்கள் உண்மையா இல்லையா என்பதை நீங்கள் உங்கள் குழுவில் கலந்தாலோசிக்க விரும்பலாம், மற்றும் இதே கருத்தை மேலும் விளக்கிடச் செய்திடும் மற்றக் கருத்துக்களையும் எழுதிட முயற்சிக்கலாம்.

- தாங்களே பின்பற்றத் தவறிடும் தரங்களைப் பின்பற்றுமாறு தங்களைக் கட்டாயப் படுத்திடும் முதியோர்களை இளைய இளைஞர்கள் எதிர்த்திடுவர்.

- கண்டிக்கும் முறையில் வழங்கப்படும் அறிவுரைகளை இளைய இளைஞர்கள் விரும்புவதில்லை.

- அவர்களுடைய அறிவாற்றல் திறன்களின் மேம்பாட்டைத் தடுத்திடும் அற்பமான நடவடிக்கைகளைத் தவிர வேறெதனையும் இவ்வுலகம் வழங்கிடாத பொழுது அவர்கள் பயனற்றச் செயலில் ஈடுபடுகிறார்கள்.

- கடினமான கட்டளைகளை அவர்கள் மீது முதியோர்கள் வற்புறுத்தும்போது அவர்கள் கட்டாய நெறிமுறைக்கு வெறுப்பு காண்பிக்கின்றனர், குறிப்பாகத் தங்கள் குழந்தைப் பருவத்தில் கட்டுப்பாடில்லாதச் சுதந்திரம் வழங்கப் பட்டிருந்தால்.

- இளையோர் தங்களுடைய முடிவுகளின் விளைவுகளைப் பற்றிச் சிந்திக்கத் தாங்கள் உதவப் படவேண்டும் என்பதைத் தங்களைச் சுற்றியுள்ள முதியோர்கள் உணரவில்லை என்றால், இளையோர்கள் அவசர முடிவை எடுப்பது போன்றவர்களாக இருப்பர்கள்.

- சுய-முக்கியத்துவம் அவர்களுக்குக் கற்றுக் கொடுக்கும்போது அவர்கள், சமுதாயத்திற்குச் சுயனலமற்ற சேவை புரிவதற்குப் பதிலாகத் தற்பெருமையை வளர்த்துக் கொள்கின்றனர்.
- தொடர்ச்சியான பிரச்சாரம் தங்கள் உடல் ஆசைகளை பூர்த்தி செய்யும்படித் தூண்டும் போது அவர்கள் தன்னல ஆசையில் மூழ்கிவிடுகிறார்கள்.

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

## பகுதி 12

உலக நீதி மன்றம் “இசைவளிக்கும் சமுதாயத்தின் “ “கண்டிப்பின்மை மற்றும் ஒழுக்க சீர்கேடு” பற்றியும் அதன் தாக்கத்திற்கு எதிராக இளைஞர்கள் பாதுகாத்துக் கொள்வது குறித்தும் பேசியுள்ளனர்:

> **“… பஹாய்கள், குறிப்பாக பஹாய் இளைஞர்கள் இசைவளிக்கும் சமுதாயத்தின் கண்டிப்பின்மை மற்றும் ஒழுக்க சீர்கேடு ஆகியவற்றிற்கு எதிராக நிற்பதை அவதானிக்கும் போது இறைவனின் சமயம் பெரிதும் பயனடைகிறது, அதனால் அவர்கள் நிலைநிறுத்த முயற்சிக்கும் நடத்தை மாதிரிகள் ஆன்மீக கொள்கைகளின் மீது உறுதியாக வேரூன்றி இருக்கும், அது அவர்களுக்கு நம்பிக்கை, சுய-மரியாதை மற்றும் உண்மையான சந்தோஷத்தையும் அளிக்கும். ஆனால் மறுபுறம் சமயத்திற்கும் பெரிதும் தீமை அளிக்கக் கூடியது யாதெனில் தற்போது அடிக்கும் அலையில் நம்பிக்கையாளர்கள் மூழ்கிவிடும் போது தான்.” [31]**

இளைய இளைஞர்கள் உட்பட, நம் அனைவரின் மீதும் சமுதாயம் செலுத்திடும் செல்வாக்கினைக் குறித்துப் பாதுகாவலரின் பின்வரும் வார்த்தைகள் ஆழமான கருத்துகளை வழங்குகின்றது:

> **“மெய்யாகவே, சமுதாயத்தில் இன்று தீமை பரவலாக இருப்பதற்கான முக்கியக் காரணம், ஆன்மீகத் தன்மை இல்லாத காரணம்தான். நமது காலத்தின் பொருளாதார நாகரிகம் மனித இனத்தின் வலிமையும் விருப்பங்களையும் பெரும் அளவிற்கு உறிஞ்சு விட்டக் காரணத்தால், பொதுவாகவே மக்கள், தங்களுடைய தினசரி பொருளாதார வாழ்வின் சக்திகளும் நிலைகளிலிருந்தும் தங்களை வெளியேற்றிக் கொள்ள வேண்டியது தேவை என்பதை இப்போது உணர்வதில்லை. நமது உடலளாவிய வாழ்வின் தேவைகள், அவசியங்கள் ஆகியவற்றிலிருந்து தன்னை வேறுபடுத்திக் காட்டும் ஆன்மீகம் என்று நாம் கருதிடும் விஷயங்களுக்காகப் போதிய தேவை இப்போது இருப்பதில்லை.”[32]**

உலகிலிருக்கும் சீர்குலைவு முறையை வருணிக்கையில், பாதுகாவலர் பல சூழ்நிலைகளைக் குறிப்பிடுகிறார். அவற்றில் அடங்குபவை நன்னெறியின் வீழ்ச்சி, இசைவளிக்கும் ஒரு சமுதாயத்தின் கண்டிப்பின்மை மற்றும் ஒழுக்கச் சீர்க்கேடு, திருமணத்தின்பால் பொறுப்பற்ற மனப்பான்மையும் அதனால் விளையும் விவாகரத்துப் போக்கும், குடும்ப ஒருமைப்பாடு பலவீனமடைவது மற்றும் பெற்றோர் கட்டுப்பாட்டில், முன்னேற்றமான தளர்ச்சி, மண்ணுலகின் வீண் பெருமைகள், செல்வங்கள் மற்றும் இன்பங்கள் ஆகியவற்றை வெறியார்வத்துடன் நாடுவது, ஆடம்பரமான ஈடுபாட்டில் காலக்கடப்பு, கலை மற்றும் இசை ஆகியவற்றின் சீர்கேடு, நூல்கள் மற்றும் செய்தித்தாள்கள் ஆகியவற்றின், ஏற்றுக்கொள்ளப்பட்ட முன்மாதிரியில் தரக்குறைவு, இன வெறுப்பு மற்றும் தேசாபிமான இறுமாப்பு, இந்த நோய்களிலிருந்து எவரும் பாதுகாக்கப்படவில்லை என்றபோதிலும், இவை வளர் இளம் பருவத்தில் உள்ளவர்களை ஒரு குறிப்பான வகையில் பாதிக்கின்றன. உதாரணத்திற்காக, விவாகரத்தானது, பெரும்பாலான இளைய சிறுவர்களின் மீது ஏற்படுத்தும் விளைவுகளை நினைத்துப்பாருங்கள். சந்தேகமின்றி அவர்கள், ஆழ்ந்த துக்கத்தை அனுபவித்து, ஒன்றுபட்ட ஓர் இல்லத்தின் பாதுகாப்புக்காகவும், அபாயமற்ற நிலைக்காகவும் ஏங்குகின்றனர். ஆனால் வளர் இளம் பருவத்தின் போதே அவர்கள், குற்றப் பொறுப்புணர்ச்சி, கோபம், வெட்கம் மற்றும் அவமதிப்பு போன்ற மனக்கிளர்ச்சிகளால் ஆட்கொள்ளப்படுகின்றனர். இதற்கு, தங்களுடைய பெற்றோர்களே பொறுப்பேற்க வேண்டும் என அவர்கள் நினைத்த போதிலும், குடும்ப துரதிருஷ்டத்திற்காக, அவர்கள் தங்கள் மீதே பழி சுமக்கவும் நிர்பந்திக்கப்படுகிறார்கள். திருமணம் மற்றும் குடும்ப வாழ்க்கை ஆகியவற்றின் பால் ஐயுறவு மனப்பான்மையின் விதைகள் அவர்களுடைய மனங்களில் விதைக்கப்படுகின்றன மற்றும் தங்களைச் சுற்றியுள்ள சமுதாயத்தில் அவர்கள் பார்க்கும் விவாகரத்தின் வளர்ந்துக்கொண்டிருக்கும் போக்கினால் அவர்களுடைய தோல்வி மனப்பான்மை உறுதிசெய்யப்படுகிறது.

1. பாதுகாவலரால் குறிப்பிடப்படும் சில சூழ்நிலைகள், மெய்மையைப் பற்றி வளர் இளம் பருவத்தில் உள்ளவர்கள் கொண்டிருக்கும் புலப்பாட்டினை வடிவமைக்கும் விதம், அவர்கள் தங்களைப் பற்றி நினைக்கும் விதம், வாழ்க்கையைப் பற்றி அவர்களின் கருத்துக்கள், அவர்களுடைய உணர்வுகள் மற்றும் உள்ளுணர்ச்சிகள், சரி, தவறு ஆகியவற்றைப் பிரித்துப்பார்க்கக்கூடிய அவர்களுடைய திறமை, மற்றவர்களின்பால் அவர்களுடைய நடத்தை, மற்றும் சமுதாயத்தின் நிறுவனங்களில் அவர்களுடைய நம்பிக்கை ஆகியவை குறித்து சிந்திப்பதென்பது, உங்களுக்கு உதவியாக இருப்பதை நீங்கள் காண்பீர்கள். உங்களுடைய கருத்துக்கள் சிலவற்றை எழுதவும்:

    a. இசைவளிக்கும் சமுதாயத்தின் கண்டிப்பின்மை மற்றும் ஒழுக்க சீர்கேடு: ____________________
    ____________________________________________________________________________
    ____________________________________________________________________________
    ____________________________________________________________________________
    ____________________________________________________________________________
    ____________________________________________________________________________
    ____________________________________________________________________________
    ____________________________________________________________________________
    ____________________________________________________________________________

b. குடும்ப ஒருமைப்பாடு பலவீனமடைவது மற்றும் பெற்றோர் கட்டுப்பாட்டின் படிப்படியான தளர்ச்சி ______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

c. மண்ணுலகின் வீண் பெருமைகள் செல்வங்கள் மற்றும் இன்பங்கள் ஆகியவற்றை வெறியார்வத்துடன் நாடுவதும், ஆடம்பரமான ஈடுபாட்டில் காலத்தைக் கடத்துவதும்

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

d. கலை மற்றும் இசை ஆகியவற்றின் சீர்க்கேடும், நூல்கள் மற்றும் அச்சு ஊடகம் ஆகியவற்றின் ஏற்றுக்கொள்ளப்பட்ட முன்மாதிரியில் தரக்குறைவு. ______________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

e. இன வெறுப்பு மற்றும் தேசாபிமான இறுமாப்பு. ______________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

_____________________________________________________________________________

_____________________________________________________________________________

_____________________________________________________________________________

_____________________________________________________________________________

2. இந்த நிலைகள் இளைய இளைஞர்களின் வாழ்வில் ஏற்படுத்தும் பாதிப்பைக் குறித்து தாங்கள் சிந்தித்துப் பார்க்கும்போது எவ்வாறான உணர்வுகள் உங்களுள் தோன்றுகின்றன? அத்தகைய விளைவுகளைப் பற்றித் தாங்கள் உணர்ந்து இருப்பதானது, எவ்வாறு அவர்களுடைய உண்மையான திறமைகளை வளர்ப்பதற்கு உங்களுக்கு உதவிடும்?

## பகுதி 13

சிதைந்து வரும் உலகத்தின் அறிகுறிகளுக்கு கவனத்தை ஈர்ப்பது என்பது இன்று சமூகத்தில் செயல்படும் ஆக்கபூர்வமான சக்திகளின் முக்கியத்துவத்தை மறுப்பதல்ல. செய்ய வேண்டியது என்னவென்றால், இளைய இளைஞர்களுக்கு அவர்களின் ஆன்மீக சக்திகளை வளர்க்கக்கூடிய சூழலை வழங்குவது, இந்த வழியில், அவர்கள் பொருத்தமான சமூக சக்திகளால் பாதிக்கப்படுவதை உறுதி செய்வது. தீங்கு விளைவிக்கும் சமூக நிலைமைகளிலிருந்து அவர்களை முற்றிலும் தனிமைப்படுத்தும் முயற்சிகள் நிச்சயமாக பயனற்றதாக இருக்கும். மாறாக, அவர்களைச் சுற்றியுள்ள உலகம் அவர்களின் எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் எவ்வாறு பாதிக்கிறது என்பதை மதிப்பிடுவதற்கும் பகுப்பாய்வு செய்வதற்கும் அவர்களுக்கு உதவ வேண்டும். இது தொடர்பாக, பிரச்சாரம் பற்றிய கேள்விக்கு குறிப்பாக கவனம் செலுத்தப்பட வேண்டும், ஏனென்றால் பெரும்பாலான சமூகங்களில், பிரச்சாரமானது இளைய இளைஞர்களின் மதிப்பீடுகள், மனப்பாங்குகள் மற்றும் கண்ணோட்டங்களை அதிகளவில் வடிவமைக்கிறது. இந்த விஷயத்தை விளக்குவதற்கு, விளம்பரத்தின் சில அம்சங்களை சுருக்கமாகப் பார்ப்பது போதுமானது.

பிரச்சாரங்களை ஆட்கொள்ளும் பொருளாதார ஆற்றல்கள் உண்மையைக் குழப்பிவிடுகிறது. உதாரணமாக, விளம்பரங்களில் காட்டப்படும், இரு பூரணமான ஆனால் அடைய இயலாதத் தோற்றம், இளைஞர்களின் சிந்தனைகளில், அவர்கள் தங்களையே அறிந்து கொண்டுவரும் காலத்தில், பாதிப்பினை ஏற்படுத்தும். எண்ணற்றச் செய்திகளில் பெண்களின் முக்கிய வேலை ஆடவர்களைக் கவர்வதே எனக் காட்டப் படுகிறது. பல கலாச்சாரங்களில் ஆண்மைத் தன்மையை வெறும் உடல் வலிமையைக் கொண்டு மட்டுமே வருணிக்கும் போக்கு மிகைப் படுத்தப் பட்டதாகும். வலிமையின்மை என்று அடையாளம் காணப்படும் எதுவும் உணர்சியின்றி மறுக்கப் படுகின்றன மற்றும் தாக்கும் பண்பு பிரகடனம் செய்யப் படுகிறது. விசித்திரமான வகையில், ஒரு குறிப்பிட்ட விதமான துணிவுத் தன்மை பெண்கள் பின்பற்றவேண்டும் என முன்வைக்கப் படுகிறது.

இளையோரைக் குறியிடும் பெரும்பாலான விளம்பரங்களின் நோக்கம், அவர்கள் அங்கத்துவம் பெறவேண்டும் என ஏங்கச் செய்திடும் ஒரு கலாச்சாரத்தை ஏற்படுத்துவதே ஆகும். இந்தக் கலாச்சாரத்தில் அவர்கள் ஒரு பொது மொழியைப் பேச கற்றுக் கொள்வார்கள், ஒரே விதமாக நடந்து கொள்வார்கள், யாவற்றுக்கும் மேலாக, வற்றாத பல வகையான பொருள்களை வாங்கிப் பயன்படுத்திடுவார்கள். நிச்சயமாகப், பொருள்களுக்கு மேலாக, இளைஞர்கள் ஒரு விசாலமான ஒழுக்கத்

தர முறையினுள் சேர்க்கப் படுகின்றனர். வரலாற்று அடிப்படையில், இளைஞர்கள் என்னும் வார்த்தை கூட, இந்த இளையப் பருவத்தினரின் வணிக வாய்ப்பினைக் கையாள்வதற்கே உருவாக்கப்பட்டது என்பது கவனத்தைக் கவரக்கூடிய ஒன்றாகும்.

பெருகிடும் ஆசைகளை முழுமையாகக் கையாள்வதற்கு, விளம்பரங்களால் உருவாக்கப்படும் கலாச்சாரமானது பால் தன்மையை இளைஞர்களின் வாழ்வின் மையத்தில் வைக்கின்றது. பால் தன்மைக்கு எவ்வித தொடர்பும் இல்லாத குடி பானங்கள், காதல் உறவுகளின் மாயையை உருவாக்கிடப் பயன் படுத்தப் படுகின்றன. தன்நலத்தில் போதாத உணர்வு மற்றும் உடல் நாற்றம், பூரணமற்ற சருமம் அல்லது நவநாகரிகமற்ற உடைகள் ஆகியவற்றின் காரணத்தால் மறுக்கப் படுவோம் என்னும் மனக்கவலை, உடல் அலங்காரப் பொருள்களை விற்பனை செய்வதற்காகப் பிரகடனம் செய்யப்படுகிறது. மற்றும் பால் பாகுபாடுத் தன்மையையும் சுதந்திரத்தையும் உறுதிசெய்திடும் நவீன நாகரிகம் மேம்படுத்தப்படுகின்றன. வாகனங்கள் கூட "ஹோட்" "ஹேன்சம்" போன்ற பாலுணர்வை மறைமுகமாக குறிப்பிடும் வண்ணம் வருணிக்கப் படுகின்றன. கடந்த பல பத்தாண்டுகளாக ஒழுக்க நெறிகள் வீழ்ச்சிக் கண்டுவரும் வேளையும், ஒழுக்க ரீதியில் விளம்பரங்களில் மறுக்க வேண்டிய விஷயங்கள் யாவும் மென்மேலும் வெளிப்படையாகக் காண்பிக்கப் படுகின்றன. படிப்படியாக, சில விளம்பரங்கள் தாமே, ஒரு விதமான பாலின உறவாக ஆகிவிடுவது போல் உள்ளது.

விரிவடைந்துவரும் உலகளாவிய “பதின்ம” வயதினர் சந்தையில், வர்த்தகச்சின்னங்களின் பங்கு இங்குக் குறிப்பாக எடுத்துக் காட்டப்படவேண்டும். இந்தப் பதின்மவயதினர் சந்தையை எவ்வாறு தங்கள் சொந்த நலனுக்காகப் பயன்படுத்துவது என்னும் ஆய்வுகளில், வர்த்தகச் சின்னங்களை பூஜிக்கும் பழக்கம் கட்டுபாடில்லாத பொருள் வாங்கும் பழக்கத்தைத் தூண்டிவிடும் ஒரு வலுவான அம்சமாக விளங்குகின்றது. மெய்யாகவே, இளைஞர்களின் நிலையில்லாத உலகில், வர்த்தகச் சின்னங்கள், நங்கூரங்கள் போன்ற ஓர் உணர்வை அவர்களுக்கு ஏற்படுத்தி, ஓர் உலக கலாச்சாரத்திற்கான நுழைவுரிமையாகவும் ஆக்கப்பட்டுள்ளது. இந்த ஆய்வுகள் போற்றும் இவ்விதக் கலாச்சாரமானது, நிச்சயமாக நாடுகளிடையே பெருகிவரும் வறுமையைப் பற்றி அக்கறை செலுத்துவதில்லை. பயனீட்டாளர் பொருட்கள் எல்லையற்ற இன்பத்திற்கான மூலாதாரங்கள் என்று இளைஞர்களை நம்பவைப்பதற்காக அவை மானிடத்தின் ஒரு பகுதி மட்டுமே அனுபவிக்கும் செழிப்புக் குறித்தக் காட்சிகளை மட்டுமே முன்நிறுத்துகின்றன.

“பதின்மவயதினர்” சந்தையைப் பற்றிய சில ஆய்வுகள், வாலிபர்களை வெவ்வேறு விதமான பொருட்களை வாங்கச் செய்வதற்காக, அவர்களுடைய மனப்பாங்குகள், விருப்பங்கள் ஆகியவற்றிற்கு ஏற்றவாறு பிரித்து வைக்கின்றன. உதாரணமாக, ஒரு குறிப்பிட்ட ஆய்வில், அவர்கள் ஆறு பிரிவுகளாக வகுக்கப் பட்டுள்ளனர்: "பணிவானவர்கள்" - இவர்கள் தங்கள் விதி மாற்ற முடியாது எனக் கருதுபவர்கள் மற்றும் மிகக் குறைவான முயற்சியைக் கொண்டு வாழ்க்கையை ஓட்டுபவர்கள்; "அதிர்ச்சி-எழுச்சி" உடையவர்கள் - இவர்கள் இன்பத்தைத் தேடுபவர்கள், இவர்களது சிந்தனை சமுதாய மற்றும் அரசியல் விஷயங்களிலிருந்து சுதந்திரமாக இருக்கின்ற காரணத்தால், அத்தகைய மனங்களில் வணிகச் சிறப்புச் சின்னங்களைப் பதிய வைக்கலாம்; "தன்னையே நம்புகிறவர்கள்" - இவர்களுக்கும் "அதிர்ச்சி-எழுச்சி" உடையவர்களுக்கும் உள்ள வேறுபாடு என்னவென்றால், இவர்கள் கடுமையாக உழைப்பதற்கு உற்சாகமும் திறமையும் கொண்டிருப்பார்கள், மற்றும் இவர்களுக்குப் பொருள்களும், சேவைகளும் முன்னேற்றம் அடைவதற்கும், முன்னணியில் இருக்கவும் உதவக்கூடிய கருவிகளாக உள்ளன; "சப்தமில்லாமல் சாதிப்பவர்கள்" - இவர்கள் இணங்கிப்போகின்றவர்கள், அரசியல் மற்றும் சமூக

போராட்டங்களிலிருந்து விலகி நிற்பவர்கள், தங்கள் குடும்பத்தாருடன் நெருங்கி இருப்பவர்கள், மற்றும் ஒரு பொருளின் தரம் மற்றும் நன்மையைக் கருதுபவர்கள்; "ஆதரிப்பவர்கள்" - இவர்கள் கல்விக் குறித்து அதிகம் ஈடுபாடில்லாதவர்கள், இவர்களது சிந்தனையில், விளையாட்டுப் போட்டி சாதனைக் குறிப்புகளும், விளையாட்டாளர்கள், விளையாட்டுக் குழுக்கள் ஆகியவற்றின் பெயர்களும் அரசியல் மற்றும் பொருளாதாரம் பற்றிய விஷயங்களை அகற்றிவிடும். இறுதியாக, "உலகைக் காப்பவர்கள்" - இவர்கள் உலகில் ஒரு நல்ல மாற்றத்தை ஏற்படுத்திட விரும்புவார்கள். இவர்களது முக்கியப் பங்கு, விற்பனையாளர்கள் ஒரு சமுதாய நலனுக்காக ஒரு விஷயத்தை பயன்படுத்தி அதை விற்பனைச் செய்யும் பொருட்களாக மாற்றி அமைப்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்துவதாகும். வர்த்தகச் சின்னங்கள் மற்றும் பயனீட்டின் பிடியிலிருந்து எதுவுமே தப்புவதில்லை என்பது தெளிவு.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள சுருக்கமான ஆய்வு, நிச்சயமாக விளம்பரங்களைப் பற்றி குறைகூறுவதல்ல. இதன் நோக்கமானது, விளம்பர பிரச்சாரங்களை, அதாவது வர்த்தக, அரசியல், இன, கலாச்சார விளம்பரங்களைத், திறனாய்வுச் செய்வதற்கான உங்கள் திறனை வலுப்படுத்துவதே ஆகும். அதன் வாயிலாக நீங்கள் இளைய இளைஞர்கள் தங்களின் சிந்தனை நடத்தை ஆகியவற்றின் மீதான அவற்றின் விளைவுகளைக் கண்டறிந்திட அவர்களுக்கு உதவிடக் கூடும். பின்வரும் மூன்று பயிற்சிகள் இந்த சிக்கலான விஷயத்தைப் பற்றித் தாங்கள் மேலும் சிந்தித்திட உதவிடலாம்.

எல்லா விஷயங்களும், வணிகக் குறியீடு மற்றும் நுகர்வோர்வாதத்திற்கு ஆளாகின்றன. குறிப்பாக சமூக ஊடகங்களின் வேகமாக மாறிவரும் அரங்கில், ஒரு நபரின் வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சமும் நுகர்வுக்கான பொருளாக மாறும். "பகிர்வு", "நட்பு" மற்றும் "வலையமைப்பு" ஆகியவற்றின் மூலம் உலகை ஒரு சிறந்த இடமாக மாற்ற மேம்போக்காக உருவாக்கப்பட்ட தளங்கள் உண்மையில் குழப்பமான விளம்பரங்களின் ஒளியலை வரிசைகளாக செயல்பட்டன, அவற்றின் வரம்பை விரிவுபடுத்துகின்றன மற்றும் அவற்றின் ஊடுருவலை ஆழமாக்குகின்றன. இருப்பினும், எவ்வாறான குழப்பமானதாக இருந்தாலும், இங்கே கொடுக்கப்பட்டுள்ள சுருக்கமான பகுப்பாய்வானது, விளம்பரத்தின் மீதான கண்டனத்தை நோக்கமாகக் கொண்டிருக்கவில்லை. பிரச்சாரத்தை விமர்சன -வணிக, அரசியல், இன, கலாச்சார- ரீதியாக ஆராய்வதற்கான உங்கள் திறனை மேம்படுத்துவதே இதன் நோக்கமாகும், இதன் மூலம் இளைய இளைஞர்களின் எண்ணங்கள் மற்றும் நடத்தையில் அதன் விளைவுகளை அடையாளம் காண நீங்கள் உதவலாம். இந்த சிக்கலான விஷயத்தைப் பற்றி மேலும் சிந்திக்க பின்வரும் பயிற்சிக் குறிப்புகள் உங்களுக்கு உதவலாம்:

1. விளம்பரங்கள் மொழியையும் காட்சிகளையும் பயன்படுத்திச் சாதாரண பொருள்களை கிளர்ச்சியூட்டலுக்கான மூலாதாரங்களாக மாற்றிவிடுகின்றன. அவற்றுக்கு பொறுத்தமானவற்றிற்கும் அதி மேலான ஒரு முக்கியத்துவத்தைப் பொருட்களுக்கும் நிகழ்ச்சிகளுக்கும் தருவதற்காக வர்த்தகச் சின்னங்கள் பயன்படுத்தப்படுகின்றன. உதாரணமாக, ஒரு குடிநீர் பானம், அதன் இயல்பான தன்மையைக் கொண்டு - அதாவது தாகந் தீர்க்கும் ஒரு பானமாக - வருணிக்கப்படாது. மாறாக அது இன்பமும் மனநிறைவும் அளிக்கும் பொருளாக விளம்பரம் செய்யப்படுகின்றது. ஃபேஷன் மற்றும் நாகரிகத் தோற்றம் ஆகியவற்றின் சின்னங்கள், ஆடைகளையும் அழகு அலங்காரப் பொருட்களையும் மிகைப்படுத்துகின்றன. இளமை எழுச்சியார்வத்தின் அடையாளச்சின்னங்கள் இனிப்புப் பண்டங்கள்விற்கப்படத் துணை செய்யும். சாகச மற்றும் விளையாட்டுத்திறனின் சின்னங்கள் மதுவை ஊக்குவிக்க உதவுகின்றன. ஒரு பொருளை, அது என்றுமே ஆகிவிடமுடியாத ஒன்றாக அதை ஆகச் செய்திட முயன்றிடும் சில

குறிப்பிட்ட விளம்பரங்களையும் அவை பயன் படுத்தும் வார்த்தைகளையும் காட்சிகளையும் நீங்கள் நினைவுகூற முடியுமா?

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

2. எந்த ஒரு பொருளையும் வாங்குவதினால் உருவாக்கப்படும் மகிழ்வானது தற்காலிகமான ஒன்றாக இருக்க வேண்டும், இல்லை என்றால் நாம் கொண்டிருக்கும் பொருள்களினால் நாம் மனநிறைவை அடைந்திடுவோம். எனவேதான், விளம்பரங்கள் தொடர்ச்சியாக ஆசையை ஏற்படுத்திடவும், நாம் கொண்டிருக்கும் பொருள்களின் மீது நாம் முழுமையாக திருப்தியையும் மனநிறைவையும் அடையாமல் இருப்பதையும் உறுதி செய்கிறது. இது எவ்வாறு செய்யப்படுகிறது?

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

3. சமூக நலனைச் சார்ந்த விஷயங்கள் கூட சில வேளைகளில் விற்பனை பொருள்களாக ஆக்கப்படுகின்றன என்று நாம் கூறியுள்ளோம். இவற்றைச் சார்ந்த சில உதாரணங்களை நீங்கள் வழங்கமுடியுமா?

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

4. தற்போதைய ஊடகச் சூழலில், உயர்வான லட்சியங்கள் துரதிஷ்டவசமாக வணிக நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன. நம்மில் உன்னத உணர்வுகளைத் தூண்டும் வார்த்தைகள் மற்றும் சொற்றொடர்கள் தயாரிப்புகளை விளம்பரப்படுத்த பயன்படுத்தப்படுகின்றன, மேலும் மனிதகுலத்தின் ஆன்மீக பாரம்பரியத்தின் பல்வேறு அம்சங்கள் வாங்கப்பட வேண்டிய பொருட்களாக கருதப்படுகின்றன. சில உதாரணங்களைத் தர முடியுமா?

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

_______________________________________________________________________________

_______________________________________________________________________________

5. உங்கள் மண்டலத்தில் இளைய இளைஞர்கள் ஈடுபடும் சமூக ஊடக தளங்களைப் பற்றி சிந்தியுங்கள். அத்தகைய தளங்களில் அவர்கள் பங்கேற்பது அவர்கள் உருவாக்கும் நட்பின் தன்மை, தங்களைப் பற்றிய அவர்களின் பார்வை மற்றும் அவர்களின் நம்பிக்கைகள் மற்றும் உயர்வான லட்சியங்களை எவ்வாறு பாதிக்கிறது? இந்த வெளிச்சத்தில், பின்வரும் கூற்றின் ஏற்புடைமைமையக் கவனியுங்கள்: சமூக ஊடகங்களில் அவர்களின் ஈடுபாட்டின் மூலம், இளைய இளைஞர்கள் தங்களை அறியாமலேயே தங்களை தயாரிப்புகளாக உணர்ந்து காட்டிக்கொள்ளக் கூடும்.

_______________________________________________________________________________

_______________________________________________________________________________

_______________________________________________________________________________

_______________________________________________________________________________

_______________________________________________________________________________

## பகுதி 14

இங்கு ஒரு எச்சரிக்கை தேவைப்படுகிறது. இக்காலச் சமுதாயத்தின் விளைவுகள் இளைஞர்களுக்குக் கேடு விளைவிப்பவையாக இருந்த போதிலும், உங்கள் சொந்த முயற்சிகளில் அதன் மீது அளவுக்கு அதிகமான கவனம் செலுத்துவது தவறானதாகும். இளைய இளைஞர்கள், சுற்றுப்புறச்சூழ்நிலைகளில் உள்ள தீமைகளிலிருந்து தொடர்ச்சியாகப் பாதுகாக்கப் படவேண்டிய மென்மையானவர்கள் எனக் கருதிடும் பழக்கத்திற்கு நாம் எளிதில் ஆளாகிவிடலாம். அத்தகையதொரு அணுகுமுறை அவர்களது ஆன்மீக சக்தியளிப்பிற்குக் கொண்டு செல்லாது. உங்கள் முயற்சிகளின் கவனம் எதில் செலுத்தப் படவேண்டும் என்றால், சமுதாய மாற்றத்திற்கு உறுதியான காரணிகளாகச் செயல்படவும், ஒரு மேலும் சிறந்த சமுதாயத்தை உருவாக்குவதற்கு அவர்களுடைய பங்கினை ஆற்றுவதற்குத் தயாராக இருக்கவும், அவர்களது ஆற்றல்களை வெளிப்படுத்துவதில் இருக்க வேண்டும். இக்காலத்தின் பிரச்சனை நிறைந்த உலகிலும் கூட, எல்லாக் கலாச்சாரங்களிலும், தாங்கள் வாழ்ந்திருக்கும் சுற்றுப்புறத்தின் துயரத்துற்குரிய நிலைகளுக்கு அப்பால் எழுந்து, சேவகம், கற்றுக்கொள்வதில் ஆர்வம், கூர்மையான நீதி உணர்ச்சி, மற்றும் தன்னலம் கருதாதத் தன்மையைக் கடைபிடிப்பது ஆகிய பண்புகளைத் தொடர்ச்சியாக வெளிப்படுத்திடும் எண்ணற்ற இளைய இளைஞர்கள் உள்ளனர்.

பல கல்வியாளர்கள் இளமைப் பருவத்தின் இடைநிலைக் கட்டத்தில் தங்களை வெளிப்படுத்திக் கொள்ளும் உள்ளார்ந்த அறிவுசார் மற்றும் ஆன்மீக சக்திகளைக் குறிப்பிடுகின்றனர். எடுத்துக்காட்டாக, கோட்பாட்டுச் சிக்கல்களில் இளைய இளைஞர்கள் காட்டும் ஆர்வத்தை அடிக்கோடிட்டுக் காட்டும் சில உதாரணங்கள் உள்ளன. ஒரு கல்வியாளர் சமூக மாற்றத்தில் அவர்கள் ஆற்றக்கூடிய பங்கினை வலியுறுத்துகிறார், ஒவ்வொரு தலைமுறை இளம் பருவத்தினரையும் "வளர்ச்சியின் செயல்பாட்டில் ஒரு முக்கிய மீளுருவாக்கம்" என்றும் இவர்கள் தங்களது ஆற்றல்களை எது உண்மை என தொடர்ந்து

உணரப்படுகிறதோ அதனைப் பாதுகாப்பதற்கும் மற்றும் அதன் இழந்துவிட்ட மீளுருவாக்க முக்கியத்துவத்தைப் புரட்சிகரமாக சரிசெய்வதற்குத் தனது விசுவாசத்தையும் ஆற்றலையும் வழங்கக் கூடியவர்கள்“, என்றும் கூறியுள்ளார். இன்னும் ஒரு சிந்தனையாளர், இளமைப் பருவத்தில் உள்ளவர்களை, "இன்னும் வளர்ந்து வரும் நிலையிலும் முழுமையாக உருவாக்கப்பட்ட கரிமக் கொள்கலன்களுக்கு" ஒப்பிடுகிறார். மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான அவர்களின் திறனைக் குறித்து அவர் கவனத்தை ஈர்க்கிறார், மேலும் கல்வியானது பல்வேறு புலனுணர்வு முறைகள் மற்றும் எந்த ஒரு அனுபவத்திற்கும் இளைஞர்கள் கொண்டுவரும் தீவிரத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்துகிறார், அத்தகைய தீவிரமானது, "உண்மையின் ஒருமைப்பாட்டுடன் சேர்ந்து" மனித சமூகத்தை, ஒரு உயிரற்ற, இயந்திரத்தனமான, வெற்று தத்துவார்த்தைக் கருத்தாக இருப்பதைவிட ஒரு உயிருள்ள, செழிப்பான, உண்மயான அன்புகொண்ட, மகிழ்ச்சியால் நிரப்பப்பட்ட மற்றும் உற்சாகமான உயிரினமாக மாற்ற முடியும் என்றும் குறிப்பிட்டுள்ளார். அதுவே தன்மை மாற்றத்தின் அதிசயம், அதுவே இளமைப் பருவத்தின் உள்ளாற்றல்.“

இந்த குறிப்புகளோடும், கடந்த பல பகுதிகளில் உள்ள ஆய்வுகளும், வாலிபப் பருவத்தினரைப் பற்றியக் கருத்தை வெளிப்படுத்தும்போது நாம் எவ்வளவு கவனமாக இருக்க வேண்டும் என்பதைச் சுட்டிக் காட்டுகின்றன. நிச்சயமாக, வருகின்ற ஆண்டுகளில் இவ்விஷயத்தைப் பற்றி நீங்கள் பலதரபட்டக் கருத்துக்களை மதிப்பீடு செய்வீர்கள் என்றாலும், மனித வாழ்வின் இந்த நெருக்கடியான காலக்கட்டத்தின் முக்கியத்துவத்தைக் குறித்த உங்களுடைய சொந்தப் புரிந்துணர்வானது, பெரும்பாலும் இந்தப் பகுதியிலும் கடந்த பகுதியிலும் குறிப்பிடப்பட்ட புனித வாசகங்களிலிருந்து உருவெடுக்கப் பட்டிருக்கும். உங்களுடைய உறுதியான நம்பிக்கையானது, இளைய இளைஞர்களுடனான உங்கள் சொந்த அனுபவத்தினால் நிச்சயிக்கப் படும் என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை.

## பகுதி 15

இளைய இளைஞர்கள் படிப்பதற்காக ரூஹி நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட நூல்களின் தொகுப்பானது, அதன் பிரதான வரிசையின் நூல்களைப் போலவே, குறிப்பாக முதல் சில நூல்கள் ஒரு பார்வையில், ஏமாற்றும் வண்ணம் எளிமையாகத் தோன்றலாம். அதன் எளிமை பெரும்பாலும் பயன்படுத்தப்படும் மொழியும் அதைச் சார்ந்த பயிற்சி பாகங்களையும் மட்டுமே சாரும். ஆனால், அது கற்பிக்கும் கருத்துக்கள் ஒவ்வொரு நிலையிலும் சிக்கலானதாகவும் ஆழமானதாகவும் உள்ளன. பரிந்துரைக்கப்படும் பாடங்களின் உரையாடல்கள் சிறுபிள்ளைத் தனத்திற்கும் அப்பாற்பட்டவையாகும். மெய்யாகவே அதனைக் கற்றிடும் பல இளைஞர்களுக்கு அது சவால் மிக்கதாக இருக்கலாம். இந்த நிலையிலுள்ள உரையாடலோடு தாங்கள் இணக்கமாக இருக்க வேண்டும் என்பதை உறுதிச் செய்வதற்காக, இந்தப் பகுதியிலும் அடுத்து வரும் சில பகுதிகளிலும், தாங்களே கூறியுள்ள பல இளைய இளைஞர்களின் சிந்தனைகளிலிருந்து வளமான உதாரணங்களை முன்வைக்கின்றோம். குறிப்பிடப் பட்டப் பத்திகள், ஏதாவது ஒரு வகையில், வன்முறையினால் பாதிக்கப்பட்ட இளைஞர்களிடமிருந்து பெறப்பட்டவையாகும். இத்தகைய இளைஞர்களின் வன்முறைச் செயல்களைப் பற்றித் தகவல் சாதனங்களால் பல விதமான காட்சிகள் காட்டப்பட்டுவருகின்றன, அதனால் இழப்பு மற்றும் நம்பிக்கை பற்றிய அவர்களின் கூறப்படாத கதைகளை இங்குக் கூறுவது அவசியமாய் உள்ளது.

முதல் வரிசையான வாக்கியங்கள், பதின்மூன்று வயது பையன் ஒருவனிடமிருந்து வந்தவையாகும் - அவனது உண்மையான அடையாளத்தை மறைப்பதற்காக அவனைப் பீட்டர் என அழைப்போம். இவன் வன்முறை, போர் ஆகியவற்றின் விளைவுகளை எட்டு வயதிலிருந்து கண்டுள்ளான். அவனுக்குப் பதின்மூன்று வயதான பிறகு, பள்ளிக்கூடங்களிலும் இளைஞர்களுக்கான ஸ்தாபனங்களிலும் அவன் அமைதியை மேம்படுத்தி வந்தான். இதனால் ஏற்படும் விளைவுகளை, தனது சொந்த நண்பர்களிடமிருந்து வரும் கடுமையான ஏளனங்கள் உட்பட, அனைத்தையும் தாங்கிக் கொண்டான்.

*"இவற்றில் எதுவும் என்னைக் கவலை அடையச் செய்யவில்லை. சமுதாயத்தைப் பற்றி அக்கறை செலுத்துவதும் நம்மால் உதவிட இயன்ற எதனையும் செய்யவேண்டியது அவசியம் என என் குடும்பம் நம்பியுள்ளது. நான் பதின்மூன்று வயதானவனாக இருந்த போதிலும், எங்களை எதிர்நோக்கும் பிரச்சனைகளில் மிகப் பெரியது வன்முறையும் போரும் என்பதை நான் காண முடிந்தது. யாவற்றுக்கும் மேலாக அமைதி அவசியமாக இருந்தது. நிச்சயமாக, ஒரு குழந்தை அமைதியை உருவாக்குவது சிரமம்தான், ஆனால், முயற்சி செய்வதனால் மட்டும்தான் எதுவுமே என்றும் அடையப் படுகிறது..."*

*"என் நாட்டில் பல ஆண்டுகளாக எண்ணற்றப் பொய்கள் கூறப் பட்டு வந்துள்ளதனால், மக்களுக்கு எதை நம்புவது, எதை நம்பக் கூடாது என்பதைப் பற்றித் தெரியவில்லை. எந்தவொரு பத்திரிகை, தொலைப்பேசி, தொலைக்காட்சி, அரசியல்வாதிகள், ஆயுதம் ஏந்திடும் குழுக்கள் ஆகிய எதையும் அவர்களால் நம்ப முடியவில்லை -- ஆனால் குழந்தைகள் அந்த வன்முறையைப் பற்றியும் அது எவ்வாறு நம்மைப் பாதிக்கின்றது மற்றும் ஏன் நமக்கு அமைதி தேவை என்பதை அவர்கள் செவிமடுக்கும்போது, ஏதோ ஒரு வகையில் தாங்கள் உண்மையைக் கேட்கின்றார்கள் என அவர்கள் புரிந்து கொள்கின்றனர்.*

*"'சிலர் தாங்கள் ஏழைகளுக்காகச் சண்டையிடுகிறார்கள் எனக் கூறுகின்றனர், ஆனால் எழைகள்தாம் மற்றவர்களை விட இன்னும் அதிகமாக இந்தப் போரில் வேதனைக்கு ஆளாகியுள்ளார்கள். சிலர் பழிக்குப் பழிவாங்குவதற்காக, அல்லது அதிகாரத்திற்காக, அல்லது அவர்களுக்கு வேறு வழி இல்லை என நினைக்கின்றதனால் சண்டை செய்கிறார்கள் என நான் நினைக்கின்றேன். சில இளைஞர்கள் ஆயுதம் ஏந்திடும் குழுக்களில் சேர்ந்துவிடுகிறார்கள், காரணம் அவர்கள் ஏழைகளாக இருப்பதனாலும், அவர்களுக்கு வேறு வழி தெரியாமல் இருப்பதனாலும் இவ்வாறு செய்கிறார்கள்.*

பீட்டரும் அவனது குடும்பமும் இந்தப் பொதுச் சண்டையின் மத்தியில் அச்சுறுத்தப் பட்டனர், அதனால், அவர்கள் தங்கள் பட்டணத்திலிருந்து வேறிடத்திற்கு வெளியேற அவசியமாகியது. அவரது தந்தை தமது அலுவலகமும் அவர்கள் தங்கியிருந்த தோட்டதிற்கும் இடையே பயணம் செய்து வந்தார், ஆனால் இந்தத் தற்காலிகச் சாந்தம் நிரந்தரமாக மேற்கொள்ளப் பட முடியவில்லை. அமைதிக்கான அவரது தீவிரமான ஆதரவின் காரணமாக இறுதியில் அவர் சுட்டுக் கொல்லப் பட்டார்.

*"போர் என்ன என்பது எனக்குத் தெரியும் என நான் நினைத்திருந்தேன் காரணம் நான் அதன் மத்தியில் வாழ்ந்திருந்தேன். இரவு நேரத்தில் தெருக்களில் போர்கள் நடைபெற்றன. பல முறை நான் துப்பாக்கிச் சத்தங்களால் உறக்கத்திலிருந்து எழுப்பப்பட்டேன். காலை வேளையில் நான்*

*பள்ளிக்கூடத்திற்குச் செல்லும்போது, அதன் அடையாளங்களை என்னால் காண முடிந்தது -- சாலை ஓரங்களில் இரத்தம், கட்டிடங்கள் துப்பாக்கிக் குண்டுகளால் தாக்கப் பட்ட அடையாளம். மேலும் தாக்கப் பட்டவர்களின் உடல்களை, என் தந்தையின் அலுவலகத்திற்கு அருகிலுள்ள பிணக்கிடங்கில் பார்த்துள்ளேன்.*

*"இதைப் பற்றிப், போர் என்றால் என்ன அர்த்தம் என்பதை அறிந்தவன் போல நான் துணிவாக பேசியுள்ளேன். ஆனால் என் தந்தைக் கொலை செய்யப் பட்டப் பொழுது, நான் துயரத்தால் மட்டும் மனம் உடைந்து போகவில்லை மாறாக இப்பொழுதுதான் போர் என்றால் என்ன என்பதை அறிந்தேன் என்ற காரணத்தாலும் மனம் சிதறிப் போனேன். சண்டை செய்ய வேண்டும் என்ற உணர்ச்சியைப் பற்றி நான் உணர்ந்தேன். எவ்வளவுதான் நமக்கு அமைதி தேவை என்றிருந்தாலும், அந்தப் போர் நம்மை தனிப்பட்ட முறையில் பாதிக்கும் போதும் நாம் வன்முறையை நோக்கி ஓர் அடி நெருங்கி வைப்போம். என் நாட்டில் எண்ணற்ற மக்கள் சிக்கிக் கொள்வது இதே வலைதான் ... "*

*அதன் பிறகு எதுவுமே முன்பைப் போல இல்லை. எங்கள் வீடு காலியான நத்தை ஓட்டைப் போல ஆகிவிட்டது. நன்கு அறியப்பட்ட வீதிகள் விசித்திரமானவையாகத் தோன்றின. எதுவும், எந்த இடமும் பாதுகாப்பானதாகத் தோன்றவில்லை. அமைதிக்காக நான் செய்த எல்லா வேலையும் பயனற்றதாக ஆகிவிட்டது என நான் நினைத்தேன், ஏனெனில், அது என் தந்தையைக் காப்பாற்றவில்லை. எங்கள் பட்டணத்தைச் சூழ்ந்திருந்த வன்முறை இறுதியில் எங்கள் குடும்பத்தின் இதயத்தையே தாக்கி விட்டது -- என்னால் அதைத் தடுத்திடவும் முடியவில்லை. இதற்கு நானே காரணம் என நான் கருதிக் கொண்டேன். என்னையே நான் இவ்வாறு கேட்டுக் கொண்டேன்: "என் தந்தை இத்துணை வன்முறையான வகையில் சாவதற்கு நான் செய்த செயல்கள்தான் என்ன?"*

குடும்பத்திற்குத் தொடர்ச்சியான மிரட்டல்கள் வந்துக் கொண்டெ இருந்தது, அதனால் தனது அன்பிற்குரியவர்களை பாதுகாக்க பீட்டர் ஒரு துப்பாக்கியை வாங்கினான். ஓர் இரவு, தம் தந்தை கொலை செய்யப்பட்டுப் பத்து நாள்களுக்குப் பிறகு, பீட்டரின் குடும்ப அங்கத்தினர் அனைவரும் தங்கள் வீட்டின் மேல் மாடியில் ஒன்று கூடி இருந்தனர். அவர் சமையல் அறைக்குள் கீழிறங்கி வரும்போது, ஒருவன் துப்பாக்கி ஒன்றைக் கையில் வைத்துக் கொண்டு, மேல் மாடி ஜன்னல்களைப் பார்த்துக் கொண்டிருப்பதைக் கவனித்தான்.

*நான் எனது துப்பாக்கியை எடுத்து இந்த மனிதனைக் கொல்ல முடியும் என்று எனக்குத் தெரியும்... அது என் தந்தையின் மரணத்திற்குப் பழிக்குப் பழி வாங்குவது போலாகும். நான் என் குடும்பத்தையும் பாதுகாப்பது போலாகும். மேலும் ஒருவர் கூட ... நான் சுட்டுக் கொன்றதற்கு என்மீது பழி சுமத்த மாட்டார்கள்... இவை அனைத்தும் உண்மையாக இருந்த போதிலும், நான் எதுவும் செய்யவில்லை.. என் தந்தை நான் அமைதிக்காக உழைக்க வேண்டும் என விரும்பினார். எவ்வாறு நான் இப்போது வன்முறையில் ஈடுபட இயலும்? என் தந்தையின்பால் மரியாதையும் அன்பையும் நான் காட்டுவதற்கான ஒரே வழி, என் குடும்பத்தை நான் பாதுகாப்பதற்கான ஒரே வழி, அமைதியை உருவாக்கிட முயற்சி செய்வதே ஆகும். அவனைக் கொலை செய்வது எனக்கோ, என் குடும்பத்திற்கோ, என் நாட்டிற்கோ அமைதியை கொண்டு வராது. மெய்யாகவே,*

*அவனைக் கொல்வதனால், நான் அனைத்தையும் இழந்து விடுவேன். நானும் அவனைப் போலவே ஆகிவிடுவேன்.*

*பீட்டர் அந்த அழையாமல் நுழைந்தவனைக் கவனித்து வந்தான். அவன் சில வேளைக்குப் பிறகு, எவ்விதத் தெளிவான காரணமுமின்றி, மறுபுறம் திரும்பிப் போய்விட்டான். அந்த நிகழ்வு முடிந்த சில காலத்திற்குப் பிறகு, பீட்டர் தனது துப்பாக்கியை விட்டொழித்து விட்டான், மற்றும் என்றுமே மீண்டும் ஒன்றைப் பெறுவதில்லை என்ற முடிவையும் செய்தான்.*

அடுத்தக் கதையைப் படிப்பதற்கு முன், நீங்கள் பீட்டரின் சில தெளிவாகத் தோன்றிடும் குணங்களை அடையாளங் காண்பீராக, மற்றும் ஆழமான விஷயங்களைப் பற்றி அவன் சிந்திக்கக் கூடிய திறமையைப் பற்றி ஒரு சில வார்த்தைக்ளைக் குறிப்பிடுவீராக.

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

## பகுதி 16

மேரி (பெயர் மாற்றப்படுள்ளது) சண்டையின் அச்சுறுத்தல் தொடர்ச்சியாக இருந்த ஒரு சூழலில் வளர்க்கப்பட்டவர்; நண்பர்கள் குழு ஒன்றோடு உடன்பாடு கொள்ளாததற்கான விளைவைப் இளைய வயதிலேயே மேரி அறிந்தார்:

*நான் பதினோறு வயதாக இருந்த போது, எனக்கு என்னிடம் பேசாதிருக்கும் தண்டனை வழங்கப் பட்டது. காரணம் ஒரு வாக்கு வாதத்தில் நான் எவரையும் ஆதரிக்காத காரணத்தால். என் நண்பர்கள் குழுவினர் எங்களோடு படிக்கும் ஒரு பெண்ணின் மீது திருட்டுப் பழியைச் சுமத்தினார்கள், அதனால் பெரும் சச்சரவு தோன்றியது. எல்லாரும் இந்தப் பெண்ணை ஆதரிக்க வேண்டும் அல்லது அவளை எதிர்க்க வேண்டும் என்பதாக இருந்தது, மற்றும் என் நண்பர்கள் அனைவரும் அவளை எதிர்த்து நின்றனர். எல்லாரும் நான் அவர்களை ஆதரிப்பேன் என்று எதிர் பார்த்தனர், ஆனால், இந்தப் பெண்தான் திருடினாள் என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை. இருப்பினும், என்னால் உறுதிச் செய்ய முடியவில்லை. அதனால், நான் எதுவும் கூறவில்லை. எல்லாரும் கோபம் கொண்டனர், மற்றும், ஓராண்டுக் காலமாக, ஒருவர் கூட என்னோடு பேசவில்லை."*

மேரி ஒரு ஆணுடன் நட்புக் கொண்டிருந்தாள், மற்றும் அவன் மீது நெருக்கமான உணர்வை வளர்த்திருந்தாள். அவர்கள் நெடுந்தூரம் சேர்ந்து நடப்பதுண்டு மற்றும் அவர்களுடைய

எதிர்காலத்தைப் பற்றிப் பேசுவார்கள். ஆனால், ஒரு நாள், அவன் ஒரு துப்பாக்கியைத் துடைத்துக் கொண்டிருப்பதை அவள் பார்த்துவிட்டாள். அவன் அதைப் பெற்றிருப்பதை அவள் அறிந்ததில்லை.

*நான் அங்கே நுழைந்தவுடன், எவ்வித ஆச்சரியத்துற்குரிய விஷயம் நடக்காததுபோல் அவன் என்னைப் பார்த்துச் சிரித்தான். நான் எப்பொழுதும் வன்முறையை வெறுத்தேன், துப்பாக்கியை வெறுத்தேன், போரை வெறுத்தேன். அவன், அதைப் போன்றவர்கள் கூறுவதைப் போல, காரணங்கள் கூற முயன்றான், ஆனால், எங்களுக்குள் உள்ள உறவு அதோடு முடிந்து விட்டது என்று நான் அவனிடம் கூறினேன். 'எனக்கோ அல்லது என் குழந்தைகளுக்கோ நான் இவ்விதமான வாழ்க்கையை விரும்பவில்லை' என நான் கூறினேன். அப்போது நான் மிகவும் இளையவளாக இருந்தேன், அதனால், இப்போது அது ஒரு கேளிக்கையானதாகத் தோன்றுகிறது. ஆனால் என் உலகமே இரண்டாகப் பிளந்து விடுவது போல இருப்பதை நான் உணர்ந்தேன்.*

இந்த நிகழ்வுக்குப் பிறகு மேரியின் கல்வித் தரவரிசை குறைந்து கொண்டே வந்தது. அவளது தாயார் கவலைக்கு ஆளானார். பின்னர் மேரி தனது ஆசிரியர் ஒருவருடன் பேசினாள்:

*திரு ... நான் அவரோடு அவ்விஷயங்களைப் பற்றிப் பேச விரும்புகிறேனா எனக் கேட்டார்." நாங்கள் ஒரு சிறிய கடைக்குச் சென்றோம். கொஞ்சம் பலமான காப்பி அருந்தி கொண்டே நான் என் நண்பனைப் பற்றியும், அந்தத் துப்பாக்கி, என் நண்பர்களின் பேசாதிருக்கும் தண்டனை, பெண்கள் என்னைக் கேலி செய்தது, என் அவமான உணர்வு, உடைந்துபோன இதயம் எல்லாவற்றையும் கொட்டித் தீர்த்தேன். அவர் என்னைப் பார்த்துச் சிரிக்கவில்லை அல்லது என்னை ஓர் அறியாத இளையவளாகவோ ஏளனமாகவோ உணரச் செய்யவில்லை.*

*என் நண்பன், துப்பாக்கி, என் நண்பர்களின் மௌனம், சிறுமிகளின் கிண்டல், என் சங்கடம், உடைந்த இதயம் என்று முழு கதையையும் கொட்டினேன். அவர் என்னைப் பார்த்து சிரிக்கவில்லை, அல்லது என்னை இளமையாகவும் கேலிக்குரியவராகவும் உணரவைக்கவில்லை.*

*'உன் எதிகாலம் உன் கையில், இதை நீ புரிந்துகொள்ள வேண்டும்' என அவர் என்னிடம் கூறினார். 'உன் எதிர்காலம் மற்றவருக்குச் சொந்தமானதல்ல, உன் பெற்றோருக்கும் சொந்தமானதல்ல, குறிப்பாக அந்த ஆண்டவனுக்குச் சொந்தமானதல்ல. அது உனக்குச் சொந்தமானது, மற்றும் நீ உன் விருப்பத்திற்கு ஏற்றவாறு அதை எவ்விதமாகவும் ஆக்கிடலாம்.*

பதிநான்கு வயதில், மேரி, தனது பள்ளிக்கூடத்தில் ஒரு மாணவத் தலைவியாக ஆகிவிட்டுத் தனது சக நண்பர்களிடையே சமாதானத்தை வளர்க்கும் முயற்சியில் ஈடுபட்டாள். அந்த நாட்களில், அவள் மனதில் நிறைந்திருந்த சிந்தனைகள் சில பின்வருமாறு:

*"வறுமையை நிறுத்துவது அந்தப் போரை நிறுத்திட உதவிடும் என்பதை நாங்கள் அறிந்திருந்தோம், ஆனால் அதைப் பற்றி எங்களால் எதையும் செய்ய முடியவில்லை. எங்களால் தோட்டாக்களையும் வெட்டுக் கத்திகளையும் தடுக்க முடியவில்லை. எங்களால் அந்த வன்முறையை நிறுத்த முடியவில்லை. ஆனால், எங்களுக்குள்ளேயே அமைதியை உருவாக்கிட ஆரம்பிக்க முடியும் என்பதை நாங்கள் நம்பினோம்..."*

*"எவ்வித அசாதாரண விஷயங்களைப் பற்றியும் நான் எளிதில் உணர்ச்சிவயப் படுவேன். சில வேளைகளில், ஏதாவது கெட்ட விஷயம், குறிப்பாக என் குடும்பத்திற்கு, நடந்திடக் கூடலாம் என்னும் அச்சம், என்னைக் கண்ணீர் வடிக்கச் செய்தது. எங்காவது ஓடி விடலாம் போலிருந்தது. இருப்பினும், மற்றக் குழந்தைகள் என்னையே நம்பி இருந்தனர், மேலும் ஒரு விதத்தில் எனது இன்னும் பிறந்திராத குழந்தைகளும் என்னையே நம்பி இருக்கின்றனர் என்பதை நான் உணர்ந்தேன். எவ்வளவுதான் நான் அச்சம் கொண்டிருந்தாலும், என்னால் திரும்பி ஓட முடியவில்லை. என்னால் கவனமாகவும் ஆபத்துக்களிலிருந்து தற்காத்துக் கொள்ள முயற்சி செய்யவும் மட்டுமே முடியும்.*

மேரியின் சில சிறந்த பண்புகள் யாவை?

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

## பகுதி 17

இன்னும் மூன்று இளைஞர்களிடமிருந்து வரும் கருத்துக்கள் பின்வருமாறு. அவர்கள் ஒவ்வொருவரும் உயர்வான சிந்தனைகளையும் மிக மென்மையான உணர்வுகளையும் வெளிப்படுத்துகின்றன. முதலாவது ஒரு பதினாறு வயது பெண்ணிடமிருந்து வருவதாகும். இவள் பன்னிரெண்டு வயதில் தனது நண்பன் ஒரு குண்டர் கும்பல் சண்டையில் ஈடுபட்டுக் குத்திக் கொலைச் செய்யப்படுவதைப் பார்த்திருந்தாள். இவளால், தனது நண்பனை மறக்கமுடியவில்லை, மற்றும் அமைதியை மேம்படுத்துவதில் தன்னை அர்ப்பணிக்க முடிவெடுத்தாள். அதன் பிறகு, வன்முறையால் பாதிக்கப்பட்டக் குழந்தைகளுக்கு உதவி புரிந்திடத் தொடங்கினாள்:

*எட்டு அல்லது ஒன்பது வயதிலுள்ள குழந்தைகள் கூடக் குண்டர் கும்பலில் சேர்ந்தனர், காரணம் அது ஒரு கவர்ச்சியான ஒன்றெனவும் அவர்கள் கருதினார்கள், அல்லது இந்த கும்பல்கள் அவர்களுக்குத் தெருவில் பாதுகாப்புக் கொடுப்பார்கள் என அவர்கள் கருதினார்கள். பெரும்பாலான நிகழ்வுகளில், அவர்கள் தங்கள் வீட்டில் நடக்கும் வன்முறைகளிலிருந்து தப்பிவிட முயற்சி செய்கின்றனர், ஆனால் வீதிகளிலே அதைவிட மோசமான சம்பவங்கள் நடப்பதைக் கண்டாள்.*

*"..க்கு நான் பஸ் ஏறிச் செல்வேன் ..., ஆனால், பெரும்பாலான பஸ் டிரைவர்கள் நான் செய்ய முயற்சிக்கும் வேலையை பற்றி அறிவார்கள். என்னால் கொடுக்க முடிந்த கட்டணத்தை மட்டுமே அவர்கள் வாங்குவார்கள், மேலும், பல முறை என்னை இலவசமாகச் செல்ல அனுமதிப்பார்கள்.*

*....க்கு செல்லும் சாலை, செங்குத்தான பாறைகள் மீது மிகவும் அபாய நிலையில் உள்ள கரடுமுரடான குடிசைகளைக் கடந்து, வளைந்து நெளிந்து மேலே செல்லும். அந்த மலைகள் கடுமையாக வெட்டப் பட்டுள்ளன, அதிலிருந்து கட்டமைப்புத் திட்டங்களுக்காக பாறைகள் நீக்கப் பட்டுள்ளன. அத்தகைய வேலை மிகவும் கடினமானது, உடல் வேதனைத் தரக்கூடியது, மற்றும் குறைவான சம்பளமுடையது, ஆனால் ஆதரவற்றக் குடும்பங்களிலிருந்து வரும் பல குழந்தைகள் இந்த இடத்தில் வேலை செய்கின்றன. அவர்களது குடும்பங்கள் கடும் வறுமைக்கு ஆளாகிவிட்டக் காரணத்தால், அந்தக் குழந்தைகள் பள்ளிக்குச் செல்வதில்லை மற்றும் வருமானம் தேடுவதற்காகத் தங்களால் இயன்ற எதையும் செய்வார்கள்.*

*அந்தச் சாலையிலிருந்து, சறுக்கச் செய்திடும் கணுக்கால் வரை ஆழமாய் உள்ள சேற்றின் வழியாகத், துர்நாற்றமும் மாசுபடிந்த ஆற்றை கடந்திடும் தற்காலிக கால்நடை பாலம் ஒன்றை கடந்து செல்வேன். அந்தப் பள்ளிக்கூடம் ஆறு பாழடைந்த அறைகளைக் கொண்டு, தகரக் கூரையின் கீழ் இணைக்கப் பட்டிருக்கும். மரத்தால் செய்யப்பட்ட மேசைகள் சேதமுற்றும் உடைந்தும் இருக்கும். பள்ளி அறைகளின் பக்கங்களில் குப்பை வீசப்பட்டிருக்கும். அங்கு மின்சார வசதி இல்லை. ஒரு பள்ளி அறையில், எந்த ஜன்னலும் இல்லாமல் ஒரு கூரைச் சாளரம் மட்டுமே கொண்டிருந்தது. தரை மண்ணால் அமைக்கப் பட்டது. கூரையின் மீது மழை அத்துணை சத்தமாக விழுகின்ற காரணத்தால், எல்லோரும் சத்தமாகப் பேச வேண்டியுள்ளது. மேலும் எங்கு பார்த்தாலும் மழைத் தண்ணீர் ஒழுகிடும். ஒரு பள்ளி அறையின் சுவர், குழந்தைகள் வரைந்த படங்களால் அலங்கரிக்கப் பட்டிருக்கும். அவை அவர்களைச் சுற்றியுள்ள வீடுகளுக்கு எதிர்மாறாக, அழகான வீடுகளின் படங்களைக் கொண்டுள்ளன. ஒருகால் இவை அவர்கள் முன்பு இருந்த வீடுகளின் காட்சிகளாகவோ அல்லது வருங்காலத்தில் அவர்கள் வசிக்க ஏங்கிடும் வீடுகளின் காட்சிகளாகவோ இருக்கலாம்.*

*"பல பெற்றோர்களின் முகத்தில் சோகம் காணப்பட்டது. தங்கள் குழந்தைகளோடு அவர்கள் காரசாரமாகப் பேசுவார்கள், அவர்களைத் திட்டி அழைப்பார்கள். ஆனால் அந்தப் பயிற்சியின் போது சில வேளைகளில் அவர்கள் மாறத் துவங்குவார்கள். அவர்களுள் சிலர் குழந்தைகள் ஒழுங்காக நடந்து கொள்ள தாங்கள் அவர்களை அடிக்க வேண்டும் எனக் கருதுகின்றனர். ஆனால், அடிப்பது அவர்களை வீட்டை விட்டு வெளியேறவும் வீதிகளுக்குச் செல்லவும் செய்திடும் என்பதை உணர்கின்றனர்.*

அடுத்த பத்தி, பதினொன்று வயதில் தன் வீட்டிலிருந்து வெளியேறிப், போதை மருந்துக்கு அடிமையாகிய ஓர் இளம் பெண்ணின் வார்த்தைகளாகும். அவள் ஒரு நண்பனின் பிடிவாதமான உதவியினால் காப்பாற்றப்பட்டு, இறுதியில் அமைதிக்காக அர்ப்பணிக்கப்பட்ட ஓர் இளைஞர் இயக்கத்தில் சேர்ந்தாள்:

*"எங்கள் வாழ்க்கை உண்மையாக எப்படிப்பட்டது என்பதை விளக்குவதற்கு மிகவும் சிரமமானது. எவ்வளவுதான் நான் அமைதிக்காகப் போராட முயற்சித்தாலும், நான் மீண்டும் வன்முறைக்குப் பின்னோக்கி இழுக்கப் படுகிறேன் என்பதை ஒப்புக்கொள்ள நான் அச்சம் கொண்டிருந்தேன்... இந்த வாழ்க்கையிலிருந்து தப்பிவிட நான் என்றும் ஆவல் கொண்டிருந்தேன். நான் என்னிடமே பொய் சொல்லிக் கொண்டும் .... அவரிடமும், எல்லாம் நன்றாக உள்ளன என நடித்துக் கொண்டும் இருந்தேன். அது உண்மை அல்ல. சில வேளைகளில் நான் போதை மயக்கத்தில் இருப்பேன்.*

*ஒவ்வொரு இரவும் வீட்டில் சண்டை நடக்கும். அவர்கள் என்னிடம் கூச்சல் போடாவிட்டால், என் தாயும், மாற்றாந் தந்தையும் ஒருவர் மற்றவரிடம் கூச்சலிட்டுக் கொண்டிருப்பார்கள். அதை என்னால் சகித்துக் கொள்ள முடியாது, அதனால் நான் வீதிகளுக்குத் தப்பிச் செல்வேன். மேலும் அந்த வீதிகளில் ஓர் இளைஞருக்குத் தீங்கிழைக்கக் கூடிய பல விஷயங்கள் உள்ளன... ஒரே சமயத்தில் நான் இரண்டு பாதையில் கடந்து செல்கிறேன்.. எவ்வேளையிலும் அமைதியின் பாதையில் நான் கடந்து செல்லக் கூடும் என நான் ஏங்குவதுண்டு. என் போராட்டமும், எப்படி நான் தப்பினேன் என்பது எதாவது பயன்தரும் என நான் நினைக்கிறேன்... இன்னும் அதிகமான முதியவர்கள் ஒத்துழைக்க முன்வந்தால், நாங்கள் என்ன கற்றுள்ளோம் என்பதைப் பற்றிக் கேட்க முன்வந்தாள், மற்றும் எங்களோடு சேர்ந்து உழைத்தால், இளைஞர்கள் அமைதிக்காக இன்னும் அதிகமாக உழைப்பார்கள் என நான் நம்புகிறேன். வீட்டில் நமக்கு அமைதி இருந்தால், அதுவே ஒரு சிறப்பான ஆரம்பமாக இருக்கும்.*

இந்த இறுதிப் பகுதி பலவந்தமாகத் தூக்கிச் செல்லப்பட்ட சகோதரனைக் கொண்ட பதினைந்து வயதுடைய ஓர் ஆடனவால் எழுதப்பட்டது. சில காலத்திற்குப் பிறகு, அவன் கைதியாக வைக்கப் பட்டிருக்கும் வேளையில், அவனிடமிருந்து அவனது குடும்பத்தினர் செய்தியைப் பெற்றனர் மற்றும் அவனுடன் தொடர்புகொள்ள அவர்கள் அனுமதிக்கப்பட்டனர்:

*"அவன் நம்பிக்கையும் ஆவலும் கொண்டிருக்க வேண்டும் என அவனுக்கு உற்சாகம் ஊட்டுவதற்காக நான் அவனுக்குக் கவிதைகளை அனுப்பி இருந்தேன். நான் அவனது ஆலோசனைக்குச் செவி சாய்த்துக் கடுமையாகப் படிக்கின்றேன் என நான் அவனிடம் கூறினேன். அவன் அண்மையில் இவ்வாறு பதில் எழுதியதற்கு நான் மிகவும் மகிழ்ச்சி கொண்டேன்: "நீ பள்ளிக்கூடத்தில் நன்றாக படிக்கின்றாய் என்பதை அறிந்து நான் மகிழ்கின்றேன் ... அவ்விஷயத்தில்தான் தான் தவறு செய்தேன். என் படிப்பில் நான் முழுக் கவனம் செலுத்தவில்லை என்பதற்காக நான் வருந்துகிறேன். உதாரணமாக, எனக்கு உண்மையாகவே புத்தகங்களைப் படிப்பதற்குப் பிடித்ததே இல்லை ... ஆனால், இங்கே பல வகையான முப்பது புத்தகங்களுக்கு மேல் நான் படித்திருக்கிறேன், இன்னும் படிப்பதற்கு ஏராளமான புத்தகங்கள் உள்ளன. எனக்குத் தெரியாத விந்தையான வார்த்தைகளை நான் அகராதி ஒன்றை எடுத்துக் கொண்டு தேடுவேன்.. இதற்கு முன் இதை நான் சுயமாகவே செய்திருக்க மாட்டேன்..."*

*"அவன் பாதுகாப்பாக இருந்த போதிலும், நான் இன்னும் கவலைப் படுகிறேன். என் சகோதரனைப் பிடித்து வைத்திருப்பவர்களோடு என்னால் பேச முடிந்தால், அவர்களை இரக்கம் காட்டும்படி கேட்டுக் கொள்வேன், மற்றும் அவர்கள் ஏற்படுத்தியுள்ள வேதனையைப் புரிந்துக் கொள்ளும்படியும் கேட்டுக் கொள்வேன்.*

*"நாம் அமைதியைச் சாதிக்க வேண்டும் என்றால், மன்னிக்கும் தன்மை மிக அவசியம் என நான் நினைக்கின்றேன். மன்னிக்கும் தன்மை இல்லாமல் இந்தப் போர் ஒரு முடிவுக்கு வராது. குறிப்பாக, நம்மைப் போல் வேதனைக்கு ஆளாக்கப் பட்டவர்கள் மன்னிப்பது முக்கியமாகும்.*

*"இதற்காகத்தான் நான் உழைக்கின்றேன் என நான் எண்ணுகிறேன் -- நான் மன்னிக்கும் தன்மைக்காக உழைக்கின்றேன்."*

இந்தப் பகுதியில் குறிப்பிடப்பட்டள்ள இளைஞர்களால் வெளியிடப்பட்ட பண்புகள் சிலவற்றை உங்கள் குழுவுடன் கலந்துரையாடி, உங்கள் சிந்தனைகளை கீழே எழுதவும்.

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

## பகுதி 18

இறுதியாகப், இளைய பருவத்தைப் பற்றிய ஓர் ஆய்வு, அது அத்துணை சுருக்கமானதாக இருந்த போதிலும், சமயத்தின் இளம் வீரரான ருஹ§ல்லாவின் வாழ்க்கையைப் பற்றிக் கவனிக்காது இருக்க முடியாது. இவர் பன்னிரண்டு வயதிலேயே, தியாக மரணம் என்னும் கோப்பையிலிருந்து மகிழ்வுடன் பருகினார். ஏழு வயதில் இவர் தமது தந்தையான, இறை சமயத்தின் திருக்கரமாகிய வர்கா அவர்களோடும், தமது மூத்த சகோதரரோடும் புனித ஸ்தலத்திற்குச் செல்லும் பாக்கியத்தை வழங்கப்பட்டிருந்தார். அந்தப் புனிதமான சுற்றுப்புறத்தில் ருஹ§ல்லா ஆன்மீகத்தில் செழிப்படைந்தார், மற்றும் பஹாவுல்லாவின் முன்னிலையென்னும் சூரிய ஒளிக்கதிர்களின் கீழ் இதம் பெற்றார். ஒரு நாள், பஹாவுல்லா அவர்கள், "இன்று நீ என்ன செய்தாய்?" என்று ருஹ§ல்லாவிடம் கேட்டதாகக் கூறப்பட்டுள்ளது.

அவர் பதிலளித்தார், "நான் . . . [ஒரு குறிப்பிட்ட ஆசிரியரிடம்] பாடம் கற்றேன்.'

"நீ என்ன பாடம் கற்றாய்" என்று பஹாவுல்லா கேட்டார்.

"[இறைத்தூதர்களின்] மறு வருகையைப் பற்றி' என ருஹுல்லா கூறினார்.

'இதற்கு என்ன பொருள் என நீ விளக்கம் கூற முடியுமா?' என்று பஹாவுல்லா கேட்டார்.

"மறு வருகை என்பது மெய்மைகள் மற்றும் தன்மைகள் ஆகியவற்றின் மறு வருகையாகும்" என்று அவர் பதிலளித்தார்.

அவரிடம் மேலும் கேள்விகள் கேட்டுப், பஹாவுல்லா கூறினார்: "அவை உன் ஆசிரியர் கூறிய அதே வார்த்தைகளாகும். அதனை நீ கிளி போல சொன்னதைச் சொல்கிறாய். அந்தக் கருத்தைப் பற்றி நீ புரிந்து கொண்டதை உன் சொந்த வார்த்தைகளைக் கொண்டு என்னிடம் சொல்வாயாக." அதற்கு ருஹுல்லா:

"அது ஒரு செடியிலிருந்து ஒரு மலரை இந்த ஆண்டில் பறிப்பது போலாகும்,' என்று ருஹு§ல்லா பதிலளித்தார். 'அடுத்த வருடத்தின் மலர் இந்த மலரைப் போலவே தோன்றிடும், ஆனால் அது இதே மலரல்ல.'

பஹாவுல்லா இந்தக் குழந்தையை அதன் அறிவாற்றலுக்காகப் புகழ்ந்தார், மேலும் அவர் ஜினாப்-இ-முபாலிக் (மதிப்பார்ந்த பஹாய் போதகர்) என்று வழக்கமாக அழைக்கப்பட்டார்.

ருஹுல்லாவின் சிறந்த குணங்களை வெளிப்படுத்தும் மேலும் பல கதைகள் உள்ளன. அவர் ஒரு சாதாரண குழந்தை அல்ல என்பது நிச்சயம். மேலும் உங்கள் குழுக்களில் சேரவிருக்கும் இளைய இளைஞர்கள், பன்னிரெண்டு வயதில் இவர் அடைந்துள்ள தியாகம் என்னும் சிகரத்தைப் போலவே அடைய வேண்டும் என்று எவருமே எதிர்பார்க்கக் கூடாது. இருப்பினும், கடந்த சில பகுதிகளில் குறிப்பிடப்பட்டப் புனித வாசகப் பகுதிகள், மனிதர்கள் ஓர் இளம் வயதிலேயே வெளிப்படுத்தக் கூடிய உயர்ந்த தன்மையைப் பற்றிக் குறித்துக் காட்டுகிறது. சமயத்தின்பால் அர்ப்பணம் மற்றும் இறை அன்பரின் பாதையில் தியாகம் செய்வது யாவும் தியாக மரணத்தில் முடிவடைவதில்லை. ஆயினும், தியாகத்தின் மர்மத்தை ருஹுல்லா என்னவொரு ஏக்கத்துடனும் அளவற்ற மகிழ்ச்சியுடனும் விவரிப்பதை பின்வரும் புகழ்பெற்ற கவிதையின் மன்றாடல் வெளிப்படுத்துகின்றது:

> தெய்வீகக் கொடை என்னும் கோப்பையிலிருந்து என்னைப் பருக்கச் செய்வீராக பிறகு என் பாவங்களையும் என் பலவீனத்தையும் போக்கிடுவீராக;
> ஏனெனில் என் பாவங்கள் பெரிதாக இருந்தபோதிலும் என் பிரபுவின் கருணை அதைவிடப் பெரியதாகும்.
>
> தெய்வீகப் பெருவிருந்தின் கோப்பையை ஏந்துபவரே, வருக!
> வாரும், என் ஆன்மாவிற்குப் புத்துயிரூட்டுவீராக,
> அதிசிறந்த அன்புக்குரியவரின் பாதையில் தியாகம் செய்வதற்காக
> என்னை தகுதியுள்ளவனாக ஆக்குவீராக

நீங்கள் விரைவில் ஒருங்கினைக்கவிருக்கும் குழுவில் இருக்கும் இளைய இளைஞர்கள் ருஹுல்லாவின் வாழ்வை வாழப்போவதில்லை. ஆயினும் இதில் மேற்கோள் காட்டப்பட்ட பகுதிகளும் அதற்கு முந்தைய சில பகுதிகளும் ஒரு மனிதன் சிறுவயதிலிருந்தே எத்தகைய உன்னதத்தை வெளிப்படுத்த முடியும் என்பதையேக் குறிக்கிறது. இந்தப் பகுதியின் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டக் கருத்தை நமக்கு நினைவுப்படுத்துகிறது, அதாவது, இளைய இளைஞர்களின் உணரும் தன்மையை உயர்த்துவதானது இரண்டு திசைகளுக்குக் கொண்டு செல்லப் படலாம். ஒன்று கடவுளின் விருப்பத்திற்கு அடிபணிதலும் மனித இனத்திற்காகத் தன்னலங்கருதா தியாகத்துடன் சேவை செய்வது. மற்றொன்று தான் மற்றும் தாபம் என்னும் சிறையினுள் அகப்படுவதாகும். நமது கலந்தாலோசனை நம்மை முன்வாலிபப் பருவத்தின் இயல்பைப் பற்றியும், இளைய இளைஞர்களின் உள்ளாற்றல்கள் பற்றியும், அவர்கள் வாழும் சுற்றுப்புறச் சூழ்நிலைகள் அவர்கள் மீது செலுத்திடும் பாதிப்புக்களைப் பற்றியும் நாம் ஆராய்ந்தோம். இளைய இளைஞர்களின் உள்ளார்ந்த தன்மைகள் யாவை என நீங்கள் கருதிடுபவைகளைப் பற்றியும், அவர்களுடைய ஆன்மீக மற்றும் அறிவாற்றல் ஆகியவற்றின் மேம்பாட்டை உறுதி செய்வதற்காக என்ன செய்ய முடியும் என்பதைப் பற்றி ஒரு சில வாக்கியங்களை எழுதுவதற்கு இதுவே சரியான தருணமாகும்.

## பகுதி 19

இளைஞர்களின் உள்ளார்ந்த ஆற்றல்களைப் பற்றி ஆராய்வதற்காக இந்தப் பாகத்தின் பெரும்பாலான பகுதிகளைச் செலுத்திவிட்டு, இளைய இளைஞர்களின் ஆன்மீக சக்தியளிப்பு செயல்திட்டத்தில் உங்கள் பங்கேற்பை குறித்து நாங்கள் ஒரு சில வார்த்தைகளைக் கூற விரும்புகிறோம். இளைய இளைஞர்களின் வலுமையான ஏக்கம் ஒன்று, தங்கள் நண்பர்களைச் சார்ந்த ஒரு குழுவில் சேர்வதாகும். தங்களைப் புரிந்து கொண்டு தங்களிடம் பரிவிரக்கம் காட்டும் நண்பர்களிடம் ஆலோசனைக்காகத் திரும்புவதில் இளைஞர்கள் நம்பிக்கையூட்டுவதாகக் காண்கின்றனர். ஆகையால், ரூஹி பயிற்சியகத்தினால் போற்றப்படும் இத்திட்டத்தை, அடிக்கடி ஒன்றுகூடும் மற்றும் ஆராய்வதற்கும் கற்பதற்கும் முறையாக வழிகாட்டப்படும் ஒரு இளைய இளைஞர் குழு என்னும் அடிப்படையில் அமைப்பதானது ஒரு முறையான தேவைக்கான இயல்பான பிரதிச் செயல். இதன் கூட்டங்களின் சூழ்நிலை, மகிழ்ச்சியாகவும், நட்புடையதாகவும், பரஸ்பரமாகவும் இருக்கின்ற போதிலும், அது விளையாட்டுத்தனமுடையதாக இருக்காது. மேலும் சமயத்திற்கும் மனித இனத்திற்கும் சேவைப் புரியும் ஒரு வாழ்விற்குத் தேவையான பண்புகளையும் மனப்பாங்குகளையும் வலுபடுத்துவதற்கு உதவிடும். இந்தக் கூட்டங்களில், அதன் அங்கத்தினர்கள், கடிந்துரைக்கப்படுவது அல்லது ஏளனம் செய்யப்படுவது ஆகியவற்றிலிருந்து அச்சமில்லாமல், தங்கள் சிந்தனைகளை வெளிப்படுத்திடுவார்கள், மற்றும் சிரமமான கேள்விகளுக்கு விடைகளைத் தேடிடுவார்கள். அவர்கள், செவிமடுக்கவும், பேசவும், சிந்திக்கவும், ஆராயவும், முடிவுகளை எடுக்கவும் மற்றும் அந்த முடிவுகளை நிறைவேற்றவும் கற்றுக் கொள்வார்கள்.

ஒவ்வொரு குழுவிலும், உண்மையான நண்பனாக இருந்து மற்றும் அவர்களது திறன்களை மேம்படுத்திட உதவிடும் ஒரு முதியவர் தேவை. இந்தப் பணியை ஆற்றிடுபவர்கள் இளைய இளைஞர் குழுக்களின் உயிர்ப்பூட்டுனர்கள் என அறியப்படுகிறார்கள். இவர்களுடைய பங்கேற்பானது, ஒவ்வொரு குழுவின் அங்கத்தினருக்கும், தாங்கள் தங்களைச் சுற்றியுள்ள அழிந்துவரும் சமுதாயத்தின் தீய தாக்கங்களிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ள முடியும் என்பதில் நம்பிக்கையும் உறுதியும் கொண்டிருக்க உதவுகின்றது. இந்தப் பணியில் சேவைப் புரிவது எந்தக் குறிப்பிட்ட வயதுடையவருக்கும் உரிமையானது அல்ல என்றாலும், முதிய இளைஞர்கள் சிறந்த உயிர்ப்பூட்டுனர்களாக ஆகின்றனர், ஏனெனில் அவர்கள் இளைய இளைஞர்களைக் குழந்தைகளாக நடத்தாமல், தங்களுக்கு இணையானவர்களாக நடத்துவதிலும், அவர்களைக் கேள்விக் கேட்க உற்சாகம் அளிப்பதற்கும், தங்கள் தெளிவினை நாடுவதற்கும் உண்மையை ஆராய்வதில் அவர்களை ஈடுபட வைப்பதைச் சுலபமானதாகக் காண்கின்றனர். கீழ்க்காணப்படும் வாசகப் பகுதியில், இளைய ஆன்மாக்கள் இவ்வாறாக பேணிவளர்க்கப்பட வேண்டும் என அப்துல் பஹா தமது ஆவலை வெளிப்படுத்துகிறார்.

**“ஆழமான அறிவு என்னும் பள்ளிக்கூடத்தின் அந்த இளம் ஆன்மாக்கள், நேசிக்க பயிற்றுவிக்கும் ஒருவரால் கவனிக்கப் படுவார்கள் என்பதே அப்துல் பஹாவின் ஆவல். அவர்கள் அனைவரும், ஆவியின் எல்லைகள் முழுவதிலும், மறைக்கப் பட்டுள்ள மர்மங்களை நன்குக் கற்று கொள்ளட்டுமாக; எத்துணை சிறப்பாக என்றால், அதன்மூலம் சர்வ ஒளிமயமானவரின் இராஜ்ஜியத்தில், அவர்கள் ஒவ்வொருவரும், பேச்சாற்றல் வழங்கப்பட்ட ஓர் இராப்பாடியைப் போல, விண்ணுலகத்தின் இரகசியங்களை உரக்கக் கூவிடுவார்களாக, மற்றும் ஏக்கம் கொண்ட ஒரு காதலனைப் போல, இறை அன்பருக்கான தனது மிகுந்த தேவையையும் முடிவான அவசியத்தையும் பொழியக் கூடுமாக.”[32]**

இளைய இளைஞர் குழுவானது ஒரு குழந்தை வகுப்பல்ல. அதற்கு ஒரு படிப்பு வட்டத்தின் சில அம்சங்கள் உள்ளன, ஆனால் அதன் அடிப்படை நோக்கமானது, அதன் அங்கத்தினர்களுக்கு ஒரு பரஸ்பர ஆதரவைத் தரும் ஒரு சூழ்நிலையை வழங்குவதே ஆகும். இச்சூழ்நிலையில் அவர்கள் தங்களைப் பஹாய் இளைஞர்களாக அடையாளம் காட்டக் கூடிய ஆன்மீக நுண்ணறிவு, சிந்தனை மற்றும் நடத்தை அமைப்பு முறைகளை வளர்த்துக் கொள்வார்கள். பயிற்சியகத்தின் பல பயிற்சிப் படங்களின் பங்கேற்பாளராகவும், அவை வேண்டியுள்ள சேவைச் செயல்களின் வழியாகவும், நீங்கள் குழந்தை வகுப்பு மற்றும் படிப்பு வட்டம் ஆகிய இரண்டிலும் நேரடியான அனுபவத்தைப் பெற்றிருப்பீர்கள் ஒரு இளைய இளைஞர் குழுவிற்கும், மற்ற இரண்டு மைய நடவடிக்கைகளுக்கும் இடையே இருக்கக் கூடிய ஒற்றுமைகளையும் வேறுபாடுகளையும் பற்றிக், கீழ்க்காணப்படும் அம்சங்களைக் குறித்து, உங்கள் குழுவில் ஆய்வு செய்யுங்கள்.

நீங்கள் ஒரு படிப்பு வட்டத்தின் உறுப்பினராக நேரடி அனுபவம் பெற்றிருக்கிறீர்கள் மற்றும் மூன்றாம் பாடத்திட்டத்தை படித்த பிறகு குழந்தைகளுக்கு சில வகுப்புகளை கற்பித்திருக்கலாம். கீழே உள்ள பண்புகளின் பட்டியலைப் பாருங்கள். ஒவ்வொருவருக்கும், இந்த பாடத்திட்டத்தில் உங்கள் சக பங்கேற்பாளர்களுடன் குழந்தைகள் வகுப்பு, இளைய இளைஞர் குழு மற்றும் படிப்பு வட்டம்

ஆகியவற்றுக்கு இடையே என்ன ஒற்றுமைகள் மற்றும் வேறுபாடுகளை நீங்கள் காணப்போகிறீர்கள் என்று விவாதிக்கவும்.

- செயல்பாட்டின் தன்மை
- பங்கேற்பாளர்களுடனான உறவு
- கூட்டங்களின் சூழ்நிலை
- சேவைச் செயலைச் செய்பவரின் பங்காற்றல்—அதாவது, ஆசிரியர், உயிர்ப்பூட்டுபவர் அல்லது பயிற்சியாளர்.

## பகுதி 20

இந்த சேவைக் களத்தில் நீங்கள் உங்களை அர்ப்பணிக்கும் வேளையில், உங்கள் முயற்சிகளின் பலனானது, நீங்கள் உருவாக்க உதவும் இளைய இளைஞர் குழுவின் உறுப்பினர்களுடன் நீங்கள் ஏற்படுத்திக் கொள்ளும் உறவின் தரத்தைப் பொறுத்தது என்பதை விரைவில் உணர்வீர்கள். நிச்சயமாக, நீங்கள் அவர்கள் கூறுவதைச் செவிமடுப்பீர்கள், அவர்களுக்கு ஆலோசனை வழங்கிடுவீர்கள், தேவைப்பட்டால் அவர்களுக்கு ஆறுதலையும் வழங்குவீர்கள். அவர்களின் ஒருமைப்பாட்டின் மீதான உங்கள் வலுவான நம்பிக்கையும், அவர்கள் ஒவ்வொருவரிடமும் நீங்கள் வைத்திருக்கும் மரியாதையும் உண்மையான அன்பும், சீர்சிறப்பிற்காக கடுமுயற்சி செய்திட அவர்ளைத் தூண்டும். அவர்களுடைய நலனுக்கும் வளர்ச்சிக்குமான உங்களுடைய ஈடுபாட்டைச் சிறுபிள்ளைகளாகக் கருதும் தன்மை, தாம்தான் சரி என்னும் எண்ணம், அல்லது பிடிவாதமான அதிகாரம் - ஆகிய மனப்பாங்குகளின் எவ்வித அடையாளமும் இல்லாமல் மெய்ப்பித்துக் காட்ட வேண்டும். இந்த மனப்பாங்குகள் இளைய இளைஞர்கள் வளர்வதற்கு இடமளிக்காது. மேலும் நீங்கள் அவர்களுடைய இதயத்திலும் மனதிலும் உண்மையான நம்பிக்கையின் அடித்தளங்களை மேலும் வலுப்படுத்த எல்லா வாய்ப்புகளையும் பயன்படுத்த வேண்டும், மற்றும் ஒரு பிரகாசமான எதிர்காலத்தைப் பற்றிய ஒரு நம்பிக்கையை அவர்கள் மனதில் ஆழப் பதியச் செய்ய வேண்டும்.

> **"முதலாவதாக, உங்கள் தனிப்பட்ட நல்வாழ்வை விட பொதுவான நல்வாழ்வை விரும்புவதற்கு, ஒருவருக்கொருவர் உங்கள் வாழ்க்கையை தியாகம் செய்ய தயாராக இருங்கள். எதுவுமே அசைக்க முடியாத உறவுகளை உருவாக்குங்கள்; எதுவுமே உடைக்க முடியாத ஒரு சபையை நிறுவுங்கள்; எதுவும் அழிக்க முடியாத செல்வங்களைப் பெறுவதை நிறுத்தாத மனதைக் கொண்டிருங்கள். அன்பு இல்லை என்றால், உண்மையில் என்னதான் எஞ்சி இருக்கும்? கடவுளின் அன்பெனும் நெருப்பானது மனிதனை மிருகத்தை விட உயர்ந்ததாக ஆக்குகிறது. உலகின் அனைத்து முன்னேற்றங்களையும் அடையச்செய்திடும் இந்த உயர்ந்த சக்தியை பலப்படுத்துங்கள். ”[33]**

பின்வரும் மனப்பான்மைகள் எவ்வாறு ஒரு குழுமத்தின் அங்கத்தினர்களுடைய நம்பிக்கையையும் ஆற்றலையும் குறைத்துவிடும் என்பதையும், உயிர்ப்பூட்டுனர் ஒருவர் இத்தகைய போக்குகளில் இருந்து தற்காத்துக்கொள்ள எப்படிப்பட்ட சிந்தனைகள், மென்மை உணர்ச்சிகள் மற்றும் நடத்தை அவர்களுக்கு உதவும்.

தந்தை மனப்பான்மை: ____________________________________________

____________________________________________

____________________________________________

____________________________________________

____________________________________________

____________________________________________

____________________________________________

____________________________________________

சுய-நேர்மை: ____________________________________________

____________________________________________

____________________________________________

____________________________________________

____________________________________________

____________________________________________

____________________________________________

____________________________________________

அதிகாரக் கட்டுபாடு: ____________________________________________

____________________________________________

____________________________________________

____________________________________________

____________________________________________

____________________________________________

____________________________________________

____________________________________________

## பகுதி 21

எந்தவொரு இளைய இளைஞர் குழுவின் உறுப்பினர்களுடன் உங்கள் உறவுமுறையானது நீங்கள் நிர்ணயிக்கும் உதாரணத்தினால் பெரிதும் தாக்கப்படும். ஒரு இளைய நபரின் வாழ்வில் உதாரணம் ஏற்படுத்தும் தாக்கத்தை நாம் அதிகமாகவும் மதிப்பிடக்கூடாது. அதனால் இதன் தொடர்பில், நமது சொந்த

இதயங்களை தூய்மைப்படுத்தும் நமது முயற்சிகளும் முக்கியத்துவம் பெருகின்றன. "மிகுதியான பொருளாசை", "மனிதர்களின் ஆன்மாக்களை மூடி மறைத்திடும் உலக பொருள்கள் மீதான பற்று, அவர்களுடைய சிந்தனைகளைத் திசை திருப்பிடும் அச்சங்களும் மனக் கவலைகளும், அவர்களுடைய நேரத்தை நிரப்பிடும் இன்பங்களும் ஊதாரித்தனமும், அவர்களுடைய கண்ணோட்டத்தை இருளடையச் செய்திடும் தப்பெண்ணங்களும் விரோதங்களும், அவர்களுடைய ஆன்மீகப் புலன்களை முடமாக்கிடும் அக்கறையின்மையும் சோம்பேறித்தனமும் - இவைகள்தாம் பஹாவுல்லாவின் சேவையில் வீரனாகக் கூடிய ஒவ்வொருவரின் பாதையில் நிற்கும் அசைக்கவியலாத இடையூறுகளாகும்" என ஷோகி எஃபெண்டி குறிப்பிட்டுள்ளார். இந்த இடையூறுகளை நீக்குவதற்கான நமது திறமையானது, எந்த அளவிற்கு நாமே "இந்த மாசுகளிலிருந்து" தூய்மைப் படுத்தப்படுகிறோமோ, "இந்தக் கீழ்த்தரமான ஈடுபாடுகளிலிருந்தும் வேதனைத் தரும் மனக்கவலைகளிலிருந்தும்," சுதந்திரமாக ஆகிவிடுகிறோமோ, மற்றும் இந்த தப்பெண்ணங்களிலிருந்தும் எதிர்ப்புகளிலிருந்தும் விடுபடுகிறோமோ, "தான் என்னும் அகந்தையை இழந்துவிட்டு", "கடவுளின் குணப்படுத்திடும், ஊக்கமளித்திடும் சக்தியினால் நிரப்பப் படுகிறோமோ" அதனையே சார்ந்திருக்கும் என அவர் நமக்கு நினைவூட்டுகிறார்.

பாதுகாவலரின் இந்த அறிவுரைகள், இளைய இளைஞர்களுக்கு ஆன்மீக சக்தியளிப்பிற்காக தங்கள் முயற்சிகளின் மீது ஏற்படுத்தக் கூடிய பாதிப்புகள் சில எவ்விதமாக இருக்கும்?

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

_____________________________________________________________________________

## பகுதி 22

இளைய இளைஞர்களின் உண்மையான நண்பரும் அவர்களுடைய விவேகமுள்ள ஆலோசகரும் என்ற முறையில், அவர்களை மகிழ்வான நேரங்களிலும், சிரமங்கள் நிறைந்த நேரங்களிலும் தாங்கள் ஆதரவளித்து அவர்களோடு செல்வது முக்கியமானதாகும். மேலும் மேலும் உயர்வான சிகரங்களை அடைவதற்காக, அவர்களுக்கு என்றுமே ஊக்கமளித்தல் தேவையாகும். இதைச் செய்வதற்குத் தாங்கள் அவர்களுடைய தவறுகள் மீது அல்லாது, அவர்களுடைய சாதனைகளின் மீது உன்னிப்பான கவனத்தைச் செலுத்துவது அவசியமாகும். நீங்கள் ஊக்கமளிப்பீர்கள், ஆனால் அவர்களுடைய தான் என்னும் அகந்தையைப் பெருகச் செய்திடும் வகையில் அல்ல. அவர்களுடைய சாதனைகள் மீது நீங்கள் கவனம் செலுத்துவீர்கள், ஆனால் அதே சமயம் அவர்களின் தார்மீக நெறிகளை வீழ்த்தும் சூழ்நிலைகளை கண்டால் அவர்களுக்கு ஆலோசனை வழங்கவும் நீங்கள் பயப்பட மாட்டீர்கள்.

உங்கள் குழுவுடன் உங்களுடைய இயல்பைப் பற்றி சிந்திக்க, பாதுகாவலர் சார்பாக எழுதப்பட்ட கடிதத்தில் இருந்து எடுக்கப்பட்ட கீழ்வரும் பத்தியைப் படிக்கவும். இது சமயத்தின் ஸ்தாபனங்களும் தனிநபர் இடையேயும் உள்ள உறவைப் பற்றி எழுதப்பட்டிருந்தாலும், ஒரு இளைய இளைஞர்கள்

குழுவின் ஒருங்கிணைப்பாளர் அதன் அங்கத்தினர்களோடு நடந்துகொள்ளும் விதத்திற்கும் பொருத்தமான ஒன்றாகும்.

**“சமயத்தில் பெரும்பாலான நம்பிக்கையாளர்கள், இளையோர்களாக உள்ளனர். மேலும் அவர்கள் தவறுகளைச் செய்தால், எந்நேரமும் இதைச் செய்யுங்கள், அதைச் செய்யாதீர்கள் எனக் கூறப்பட்டு, அவர்களுடைய ஆற்றல் ஒடுக்கப் படுவதைவிட, அந்தத் தவறுகள் அத்துணை முக்கியமானதல்ல.”[34]**

என்ன செய்ய வேண்டும், என்ன செய்யக் கூடாது என்பதை பற்றி மீண்டும் மீண்டும் கூறப்படுவதாலும், அவர்களுடைய தவறுகளை மீண்டும் மீண்டும் நினைவுப்படுத்துவதாலும் இளைய நபரின் ஆற்றலை எவ்வாறு நசுக்கும் என்பதை கலந்துரையாடவும். உங்களுடைய சில சிந்தனைகளை கீழே எழுதவும்.

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

ஊக்குவித்தல் என்பது கண்மூடித்தனமாகப் போற்றுவது என்பதல்ல; அது உண்மையாக இருக்க வேண்டும், மற்றும் போலித் தனத்திலிருந்து விடுப்பட்டு இருக்க வேண்டும், இல்லை என்றால் அது இருமாப்புத் தனத்திற்கு அல்லது நம்பிக்கை இன்மைக்குக் கொண்டு செல்லும். சமயத்திற்குச் சேவை ஆற்றிட அப்துல் பஹா நம்பிக்கையாளர்களுக்கு உற்சாகம் அளிக்கும் சில உதாரணங்கள் பின்வருமாறு:

**“அவரது மாபெரும் திராட்சைத் தோட்டத்தில் கடவுளின் சமயத்திற்கு சேவை புரிவதற்காக தங்களை அவர் உறுதி செய்ததற்காக மெய்யாகவே நான் கடவுளைப் போற்றுகின்றேன்.”[35]**

**“மக்கள் மத்தியில் அவரது பெயரை எழுப்புவதற்காகத் தங்களை தேர்ந்தெடுத்ததற்காகவும், எல்-அப்ஹாவின் அழகின்பால் தங்களை கவர்ந்ததற்காகவும், அவரது சமயம் வெற்றி அடைவதற்காகத் தங்களைப் பலப்படுத்தியதற்காவும், மெய்யாகவே நான் எனது அதி உயர்வான பிரபுவைப் போற்றுகிறேன்.”[36]**

**“தமது கருணை என்னும் கடலினுள் தங்களை மூழ்கச் செய்து, நம்பிக்கை என்னும் கோப்பையிலிருந்தும், அறிவென்னும் தூய மதுரசத்தைத் தங்களைப் பருகச் செய்தபொழுது இறைவன் தங்களை பாவச்செயல்களிலிருந்து புனிதப் படுத்தியுள்ளார். நன்று! நன்று! ஏனெனில் கடவுளின் விருப்பத்தின் முன் தங்கள் சுய விருப்பம் இல்லாது போன்றதாக இருப்பதைத் தாங்கள் விரும்பியுள்ளீர்கள், கடவுளின் அன்பின் அதிகரிப்பை நாடியுள்ளீர்கள், கடவுளின்பால் அறிவை பெருக்கியுள்ளீர்கள், மற்றும் கடவுளின் பாதையில் நேர்மையாக நடந்து கொண்டீர்கள்.”[37]**

**“எனது ஆன்மீகமான அன்பிற்குரியோரே! தாங்கள் திரைகளை நீக்கியுள்ளதற்கும், இரக்கமுள்ள இறை நேசரை அடையாளம் கண்டுள்ளதற்கும், இந்தப் புகலிடத்திலிருந்து அந்த இடமில்லா இராஜ்ஜியத்திற்கு விரைந்து சென்றமைக்காக இறைவன் போற்றப்படுவாராக. கடவுளின் உலகில் நீங்கள் உங்கள் கூடாரங்களை எழுப்பியுள்ளீர்கள், மற்றும் சுய ஜீவியானவரான அவரைப் போற்றிப் புகழ்வதற்கும் நீங்கள் இனிமையான குரலை எழுப்பி, இதயத்திற்குள் ஊடுருவிடும் பாடல்களைப் பாடியுள்ளீர்கள். பாராட்டத்தக்கது! ஆயிரம் முறை பாராட்டத்தக்கது! ஏனெனில், தாங்கள் அவதரிக்கப்பட்ட ஒளியைக் கண்ணுற்றுள்ளீர்கள், மற்றும் தங்களது மீண்டும் உயிரூட்டப்பட்ட உயிருருவில், "படைப்பவர்களில் மிகச் சிறந்தவரான பிரபு, போற்றப்படுவாராக" என்னும் அறைகூவலை நீங்கள் எழுப்பியுள்ளீர்கள்.”[38]**

**“நேர்மையானோரே, அன்பிற்குரியோரே, காந்த சக்தியால் வயப்பட்டுள்ளது போல ஈர்க்கப்பட்டோரே, கடவுளின் சமயத்திற்காகச் சேவை ஆற்றிட எழுந்துள்ளோரே, அவரது வார்த்தையை உயார்த்தவும், அவரது இனிய நறுமணங்களைத் தொலைவிலும் பரவலாகவும் சிதறச் செய்திட எழுந்துள்ளோரே! அதன் எழுத்து நடையில் அழகாகவும், அதன் சொற்களில் நாவன்மையுடையதாகவும், அதன் பொருளில் ஆழமானதாகவும் உள்ள தங்களது மிகச் சிறந்த கடிதத்தை நான் படித்தேன். மேலும் தங்களுக்கு உதவி அளிக்கவும், அவரது விசாலமான திராட்சைத் தோட்டத்தில் அவருக்குச் சேவை ஆற்றிடத் தங்களை இயலச் செய்தமைக்காக நான் கடவுளை போற்றி அவரிடம் நன்றி கூறினேன்.”[39]**

**“தங்கள் கடிதமானது நறுமணம் கொண்ட ஒரு மலர்ச்செண்டைப் போலிருந்தது, மற்றும் அந்த மலர்ச்செண்டிலிருந்து நம்பிக்கை மற்றும் உறுதிப்பாடு என்னும் மணங்கள் சுவாசிக்கப்பட்டது. நன்று! தாங்கள் தங்கள் வதனத்தைக் காண இயலாத இராஜ்ஜியத்தின்பால் திரும்பியுள்ளது நன்று! மிகச் சிறப்பு! சர்வ சக்திவாய்ந்தவரான மேன்மைமிக்க அவரது அழகின்பால் தாங்கள் கவர்ந்துள்ளது மிகச் சிறப்பாகும்! நன்று! நன்று! இந்த மிகச் சிறந்த பரிசினைத் தாங்கள் அடைந்துள்ளதனால் தாங்கள் எத்துணை மகிழ்வாக இருக்கின்றீர்கள்!”[40]**

அப்துல் பஹா நண்பர்களை எவ்வாறு புகழ்ந்தார் என்பதைப் படித்து உத்வேகம் பெற்றுள்ளதால், நீங்கள் விரைவில் உதவப்போகும் குழு உறுப்பினர்களை எவ்வாறு நீங்கள் உர்சாகப்படுத்தப் போகிறீர்கள் என்பதை ஒரு சில வாக்கியங்களில் கீழ வருணிக்கவும்.

________________________________________________________________________________________________

________________________________________________________________________________________________

________________________________________________________________________________________________

________________________________________________________________________________________________

________________________________________________________________________________________________

________________________________________________________________________________________________

_______________________________________________________________________________________________

# பகுதி 23

இறுதியாக, ஒரு இளைய இளைஞர்கள் குழுவோடு ஆழமான அன்பு, நட்புறவை உருவாக்குவதும் அவர்களுக்கு ஊக்கமளிக்கும் ஒரு தோற்றுவாயாக இருக்கக் கூடிய செயலில் தாங்கள் வெற்றி காண்பதென்பது, தாங்கள் ஒரு மகிழ்ச்சியான ஒரு சூழ்நிலையை உருவாக்கக் கூடிய திறனையே சார்ந்திருக்கும்.

**"மகிழ்ச்சி நமக்குச் சிறகுகளை வழங்கிடும்! மகிழ்வான நேரங்களில் நமது ஆற்றல் மேலும் வலிமையாக இருக்கும், நமது அறிவாற்றல் மேலும் கூர்மையாக இருக்கும், மற்றும் நமது புரிந்துணர்வு குழப்பமடையாதிருக்கும். உலகைச் சமாளிப்பதில் நாம் மேலும் திறமையானவர்களைப் போல ஆகிவிடுகிறோம் மற்றும் நமது பயனான சேவை எல்லையைக் கண்டறிகிறோம்."**[41]

உங்கள் குழுவிற்காக மகிழ்ச்சியான சூழலை உருவாக்க, நீங்கள் மகிழ்ச்சியை உணர வேண்டும். நீங்கள் விரைவில் வேலை செய்யவிருக்கும் இளைய இளைஞர்கள் குழுவைப் பற்றி சிந்தியுங்கள். அவர்களைப் பற்றிய எந்த சிந்தனை உங்களுக்கு மகிழ்ச்சியைக் கொண்டு வருகிறது?

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

அத்தகையதொரு குழுவின் கூட்டங்களை விளையாட்டுத்தனமானதாக மாற்றாமல், அவற்றில் மகிழ்ச்சியை உட்புகுத்த நீங்கள் எடுக்கக்கூடிய நடைமுறை செயல்கள் என்னவாக இருக்கலாம்?

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

இந்த எண்ணங்களை மனதில் கொண்டு, உலக நீதி மன்றத்தின் சார்பாக எழுதப்பட்ட கடிதத்திலிருந்து கீழே உள்ள பத்தியைப் படியுங்கள்:

**“ஒவ்வொரு தனிநபரும் தேடும் உள்ளார்ந்த மகிழ்ச்சியானது, கடந்து செல்லும் உணர்வை போல் அல்லாமல், வெளிப்புற தூண்டுதலால் வருவதில்லை; அது ஒரு சூழல், மெய்யுறுதி**

**மற்றும் விழிப்புணர்வுடனான அறிவில் இருந்து பிறந்து, தூய இதயத்தால் பேணி வளர்க்கப்பட்டு, நிலையானவை மற்றும் மேலோட்டமானவை ஆகிய இரண்டிற்கும் இடையில் உள்ள வேறுபாட்டை பிரித்து பார்க்க உதவக்கூடியது."[42]**

'அப்துல்-பஹாவின் பின்வரும் வார்த்தைகளைப் பிரதிபலிப்பதன் மூலம் இந்த அலகுக் குறித்த நமது ஆய்வினை நிறைவு செய்வோம்:

**"மனிதனின் மிக பெரிய பரிசு சர்வலோக அன்பாகும் – அந்த காந்தமானது வாழ்வை நிலையானதாக்குகிறது. அது மெய்மைகளை ஈர்த்து கனக்கிலடங்கா மகிழ்ச்சியை வாழ்வில் கரைக்கிறது. இந்த அன்பானது மனித இதயத்தில் உட்புகுந்ததால், பிரபஞ்சத்தின் அனைத்து விசைகளும் அவனுள் உணரப்படும், ஏனெனில் தெய்வீக சக்தியானது அவனை தெய்வீக நிலையத்திற்கு கடத்திச் சென்று, அங்கு ஒளியூட்டப்படும் வரை அவன் எந்த நகர்வையும் உணர மாட்டான். மெய்மையின் அன்பு-சக்தியை அதிகரிக்க முயற்சி செய்யுங்கள், அதனால் உங்கள் இதயங்கள் ஈர்ப்பின் பெரும் மையங்களாகி, புதிய சிந்தனைகளையும் உறவுமுறைகளையும் உருவாக்கும்."[43]**

## குறிப்பீடுகள்


1. From the Riḍván 2010 message written by the Universal House of Justice to the Bahá'ís of the world, published in *The Five Year Plan, 2011–2016: Messages of the Universal House of Justice* (West Palm Beach: Palabra Publications, 2013), pp. 10–11.
2. *The Promulgation of Universal Peace: Talks Delivered by 'Abdu'l-Bahá during His Visit to the United States and Canada in 1912* (Wilmette: Bahá'í Publishing, 2012), p. 617.
3. *Selections from the Writings of 'Abdu'l-Bahá* (Wilmette: Bahá'í Publishing Trust, 1997, 2009 printing), no. 111, pp. 144–45.
4. *Abdul Baha on Divine Philosophy* (Boston: The Tudor Press, 1918), pp. 131–32.
5. *Gleanings from the Writings of Bahá'u'lláh* (Wilmette: Bahá'í Publishing, 2005), no. 153, p. 370.
6. Ibid., no. 1, p. 3.
7. *Tablets of Bahá'u'lláh Revealed after the Kitáb-i-Aqdas* (Wilmette: Bahá'í Publishing Trust, 1988, 2005 printing), pp. 34–35.
8. Bahá'u'lláh, *The Hidden Words* (Wilmette: Bahá'í Publishing Trust, 2003), Arabic no. 13, pp. 6–7.
9. *Selections from the Writings of 'Abdu'l-Bahá*, no. 34, p. 73.
10. Ibid., no. 35, p. 77.
11. *Tablets of Abdul-Baha Abbas* (New York: Bahá'í Publishing Committee, 1909, 1930 printing), vol. 1, p. 136. (authorized translation)
12. 'Abdu'l-Bahá, *The Secret of Divine Civilization* (Wilmette: Bahá'í Publishing, 2007), p. 136.
13. *Selections from the Writings of 'Abdu'l-Bahá*, no. 68, p. 110.
14. Ibid., no. 155, p. 191.
15. *The Promulgation of Universal Peace,* p. 205.
16. Ibid., p. 258.
17. 'Abdu'l-Bahá, in *Bahai Scriptures: Selections from the Utterances of Baha'u'llah and Abdul Baha* (New York: Bahá'í Publishing Committee, 1928), no. 992, p. 548.
18. *The Promulgation of Universal Peace,* p. 261.
19. Bahá'u'lláh, *The Seven Valleys and The Four Valleys* (Wilmette: Bahá'í Publishing Trust, 1991, 2004 printing), p. 11.
20. *Paris Talks: Addresses Given by 'Abdu'l-Bahá in 1911* (Wilmette: Bahá'í Publishing, 2011), p. 53.
21. *Selections from the Writings of 'Abdu'l-Bahá,* no. 36, p. 82.
22. *The Seven Valleys and The Four Valleys,* pp. 9–10.
23. *Selections from the Writings of 'Abdu'l-Bahá,* no. 195, p. 247.
24. Bahá'u'lláh, *The Kitáb-i-Aqdas: The Most Holy Book* (Wilmette: Bahá'í Publishing Trust, 1993, 2009 printing), pp. 42–43.
25. *Selections from the Writings of 'Abdu'l-Bahá,* no. 223, pp. 294–95.

26. Ibid., no. 35, p. 75.
27. Ibid., no. 206, p. 268.
28. *Prayers and Meditations by Bahá'u'lláh* (Wilmette: Bahá'í Publishing Trust, 2013), no. 36, p. 38.
29. Ibid., no. 184, p. 271.
30. From a letter dated 23 November 1983 written on behalf of the Universal House of Justice to an individual believer, published in *Lights of Guidance: A Bahá'í Reference File,* compiled by Helen Bassett Hornby (New Delhi: Bahá'í Publishing Trust, 1996, 2001 printing), pp. 359–60.
31. From a letter dated 8 December 1935 written on behalf of Shoghi Effendi to an individual believer, published in *The Importance of Prayer, Meditation, and the Devotional Attitude*, compiled by the Research Department of the Universal House of Justice (New Delhi: Bahá'í Publishing Trust, 1997), p. 32.
32. *Selections from the Writings of 'Abdu'l-Bahá,* no. 107, p. 141.
33. *Abdul Baha on Divine Philosophy,* p. 112.
34. From a letter dated 30 June 1957 written on behalf of Shoghi Effendi to a National Spiritual Assembly, in "The National Spiritual Assembly", published in *The Compilation of Compilations* (Maryborough: Bahá'í Publications Australia, 1991), vol. 2, p. 128.
35. *Tablets of Abdul-Baha Abbas,* vol. 1, p. 11. (authorized translation)
36. Ibid., p. 18. (authorized translation)
37. *Tablets of Abdul-Baha Abbas* (New York: Bahá'í Publishing Committee, 1915, 1940 printing), vol. 2, pp. 266–67. (authorized translation)
38. *Selections from the Writings of 'Abdu'l-Bahá,* no. 236, p. 332.
39. Ibid., no. 199, p. 252.
40. *Tablets of Abdul-Baha Abbas* (New York: Bahá'í Publishing Committee, 1916, 1930 printing), vol. 3, p. 530. (authorized translation)
41. *Paris Talks,* p. 135.
42. From an unpublished letter dated 19 April 2013 written on behalf of the Universal House of Justice to a small group of individual believers.
43. *Abdul Baha on Divine Philosophy,* pp. 111–12.



# ஓர் உயிர்ப்பூட்டுனராகச் சேவையாற்றுதல்

**நோக்கம்**

இளைய இளைஞர்களின் ஆன்மீக சக்தியளிப்பு செயல்திட்டத்தினை வடிவமைக்கும் கருத்தாக்கங்கள் மீதான பிரதிபலித்தல்கள்

## பகுதி 1

இந்த புத்தகத்தின் இரண்டாவது பாடப்பிரிவில் சமுதாய சுற்றுசூழலானது வளரிளம் பருவத்திலுள்ள ஓர் இளம் நபரின் வாழ்வில் முக்கியப் பங்காற்றுகின்றன என்பதைப் பற்றி விவாதித்திருந்தோம். இளைய இளைஞர்களின் ஆன்மீக சக்தியளிப்பு செயல்திட்டமானது, ஒரு "இளைய இளைஞர் குழு" எனும் கருத்தாக்கத்தின் அடிப்படையிலேயே அமைக்கப் பட்டுள்ளது. ஒரு இளைய இளைஞர் குழுவானது, குழந்தைகளுக்கான ஒரு வகுப்பைப் போன்றதல்ல என்பதை, நாங்கள் ஏற்கனவே கூறியுள்ளோம். அது ஒரு பயிற்சி வட்டத்தின் சில அம்சங்களை கொண்டிருக்கின்றது, ஆனால், அதன் பிரதான செயல்பாடானது அதன் உறுப்பினர்களுக்குப் பரஸ்பர ஆதரவு நல்கும் ஒரு சூழலாக சேவையாற்றுவதே ஆகும், அவர்களின் வாழ்வுகள் முழுவதும் அவர்களை குணவியல்புப்படுத்தும் ஆன்மீகப் புலனுணர்வுகள், சிந்தனை மாதிரிகள் மற்றும் நடத்தைகளை மேம்படுத்திக்கொள்வது அவற்றில் ஒன்றாகும்.

ஒரு இளைய இளைஞர் குழு வாரத்திற்கு ஒரு முறையாவது தவறாமல் கூடுகிறது மற்றும் மூன்று வருட காலப்பகுதியில் ஆண்டுதோறும் நடைபெறும் பல முகாம்களில் கலந்து கொள்கிறது. உறுப்பினர்கள் ஒரு குழுவாகச் செலவழிக்கும் நேரமானது பன்னிரண்டு முதல் பதினைந்து வயதுக்குட்பட்டவர்களுக்காகக் குறிப்பாக உருவாக்கப்பட்ட உபகரணங்களின் ஆய்வினை மையமாகக் கொண்டதாகும். இளைஞர்கள் சமூகத்தில் சேவைத் திட்டங்களை ஆலோசிக்கவும், திட்டமிடவும், செயல்படுத்தவும், விளையாட்டுகளை விளையாடவும், அவர்களின் உடனடி சூழலுக்கு ஏற்றவாறு நாடகம் மற்றும் கைவினைக்கலையை மேற்கொள்ளவும் செய்கிறார்கள். ஒவ்வொன்றும் பல நாட்கள் நீடிக்கும் முகாம்களில், அவர்கள் ஒரு தனிப்பட்ட குழுவாக தீவிர ஆய்வில் ஈடுபடுகிறார்கள் மற்றும் கூட்டு நிகழ்வுகள் மற்றும் நடவடிக்கைகளில் தங்கள் சுற்றுப்புறம் அல்லது கிராமத்தைச் சேர்ந்த மற்ற குழுக்களுடன் பங்கேற்கிறார்கள். இந்த அலகில், நீங்கள் நன்கு அறிந்திருக்க வேண்டிய ஆன்மீக சக்தியளிக்கும் திட்டத்தின் பல்வேறு அம்சங்களை நாம் ஆராயலாம்.

## பகுதி 2

முதலில் குழுவின் அங்கத்துவத்தை நாம் கருத்தில் கொள்வோம். ஒரு சமூகத்தின் இளைய இளைஞர்கள் இந்த திட்டத்தின்மீது ஆர்வம் காட்டும்போது, பொதுவாகவே பத்து முதல் பதினைந்து உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழுவை உருவாக்குவது சாத்தியமானதாகும். பெரும்பான்மையானவர்களின் வயது பன்னிரண்டு முதல் பதின்மூன்று வரை இருக்கும், சில இளைஞர்கள் பன்னிரண்டுக்கும் குறைவானவர்களாகவும், மற்றவர்கள் பதினான்கு வயதுடைய சற்று முதியவர்களாகவும் இருக்கலாம். உறுப்பினர்கள், அவர்களின் வயது பின்னணிகள் எதுவாக இருந்தாலும், மூன்றாண்டு காலம் முழுவதும் ஒன்றாக இருந்து அதை ஒரு குழுவாக மனநிறைவு செய்திடும்போது இந்த திட்டம் மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்று அனுபவம் பரிந்துரைக்கின்றது. அந்த நேரத்தில், ஆர்வமுள்ளவர்கள் பயிற்சியகத்தின் பாடநெறிகளின் பிரதான வரிசையைப் படிப்பதற்காகவும் அது அவர்களுக்குத் திறக்கும் சேவையின் பாதைகளைப் பின்பற்றிடவும் கல்விச் செயல்பாட்டின் அடுத்த கட்டத்தை நோக்கிச் செல்லலாம்.

சில இடங்களில் ஒரு குழுவில் சேரும் இளைஞர்கள் பஹாய் சிறுவர்களுக்கான வகுப்புகளில் பங்கேற்றிருப்பார்கள், ஆனால் பல சூழ்நிலைகளில், இந்த திட்டத்தை எதிர்கொள்ளும்

இளைஞர்களுக்கு சமயத்துடன் எந்தவிதமான முந்தைய தொடர்புகள் இருந்திடாது என்பதனை நினைவில் கொள்ள வேண்டும். வயதைத் தவிர்த்து, அறிவாற்றல் வேறுபாடுகள், வளர்க்கப்பட்ட முறை மற்றும் முதிர்ச்சி நிலை ஆகிய வேறுபாடுகளும் உள்ளன. குழுக்கள் என்றுமே ஒரே மாதிரி இருப்பதில்லை. மேலும் உயிர்ப்பூட்டுனர்கள் இளைஞர்களின் பல வகையான விருப்பங்களுக்குச் செவிசாய்த்திடும் சவால்களைத் தொடர்ச்சியாக சந்திப்பார்கள். இந்த சவாலைக் கையாள்வதற்குப் பெரும் அளவிலான மாற்றங்களை எளிதில் ஏற்றுக்கொள்ளக்கூடிய தன்மையும், படைப்பாற்றல் திறனும் தேவைப்படும். இதற்காக ஒவ்வொரு முறையும் தாங்களும் தங்கள் குழுவும் சந்திக்கும் வேளையில் தாங்கள் தயார் நிலையில் இருக்க வேண்டும். உதாரணமாகப், பின்வரும் சூழ்நிலைகளைத் தாங்கள் எவ்வாறு சமாளிப்பீர்கள்?

- தாங்கள் உதவிடும் இளைய இளைஞர் குழுவின் சில அங்கத்தினர்கள் வாசிப்புப் பாடத்தைப் புரிந்துகொள்ள சிரமத்தை எதிர்நோக்குகின்றனர்.
- குழுவில் வயது குறைவானவர்களைத் தாங்கள் பிரித்துத் தனியாகப் பாடம் நடத்தும்போது அவர்கள் தர்மசங்கடமாக உணர்கின்றனர்.
- ஒன்று அல்லது இரண்டு முதிய அங்கத்தினர்கள் குழுவின் சில நடவடிக்கைகள் சலிப்பூட்டுவதாகக் கருதுகிறார்கள்.
- ஒரு குறிப்பிட்ட நடவடிக்கையில் குழுவின் சில அங்கத்தினர்கள் பங்கேற்க மறுக்கின்றனர்.
- குழுவின் சில அங்கத்தினர்கள் பாடங்களை மற்றவர்களை விட மிக விரைவாகக் கற்று முடிக்கும் திறனைக் காட்டுகின்றனர்.
- குழுவிலுள்ள ஆண்களும் பெண்களும் நடவடிக்கைகளைச் சேர்ந்து செயல்படுத்திட மறுக்கின்றனர்.
- சில அங்கத்தினர்களுக்குக் குழுவின் உல்லாசப் பயணம் ஒன்றுக்குப் பணம் கொடுப்பதற்குப் போதிய வசதி இல்லை.
- குழுவின் சில உறுப்பினர்கள் நடவடிக்கைகளுக்குச் சீராக வருவதில்லை.
- ஒன்றுகூடலின்போது ஓர் உறுப்பினர் தகாத வார்த்தைகளால் வேடிக்கைப் பேச்சு பேசுகின்றார்.
- குழுவின் சில உறுப்பினர்கள் தங்களின் தம்பி தங்கைகளோடு கூட்டத்திற்கு வருகின்றனர்.
- குழு கலந்தாலோசனைகளில் சில உறுப்பினர்கள் பங்கெடுப்பதில்லை.

இவற்றுடன் இதுபோன்ற வேறு சூழ்நிலைகளையும் உங்கள் குழுவில் கலந்தாலோசியுங்கள். நிச்சயமாக, இந்த சேவை துறையில் மேலும் அனுபவத்தை பெறுகையில், இதுபோன்ற சவால்மிக்க தருணங்களை உங்கள் சக உயிர்ப்பூட்டுனர்களுடனான தொடர்ச்சியான பிரதிபலித்தல் கூட்டங்களில் புத்தாய்வு செய்வதுடன் புதிய உட்பார்வைகளையும் பெறுவீர்கள்.

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

_____________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

## பகுதி 3

பாடத்திட்டத்தின் மையத்தில் இருக்கும் புத்தகங்கள்—நூல் 2 இல் அவ்வாறு செய்வதற்கான ஆலோசனையைப் பின்பற்றி அவற்றில் சிலவற்றை நீங்கள் படித்திருக்கலாம்—மொழி மற்றும் ஆராயப்பட்ட கருத்துக்களைப் பொறுத்தமட்டில் கடினமான அளவில் தளர்வாக அமைக்கப்பட்டிருக்கும். . முதல் வகையில் உள்ளடக்கப் பட்டுள்ளவைகளின் கருப்பொருள்கள் பஹாய்க் கண்ணோட்டத்தில் வழங்கப்பட்டுள்ளன, ஆனால் மத போதனை என்னும் அணுகுமுறையில் அல்ல. இதனடிப்படையில் அவைகள் "பஹாய் அகத்தூண்டலுற்றவை" என்று அழைக்கப்படலாம். அவை செயல்திட்டத்தின் பெரும்பான்மை அங்கமாக சேர்க்கப்பட்டுள்ளன. அடுத்த வகைப்பிரிவில் ஒரு தெளிவான பஹாய் அங்கமாக வழங்கப்படும், எண்ணிக்கையில் குறைவாக உள்ள நூல்கள் சேர்க்கப்பட்டுள்ளன. அந்த அம்சத்தினை அடுத்த பகுதியில் நாம் ஆராய்வோம், மேலும் பஹாய் அகத்தூண்டலுற்ற நூல்களின் தன்மை குறித்து இங்கு கவனம் செலுத்துவோம்.

பொதுவாகவே, பஹாவுல்லாவின் திருவெளிப்பாடென்னும் சமுத்திரத்தினுள் எண்ணற்ற விவேகம் என்னும் முத்துக்கள் உள்ளன என்றும், அவரது ஸ்தானத்தை அவர்கள் அறியாதிருப்பினும் அவற்றைத் தனிமனிதர்களுக்கு வழங்கலாம் என்னும் ஆழமான நம்பிக்கையின் அடிப்படையில் இந்த நூல்கள் தயாரிக்கப் பட்டுள்ளன. நூல் 2 இன் இரண்டாவது பாடப்பிரிவுல், " மேம்படுத்தும் உரையாடல்கள்", என்கிற இந்த கருத்தை நீங்கள் ஏற்கனவே அறிந்திருக்கிறீர்கள், உங்கள் தினசரி உரையாடல்களில் ஆன்மீக அறிவு மற்றும் நுண்ணறிவை ஒருங்கிணைக்கும் திறனை வளர்ப்பதற்காக அப்துல்-பஹாவின் பேருரைகள் மற்றும் நிருபங்களின் அடிப்படையில் பத்திகளை நீங்கள் படித்தீர்கள்.

உங்கள் சொந்த அனுபவத்திலிருந்தே நீங்கள் அறிந்துள்ளது போன்றே, இந்தப் பாடப்பிரிவில் நீங்கள் ஆய்வு செய்த கருத்துக்களை மற்றவர்களோடு தாங்கள் இயல்பான முறையில் பகிர்ந்துகொள்ளும் வேளையில், நீங்கள் உங்கள் உட்கருத்துக்களின் பிறப்பிடத்தைத் தாங்கள் சந்திக்கும் ஒவ்வொரு சூழ்நிலைக்கும் ஏற்றவாறு குறிப்பிடவோ அல்லது குறிப்பிடாமல் இருந்திடவோ முடிவெடுக்கலாம். பஹாய் அகத்தூண்டல் பெற்ற நூல்களை பொறுத்தவரையில் இது கோட்பாடு ஏற்புடையதாகும். உலக நீதிமன்றத்தின் சார்பாக எழுதப்பட்ட ஒரு கடிதம் இதன் தொடர்பில் பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

**“பஹாய் சமுதாய மற்றும் பொருளாதார மேம்பாட்டை நிர்வகிக்கும் அடிப்படைக் கொள்கைகளில் ஒன்று, நண்பர்கள் பஹாவுல்லாவின் போதனைகளை தாராளமாகவும்**

**நிபந்தனைகளற்றும் மனிதகுலத்திற்கு வழங்க வேண்டும், அதனால் எங்குமுள்ள மக்கள் அழுத்திக் கொண்டிருக்கும் சமுதாய பிரச்சனைகளுக்கு அவற்றை அமுல்படுத்தி தங்களின் தனிநபர் மற்றும் கூட்டு வாழ்வில், லௌகீக மற்றும் ஆன்மீக பரிமாணங்களை மேம்படுத்திக் கொள்ள முடியும். இறைவனின் திருவார்த்தையை பயன்படுத்துவதற்கு இந்நாளில் இறைவனின் திருஅவதாரமாக பஹாவுல்லாவை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற நிபந்தனைக்குட்படுத்தப்படக் கூடாது. மேலும், சூழ்நிலைகள் கோரும் போது, அவரது போதனைகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட கல்வியளிப்புத் திட்டத்தின் அடித்தளமாக இருக்கும் அகத்தூண்டலின் மூலாதாரத்தைப் பற்றி வெளிப்படையாகக் குறிப்பிடுவதைத் தவிர்ப்பது பொருத்தமற்றதாக இருக்காது. இதன் தொடர்பில், சமயத்தின் போதனைகள் மற்றும் கொள்கைகளில் இருந்து உத்வேகம் பெற்ற கல்வியளிப்பு உபகரணங்களை உருவாக்கும் போது நண்பர்களுக்கு பலவிதமான தேர்வுகள் இருக்கின்றன."[1]**

உலக நீதிமன்றத்தின் சார்பாக எழுதப்பட்ட மற்றொரு கடிதம் குறிப்பிடுவதாவது:

**"பஹாய் அகத்தூண்டல் பெற்ற கல்வி உபகரணங்களில் பஹாய் திருவாசங்களில் இருந்து மேற்கோளை பயன்படுத்தும் போது அதன் ஆசிரியரை குறிப்பிட வேண்டும் என்ற எந்த ஒரு அவசியமும் இல்லை என்று உங்களுக்கு கூறும் படி நாங்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளோம், அவ்வாறு குறிப்பிடாமல் இருப்பதற்கு ஏதேனும் விவேகம் இருப்பதாக தோன்றினால்."[2]**

இதே போன்று, பஹாய் அகத்தூண்டல் பெற்ற நூல்கள், பஹாய் போதனைகளின் நேரடி செல்வாக்கினால் உருவாக்கப்பட்டவையாகும். இந்த நூல்களின் தன்மையானது, புனித வாசகங்களிலிருந்து வாசகப் பகுதிகளைச் சேர்த்திடவும் சேர்க்காமல் இருந்திடவும் சாத்தியப் படுத்துகின்றன. சிலவற்றில், புனித வாசகங்களிலிருந்து புனிதவாசகங்களை அப்படியே எடுத்துக்காட்டுவது தகுந்ததாக இருக்கும், வேறு பாடங்களில் வாசகக்குறிப்புகள் இன்றி பஹாய் போதனைகளின் விளக்கம் மட்டுமே அளிக்கப்படலாம். இவை இரண்டிலுமே மூலாதாரக் குறிப்புகள் வழங்கவோ வழங்கப்படாமலோ இருக்கலாம். ஆனாலும், சமயத்தை வெளிப்படையாகக் குறிப்பிடாமல் இருக்கும் சில வேளைகளில் போதிக்கும்-கற்கும் அனுபவச் சூழ்நிலையானது பயன்படுத்தப்படும் உபகரணங்கள் போதனைகளின் தூண்டுதல் பெற்றவையே என்பதைத் தெளிவுபடுத்துகின்றது.

பஹாய் அகத்தூண்டல் பெற்ற நூல்கள் இறை வார்த்தைகளின் சக்திகளைப் பெருமளவில் பயன்படுத்துகின்றன. இதனை புனித வாசகங்கள் நேரடியாகக் குறிப்பிடுவதன் வழியாகவும், அறிவாற்றல், நன்னெறி மற்றும் ஆன்மீகக் கருத்துக்களை வழங்கிடும் பகுதிகளுக்குள் சமயத்தின் கோட்பாடுகளையும் போதனைகளையும் புணைப்பதன் வாயிலாகவும் இந்த நூல்கள் இறை வார்த்தைகளின் சக்திகளைப் பயன்படுத்துகின்றன. உதாரணமாக, புனித வாசகங்களிலிருந்து குறிப்பிடப்படும் வாசகப்பகுதிகளில், அவை எடுக்கப்பட்ட நூல்கள் எல்லா வேளைகளிலும் குறிப்பிடப்படுவதில்லை என்றபோதிலும், பெரும்பாலும், அவை பயன்படுத்தப்படும் போது, உயிர்ப்பூட்டுனர்கள் அல்லது சம்பந்தப்பட்ட ஸ்தாபனங்கள், வாசகக்குறிப்புகளின் மூலாதாரங்களை குறிப்பிடுகின்றனர். கீழே, சாதாரணமாக இளைய இளைஞர்களால் பயிலப்படும் "*உறுதிபாட்டின் தென்றல்கள்*" எனும் முதல் நூலின் பாடம் ஒன்றிலிருந்து ஒரு பகுதி கொடுக்கப்பட்டுள்ளது. அதைப் படித்துவிட்டு அதைத் தொடர்ந்து வரும் கேள்விகளைப் பற்றி விவாதிக்கவும்.

கோட்வினுக்குச் சிஷிம்பா எனும் பெயரில் நெருங்கிய நண்பணாகச் சக மாணவன் ஒருவன் உள்ளான். அவன் அடிக்கடி முலேங்கா குடும்பத்தாரைக் காண வருவான். இன்றிரவு அவன் இரவு உணவுக்காக தங்கிவிடுகிறான். மேசையைச் சுற்றி அவர்கள் அமர்ந்திருக்க பேச்சு ஒரு தலைப்பிலிருந்து அடுத்த தலைப்புக்குத் தாவுகிறது. முசோன்டா 'உறுதிப்பாடு' என்ற தலைப்பை எழுப்ப விரும்பி, பொறுமையின்றி காத்திருக்கிறாள். இறுதியில் ஒரு சில கனங்களுக்கு மௌனம் நிலவுகிறது. "ரோஸும் நானும் 'உறுதிப்பாடு' பற்றி பேசிக் கொண்டிருந்தோம்" என முசோன்டா கூறுகிறாள்.

"அதோ என் தங்கை மீண்டும் ஒரு புதிய விஷயத்தைப் பேசுகிறாள்" என கோட்வின் தொண்டையை தெளிவுபடுத்தி பேசுகிறான். ஆனால் தான் வியக்கும் வகையில் சிஷிம்பா ஆவலைக் காட்டுகிறான்.

"அந்த வார்த்தை உனக்கு என்ன பொருளைக் கூறுகிறது?" என அவன் முசோன்டாவைக் கேட்கிறான்.

முசோன்டா தானும் வியப்புற்று, ரோஸ் பதில் கூறுவாள் என்ற நம்பிக்கையில் ரோஸை நோக்கிப் பார்கிறாள்.

"உறுதிப்பாடு.... ம்ம்ம்.... நாம் செய்கின்ற ஒரு காரியத்தில் கடவுள் நம்மை உறுதிப்படுத்தி நமக்கு உதவுகிறார்" என ரோஸ் கூறுகிறாள்.

சிஷிம்பா, சிறிது நேரத்திற்கு எதனையும் சொல்லாமல் இருக்கிறான். தன் கண்களில் கவலை குடிக்கொள்கிறது.

அவன் இவ்வாறு மெதுவாக தொடங்கிப் பேசுகிறான், "சில மாதங்களுக்கு முன்பு என் தந்தை உத்தியோகத்தை இழந்தார். அவர் நேர்மையானவர் மற்றும் பொறுப்புள்ளவர் என்பது அனைவருக்கும் தெரியும். அவர் பதினெட்டு ஆண்டுகளுக்கு ஒரு நிறுவனத்தில் காவலராகப் பணிபுரிந்தார். பிறகு திடீரென அவர்கள் அவரை வேலை நீக்கம் செய்தனர். நம் அனைவருக்கும் காரணம் தெரியும். அவரை அவர்கள் இன்னும் இரண்டு ஆண்டுகளுக்கு வேலையில் வைத்திருந்தால், அவரும் பதவி ஓய்வுப் பெற்று அந்த நிறுவனமும் அவருக்கு ஓய்வூதியத்தைக் கொடுக்க வேண்டி வந்திருக்கும். எங்களிடம் அதிக சேமிப்பு கிடையாது என் அண்ணன் எங்களுக்கு உதவினாலும் கூட, நான் தங்குவதற்கும் உணவுக்கும் கட்டணம் செலுத்த இயலாது என்பதனால் அடுத்த ஆண்டு நான் மீண்டும் பள்ளிக் கூடத்திற்குப் போக முடியாது போல் தெரிகிறது. கடவுள் ஏன் எங்களுக்கு உதவுவதில்லை என நான் யோசிக்கிறேன்."

திரு.முலேங்கா மென்சிரிப்புடன் இவ்வாறு கூறுகிறார், “நாம் ஒரு முயற்சியை மேற்க்கொள்ளும் போது கடவுள் நமக்கு உதவுகிறார் என்பதனால் வாழ்க்கை சுலபமானது என்பது பொருளல்ல. உங்கள் வாழ்க்கை இன்னல்களால் நிரப்பப்பட்டிருக்கும், மற்றும் துரதிர்ஷ்டவசமாக, அவற்றில் பல அநீதியினால் உருவாக்கப்பட்டிருக்கும். ஆனால் நீங்கள் சிரமப்பட்டு உழைக்கவேண்டும். சிறிது காலத்திற்கு நீங்கள் விரும்பிய வழியில் காரியம் நடக்காமல் போனாலும் கூட, நீங்கள் கடவுளின் உறுதிப்பாட்டில் நிச்சயமாக நம்பிக்கை வைக்க வேண்டும். குறிப்பாக அநீதியைப் போக்குவதில் நீங்கள் எடுக்கின்ற முயற்சிகளில் அவர் உங்களை உறுதிப்படுத்துவார்.” பிறகு திரு. முலேங்கா சிஷிம்பாவிடம் திரும்பி இவ்வாறு கூறுகிறார், “உங்கள் குடும்பம் ஒற்றுமையுடன் கடினமாக உழைக்கிறது. நிலைமை உங்களுக்கு சாதகமாக மாறும் என என் உள்ளம் எனக்குச் சொல்கிறது. நீங்கள் உங்கள் படிப்பை முடிப்பீர்கள். என் வார்த்தையை நம்புங்கள்.”

‘உறுதிப்பாட்டின் தென்றல்கள்” நூலை மேலும் விவரமாக பகுதி 20 மற்றும் 21 இல் நாம் படிப்போம், ஆயினும் பின்வரும் கேள்விகளை உங்கள் குழுவில் தற்போது கலந்துரையாட நீங்கள் விரும்பலாம்:

1. மேல் குறிப்பிடப்பட்ட உரையாடலில் வழங்கப்பட்டுள்ள முக்கிய ஆன்மீகக் கருத்து என்ன?

2. அந்தக் கருத்து இளைய இளைஞர்கள் புரிந்துகொள்ளும் வகையில் வழங்கப்பட்டுள்ளதா?

3. இந்த நூலின் இரண்டாவது பாடப்பிரிவில் தன்னறிவின் மீது அளவுகடந்த அழுத்தம் கொடுப்பதன் அபாயத்தை பரிசீலித்தோம். எவ்வாறு ஒருவர் முயற்சி செய்து கடவுளின் உறுதிப்படுத்தலைக் கவர்ந்திழுப்பது, தன்னம்பிக்கை, தன்தெளிவுணர்வு மற்றும் சுய நம்பிக்கையைப் பெற்றிட முயற்சிப்பதிலிருந்து வேறுபடுகின்றது என்பதை அப்பாடப்பிரிவு எடுத்துரைக்கின்றது?

4. ஏன் எல்லா இளைய இளைஞர்களும், பஹாய் குடும்பங்களிலிருந்து வருபவர்கள் உட்பட, அவர்கள் எந்தப் பின்னணியைச் சார்ந்தவர்களாக இருப்பினும், இது போன்ற பாடங்களைக் படிப்பதனால் பயனடைகின்றனரா? ஏன்?

## பகுதி 4

இரண்டாவது வகையைச் சார்ந்த புத்தகங்கள் பஹாய் குழந்தை வகுப்புகளில் பெற்றிருந்த ஆன்மீகக் கல்வியைத் தொடர்வதற்கான உள்ளடக்கங்களை வழங்குகின்றன. அவை அடிப்படை பஹாய் கொள்கைகளை வெளிப்படையாக ஆராய்ந்திடுவதோடு இந்தக் கொள்கைகள் எவ்வாறு சமூகத்தின் வாழ்வு எனும் அடிப்படையில் செயல்களாக மாற்றப்படலாம் என்பதை வெளிப்படையாக ஆராய்ந்திடும். பஹாவுல்லா பெற்றிருக்கும் இக்காலத்திற்கான கடவுளின் திருஅவதாரம் என்கிற ஸ்தானம், மனிதகுலத்திற்கான அவரது நோக்கத்தின் இறுதியான உணர்தலில் உள்ள முழுமையான நம்பிக்கை, அவரது சட்டங்களுக்குக் கீழ்ப்படிவதன் மூலம் நாம் அடையும் எல்லையற்ற சதந்திரம் மற்றும்

மகிழ்ச்சிக்கான வாக்குறுதி மற்றும் அவரது ஒப்பந்தத்தின் சக்தியில் உறுதிப்பாடு – இவையே நூல்களில் கருப்பொருள்கள் கையாளப்படும் விதத்தினைத் தெரிவிக்கும் நம்பிக்கைகளில் சிலவாகும்.

இந்த வகையான உபகரணங்களைப் பற்றி சிந்திக்கும்போது, பாதுகாவலரின் சார்பாக எழுதப்பட்டப் பின்வரும் இந்த பத்தி உதவியாக இருப்பதை நீங்கள் காணலாம்.

> **“....நவீன இளைஞர்கள் சந்திக்கும் அபாயங்கள் மென்மேலும் மிக மோசமாகிக் கொண்டு வருகின்றன, மற்றும் அதற்கு உடனடியான ஒரு தீர்வு தேவைப் படுகின்றது. ஆனால், அனுபவம் தெளிவாகக் காட்டுவதைப் போல, இந்த மெய்யாகவே கவலைக்குரியதும் சிக்கலானதுமான சூழ்நிலைக்கு, மரபுவழியாகத் தோன்றிய மற்றும் குருமார்களைக் கொண்ட சமயத்தினால் பரிகாரம் வழங்கிட இயலாது. திருச்சபையின் கொள்கைப் பிடிவாதம் முற்றிலும் விட்டொழிக்கப் பட்டுவிட்டது. இக்காலத்தின் மிதமிஞ்சிய பொருளாசைத் தன்மையின் பிடிகளிலிருந்து இளைஞர்களைக் காப்பாற்றக் கூடியதானது, ஓர் உண்மையான ஆக்க சக்தி வாய்ந்த மற்றும் ஜீவனுள்ள ஒரு சமயத்தின் சக்தியினால் மட்டுமே, அதாவது உலகிற்குப் பஹாவுல்லாவினால் வெளிப்படுத்தப்பட்ட சமயத்தைப் போன்ற ஒன்றினால் மட்டுமே இயலும். கடந்த காலத்தைப் போலவே, சமயம்தான் உலகின் ஒரே நம்பிக்கையாகும், ஆனால், அது நமது சமயத் தலைவர்கள் பொருளற்ற வகையில் போதிக்கும் சமயமல்ல. உண்மையான சமயத்திலிருந்து தொடர்பறுக்கப்பட்டால், ஒழுக்க நெறிகள் அதன் செயல் விளைவை இழந்து விடுகின்றன மற்றும் மனிதனின் தனிப்பட்ட மற்றும் சமூக வாழ்வை வழிகாட்டவும் கட்டுப்படுத்தவும் இயலாமல் ஆகிவிடுகின்றன. ஆனால் உண்மையான சமய நம்பிக்கையானது உண்மையான நன்னெறிமுறைகளோடு இணைக்கப்படும்போது, நல்லொழுக்க மேம்பாடு சாத்தியமாகின்றது, அது வெறும் கற்பனை ஆவலாக இருப்பதில்லை.”** [3]

பாரம்பரியமான மதத்தின் குறைந்து வரும் செல்வாக்கிற்கு மாறாக, ஜீவனுள்ள ஒரு சமயநம்பிக்கையின் சக்தியே, இன்றைய சமுதாயத்தில் மிகவும் பரவலாக காணப்படும் "மதிகேடுமிக்க லௌகீகத்தின் பள்ளங்களிலிருந்து" இளைஞர்களை பாதுகாக்க முடியும் என்பதை மேற்கண்ட பத்தி தெளிவுபடுத்துகிறது. இந்த சக்தியானது இளையவர்கள் படிக்கும் உள்ளடக்கம் மற்றும் அவர்களின் ஆன்மீக திறன்களை வளர்ப்பதில் அவர்களுக்கு உதவுதல் ஆகிய இரண்டிலும் பிரதிபலிக்க வேண்டும். இந்த யோசனைகளை மேலும் கருத்தில் கொள்வதற்காக, இங்கே ஆராயப்படும் வகைப்பிரிவைச் சேர்ந்த நூல்களில் ஒன்றான “நம்பிக்கையின் உள்ளாற்றல்” எனும் நூலிலிருந்து ஒரு சாரத்தினை பார்ப்போம்.

*நம்பிக்கையின் உள்ளாற்றல்* நூலானது தத்துவ ஞானத்தைச் சார்ந்த பல கருத்துக்களைக் கொண்டிருக்கும். ஏனெனில் இந்த வயதிலுள்ள இளைஞர்கள் இருத்தலின் பல அடிப்படைக் கேள்விகளுக்கு விடைத் தேடுகின்றனர் என்பது அறியப்பட்டுள்ளது, இவற்றிற்கு அவர்கள் மனநிறைவு அளிக்கக் கூடியப் பதில்களைக் கண்டறிய வேண்டும். சந்தேகிப்பதற்கு இடமில்லாது, மனித சிந்தனையைக் குழப்பமடையச் செய்திடும் பல பிரச்சினைகளுக்குச் சமயத்தின் போதனைகளில் மட்டுமே விடைகள் கண்டறியப்படக்கூடும்: மனிதனின் உண்மையான இயல்பு, நன்மையும் தீமையும், தன்விருப்பம் மற்றும் விதி, பரிணாம வளர்ச்சி மற்றும் மனிதனின் ஆவி, மனித அறிவாற்றல் மற்றும் நம்பிக்கையின் உள்ளாற்றல். இந்நூலானது புனித வாசகங்களிலிருந்து பெறப்படும் ஆழமான

நுண்ணறிவுகளைப் பயன்படுத்துகின்றன, குறிப்பாக *பதிலளிக்கப்பட்ட சில கேள்விகள்* என்னும் நூலிலிருந்து அப்துல் பஹாவின் ஊடுருவிடும் விளக்கங்கள் இந்த கேள்விகளுக்கு விடைகளை வழங்குவதற்காகப் பயன்படுத்துகின்றது. இது ஒவ்வொரு கருப்பொருளையும் இளைய இளைஞர்கள் குழுவின் வழக்கமான வாராந்திர கூட்டங்களின் போது நடத்தப்படும் உரையாடல்களின் மூலமும் பின்னர் அவர்கள் ஒரு வார இறுதியை முகாம் தளத்தில் ஒன்றாகக் கழிக்கும் போதும் உருவாக்குகிறது. பின்வரும் பாகமானது, இளைஞர்கள் தங்கள் உயிர்ப்பூட்டுனரான நட்டாலியா பெட்ரோவ்னா என்பவருடன் விதியைப் பற்றியக் கேள்வியை கலந்தாலோசிக்கும் ஒரு பாடத்திலிருந்து எடுக்கப் பட்டுள்ளது.

"இதுவரை நாம் என்ன புரிந்து கொண்டோம் என்பதைப் பார்ப்போம்," என்று கூறிய நட்டாலியா பெட்ரோவ்னா மேலும் தொடர்ந்தார். "நன்மை, தீமையைச் செய்திட நமக்குச் சுதந்திர விருப்பத் தேர்வுத் திறன் இருக்கின்றது மேலும் பண்பான மேன்மை வாழ்வு வாழ நாம் நமது செயலுறுதி ஆற்றலைப் பயன்படுத்த வேண்டும். நமக்குத் தன்னிச்சையாற்றல் இருப்பதால் யாவற்றையும் நாம் மனக் கட்டுப்பாட்டுக்குள் அடக்கிவிடலாம் என்று பொருள்படாது. நமக்கு நேரும் சிலவற்றை நம்மால் சிறிதே கட்டுப்படுத்திடக் கூடியவையும் உண்டு. இப்பொழுது இன்னொரு சிந்தனையைக் குறித்து நான் உங்களிடம் கேட்க விரும்புகின்றேன். 'விதி' என்னும் வார்த்தை குறித்து நீங்கள் என்ன புரிந்து கொள்கிறீர்கள்?"

"எந்த நிலையிலும் நம்மால் மாற்ற முடியாத ஒன்றுதான் விதி," ஐகோர் கூறினான்.

"கேட்பதற்கு நன்றாகத்தான் இருக்கிறது அது. யாராவது சில உதாரணங்கள் கொடுக்க முடியுமா?" நட்டாலியா கேட்டார்.

"நம் பெற்றோரை நாம் தேர்ந்தெடுப்பதில்லை," நதியா கூறினாள்.

"நாம் பிறக்கும் இடத்தை நாம் தேர்ந்தெடுப்பதில்லை," அண்டோன் கூறினான்.

"நான் மாபெரும் பியானோ இசை மேதையாக ஆவது என் விதி என்று தொடர்ந்து சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்," என்று வடிக் கூறினான்.

"நீ அப்படி ஆக வேண்டும் என்று அவசியமில்லை. நீ வேறொரு துறையைக் கூடத் தேர்ந்தெடுக்கலாம்," என்று மரினா கூறினாள்.

"நீ கூறியது சரியே. விதி என்பது அவ்வளவு எளிதான ஒன்றல்ல. விதி எவ்வாறு செயல்படுகிறது என்று ஓர் உவமை வழி விளக்கலாம். கம்பளம் எப்படி நெய்யப்பட்டுள்ளது உங்களில் எவராவது பார்த்திருக்கிறீர்களா?" நட்டாலியா கேட்டார்.

அனைவரின் முகத்திலும் அறியாமை ரேகைப் பரவியது. "நல்லது, ஒரு துணி நெய்யும் நெசவுத் தறி இருக்கின்றது. இந்த நெசவுத் தறியில் உள்ள கட்டம் கட்டமான அமைப்பில் இணைப் போக்காகச் செல்லும் திரித்த நூல் இழைகள் ஒரு முனையிலிருந்து இன்னொரு முனைக்கு இறுக்கமாகக் கட்டப்பட்டிருக்கும். இந்தச் சட்டத்தில், அல்லது தறியில், வலுவான இணையான நூல்கள் ஒரு முனையிலிருந்து மற்றொன்றுக்கு இறுக்கமாக நீட்டப்படுகின்றன. நெசவாளர் இவ்வாறு கட்டப்பட்ட நூல் இழைகளுக்கு ஊடே பல வண்ண நிறங் கொண்ட நூல்களைக் கொண்டு நெய்து ஒரு தோரணையை உருவாக்குவார். நெசவாளர் இந்த நூல்களின் மூலம் நெசவு செய்து ஒரு வடிவத்தை உருவாக்க வெவ்வேறு வண்ணங்களின் பல்வேறு நூல்களைப் பயன்படுத்துகிறார். நாம் எல்லாரும் நெசவாளர்கள் போன்றவர்கள் என்று அப்துல் பஹா கூறியதை ஆரம்பக்கால நம்பிக்கையாளர் ஒருவர் கேள்விப்பட்டிருக்கிறார். நமக்கு அதில் உள்ள திரித்த நூல் கட்டப்பட்டக் கட்டமைப்பும் மற்றும் நெய்வதற்கான நூல் இழைகளும் கொடுக்கப்பட்டுள்ளன. நமக்குச் சட்டம் அதனுடன் பொருத்தப்பட்ட இழைகளுடன் கொடுக்கப்பட்டுள்ளது. இதைத்தான் நாம் பிறக்கும்போதே நம்முடன் வந்த திறன்களும் ஆற்றல்களும் எனக் கூறலாம். இதுவே நம் விதியாகும். ஆனால் நெசவாளர் தறியில் வடிவமைக்க வேண்டியதை நாம்தான் தேர்ந்தெடுக்க வேண்டும். எதை வடிவமைக்க வேண்டும் என்பதைத் தேர்ந்தெடுப்பதில் நமக்குச் சுதந்திரமும் உண்டு. நம் ஒவ்வொரு செயலும் தோரணை அமைப்பில் ஒரு சிறு பகுதியை உருவாக்குகிறது. நாம் என்னவாக வளர்ந்து உருவெடுக்கிறோம் என்பதுதான் அதன் முழு வேலைப்பாடாகும். சுதந்திரச் செயல் தேர்வு மூலமும் செயலுறுதி ஆற்றல் மூலமும் ஆண்டவன் நமக்கு அளித்த ஆற்றல்களையும் திறன்களையும் நாம் வளர்க்கிறோம்,"என நட்டாலியா கூறினார்.

---

**பிரதிபலித்தல்கள்:**

இறைவன் நம் அனைவருக்கும் வெவ்வேறு திறமைகள் மற்றும் ஆற்றல்களைக் கொடுத்திருக்கின்றார். ஒருவர் உயிரியல் துறையில் திறன் பெற்றவராக இருக்கலாம். இன்னொருவர் இசைத் துறையில் திறனுடையவராக இருக்கலாம். ஆனால் நாம் அனைவரும் உயர்ந்த மனிதனாக வளர்ச்சியுறத் தேவையான அனைத்தும் வழங்கப்பட்டிருக்கிறோம். ஆகவே நம் குறைபாடுகளுக்கு விதியைக் குறை கூறுவது சரியல்ல. அவ்வாறு குறை கூறும்போது நாம் முன்னேறும் முயற்சியை நிறுத்தி விடுகிறோம். பின்வரும் ஒவ்வொரு சூழலிலும் ஒவ்வொரு தனி மனிதனின் நிலைமையை மாற்றக் கூடிய சிந்தனையைத் தேர்ந்தெடுக்கவும்:

a. ஒருவர் வழக்கமாக ஆரோக்கியமற்ற உணவை உண்பதால் சதா நோய்வாய்ப் படுகின்றார். அவர் இவ்வாறு எண்ணுகின்றார்:

   ______ நான் பலவீனமாகவும் நோயாளியாகவும் இருக்க வேண்டும் என்பது என் விதி.

______ நான் காரணங்கள் கூறுவதை நிறுத்திக் கொண்டு என் உணவு உண்ணும் பழக்கங்களை மாற்றிக் கொள்ள வேண்டும்.

b. ஒருவர் பாடங்களைப் படிப்பதில்லை. அதனால் தேர்வில் மோசமாகச் செய்திருக்கிறார். அவர் எண்ணுகிறார்:

______ நான் முதல் நிலை மாணவனாக இல்லாமல் இருக்கலாம். ஆனால்

விடா முயற்சியின் வழி முன்னேறுவேன்.

______ பள்ளியில் வெற்றி பெறுவது என் விதியல்ல.

c. ஒருவர் கஷ்டம் வரும்போதெல்லாம் மது அருந்துகிறார். அவர் தானத்தில் இருக்கும்போது இவ்வாறு எண்ணுகிறார்.

______ குடிக்கும்படி வாழ்க்கை என்னைக் கட்டாயப்படுத்துகிறது.

______ என் வாழ்க்கையின் பிரச்சினைகளை என்னால் சமாளிக்க முடியும். என் வாழ்க்கையில் உள்ள பிரச்சனைகளை கையாளுவதற்குக் கற்றுக்கொள்ள முடியும்; எனக்கு மதுபானம் தேவையில்லை.

d. ஒருவர் தம் நண்பர்களைக் குறை கூறும் பழக்கமுடையவர். அதனால் அவர்கள் அவரைத் தவிர்க்கின்றனர். அவர் இப்படி எண்ணுகிறார்:

______ யாருக்குமே என்னைப் பிடிக்கவில்லை.

______ மற்றவர்களைக் குறை கூறுவதை நான் நிறுத்திக் கொண்டு அவர்களிடம் உள்ள நல்ல பண்புகளைக் காண வேண்டும்.

e. ஒருவர் தேர்வில் ஏமாற்றி மாட்டிக் கொள்கிறார். அவர் இப்படி எண்ணுகிறார்:

______ இது என் கெட்ட காலம். மற்றவர்கள் ஏமாற்றுகிறார்கள். ஆனால் அவர்கள் மாட்டிக் கொள்வதில்லை.

______ இக்காரியத்தை நான் எப்படி செய்யத் துணிந்தேன்? நேர்மை எனும் அங்கியினால் நான் அலங்கரிக்கப்பட்டிருக்க வேண்டும்.

---

"குற்றவாளியாவது எவரின் விதியும் அல்லவென்று நாம் கூறுகிறோமா?" ஐவன் கேட்டான்.

"நிச்சயம் இல்லை," என்று பதில் கூறிய நட்டாலியா தொடர்ந்து கூறினார்: "சற்றுமுன் நான் பயன்படுத்திய ஒப்புவமையின்படி கொடுக்கப்பட்டக் கட்டமைப்பு, நூல் இழை மூலம் ஒவ்வொருவரும் அழகிய தோரணையை நெய்யலாம். நாம் வேறுபட்டிருந்த போதிலும் நாம் நல்லவர்களாக வளர்ந்திட நமக்கெல்லாம் திறமைகள் இருக்கின்றன."

கூறப்பட்ட யாவற்றையும் ஒப்புக் கொண்டான். இருப்பினும், ஏதோ ஒன்று அவன் மனதைத் தொந்தரவு செய்தது. அது என்னவென்று அவனால் சரியாக ஊகிக்க முடியவில்லை. பின்னர்

திடுமென அவன் வாயால் கூறுவதை அவனால் கேட்க முடிந்தது. "ஆனால் இவையெல்லாம் மிகக் கடினமாயிற்றே."

ஐவன் கூறியதன் பொருளை எவராலும் புரிந்து கொள்ள முடியவில்லை.
"எது மிகவும் கஷ்டம்?" நட்டாலியா கேட்டார்.

"எல்லா வேளைகளிலும் பலத்துடனும் நல்லவனாகவும் இருக்க அதிக முயற்சி செய்வதுதான்," ஐவன் பதில் கூறினான்.

"நீ கூறுவது சரியே ஐவன்," எனக் கூறிய நட்டாலியா தொடர்ந்து ," எல்லா நேரங்களிலும் இறைவன் நமக்கு உதவுகிறார் என்பது நினைவிருக்கட்டும். அவர் நம்மைத் தனியே விட்டுவிட மாட்டார். அது பாய்மரக் கப்பல் போன்றது; நகர்வதற்கான சக்தி காற்றிலிருந்து கிடைக்கிறது, கப்பலில் இருந்து அல்ல. ஆனால், மாலுமிதான் காற்றைப் பயன்படுத்திக் கப்பலைச் சரியான இலக்கை நோக்கிச் செலுத்துகிறார். அனைத்து சக்திகளும் இறைவனிடமிருந்தே வருகின்றன. அவர் உதவியினாலன்றி நாம் எல்லாரும் ஆற்றல் இல்லாதவர்கள். நாம் நம்மை நோக்கும்போது நாம் பார்ப்பதெல்லாம் பலவீனங்கள்தான். ஆனால் நாம் கடவுள் பக்கம் திரும்பி அவரின் உதவியையும் ஆதரவையும் கெஞ்சும்போது அவர் விரும்பும் செயலைச் செய்ய நமக்கு பலம் கிடைக்கிறது," என்று கூறினார்.

பின்வரும் வாசகப் பகுதியை மனனம் செய்ய குழுவினர் இருவர் இருவராகப் பிரிக்கப்படுகின்றனர்:

> **“ஒப்புயர்வற்ற படைத்தவர் மனிதர்கள் அனைவரையும் ஒரே பொருளிலிருந்தே படைத்து, அவர்களின் மெய்மையைத் தமது மற்ற படைப்பினங்களுக்கு மேலாக உயர்த்தியிருக்கின்றார். ஆகவே, வெற்றியோ, தோல்வியோ, இலாபமோ, இழப்போ, மனிதனுடைய சொந்த முயற்சிகளை சார்ந்தே இருக்கின்றன. அவன் மேன்மேலும் கடுமையாக முயற்சி செய்யும் போது, மேலும் அதிகமாக முன்னேறுவான்.”**
>
> **“என் கடவுளே! என் கடவுளே! உமது திருமொழியை, திரளான மக்களிடையே உயர்த்தி, உமது போதனைகளை உமது மக்களிடையே பரப்ப வேண்டும் என்ற உறுதியுடன், மாபெரும் காரியத்தில் ஈடுபட்டிருக்கும் என்னை, எனது தாழ்மையிலும் பலவீனத்திலும் நீர் காண்கின்றீர். ஒரு கொசுவகைப்பிராணியை ஒரு கழுகாகவும், ஓர் நீர்த் துளியை ஆறுகளாகவும், கடல்களாகவும் ஓர் அணுவினை ஒளிகளாகவும் சூரியன்களாகவும், மற்றல்லது உமது உறுதிப்பாடுகள் மட்டுமே. அவற்றை என்மீது பொழிந்து உமது ஒளிமிக்க இராஜ்ஜியத்தின் சைனியங்களைக் கொண்டு, நான் வெற்றிபெற எனக்கு உதவிபுரிந்து, புனித ஆவியின் மூச்சினைக் கொண்டு, நீர் எனக்கு உதவினாலன்றி நான் எவ்வாறு வெற்றி பெற முடியும்? என் தேவரே! உமது வெற்றிக்களிப்படைய மற்றும்**

**பயனுறுதியான வல்லமையை கொண்டு, எனக்கு உதவி புரிவீராக. அதனால் எனது நாவானது உமது போற்றுதல்களையும், இயற்பண்புகளையும் அனைத்து மக்களிடையேயும் உச்சரித்து, எனது ஆன்மாவானது, உமது அன்பு மற்றும் ஞானமெனும் திராட்சை ரசத்தினால் வழிந்தோடிடக்கூடும்.**

**“சர்வசக்திமிக்கவரும் தாம் விரும்பியவற்றை எல்லாம் செய்யவல்லவரும் நீரே ஆவீர்.“**

*நம்பிக்கையின் உள்ளாற்றல்* எனும் நூல் முழுவதையும் பகுதி 22 இல் படிப்பதற்கான வாய்ப்பை நீங்கள் பெறுவீர்கள் என்றபோதிலும், பின்வரும் குறிப்புகளைக் கொண்டு, மேல்காணப்படும் எடுபகுதி குறித்த ஒரு ஆய்வை இப்போது மேற்கொள்வது பயனுள்ளதாக இருக்கும்.

1. "விதி" என்னும் கருத்தை இந்தப் பாடம் எவ்வாறு விளக்குகின்றது? அது கொள்கைப் பிடிவாதமானதா?

2. இந்தக் கருத்தைக் கொள்கைப் பிடிவாதமான வகையில் குறிப்பிடுவதானது எவ்வாறு இருக்கும்?

3. ஆன்மீகக் கருத்துக்களை இளைய இளைஞர்கள் புரிந்துகொள்வதற்கு உதவிட இந்தப் பாடம் வற்புறுத்துகிறதா அல்லது கருத்துக்கள் கண்டிப்பான வகையில் வழங்கப் படுகின்றனவா?

4. தங்களுடைய சொந்த வாழ்வில் விதி மற்றும் தன்விருப்பம் சார்ந்தவற்றில் திருவாசகங்களை அமுல்படுத்திடுவதை காண்பதற்கு இந்தப் பாடம் எவ்வாறு உதவுகின்றது?

5. கருத்துக்களைப் புரிந்து கொள்ள முயற்சிக்கும் இளம் கதாபாத்திரங்கள் வெளிப்படுத்தும் மாறுபட்ட கருத்துக்கள் மற்றும் உணர்ச்சிகளுக்கு சகிப்புத்தன்மையை கதை வெளிப்படுத்துகிறதா? அப்படியானால், அது எவ்வாறு காட்டப்படுகிறது?

6. இதன் தொடர்பில் பல்வேறு கருத்துக்களைச் சுதந்திரமாகக் கூறுவதற்கு இளைய இளைஞர் குழுவின் உறுப்பினர்கள் அனுமதிக்கப்படவில்லை என்றால் என்ன விளைவு நேர்ந்திடும்?

7. தெளிவான சிந்தனையை வளர்த்துக்கொள்ள தம்முடைய இளைய நண்பர்களுக்கு உதவிட நட்டாலியா பெட்ரோவ்னா எவ்வாறு கருத்துக்களை விளக்குகின்றார்?

8. கதையில் உள்ள இளைஞர்களிடையே ஆராயப்படும் கேள்விகள் அவர்களின் பின்னணியைக் கருத்தில்கொள்ளாமல் எல்லா இளைய இளைஞர்களுக்கும் பொருத்தமானவையா?

# பகுதி 5

வாலிபப் பருவத்தின் ஆரம்பக் கட்டத்தில், வெளித் தோற்றத்திற்கும் அப்பால் செல்லும் திறனை வெகு விரைவாக நாம் வளர்த்துக் கொள்கிறோம்; மற்றும் நாம் காணும், நாம் அனுபவிக்கும் விஷயங்களைப் பற்றிய ஓர் ஆழமான அர்த்தத்தை நாடுகிறோம். ஆகையால், இளைய இளைஞர்களுக்கு ஆன்மீக உணரும் திறன் தேவைப்படுகிறது; ஆன்மீக ஆற்றல்களை அறிந்திடுவதற்கும், ஒவ்வொரு சூழ்நிலையினுடைய ஆன்மீக மெய்மைகளை கண்டுணரவும், மற்றும் தொடர்புடைய ஆன்மீக கொள்கைகளை அடையாளம் காணவும் அவர்கள் உதவப்பட வேண்டும். சமயத்தின் திருவாசகங்கள் "அகப்பார்வை", "உள்நோக்குப் பார்வை" மற்றும் "ஆன்மாவின் கண்" போன்ற திறன்களைக் குறிப்பிடுகின்றன. உதாரணமாகக், கீழ்க்காணப்படும் வாசகத்தில், தெஹ்ரானில் உள்ள தர்பியாட் பள்ளிக்கூடத்திற்கு, அப்துல் பஹா இவ்வாறு ஆலோசனை வழங்குகிறார்:

**“எத்துணை குறுகிய காலத்தில் இயலுமோ அதில் அவர்கள் மாபெரும் வளர்ச்சியை அடையட்டுமாக. அவர்கள் தங்கள் கண்களை அகலமாகத் திறந்து எல்லாப் பொருள்களின் உள்ளார்ந்த மெய்மையினை வெளிப்படுத்தட்டுமாக. எல்லாக் கலைகளிலும் திறன்களிலும் அவர்கள் சிறந்திருக்கட்டுமாக, மற்றும் எல்லாப் பொருள்களின் இரகசியங்களையும் அவை இருக்கின்றவாறே அவற்றைக் கற்றுக் கொள்ளட்டுமாக – இந்தத் தன்மைதான் புனித திருவாசலில் ஊழியம் செய்வதன் விளைவுகளின் தெளிவான அடையாளங்களாகும்.”** [4]

மனிதனை மிருகங்களிலிருந்து வேறுபடுத்திக் காட்டும் ஒரு ஆற்றலானது ஆன்மீக நுண்ணறிவாகும் என அப்துல் பஹா குறிப்பிடுகிறார்:

**“மனிதன் மிருகங்களைப் போலவே சக்திகளைப் பெற்றிருந்த போதிலும், அவன் அறிவாற்றல் சாதனையினால், ஆன்மீக நுண்ணறிவு, நற்பண்புகளைப் பெறுவது, ஆண்டவனின் வழங்குதல்களைத், தெய்வீகக் கொடைகளை, மற்றும் விண்ணுலகக் கருணையின் பொழிவுகளைப் பெற்றுக்கொள்ளும் திறனில் மிருகத்தை விடச் சிறந்து நிற்கின்றான் என்பது தெளிவாகக் காணப்படுகிறது. இதுவே மனிதனின் ஆபரணம், அவனது புகழ் மற்றும் மேன்மையுமாகும். இந்த அதி உயரிய ஸ்தானத்தை அடைந்திட மனிதன் கடும் முயற்சி செய்ய வேண்டும்.”** [5]

மேலும் அவர் நமது அகப்பார்வையையும் அகச்செவியையும் ஆன்மீக கொடைகள் எனக் குறிப்பிடுகிறார்.

**“அவர் நமக்குப் பொருள் பரிசுகளையும் ஆன்மீக இறையருள்களையும் வழங்கியுள்ளார். சூரியனின் ஒளிகளைக் காண்பதற்காகப் புறக்கண்களையும், கடவுளின் பேரொளியை அறிந்திட இயலுவதற்காக அகப்பார்வையையும் வழங்கியுள்ளார். புறச்செவிகளை, ஓசைகளின் கீதங்களால் நாம் மகிழ்ச்சி கொள்வதற்காகவும், அகச் செவிமடுக்கும் சக்தியை நம்மைப் படைத்தவரின் குரலைச் செவிமடுப்பதற்காகவும் அவர் ஆக்கியுள்ளார்.”** [6]

மற்றொரு சந்தர்ப்பத்தில் நமது உள்பார்வையைத் திறப்பது எவ்வளவு இன்றியமையாதது என்பதை நினைவூட்டுகின்றார்.

**“நமது ஆன்மீக நுண்ணறிவான நமது உள்பார்வை திறக்கப்படவேண்டும், அதனால் யாவற்றிலும் கடவுளின் அடையாளங்கள் மற்றும் தடயங்களை நாம் காணக்கூடும். ஆவியின் ஒளியை அனைத்துமே பிரதிபலிக்க வல்லமை பெற்றவையாகும்.” [7]**

மற்றும் இந்த பத்தியில் ஆன்மீக நுண்ணறிவானது எவ்வாறு புரிந்துணர்வினை மேம்படுத்துகின்றது என்பதை அப்துல்-பஹா நமக்கு விளக்குகிறார்:

**“நிர்மூலப்படுதல் குறித்த கருத்து மானிட சீர்கேடு குறித்த காரணக்கூறுகளில் ஒன்றாகவும், மானிட இழிவு, தாழ்வு ஆகியவற்றிற்குக் காரணமாகவும், மானிட அச்ச உணர்வு, இழிவு ஆகியவற்றிற்கு மூலக்காரணமாகவும் உள்ளது. அது மனித சிந்தனையின் சிதறல் மற்றும் பலவீனப்படுதலுக்கு ஏதுவாக இருந்து வந்துள்ளது, இதற்கு மாறாக, படைப்பு மற்றும் தொடர்ச்சி குறித்த தெளிந்த சிந்தனை மனிதனை மேன்மைமிகு கோட்பாடுகளுக்கு உயரச்செய்தும், மனித மேம்பாட்டின் அஸ்திவாரங்களை ஸ்தாபித்தும், தெய்வீக ஒழுக்கங்களின் உருவாக்கத்தைத் தூண்டியும் உள்ளன. ஆகவே, முற்றிலும் மாயைகளான எல்லாமே மாயை எனும் நிலை, இறப்பு ஆகியவை குறித்த சிந்தனைகளை விடுத்து நிலையாக வாழ்பவன், தனது படைப்பின் தெய்வீகக் குறிக்கோளில் என்றும் நிலைத்திருப்பவன் எனத் தன்னைக் காண்பது மனிதனுக்கு ஏற்புடையதாகும். மனித ஆன்மாவைத் தரங்குறையச் செய்திடும் சிந்தனைகளிலிருந்து அப்பால் திரும்பி அதன் மூலமாக, மனித மெய்மையின் தொடர்ச்சி குறித்த ஆன்மீகப் புலனுணர்வின்பால் அவன் மேல்நோக்கியும் அதிஉயர்வாகவும் நாளுக்கு நாள், மணித்தியாலத்திற்கு மணித்தியாலம் மேம்பாடு அடையக்கூடும்.” [8]**

மனிதனின் புரிந்துணர்வுக்கு சாதாரண மனதின் பயன்பாட்டின் வாயிலாகக் கிடைக்காத புதிய பரிமாணங்களை ஆன்மீக நுண்ணறிவானது எவ்வாறு வழங்குகின்றது என்பதைப் பற்றி சில வார்த்தைகள் கூற இயலுமா?

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

___________________________________________________________________________

## பகுதி 6

ஆன்மீகப் புலனுணர்வைப் பெற்றிருப்பதன் தேவையை ஆய்வுசெய்தபின், இப்போது அதனை எவ்வாறு மேம்படுத்திக்கொள்ளலாம் என்று நம்மையே நாம் கேட்கவேண்டும். நிச்சயமாக,

கேள்வியானது, ஓர் எளிய பதிலை வழங்கிட இயலாது, மற்றும் இங்கு நாம் தொடர்புடைய சிந்தனைகளை மட்டுமே கருதலாம்.

ஆன்மீகப் புலனுணர்வானது தூய உள்ளம் ஒன்று பெற்றிருக்கக் கூடிய ஒரு பண்புக்கூறாகும் என்பது தெளிவு. அப்துல பஹா நமக்கு கூறுவதாவது:

**“மனிதனின் இதயம் எந்த அளவிற்குத் தூய்மையும் புனிதத்தன்மையும் அடைகின்றதோ அந்த அளவிற்கு அது கடவுளை நோக்கி முன்னேறுகின்றது, மற்றும் அதனுள் மெய்மைச் சூரியனின் ஒளி வெளிப்படுத்தப்படுகின்றது. இவ்வொளி இதயங்களைக் கடவுளின் அன்பெனும் நெருப்பினால் அழகுறச் செய்கின்றது, அவற்றுள் அறிவெனும் கதவுகளைத் திறக்கச் செய்கின்றது மற்றும் ஆன்மீக கண்டுபிடிப்புகளை சாத்தியமாக்கிடத் தெய்வீக மர்மங்களைக் கட்டவிழ்த்துவிடுகின்றது.”**[9]

இறைவனைப் பற்றிய அறிவு ஆன்மீக நுண்ணறிவின் மேம்பாட்டிற்கு இன்றியமையாத ஒன்றென்பது தெளிவான ஒன்றாகும்:

**"விஷயங்களின் யதார்த்தத்தைப் புரிந்துகொள்வது இருப்பு எனும் சாம்ராஜ்யத்தில் ஒரு லௌகீக நன்மையை அளிப்பதோடு வெளிப்புற நாகரிகத்தின் முன்னேற்றத்தையும் ஏற்படுத்துகிறது, ஆனால் கடவுளைப் பற்றிய அறிவானது ஆன்மீக முன்னேற்றம் மற்றும் ஈர்ப்பு, உண்மையான பார்வை மற்றும் நுண்ணறிவு, மனிதகுலத்தின் மேன்மை, தெய்வீக நாகரீகத்தின் தோற்றம், அறநெறிகளின் திருத்தம் மற்றும் மனசாட்சியின் ஒளியூட்டத்திற்குக் காரணமாகிறது. ”**[10]

மற்றும் உட்பார்வையின் மேம்பாட்டிற்கு இறைவனின் மீதான அன்பு இன்றியமையாத ஒன்றென்பது மிகத் தெளிவான ஒன்றாகும்:

**“என் நண்பனே! மெய்மையெனும் சூரியனிலிருந்து பொழியும் பிரகாசமான கதிர்களைக் கொண்டு உங்கள் பார்வையை ஒளியூட்டியதற்காகவும், மற்றும் வாழ்வெனும் நீரினாலும் இறையன்பெனும் நெருப்பினால் உங்களை உயிர்பெறச் செய்து பெயரூட்டியதற்காகவும் இறைவனுக்கு உங்களுடைய நன்றியைப் பகிருங்கள்.”**[11]

**“இறைவனின் அன்பு நெருப்பாக கருதப்படுகிறது, ஏனெனில் அது திரைகளை எரித்து விடுகின்றது, நீராக கருதப்படுகின்றது, ஏனெனில் அது வாழ்வின் ஆதாரமாக இருக்கின்றது. சுருங்கக் கூறின், மனித உலகின் பண்புகளின் உள்ளார்ந்த மெய்நிலை இறையன்பாகும். அதன் மூலம், மனித இயல்பு தூய்மைப்படுத்தப்படுகிறது. இறையன்பின் மூலமாக, ஒருவர் மனித உலகின் குறைபாடுகளில் இருந்து விடுவிக்கப்படுகிறார். இறையன்பின் மூலமாக, ஒருவர் பண்புகளின் இராஜ்ஜியத்தில் முன்னேற்றமடைகிறார். இறையன்பு உலகின் ஒளிக்கு காரணமாகிறது.”**[12]

மேற்கண்ட அறிவுரைகளின் தனிச்சிறப்புக் குறித்து நீங்கள் பிரதிபலித்திடும் வேளை பின்வரும் பயிற்சிகள் உங்களுக்கு உதவியாக இருக்கக் காண்பீர்கள்:

1. ஆன்மீக நுண்ணறிவு மேம்பாடு கண்டிட பின்வரும் ஒவ்வொரு சூழ்நிலையும் எவ்வாறு உதவுகின்றது என்பது குறித்து சில வரிகள் எழுதவும்:

அ. உள்ளத்தின் தூய்மை: ______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

ஆ. இறைவனைப் பற்றிய அறிவு : ______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

இ. இறை அன்பு: ______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

2. பின்வரும் கூற்றுகள் உண்மையா என்பதைத் தீர்மானிக்கவும்:

_______ இறைவனின் போதனைகளின்றி, வெறும் அறிவாற்றலின் வாயிலாகவே நாம் நன்மை தீமைகளை அறிந்துகொள்ள முடியும்.

_______ கடவுளின் அவதாரங்கள் குறித்த அறிவும் அவர்தம் போதனைகளுக்குக் கீழ்ப்படிதலும் உண்மையை அறிந்துகொள்ள நமக்கு உதவும்.

_______ உள்ளத் தூய்மை ஒரு மனிதனை எளியவனாக்குகின்றது.

_______ ஓர் உள்ளம் எவ்வளவு தூய்மையாக இருக்கின்றதோ அஃது அவ்வளவிற்கு தெய்வீகப் பண்புக்கூறுகளை நேர்மையாகப் பிரதிபலிக்கும், அது விஷயங்களின் உள்வீற்றிருக்கும் மெய்மைகளை நுண்ணறிந்திட உதவிடும் ஒளியாகும்.

_______ இறைவனின் அன்பெனும் தீ, தன்னகம் எனும் திரையை எரித்து, உண்மையைக் கண்டுகொள்ள உட்பார்வைக்கு ஆற்றலளிக்கின்றது.

______ இறைவனின் அன்பெனும் சக்தி அவரது திருவிருப்பம் மற்றும் அவரது நோக்கத்தைத் தெளிவான தொலைநோக்குடன் நிறைவேற்றும் கடுமுயல்வுக்கு நமக்கு உதவுகின்றது

_______ இறுதியில் அழிவு எனும் பயம் நமது பகுத்தறிவு மற்றும் ஆன்மீக ஆற்றல்களை நலிவுறச் செய்கிறது, ஆகவே, நாம் என்றென்றும் வாழ்வோம் எனும் உறுதிப்பாடு நமது ஆன்மீக நுண்ணறிவைக் கூராக்குகின்றது.

______ .தெய்வீக நுழைவாயிலில் ஆற்றப்படும் தன்னலமற்ற சேவை விஷயங்களுக்குள் வீற்றிருக்கும் மெய்மையைக் கண்டுகொள்ள நமக்கு உதவும்.

_______.உட்பார்வையின் வாயிலாக நாம் தெய்வீக உறுதிப்பாடுகளைக் காணமுடியும்.

## பகுதி 7

முன்சென்ற பகுதியின் கடைசி மேற்கோளானது நமது ஆய்வுக்கு மிகவும் குறிப்பிடத்தக்க சம்பந்தமுடைய ஓர் அடிப்படை கருத்துப்படிவத்தைக் குறித்துக் காட்டுகின்றது - குறிப்பாக, விஷயங்களின் மெய்மைகளைக் கண்ணுறுவதிலிருந்து நமது அகக்கண்களைப் பல திரைகள் மறைக்கின்றன என்பதே அது. ஆன்மீக நுண்ணறிவின் மேம்பாடு இத்தகைய திரைகளை அகற்றுவதை வேண்டுகின்றது. அப்துல் பஹா சுட்டிக்காட்டுவதாவது:

**“புலனுணர்வு சார்ந்த சகல உயரினங்களுள்ளும் வெளிப்படுகின்ற கடவுளின் கொடைகள் இடையீடு செய்கின்ற மன மற்றும் வெளிப்பார்வைகள் எனும் திரைகளினால் சில வேளைகளில் மறைக்கப்படக்கூடும், இத்திரைகள் மனிதனை ஆன்மீகக் குருடனாகவும், ஆற்றலற்றவனாகவும் செய்துவிடுகின்றன, ஆனால் அத்தகைய செதில்கள் அப்புறப்படுத்தப்பட்டு, திரைகள் கிழித்தெரியப்படும்போது, இறைவனின் மகத்தான அடையாளங்கள் வெளிப்படையாகப் புலப்பட்டும், அந்தமில்லா ஒளி உலகைச் சூழ்ந்து கொள்வதையும் அவன் கண்ணுறுவான். இறைவனின் வெகுமதிகள் யாவும் மற்றும் என்றுமே வெளிப்படையாகவே உள்ளன. சுவர்க்கத்தின் வாக்குறுதிகள் நிலையாகச் சூழ்ந்துள்ளன. இறைவனின் சலுகைகள் எங்குமே சர்வ-வியாபகமாக உள்ளன, ஆனால், ஆன்மாவின் விழிப்புணர்வெனும் கண் திரைபோடப்பட்டும் இருள் சூழ்ந்தும் இருக்குமாயின், அவன் இத்தகைய பிரபஞ்ச அடையாளங்களை மறுத்துக்கொண்டும், இத் தெய்வீக கொடைகளின் வெளிப்பாடுகளை தொடர்ந்து இழந்தும் வருவான். ஆகவே, உட்பார்வையை மறைத்திடும் திரை நீக்கப்பட்டு, கடவுளின் அடையாளங்களின் வெளிப்பாடுகளை நாம் கண்ணுற, அவரது மர்மமிகு அருளை கண்டுகொள்ள, ஆன்மீக அருட்கொடைகளோடு ஒப்பிடப்படுகையில் லௌகீக ஆசீர்வாதங்கள் வெறும் சூன்யங்களே என்பதை உணர்ந்திட, இதயப்பூர்வமாகவும் ஆத்மப்பூர்வமாகவும் முயலவேண்டும்.”** [13]

**"ஒவ்வொரு ஆன்மாவும் மனிதர்களின் கண்களை மறைக்கும் திரைகள் கிழிக்கப்படவும், அதனால் சூரியனை உடனடியாகக் காணவும், இதயமும் பார்வையும் பிரகாசிக்கச் செய்யவும் முயற்சி செய்ய வேண்டும்."** [14]

நேரடி விளக்கம், வீண் கற்பனைகள், கண்மூடித்தனமாகப் பின்பற்றுவது, சுயநலம், பேரார்வம் மற்றும் ஆவல், பேராசை மற்றும் பொறாமை மற்றும் தப்பெண்ணம் - இவை திருவாசகங்களில் குறிப்பிடப்பட்ட திரைகளில் அடங்கும். எனவே, நமது பௌதீக உணர்வுகளும் திரைகளாக செயல்பட முடியுமா?

**"உங்கள் ஆன்மீகப் புலன்கள் மற்றும் உயர்ந்த லட்சியங்கள் நாளுக்கு நாள் அதிகரிக்க வேண்டும், மேலும் லௌகீக உணர்வுகள் உங்கள் கண்களிலிருந்து விண்ணுலக ஒளிர்வின்**

மகிமைகளை மறைக்க ஒருபோதும் அனுமதிக்க மாட்டீர்கள் என்பதே உங்களுக்காக எனது பிரார்த்தனையாகும்."[15]

"எதையுமே புறப் பொருளில் விளக்கப்படுத்துவது இத்திரைகளுள் ஒன்றாகும். உள்வீற்றிருக்கும் தனிச்சிறப்புக்களை ஊடுருவிட ஒரு மாபெரும் முயல்வு அவசியமாகின்றது."[16]

"சுடரொளிகள் எனும் இராஜ்ஜியத்திற்குள் நுழைவதற்கான வழியைத் தாங்கள் கண்டுகொண்டதற்கும், வீண் கற்பனைகள் எனும் திரையை கிழித்தெரிந்ததற்கும், உள்மர்மங்களின் மையம் உங்களுக்கு அறிவிக்கப்பட்டதற்கும் நீங்கள் இறைவனை வாழ்த்துவீராக."[17]

"உங்கள் அகக்கண்ணின் திரையினை அகற்றிடவும்; அவரது அதி மகத்துவமிக்க அடையாளங்களை உங்களுக்கு வெளிப்படுத்தவும்; வழிகாட்டலுக்கான ஓர் விருதுகொடியாக உங்களை ஆக்கிடவும், அவரைத்தவிர மற்ற எல்லாவற்றிலிருந்தும் விடுபட்டு, அவரது அன்பெனும் நெருப்பினால் தூண்டப்பட்டு, அவரை வாழ்த்துவதில் இலயித்து, எல்லா வஸ்துக்களினது மெய்மைகளைப் பற்றி விழிப்புணர்வுடன் இருந்து, உங்கள் சொந்த கண்களைக் கொண்டு பார்த்திடவும், உங்கள் சொந்தச் செவிகளைக் கொண்டு செவிமடுத்திடவும், உங்கள் மூதாதையர்களை நீங்கள் கண்மூடித்தனமாகப் பின்பற்றுவதிலிருந்து ஒதுங்கியிருக்கவுமே நான் இறைவனை இறைஞ்சுகின்றேன். இருள் திரைகளால் மூடப்பட்டிருக்கும் மக்களுக்காக, நீங்கள் உங்கள் பிரபுவின் சமயத்தை அகப்பார்வையால் கண்ணுறுவீராக."[18]

"... அகந்தையைத் தவிர வேறெந்தத் திரையும் பெரியதல்ல. ஏனெனில், எவ்வளவு தான் மெல்லியதாக அம்மூடும் திரை இருந்தபோதிலும், அஃது இறுதியில் மனிதனை முற்றிலும் மூடுதிரையிட்டும் என்றும் நிலையான கொடைகளிலிருந்து ஒரு பங்கைப் பெறுவதிலிருந்து அவனைத் தடுத்தும் விடும்."[19]

"மேலும் உணர்வெழுச்சிகளையும் இச்சைகளையும் பின்பற்றுவது கண்களையும் உட்பார்வையையும் கூட குருடாக்கக்கூடியவையான, உள்ளத்திலிருந்து மேல் கிளம்பிடும் ஓராயிரம் திரைகளைக் கொண்டுக் கண்களை மறைத்துவிடும்"[20]

"ஓ புரிந்துணர்வின் குழந்தைகளே! கண்ணிமை எவ்வளவு மென்மையானதாக இருந்தாலும், மனிதனின் வெளிப்புறக் கண்ணை உலகத்தையும் அதிலுள்ள அனைத்தையும் பார்ப்பதைத் தடுக்க முடியும் என்றால், பேராசையின் திரை அவரது உள் கண்ணில் இறங்கினால் என்ன நடக்கும் என்று சிந்தியுங்கள். கூறுங்கள்: மக்களே! பேராசை மற்றும் பொறாமையின் இருள் சூரியனின் ஒளியைத் தடுக்கும் மேகங்களைப் போல ஆன்மாவின் பிரகாசத்தை மறைக்கிறது."[21]

"உண்மையின் சூரியனை நோக்கி நீங்கள் திரையற்ற கண்களுடன் திரும்புவீர்கள் என்று நம்புகிறேன், உலகில் உள்ள விஷயங்களைப் பார்க்காமல் ... ; அந்த சூரியன் தனது பலத்தை

**உங்களுக்கு வழங்கட்டும், அப்போது பாரபட்ச மேகங்கள் உங்கள் கண்களில் இருந்து அவருடைய வெளிச்சத்தை மறைக்காது! அப்போது சூரியன் உங்களுக்கு மேகங்களற்று இருக்கும்."[22]**

மேல்குறிப்பிடப்பட்டுள்ள முதலாவது பத்தியில், "இறைவனின் வெகுமதிகள் யாவும் மற்றும் என்றுமே வெளிப்படையாகவே உள்ளன", "சுவர்க்கத்தின் வாக்குறுதிகள் நிலையாக சூழ்ந்துள்ளன", "இறைவனின் சலுகைகள் எங்குமே சர்வ-வியாபகமாக உள்ளன" என்று அப்துல் பஹா நமக்கு கூறுகின்றார். "மனிதனின் ஆன்மாவின் விழிப்புணர்வெனும் கண் திரைபோடப்பட்டும் இருள் சூழ்ந்தும் இருக்குமாயின்" அவன் "இறைவனின் எல்லா மற்றும் எப்போதும் வெளிப்படுத்தப்படும் கொடைகள்", தெய்வீக உலகின் வாக்குறுதிகளின் சர்வலோக அடையாளங்களை மறுத்திடவே தூண்டப்படுவான் என்று அவர் மேலும் விளக்குகின்றார்.

1. அப்துல் பஹா குறிப்பிடக்கூடிய சில வெகுமதிகள் மற்றும் சலுகைகள் எவை என நீங்கள் சிந்திக்கிறீர்கள்? ____________________________________________

____________________________________________

____________________________________________

____________________________________________

2. இப்போது இந்த அடையாளங்களைக் கண்ணுறுவதிலிருந்து கீழ்க்காணப்படும் திரைகள் நம்மை எவ்வாறு தடுக்கின்றன என்பதை விவரிக்கவும்.

அ. புனித எழுத்தோவியங்களை புறப்பொருள் ரீதியில் மட்டும் விவரிப்பது: ____________________

____________________________________________

____________________________________________

____________________________________________

ஆ. வீண் கற்பனைகள்: ____________________________________________

____________________________________________

____________________________________________

____________________________________________

இ. கண்மூடித்தனமாகப் பின்பற்றுவது: ____________________________________________

____________________________________________

____________________________________________

____________________________________________

ஈ. தன்னலம்: ____________________________________________

____________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

உ. பேரார்வத்தையும் ஆவலையும் பின்தொடர்வது: ________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

ஊ. பேராசை மற்றும் பொறாமை: ______________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

எ. தப்பெண்ணம்: ________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

3. பின்வரும் கூற்றுகள் உண்மையா என்பதைத் தீர்மானிக்கவும்::

________ நமது மன மற்றும் பௌதீகக்கண்களின் உதவியின்றிக்கூட நமது அகக்கண் எதையும் அறிந்துகொள்ளமுடியும்.

________ நமது பௌதீகப் புலன்களும் மன ஆற்றல்களும் ஆன்மீக மெய்மைகளை நுண்ணறிவதிலிருந்து நம்மை எப்போதும் தடுக்கின்றன.

________ இறைவனைச் சாராத அனைத்து பௌதீகப் புலன்களையும் தூய்மைப்படுத்துவது உண்மையை அறிந்துகொள்ள நமது உள்ளாற்றல்களுக்கு உதவியளிக்கின்றது.

4. இறுதியாக, ஆன்மீக நுண்ணறிவாற்றலைத் தடுக்கும் திரைகளின் இயல்பு குறித்து மேலும் அதிக உட்பார்வை வழங்கும் அப்துல் பஹாவின் பின்வரும் வாக்குமூலத்தின் மீது பிரதிபலிக்கவும்: இதை நீங்கள் மனனம் செய்திட விரும்பலாம்.

**“உண்மை என்பது பல திரைகள் கொண்டு மூடப்பட்டுள்ளது என்பதை நீ அறிவாயாக: ஒளி ஊடுருவாத் திரைகள்; பின் ஒளி ஊடுருவும் மெல்லியத் தன்மையுடையத் திரைகள்; பிறகு கண்களைக் கூசச் செய்யும் காட்சியுடையது, மற்றும் நாம் அதைப் பார்க்கும்போது, பார்வை இருளாகியும் கண்கள் கூசியும் போகும் தன் ஒளியால் மட்டுமே சூழப்பட்ட சூரியனைப் போன்று, ஒளியால் சூழப்படுவது.**

**“உண்மை எனும் சூரியனைக் காண்பதிலிருந்து மனிதன் திரையிடப்படாமல் இருக்க, எல்லாவித திரைகளிலிருந்தும் விடுவிக்கவும், எல்லாக் கண்களுக்கும் ஒளியை பழக்கப்படுத்தவும் இறைவனை நான் கெஞ்சிக் கேட்கின்றேன்.”[23]**

## பகுதி 8

பின்வருவது இளைய இளைஞர்களால் பயிலப்படும் மற்றொரு பஹாய் அகத்தூண்டல் பெற்ற நூலான *ஆர்வநம்பிக்கையின் தொலைத்தோற்றம்* எனும் நூலிலிருந்து எடுக்கப்பட்டப் பாடம் ஒன்றாகும். இந்த நூலில் வரும் கதை கிபோமி எனப்படும் பன்னிரண்டு வயதுடைய சிறுவனைப் பற்றியதாகும், கிபோமி தன் பெற்றோர்களை இழந்த பிறகு தனது தங்கையைத் தேடும் ஒரு பயணத்தை தொடங்குகின்றான். கிபோமி அதும்பா எனும் பழங்குடியைச் சேர்ந்தவனாவான். மக்கள் புரட்சி ஒன்றின்போது குங்கு பழங்குடியினரால் அவனது பெற்றோர்கள் சுட்டுக் கொல்லப்படுகின்றனர். இப்பாடத்தில் முதலில் வருவது அவனை மிகுந்த கனிவுடன் உபசரிக்கும் குங்கு பழங்குடியினரான ஒரு வயோதிபருடன் கிபோமிக்கு ஏற்பட்ட சந்திப்புப் பற்றிய வருணனையாகும். இங்கே தனது சொந்த பழங்குடியினத்தைச் சேர்ந்த படைவீரர்களின் குழுவொன்றை அவன் சந்திக்கிறான்.

அவனுக்குக் கிடைத்த கொஞ்ச உணவுடன், கிபோமிக்கு சக்தி கூடுதலாக இருந்ததால் வேகமாக நகரமுடிந்தது. கிராமத்தை விட்டு ஓடிய போது அவனுக்கு அச்சமும் ஆத்திரமும்தான் அதிகமாக இருந்தன. மக்களைப் பற்றி வழக்கமாக இருந்த நல்ல உணர்வுகள் இப்பொழுது அவனுள் தலைத் தூக்க ஆரம்பித்தது. அந்த முதியவர் ஒரு குங்கு, ஆயினும் அவர் கனிவானவராகவும் விவேகமிக்கவராகவும் இருந்தார். உணவை அவர் பகிர்ந்துகொண்டார். அவர் பேசிய வார்த்தைகள் அழகானவை, ஆர்வநம்பிக்கை நிறைந்தவை: “முடிவுகளை நாம் தேர்ந்தெடுக்கவேண்டும்,” “நாம் அன்பு செலுத்துவதற்காகவே படைக்கப்பட்டோம், வெறுப்பதற்காக அல்ல.”

நன்காட்டாவை நோக்கிய ஆற்றின் வழியே தொடர்ந்து பயணத்தை மேற்கொண்டான். சிறிது நேரம் நடந்தபிறகு, மனிதர்கள் பேசும் சத்தங்கள் காதில் விழ, விரைவாக பெரியதொரு மரத்திற்குப் பின்னால் சென்று மறைந்துக் கொண்டான். இளைஞர் கூட்டம் ஒன்று நெருங்கிக் கொண்டிருந்தது. அவர்கள் அடும்பா மொழி பேசினர். அவனது மொழி பேசப்படுவதைக் கேட்டு மகிழ்ச்சி அடைந்து மர மறைவிலிருந்து வெளிவந்தான். அந்த ஆடவர்கள் சீருடை அணிந்திருந்தனர். அவர்கள் அடும்பா

புரட்சிப் படையைச் சேர்ந்தவர்கள். அவர்களில் சிலர் அதிக இளமைப் பருவத்தினராக இருந்தனர்; ஒருவன் கிபோமியின் வயதளவில் இருந்தான். கிபோமியைப் பார்த்த மாத்திரத்தில் படைவீரர்கள் சட்டென்று நின்று துப்பாக்கியைத் தூக்கிச் சுட தயாராகிவிட்டனர். “பொறுங்கள். உங்களைப் போன்று நானும் ஓர் அடும்பா,” என்று கிபோமி கூறினான்.

“தனியாக இங்கே நீ என்ன செய்துகொண்டிருக்கிறாய்,” பொறுமையின்றிக் கேட்டான் அவர்களது தலைவன்.

“குங்கு எங்களது கிராமத்தைத் தாக்கி, எனது பெற்றோரைக் கொன்றுவிட்டனர். நான் ஓடிவிட வேண்டியிருந்தது,” என முவாப்பே பதில் கூறினான்.

“அப்படியென்றால் எங்களுடன் வந்து சேர்ந்துகொள். குங்குவுக்கு நாம் சரியான பாடம் கற்பிக்க வேண்டும். உன் குடும்பத்திற்கு அவர்கள் இழைத்தவைக்கு அவர்களைப் பழிவாங்கவேண்டும்,” என்று அந்தத் தலைவன் கூறினான்.

கிபோமியின் மனம் சற்று ஆட்டம் கண்டது. அவன் சற்று யோசித்து ஏறக்குறைய சேர்ந்துவிடும் நிலைக்கு வந்துவிட்டான். அத்தருணத்தில் சிறுவனான படைவீரன் முன் வந்து தன் கரங்களை நீட்டி கிபோமியை வரவேற்றான். கிபோமி அவ்வீரனின் கண்களை ஊடுருவி நோக்கினான். அவற்றில் நம்பிக்கை இழந்த உணர்வு நிலவுவதைக் கண்டு கிபோமி சஞ்சலமுற்று தயங்கினான். “நான் பிறகு உங்களோடு சேருகிறேன். இப்பொழுது நான் போய் என் தங்கையைக் காணவேண்டும்,” எனத் தள்ளாடும் குரலில் கிபோமி கூறினான்.

வீரர்கள் அங்கிருந்து நகர்ந்துவிட்டார்கள். அவர்கள் நடந்துபோகும் போது ஒருவன் திரும்பி, “ஞாபகமிருக்கட்டும், ஒரே வழி திரும்பச் சண்டை இடுவதுதான்,” என்றான். அதற்கு கிபோமி மறுமொழி கூறவில்லை.

**கேள்விகள்**

1. கிபோமி தன் கிராமத்தை விட்டு பிரிந்து செல்லும்போது அவனின் மனநிலை எவ்வாறு இருந்தது?
2. அவ்வயோதிகரை சந்தித்த பிறகு கிபோமியின் மனம் ஏன் மாறியது?
3. கிபோமி மரத்தின் பின் ஏன் ஒளிந்துகொண்டான்?
4. கிபோமி சந்தித்த சீருடை அணிந்திருந்த இளைஞர்கள் யார்?
5. அவர்களின் தலைவன் கிபோமியை என்ன செய்யச் சொன்னான்?
6. சிறுவனான படைவீரனின் கண்களில் கிபோமி என்ன கண்டான்?

**நடவடிக்கைகள்**

1. கிபோமி தான் சந்தித்த சிறுவனானப் படைவீரனின் கண்களில் நம்பிக்கையற்ற நிலையையே கண்டான். தன்னைப்போல் பயம் நிறைந்தும், ஆத்திரம் மிகுந்தும் இருந்த அச்சிறுவன், சண்டையிடவும் கொலை செய்யவும் முடிவு செய்திருந்தான். நமது வாழ்விலும் அத்தகைய சோகம் நம்பிக்கையின்மை நிறைந்த தருணங்கள் இருக்கின்றன. அந்நேரங்களில், நாம் இருள் நிறைந்த பாதைகளைத் தேர்வுச் செய்யாமல், நம்பிக்கையை மீளச் செய்யும் ஒளியைத் தேட வேண்டும். பின்வரும் பிரார்த்தனையைப் படித்த பின் அதன் வார்த்தைகள் குறித்துத் தியானம் செய்யவும்.

**“இரக்கமும் சர்வ-வள்ளன்மையும் நிறைந்தவர் அவரே! கடவுளே, என் கடவுளே! நீர் என்னைப் பார்க்கின்றீர்; என்னை அறிந்திருக்கின்றீர். எனது தஞ்சமும் எனது புகலிடமும் நீரே. உம்மையன்றி வேறெவரையும் நான் நாடியதில்லை நான் நாடப் போவதுமில்லை; உமது அன்பெனும் பாதையைத் தவிர வேறெந்த பாதையையும் நான் மிதித்திடவுமில்லை நான் மிதிக்கப்போவதுமில்லை. துயர் நிறைந்த இரவில் என் கண்கள் உமது எல்லையற்ற வள்ளன்மையெனும் அருணோதயத்தை நம்பிக்கையார்வத்துடன் நோக்குகின்றன, அதிகாலை வேளைகளில் எனது வாடிய உள்ளம் உமது அழகையும் பூரணத்துவத்தையும் நினைவுகூறுவதன் மூலம் உறுதியும் புத்துணர்ச்சியும் பலமும் பெறுகின்றது.”**

இப்போது மேலுள்ள பிரார்த்தனையை மனனம் செய்திட விரும்பலாம்.

2. பின்வரும் சூழல்களில் எச்செயல்கள் நம்பிக்கை இழக்கும் உணர்வை ஏற்படுத்தும், எவை நம்பிக்கையை மீண்டும் ஏற்படுத்தும்.

| அ. பரிட்சையில் ஒரு பாடத்தில் நீ மோசமாகச் செய்திருக்கிறாய். | *ஆர்வ நம்பிக்கை* | *இழப்பு* |
|---|---|---|
| - படிப்பதை கைவிட்டதுடன் பெரும்பாலான நேரத்தை நீர் விளையாடியே கழிக்கிறீர். | [ ] | [ ] |
| - நீயே உன்னை முட்டாள் என்று சொல்லிக்கொள்கின்றாய் | [ ] | [ ] |
| - உனக்கு உதவிடுமாறு இன்னொரு மாணவனைக் - கேட்கிறாய். | [ ] | [ ] |
| - நீ பொறுமையாய் இருந்து மேலும் சிரமப்பட்டுப் படித்து அந்த பாடத்தைப் புரிந்துகொள்ள முயற்சிக்கிறாய். | [ ] | [ ] |
| - உன் ஆசிரியர் உனக்கு அதிகம் உதவி செய்யவில்லை என அவரை நீ குறைக்கூறுகிறாய். | [ ] | [ ] |

| | | ஆர்வ நம்பிக்கை | இழப்பு |
|---|---|---|---|
| ஆ. | நீ தனிமையாய் இருக்கிறாய், உனக்கு நண்பர்கள் இல்லாததுபோல் தெரிகிறது. | | |
| - | உன்னைத் நீயே தனிமைப்படுத்திக்கொண்டு பெரும்பாலான நேரத்தில் கவலைக் கொண்டிருக்கின்றாய். | [ ] | [ ] |
| - | எந்த நேரமும் நீ மற்றவர்களின் குறைகளைப் பற்றியே சிந்திக்கின்றாய். | [ ] | [ ] |
| - | மற்றவர்களிடம் உள்ள நல்லவற்றையே நீ காண விரும்புகிறாய். | [ ] | [ ] |
| - | மற்றவர்களிடம் பேசி நட்புக்கொள்ள நீயே முதல் அடியை எடுத்து வைக்கிறாய். | [ ] | [ ] |

| | | ஆர்வ நம்பிக்கை | இழப்பு |
|---|---|---|---|
| இ. | உங்கள் உறவினர்கள் சிலர் மத்தியில் பொறாமையும் சண்டையும் நிலவுவதை நீ காண்கிறாய். | | |
| - | நீயும் பொறாமை உணர்வு கொண்டு அவர்களுடன் சேர்ந்து சண்டை இடுகிறாய். | [ ] | [ ] |
| - | அவர்களுடன் நீ தாராளத்தன்மையுடன் நடந்து கொள்கிறாய். | [ ] | [ ] |
| - | உன் குடும்ப உறவினர்கள் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என நீ பிரார்த்தனை செய்கின்றாய். | [ ] | [ ] |
| - | உன் குடும்பத்தில் உள்ள பிள்ளைகளுக்கு நீ அன்பு, தாராளத்தன்மை பற்றிப் போதிக்கிறாய். | [ ] | [ ] |
| - | உன் உறவினர்களை மாற்ற உன்னால் ஒன்றுமே செய்ய இயலாது என்று நீ உனக்கு நீயே சொல்லிக்கொள்கிறாய். | [ ] | [ ] |

| | | ஆர்வ நம்பிக்கை | இழப்பு |
|---|---|---|---|
| ஈ. | உன்னைப் புண்படுத்த நண்பரொருவர் ஒன்றைச் செய்கிறார். | | |
| - | நீ பழிவாங்க முடிவு செய்து உன் நண்பனைப் புண்படுத்துகிறாய். | [ ] | [ ] |
| - | நீ உன் நண்பனை மன்னித்துவிடுகிறாய். | [ ] | [ ] |
| - | அதுபோல் யாரையும் புண்படுத்தவே கூடாதென்று நீ முடிவெடுக்கிறாய். | [ ] | [ ] |
| - | உன் நண்பன் கெட்டவன் என்று மற்றவர்களிடம் நீ கூறுகிறாய். | [ ] | [ ] |
| - | நீ உன் நட்பை முடித்துக்கொள்கிறாய். | [ ] | [ ] |

இப்பாடத்தில் இளைய இளைஞர்கள் கண்டுகொள்ளக்கூடிய சில ஆன்மீக உண்மைகளைக் குறிப்பிடவும். ஒளி மற்றும் இருளோடு ஒப்பிடப்படும் ஆர்வநம்பிக்கை மற்றும் நம்பிக்கையிழப்பு ஆகிய விஷயங்கள் எவ்விதமாக வழங்கப்பட்டுள்ளன? ஆன்மீக நுண்ணறிவை மேம்படுத்திடும் இளைய இளைஞர்களின் முயற்சிகளுக்கு கதையும் அதைத் தொடர்ந்து வரும் நடவடிக்கைகளும் எவ்வாறு உதவிடக்கூடும்?

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

## பகுதி 9

இளைய இளைஞர்களுக்கான ஆன்மீக சக்தியளிப்பு திட்டத்தில் எடுத்துரைக்கப்படும் பல கருப்பொள்களில் "ஆர்வநம்பிக்கை" மற்றும் "உறுதிப்பாடு" என்பவை இரண்டு உதாரணங்களாகும். இக்கருப்பொள்களை மிகக் கவனத்துடன் ஆலோசிப்பது ஆன்மீக நுண்ணறிவாற்றலை உருவாக்கி விழிப்புணர்வின் விரிவாக்கத்திற்கும் பங்காற்றுகின்றது. அப்துல் பஹா கூறுவதாவது:

> **"கடவுள் நம்பிக்கையின் அசைக்கமுடியா உறுதுணைகளாக குறிப்பிட்ட சில தூண்கள் நிலைநிறுத்தப்பட்டுள்ளன. இவற்றுள் பெரும் வலிமை மிக்கவைகளாக கற்றல் மற்றும் பகுத்தறிவை பயன்படுத்துவது, விழிப்புணர்வை விரிவுபடுத்துவது, மற்றும் பிரபஞ்சத்தின் மெய்மைகள் குறித்தும் எல்லாம் வல்ல கடவுளின் மறைந்துள்ள மர்மங்கள் குறித்தும் உட்பார்வையை பெறுவது ஆகியவை உள்ளன."** [24]

மனிதன், விழிப்புணர்வு குறித்த பல்வேறு நிலைகளில் வாழமுடியும். தெய்வீக விருப்பம் மற்றும் குறிக்கோள் குறித்து விழிப்புணர்வு பெற்றும், நம் மீதும் நமது சமூகத்தின் மீதும் செல்வாக்கு செலுத்தும் ஆற்றல்களை அறிந்துகொண்டும், ஒரு புதிய உலகை நிர்மானிப்பதில் நமது மன மற்றும் ஆன்மீக ஆற்றல்களை அர்ப்பணிப்பதானது, லௌகீக அக்கறைகளின்மீது கவனம் செலுத்தும் ஒரு வாழ்வை விட ஓர் உயர்ந்த நிலையையே குறித்துக்காட்டுகின்றது. இளைய இளைஞர்களின் குழுவொன்றுடனான ஓர் உயிரூட்டுபவரின் நடவடிக்கையில் மேன்மேலும் உயர்ந்த நிலையிலான விழிப்புணர்வை

அடைந்திட அதன் உறுப்பினர்களுக்கு உதவிடுவது ஒரு முக்கிய சவாலாகும். அவ்வாறு செய்திட, இளைஞர்கள் ஓர் ஆன்மீக வாழ்வு குறித்த மையக் கருப்பொருள்களை புரிந்துகொள்ள வேண்டும். ஆகவே, அவற்றை பிரதிபலித்திடவும், ஆய்வு செய்யவும் தமது சொந்த மெய்நிலையில் அமுல்படுத்தவும் தேவைப்படும் திறனாற்றல்களை அவர்கள் அதிகரித்துக்கொள்ள வேண்டும். ஆர்வநம்பிக்கை மற்றும் உறுதிப்பாடு ஆகியவற்றிற்கும் மேலதிகமாக இளைய இளைஞர்கள் பிரதிபலிப்பதற்கான குறிக்கோள் கொள்ளவேண்டிய இத்தகைய கருப்பொருள்கள் சில யாவை?

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

## பகுதி 10

கடந்த சில பிரிவுகளில், ஆன்மீக புலனாற்றல் குறித்த கேள்வி மற்றும் அதனுடன் தொடர்புடைய இதயத்தின் தூய்மை, கடவுளைப் பற்றிய அறிவு, மற்றும் இறை அன்பு போன்ற சில பண்புகளையும் நாம் ஆராய்ந்தோம். நம்முடைய “அகக்கண்களால்” பார்ப்பதைத் தடுக்கக்கூடிய “திரைகள்” பற்றியும் நாங்கள் சிந்தித்துள்ளோம், மேலும் சில கருத்தாக்கங்களைப் புரிந்துகொள்வதானது எவ்வாறு நமது ஆன்மீக புலனாற்றலை வலுப்படுத்தவும், நமது விழிப்புணர்வை விரிவுபடுத்தவும் உதவிடும் என்பதைக் கருத்தில் கொண்டுள்ளோம்.

வளரிளம் பருவ காலத்தின்போது மனித ஆன்மாவினுள் மறைந்திருக்கும் சக்திகள் அதிகரித்திடும் அளவில் தம்மை வெளிப்படுத்திடும். அவற்றுள் சிந்தனை மற்றும் வெளிப்படுத்தும் ஆற்றல்கள் குறிப்பான முக்கியத்துவம் வாய்ந்தவை, அவற்றை பரமரிப்பதானது விழிப்புணர்வை விரிவடைய செய்திடும் அதே அளவுக்கு இன்றியமையாததாகும். மொழி மற்றும் சிந்தனை ஆகியவற்றிற்கிடையே மிகவும் நெருக்கமான தொடர்பு உள்ளது. சிந்தனை சக்தியானது பேச்சாற்றல் மூலமே வெளிப்படுகின்றது, மற்றும் பேச்சாற்றலின் மேம்பாடானது புரிந்துணர்வின் அறுவடைக்கு இன்றியமையாத ஒன்றாகும். வெளிப்படுத்தும் சக்தியை வளர்ப்பதும் மெய்மைக் குறித்த ஒருவரின் புரிந்துணர்வினை ஆழப்படுத்துவதும் ஒன்றோடு ஒன்று கைக்கோர்த்தே செல்கின்றன. எல்லாவற்றிற்கும் மேலாக, ஆழ்சிந்தனை மற்றும் பிரதிபலிப்பு, ஆகியவைகள் மொழியுடன் பிரிக்கப்படவியலா வகையில் பிணைக்கப்பட்ட நடவடிக்கைகள், புரிந்துணர்வுக்கு அவசியமாகும். பஹாவுல்லா கூறுகிறார்:

**“பஹாவின் மக்களே! பிரதிபலிக்கும் திறனே கைத்திறன்கள், அறிவியல்கள் மற்றும் கலைத்திறன்களின் தோற்றுவாய் ஆகும். ஏதுவான இச்சுரங்கத்தினின்று பூமியின் இனங்கள் அனைத்தினுடைய பொதுநலன் மற்றும் இணக்கம் ஆகியவற்றை முன்னேற்றக்கூடிய விவேகம் மற்றும் பேச்சாற்றல் எனும் முத்துக்கள் தோன்றிட நீங்கள் உங்களால் இயன்ற அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளுங்கள்.”[25]**

நிச்சயமாக, மனித புரிந்துணர்வு மற்றும் வெளிப்படுத்தும் ஆற்றல்கள் ஆகியவை தெய்வீக வார்த்தைகளின் மூலம் ஒளியூட்டப்படவேண்டிய அவசியம் உள்ளது. பஹாவுல்லா நம்மிடம் கூறுவதாவது:

**“அவர் உங்களுடைய விமோசனத்திற்காவே அவதரித்தும், நீங்கள் பேச்சாற்றல் எனும் ஏணியைக் கொண்டு, புரிந்துணர்வு எனும் சிகரத்தை அடைந்திடவே, பேரிடர்களைத் தாங்கியும் வந்துள்ளார்.”[26]**

வெளிப்படுத்தும் ஆற்றலை மேம்படுத்துவதானது வாசிப்பது, எழுதுவது, பேசுவது ஆகியவற்றின் இயந்திர வகையான திறன்களை மட்டும் அடைவதல்ல. அது சில ஆற்றல்களை வேண்டுகிறது நன்கு கிரகிக்கும் திறனோடு வாசிப்பது, எண்ணங்களைத் தெளிவுடனும் நாவன்மையுடனும் விவரிப்பது, கருத்துப்படிவங்களைக் குறிப்பிடத்தகுந்தளவு துல்லியத்துடன் தெளிவுபடுத்துவது ஆகியனவாகும். இத்தகைய திறன்களை பயன்படுத்துவதன் மூலமாகத் தேவைப்படும் அறிவியல், ஒழுக்கநெறி, மற்றும் ஆன்மீகக் கருத்துப்படிவங்களை செயல்படுத்திடவும் தங்களைச் சூழவுள்ள உலகினை ஆய்வு செய்திடவும் அவர்களின் வருங்கால சமுதாய சித்தாந்தம் எவ்வாறு நிர்மாணிக்கப்படக்கூடும் என்பது குறித்த சொந்த அடிப்படை கருத்துக்களை உருவாக்கிக்கொள்ளவும் இப்பயிற்சிகளில் இளைய இளைஞர்கள் கற்றுக்கொள்கின்றனர்.

அப்துல்-பஹா விவரிப்பதாவது “சமுதாயத்தின் நீடித்த நோய்களுக்கு உடனடி நிவாரணங்களாக அமையக்கூடிய இவ்வின்றியமையா சாதனங்கள் குறித்து பெருந்திரளான மக்கள் அறியாமலேயே இருக்கின்றனர்”. மேலும் அவர் “ஆகவே தற்போது” “அவர்களின் குறைவான கல்வியின் காரணமாகப், பெரும்பாலான மக்கள் தங்களுக்குத் தேவைப்படுவதை எடுத்தியம்பக்கூடிய சொல்வளத்தைக் கூடப் பெற்றிருக்கவில்லை” என சுட்டிக்காட்டுகின்றார். மேலும் தங்களின் ஆரம்ப இளமைப் பருவத்திலேயே தங்களின் வெளிப்படுத்தும் ஆற்றலை மேம்படுத்தியும் மனுக்குலத்தின் நீடித்த நோய்களுக்கான தெய்வீக நிவாரணங்கள் குறித்த விழிப்புணர்வும் அடைந்து, தங்களின் மனங்களை தெய்வீக சிந்தனைகளால் நிரப்பிக்கொண்டும், இவ்வழியாக தங்களின் புரிந்துணர்வை அதிகரித்துக்கொண்டும், தங்களின் புரிந்துணர்வினை விரிவடையச் செய்துகொண்டும் உள்ள இளைஞர்கள் எவ்வளவு பாக்கியம் செய்தவர்களாவர்.

ஏற்கனவே பல நூல்களினூடே முன்னேற்றம் கண்டுள்ள இளைய இளைஞர்களால் படிக்கப்படும் ஒரு பஹாய் அகத்தூண்டலுற்ற *திருச்சொல்லிலிருந்து சக்தியை பெறுதல்* எனும் நூலிலிருந்து எடுக்கப்பட்டுள்ள பின்வரும் பாடத்தில், இளையவர்களின் குழுவொன்று “சொல்” எனும் கருத்துப்படிவத்தை கலந்துரையாடுகின்றனர். இப்பாடத்தை படித்தப் பின் இளையவர்களிடையே அஃது எவ்வாறு புரிந்துணர்வினை மேம்படுத்தி விழிப்புணர்வினை உயர்த்துகிறது என்பதை கவனிக்க முயற்சிக்கவும்.

அலெக்ரியாஸ் இளைஞர் குழவால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளில் மரம் நடும் நடவடிக்கையே முதலாவது நடவடிக்கையாகத் திகழ்ந்தது. தங்களுடைய பள்ளியைச் சுற்றியிருந்த நிலத்தில் சுமார் ஐம்பது கனி மரங்களை நட்ட பின், அவர்கள் தங்களுடைய பெற்றோர், நண்பர்கள், அயலவர்கள் ஆகியோரை ஒரு விழாவிற்கு அழைத்தனர். அந்த விழாவின் போது சுற்றுச்சூழலை மேம்படுத்துவதன் முக்கியத்துவம் குறித்து எலிசா ஓர் உரையாற்றினாள். சமூகத்தினர் அந்த நடவடிகையினால் மிகவும் மனமகிழ்வுற்றனர், ஏனெனில் அந்த மரங்கள் வளர்ந்த பின் கனிகள் கொடுத்தும், கிராமத்தையே அழகாகவும் திகழச் செய்யப்போகின்றன.

விழா முடிந்த மறுநாள், மகிழ்வுரை விட்டுப் போகுமுன், எலிசா இளைஞர்களுடனான ஒரு சிறப்புக் கூட்டத்திற்கு வேண்டுகோள் விடுத்தாள். “வரப்போகும் பல மாதங்களில் நமது கலந்துரையாடல்களின் முக்கிய கருப்பொருளாகத் திகழப்போகும் ஒரு விஷயத்தைப் பற்றி நான் இப்போது பேச விரும்புகின்றேன்” என மிகுந்த ஆர்வத்துடன் கூறினாள், “அவ்விஷயத்தை அறிமுகப்படுத்தும் முன்பாக, நான் ஒரு கேள்வி கேட்க விரும்புகின்றேன்: கடவுள் நம்மை ஏன் படைத்தார்?”

மரியெலா உடனடியாக “நம்மீதுள்ள நேசத்தின் காரணமாகவே அவர் நம்மைப் படைத்தார்”, என உடனடியாகப் பதிலளித்தாள். ‘உன் படைப்பினை யாம் விரும்பினோம், ஆகவே உன்னைப் படைத்தோம்,’ எனும் இந்த வாசகத்தை நான் சிறுமியாக இருக்கும் போதே கற்றேன்; அதை இது வரை நான் மறக்கவில்லை.

“அதிசிறப்பு,” என எலிசா கூறினாள். “தமது எல்லையற்ற அன்பின் காரணமாகவே இறைவன் நம்மைப் படைத்தார். இந்த அன்பின் காரணமாகவே, மிகவும் அற்புதமான பல வெகுமதிகளை அவர் நம் ஒவ்வொருவர் மீதும் பொழிந்துள்ளார். ‘சொற்களைப் பயன்படுத்தும் ஆற்றல் அந்த வெகுமதிகளுள் மிகவும் சிறந்த வெகுமதியாக உள்ளது. சொற்களை உச்சரிப்பதற்கும், படிப்பதற்கும், எழுதுவதற்கும், புரிந்துகொள்வதற்கும் வேறு எந்த ஜீவராசிக்குமே ஆற்றலளிக்கப்படவில்லை. சொற்களின் மூலமாக, நாம் ஒருவரோடொருவர் தொடர்பு கொள்கின்றோம்; நாம் சிந்திப்பதையும், உணர்வதையும் பிறருக்கு எடுத்துரைக்கின்றோம். யாவற்றுக்கும் மேலாக, தெய்வீக போதனைகள் சொற்களின் மூலமாகவே வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இறைவனின் தமது திரு அவதாரத்தின் மூலமாக வெளிப்படுத்திய திருச்சொற்களை செவிமடுப்பது, மற்றும் வாசிப்பதனூடாக இப்போதனைகளை நாம் புரிந்துகொள்கின்றோம். ஆகவே, சொல்லின் சக்தி என்பதனை நமது கலந்துரையாடல்களுக்கான கருப்பொருளாக நான் மனதில் கொண்டிருக்கின்றேன்.

“சொல் என்பது வாளைவிட சக்தி வாய்ந்தது என நான் கேள்விப்பட்டுள்ளேன்,” என கார்லோட்டா கூறினாள்.

அது உண்மைதான்," என அன்டோனியோ கூறினான். "ஆனால், சொற்களுக்கு சக்தி ஏற்படவேண்டுமானால், அவை செயல்களோடு இணைந்திருக்க வேண்டும். இல்லையெனில், அவை வெற்று சொற்களாகி, காற்றோடு காற்றாக மறைந்துபோகும். எனக்கு மிகவும் பிடித்தமான ஒரு வாசகம், எவரது செயல்கள் சொற்களை விட வேறுபடுகின்றாதோ அவர்கள் வழியில் சென்றிடாதவாறு நாம் கவனம் கொண்டிருக்க வேண்டும், என்று கூறுகின்றது.

"ஆமாம்," என அனா மரியா ஆமோதித்தாள். ஒருவரை உங்களுடைய நெருங்கிய நண்பர் எனக் கூறிக்கொள்ளலாம். ஆனால், அந்த நண்பருக்குப் பிரச்சனைகள் ஏற்படும்போது, நீங்கள் உதவவில்லையெனில், நீங்கள் அத்தகைய ஒரு சிறந்த நண்பராக ஒருபோதும் இருப்பதில்லை.

அனா மரியாவின் கருத்து எல்லாருடைய கற்பனையையும் தூண்டிவிட்டது. வெறும் சொற்கள் மற்றும் செயல்களோடு கூடிய வார்த்தைகளுக்கான ஒரு சில உதாரணங்களை எல்லோரும் கூற ஆரம்பித்தனர்.

இறுதியில், "நல்லது என்றாள் எலிசா. செயல்களோடு கூடிய சொற்கள் மிகவும் சக்தி வாய்ந்தவை என்பதை நீங்கள் எல்லோரும் இப்போது நம்புகின்றீர்கள். சொற்கள் வியக்கத்தக்க சக்தியைப் பெற்றுள்ளன-அவை உலகத்தையே மாற்றியமைக்கக்கூடியவை. அதனால்தான், ஒரு நல்ல உலகை உருவாக்க வேண்டுமென நினைக்கும் நீங்கள் யாவரும் சொற்களை ஒழுங்காகப் பயன்படுத்தக் கற்றுக்கொள்ள வேண்டும். அதாவது, சொற்களைச் சிந்திப்பது சொற்களைப் புரிந்துகொள்வது, சொற்களைப் பேசுவது, சொற்களைப் பரப்புவது, மற்றும் செயலில் காட்டுவது ஆகியவை.

சிறிது நேரம் இளைஞர்கள் அனைவரும் அமைதியாக இருந்து, எலிசா கூறியவற்றைப் பற்றி பிரதிபலித்தனர். திடீரென டியேகோவுக்கு ஓர் எண்ணம் உதித்தது. உற்சாகத்துடன், அவன் குழுவினரின் முன்னால் குதித்தெழுந்து, "லௌகீக மற்றும் ஆன்மீக மேம்பாட்டை நாம் எப்படி அடையலாம் என்பது எனக்கு இப்போது புரிகின்றது: சொற்களின் சக்தியோடு கூடிய தூய்மையான செயல்கள்களின் வாயிலாகவே," என்றான்.

அமைதி. யாருமே ஒன்றும் சொல்லவில்லை. டியேகோ அங்கு வெறுமனே நின்று கொண்டிருந்தான். அவனுக்கு மிகவும் சங்கடமாக இருந்தது. உட்காருவதா, எழுந்து நிற்பதா என அவன் யோசித்தான். உதவிக்காக எலிசாவை நோக்கித் திரும்பினான். எலிசா மெதுவாக எழுந்து, அவனிடம் சென்று, அவன் கைகளைப் பிடித்தாள். "மிகவும் ஆழமான ஓர் உண்மையை நீ இன்று கண்டு கொண்டுள்ளாய்," என அவள் கூறினாள். "காலப்போக்கில் அஃது எவ்வளவு முக்கியமானது என்பதை நீ கற்றுக்கொள்வாய்."

**பயிற்சிக் குறிப்புகள்:**

அ. பின்வரும் ற்களைப் பயன்படுத்தி கீழேயுள்ள வாக்கியங்களைப் பூர்த்திசெய்க:

உடன்செல்ல, கற்பனை, வழங்கிய, செயல்கள், தொடர்புகள், முன்னேற்றம், வெகுமதி, உருவாக்கு, சுற்றுச்சூழல், சூழ்ந்திருந்தன, பரிசினை, வெளிப்படுத்த, இணக்கம், ஆழ்ந்த

1. சொல்லின் சக்தியின் வாயிலாகவே நாம் நம்மையே ________________ காண முடியும்.
2. தனது இளைய சகோதரன் கடைக்குத் தனியே செல்வதை ஜூலியா விரும்பவில்லை, ஆகவே அவனுக்கு _____________ அவள் முடிவெடுத்தாள்.
3. அந்த இளம் பெண்ணின் உடல் நிலை ________________ அடைவதைக் கண்ட மருத்துவர் மகிழ்ச்சியடைந்தார்.
4. லூயிஸ் என்றிக் அவளிடம் பல முறை கேட்டுக் கொண்ட பிறகே அவள் கூட்டத்தில் பேசுவதற்கு இறுதியாக அவள் ____________________ தந்தாள்.
5. இறைவன் நமக்கு வாழ்வெனும் _____________________ வழங்கியுள்ளார், நாம் அதை வீணாக்கிவிடக் கூடாது.
6. ஜுவான் கார்லோஸ் எப்போதெல்லாம் வாக்குறுதியளிக்கின்றானோ, அப்போதெல்லாம் அதைக் காப்பாற்ற முயற்சி செய்கின்றான். அவனுடைய வார்த்தைகள் ______________________ பின்தொடர்கின்றன.
7. இறைவன் அவரது அன்பின் காரணமாக நமக்குப் பல வெகுமதிகளை வழங்கியுள்ளார். சொற்களைப் பயன்படுத்தும் ஆற்றல் அவர் நமக்கு _______________________ அதி மேன்மை மிக்க ஆற்றல்களுள் ஒன்றாகும்.
8. முழுவதும் எழுத்தாளரின் ___________________யிலிருந்தே அச்சிறுகதை எழுதப்பட்டுள்ளது.
9. பிறரோடு நன்கு __________________________ கொள்ளவேண்டுமானால், நாம் செவிமடுக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்.
10. செசிலியா _______________________ குறித்து மிகுந்த அக்கறை கொண்டுள்ளாள் அத்துடன் அவள் தனது சமூக மையத்தில் சுகாதாரம் குறித்த ஒரு பயிற்சிநெறியை வழங்கவிருக்கின்றாள்.
11. செயல்திட்டம் ஒன்று செயல்படுத்தப்படும் போதெல்லாம், டியேகோவினால் அனைவரையும் ஆச்சரியப்படுத்த முடிகின்றது. அவனால் உற்சாகத்தை __________ முடிகின்றது.
12. நாள் முழுவதும் வேலை செய்ததன் காரணத்தினால் ரொபேர்டோ மிகவும் களைப்படைந்து படுக்கச்சென்றான். பிறகு அவனை யாருமே எழுப்ப முடியவில்லை. அவன் ______________________ தூக்கத்தில் இருந்தான்.

13. தனக்கு எத்தனை வயது என்பதைக் கூற என் பாட்டிக்குப் பிடிக்காது, ஆனால், அவருக்கு 100 வயதாகியபோது அவர் தமது உண்மையான வயதை ___________________________ செய்தார்.

14. அனா தன் வீட்டைச்சுற்றி ஒரு தோட்டம் உருவாக்கினாள். அதனால் பலவிதமான வர்ணங்களும் அமைப்பும் கொண்ட பூக்கள் அந்த வீட்டை ___________________________.

2. கீழ்கண்ட சொற்றொடர்களைக் கொண்டு வாக்கியம் அமைக்கவும். தூய்மையான செயல்கள்: ______________________________________________________________________

______________________________________________________________________________

சுற்றுச்சூழலை மேம்படுத்துவது: _______________________________________________

______________________________________________________________________________

பெரும் உற்சாகத்துடன்: ______________________________________________________

______________________________________________________________________________

வார்த்தைகளைச் செயல்படுத்துவது: ____________________________________________

______________________________________________________________________________

சொல்லப்பட்டவற்றின் மீது பிரதிபலிப்பது: ______________________________________

______________________________________________________________________________

3. சொற்கள் நன்மைக்கு அல்லது தீமைக்கு வழிவகுக்கக்கூடிய சக்தியை கொண்டுள்ளன, நாம் பயன்படுத்தக்கூடிய வார்த்தைகளைப் பொருத்து, நாம் நன்மை அல்லது தீமை பயக்கவல்ல ஆலோசனைகளை பிறருக்கு வழங்கலாம். பின் வரும் வெளிப்படுத்தல்களில் நல்ல ஆலோசனைகள் எவையோ அவற்றிற்கு முன்பாக “ந” எனவும் தீய ஆலோசனைகள் எவையோ அவற்றிற்கு முன்பாக “தீ” எனவும் குறியிடவும்.

______ நாம் ஒற்றுமையாக இருப்பதோடு என்றுமே சண்டையிடக்கூடாது.
______ உனக்கு வேண்டுமானால், எடுத்துக்கொள். உரிமையாளரைப் பற்றிக் கவலையில்லை.
______ புறங்கூற வேண்டாம்.
______ நாமெல்லாரும் அவ்வப்போது சோம்பலுறுகின்றோம்; அப்படிச் சோம்பலான நாட்களில் எதுவுமே செய்யாதிருப்பது நல்லது.
______ இன்றே நிறைவேற்றக்கூடியவற்றை நாளைவரை தள்ளிவைக்காதே.

______ கூட்டங்களுக்கு நீ சிறிது கால தாமதமாக சென்றால் ஒன்றும் குறைந்துவிடாது.

______ பணி எவ்வளவுதான் சிறிதாயினும், அது அதிசிறப்புடன் நிறைவேற்றப்பட வேண்டும்.

______ அவ்வப்போது நல்ல நோக்கத்துடன் பொய் சொல்வதில் தவறொன்றுமில்லை.

______ யாருக்கும் எதுவும் செய்யாதே; அதனால் எந்த நன்மையும் இல்லை.

______ வாழ்க்கையின் நோக்கமே இன்பமாகப் பொழுது போக்குவதே.

______ நம்மை மேம்படுத்திக்கொள்ள நாம் தினமும் முயலவேண்டும்.

______ பணிகள் நமக்குத் தண்டனை போன்றவை.

______ நாம் சட்டங்களை ஏன் கடைபிடிக்க வேண்டும்; நமக்கு எது நன்மையோ அது நாம் எல்லோருக்கும் தெரியும்.

______ நமது இவ்வாழ்க்கையின் நோக்கம் இறைவனை அறிந்துகொள்வதும் வழிபடுவதுமே ஆகும்.

______ நமது பணிகளைச் சேவையின் உள்ளாற்றலுடன் நாம் ஆற்றும்போது நாம் இறைவனை வழிபடுகின்றோம்.

______ நாம் ஒவ்வொருவரும் நமது சொந்த வாழ்க்கையைப் பற்றிக் கவலைப்பட்டால் போதுமானது. பிறருடைய பிரச்சினைகளைப் பற்றி நாம் தொந்தரவடைய கூடாது.

______ உன் பெற்றோருக்கு வயதாகிவிட்டது; இக்காலத்து வாழ்க்கையைப் பற்றி, அவர்களுக்கு என்ன தெரியும்!

______ அவ்வப்போது சிறிது மது அருந்துவதால் யாருக்கும் தீமையில்லை.

______ வாழ்க்கை குறுகியது. ஏன் வேலை செய்து உன்னை நீயே சாகடித்துக்கொள்கிறாய்!

1. இப்பாடம் "சொல்" எனும் கருத்துப்படிவத்தின் மீது பிரதிபலிப்பு செய்திட உதவியதன் வாயிலாக இளைய இளைஞர்களின் விழிப்புணர்ச்சியை விரிவடையச் செய்கின்றது. இதை அஃது எவ்வாறு சாதிக்கின்றது?

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

2. மேற்கண்ட பாடத்தை ஆய்வுசெய்ததன் வாயிலாக சிந்தனையாற்றல் மற்றும் பேச்சாற்றலுக்கிடையே எவ்விதமான தொடர்புகள் உள்ளன என நீங்கள் உணர்கிறீர்கள்?

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

## பகுதி 11

சுலபமாக வாசிப்பது மற்றும் தாங்கள் எதை வாசித்தார்களோ அவற்றின் அர்த்தங்களை நன்கு புரிந்துகொள்வது ஆகியவை இளைய இளைஞர்கள் மேம்படுத்த வேண்டிய ஆற்றல்களுள் உள்ளது. உலகின் பல பாகங்களில் இந்த வயதினர் படிக்கக்கூடிய ஏராளமான இலக்கியங்களுக்கு குறைவில்லை, பள்ளிப்பாட நூல்கள், நகைச்சுவை சஞ்சிகைகள் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இலக்கியங்களின் இந்த பரந்த அமைப்பில் காணப்படும் பல அம்சங்கள் இளைய இளைஞர் மேம்பாட்டிற்கு உதவியாக இருந்தபோதிலும், அவற்றின் செயல்பாடு ஓர் இளைஞரின் ஆன்மாவின் மீது புனித எழுத்துக்களில் காணக்கிடக்கும் உண்மையெனும் திரவியங்களின் செல்வாக்கோடு ஒப்பிடப்பட முடியாது. பஹாவுல்லா ஒவ்வொரு சொல்லுக்கும் ஒரு புத்துணர்வுமிக்க உள்ளாற்றலை வழங்கியுள்ளார் என்பதை நாம் அறிவோம். **அ**வர் கூறுவதாவது:

> **“நமது மகிமை எனும் எழுதுகோலின் இயக்கத்தின் வாயிலாக, சர்வ வல்லமைபொருந்தியவாரான விதித்தருள்பவரின் கட்டளையின்படி, நாம் ஒவ்வொரு மனித கட்டமைப்பிலும் ஒரு புதிய உயிரினை ஊதி, ஒவ்வொரு சொல்லிலும் ஒரு புத்துணர்வுமிகு ஆற்றலை புகட்டியுள்ளோம். படைப்புப் பொருட்கள் அனைத்துமே இந்த உலகளாவிய மறுசீரமைப்பின் சான்றுகளை பிரகடனப்படுத்துகின்றன.”** [27]

இளைய இளைஞர்களின் பேச்சாற்றலை மேம்படுத்திடுவதற்காக பயன்படுத்தப்படும் உபகரணங்களின் தலைப்புகள் அல்லது கருப்பொருள்கள் எதுவாக இருப்பினும், அவை சமயத்தின் எழுத்துக்களின் அர்த்தங்களுக்கு வெகு இணக்கமானவற்றையே பிரதிபலிக்க வேண்டும். உதாரணமாக, நீதி எனும் கருத்துப் படிவம் குறித்த நமது புரிந்துகொள்ளல் பஹாவுல்லாவின் போதனைகளால் ஒளியூட்டப்படும்போது, ஆன்மீக மெய்மையை இழந்துநிற்கும் ஓர் உலகில் கிடைப்பதற்கு அரிய அர்த்தங்களின் ஆழங்களுக்கு நம்மைக் கொண்டு செல்லும். எழுத்தோவியங்களில் உள்ளடங்கியுள்ள விவேகம் எனும் மாணிக்கங்கள், மிகுந்த கற்பனைத்திறத்துடன் கல்விசார்ந்த உபகரணங்களின் உதவியோடு வழங்கப்படும்போது, இளைய இளைஞர்களின் மனங்களை ஒளிரச் செய்து அவர்களின் உள்ளங்களில் களிப்பையும் ஏற்படுத்தும்.

**“இறைவனின் வார்த்தைகள் எனும் ஒளியினால் உங்கள் ஆன்மா2ுக்கள் ஒளிபெறக்கூடுமாக, நீங்கள் இறைவனின் மர்மங்களின் கருவூலங்களாவீர்களாக, ஏனெனில் தெய்வீக போதனைகளின் ஆன்மீகத் தெரிவைவிட எதுவுமே அதிக சுகமளிப்பதல்ல மற்றும் எந்த களிப்புணர்வும் இனிமை மிக்கதல்ல. ஷேக்ஸ்பியர் போன்ற கவிஞர்களின் வரிகளின் உண்மையான அர்த்தத்தை ஒரு மனிதன் புரிந்துகொள்வானாயின், அவன் இன்பமும் களிப்பும் அடைகிறான். புனித எழுத்துக்களின் மெய்மையினை அவன் உள்ளுணர்ந்தும், இராஜ்ஜியத்தின் மர்மங்கள் குறித்த அறிவடைந்தும் இருப்பானாயின் அவனது களிப்பும் இன்பமும் அதைவிட எவ்வளவு அதிகமாக இருக்கும்!”[28]**

கீழ்க்காணப்படும் எடுபகுதிகள் *திருசொல்லிலிருந்து சக்தியைப் பெறுதல்* எனும் நூலிலிருந்து வழங்கப்பட்டுள்ளன. “மேம்பாடு” எனும் கருத்துப்படிவம் நூல் முழுவதும் இழையோடுகின்றது. சமயத்தின் போதனைகளின் அடிப்படையில் அமைந்துள்ள மேம்பாடு குறித்த கருத்துப்படிவம் பற்றிய ஒரு புரிந்துகொள்ளலை இளைய மனங்களில் உருவாக்கிட இந்நூல் முயலுகின்றது. கீழ்க்காணப்படும் வாசகக்குறிப்புகளில் வெளிப்படும் மேம்பாடு குறித்து பொதுத் தகவல் சாதனங்களில் வெளியிடப்படும் அர்த்தம் மற்றும் பின்வரும் எடுபகுதியில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது போன்று அதன் முக்கியத்துவம் ஆகியவற்றிற்கு இடையிலான வேறுபாடுகளை கண்டுணர முயலுமாறு நீங்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்:

சிறிது காலத்திற்கு முன்பு, அக்கிராமத்திற்கு மிகவும் மரியாதைக்குரிய ஓர் ஆசிரியர் வருகை தந்தார், அந்த ஆசிரியர், “அலெக்ரியாஸ் முன்மாதிரியான ஒரு கிராமமாக ஆகும் வாய்ப்புள்ளது, இங்கு நாம் அனைவரும் லௌகீக மற்றும் ஆன்மீக மேம்பாடு காணமுடியும்” என்று அவர்களிடம் கூறினார். ஆரம்பத்தில், டியேகோவிற்குப் லௌகீக மற்றும் ஆன்மீக முன்னேற்றம் என்றால் என்னவென்று சரியாக புரிந்துகொள்ள முடியவில்லை இருந்தபோதிலும், தனது முழு சமூகத்துடனும் அவன் இவ்வுற்சாகத்தினை பகிர்ந்துகொண்டான். ஆனால் இப்போது, அவன் இவ்விஷயம் குறித்து பெருமளவு அறிந்துகொண்டுள்ளான். உடலளவில் சிறிய தோற்றமுடையவனாக இருந்தபோதிலும், தான் ஒரு குழந்தையல்ல எனவும், தேவைப்படும் லௌகீக, ஆன்மீக மேம்பாடடையத் தனது கிராமத்திற்கு உதவிட தனக்கும் ஆற்றல் உண்டு என்பதிலும் அவன் இப்போது விழிப்புணர்வு பெற்றுள்ளான்.

டியேகோ இப்படிப்பட்ட ஓர் உரையாடலின் போதுதான் லௌகீக மற்றும் ஆன்மீக மேம்பாடு பற்றி ஒவ்வொருவரும் என்ன நினைக்கின்றார்கள் என வினவத் தீர்மானித்தான். பேசுவதற்கு எப்போதும் ஆர்வமளிக்கும் விஷயம் ஏதாவது ஒன்றை வைத்திருக்கும் மரியெலா, உடனடியாகப் பதிலளித்தாள். “லௌகீக மேம்பாடு என்றால் என்ன என்பது எனக்குத் தெரியும். அதாவது நாம் ஏழைகள், நமக்கு ஆனந்தமளிக்கக்கூடிய விஷயங்களைப் பெற்றிட நமக்குப் பணம் தேவைப்படுகிறது என்பது அதன் அர்த்தமாகும்.”

மரியெலா கூறியவை அங்குள்ள அனைவருக்கும் உற்சாகமளித்தது. அவர்கள் அனைவரும் தங்கள் கருத்துக்களைப் பகிர்ந்துகொள்ள ஆரம்பித்தனர். அவர்கள் கூறியவை ஏறக்குறைய பின்வருவனவாகும்:

அன்டோனியோ: "சந்தோஷமாக வாழ்வதற்கு நீங்கள் செல்வந்தர்களாக இருக்க வேண்டுமென்பதை நான் நம்பவில்லை. சந்தோஷமாக இருக்கும் பல ஏழை மக்களை எனக்குத் தெரியும்."

கார்லோட்டா: "என் சகோதரன் பல்கலைக்கழக விடுமுறையில் இருக்கின்றான், நாம் எப்போதும் அவர்களுக்காக உழைத்துக்கொண்டிருக்க வேண்டும் என்பதற்காகவே 'சந்தோஷமான ஏழைகள்' எனும் வார்த்தையை செல்வந்தர்களே உருவாக்கியுள்ளனர் எனக் கூறுகின்றான்.

என மரியா: "அஃது ஒரு வேளை உண்மையாக இருக்கலாம், ஆனால், சந்தோஷம் என்பது மன ஆழத்திலிருந்து வருவதாகும். அஃது ஒருவர் எவ்வளவு செல்வம் கொண்டிருக்கின்றார் என்பதைப் பொருத்ததல்ல.

டியேகோ: "இருந்தாலும், ஏழையாக இருப்பது களிப்பான விஷயமல்லவே. நமது வாழ்வை முன்னேற்றிக்கொள்ள நம்மால் முடிந்த அனைத்தையும் நாம் செய்யவேண்டும்".

அன்டோனியோ: "ஆனால், இதனை செய்திட முயலும்போதும் நாம் சந்தோஷமாகத்தான் இருக்க வேண்டும். நான் எனக்காகவும், என் சமூகத்திற்காகவும் கடினமாக உழைக்க விரும்புகிறேன், ஆனால், அதைச் செய்யும் வேளையில் நான் சந்தோஷமாகவும் இருக்க விரும்புகிறேன். முன்பெல்லாம் நான் கார்லோட்டாவின் சகோதரனோடு களிப்புடன் பொழுது போக்கினேன். ஆனால், அவன் எப்போது ஏழைகள் பணக்காரர்கள் என்று பேச ஆரம்பித்தானோ, அதிலிருந்து அவனிடம் செவிமடுக்க எனக்குப் பிடிக்கவில்லை. அவனுடைய உள்ளம் எப்போதும் ஆத்திரமாக இருக்கின்றது."

ரோபேர்ட்டோ: "இறைவனோடு அணுக்கமாக இருப்பதிலும் அவருடைய சட்டங்களுக்குக் கீழ்ப்படிவதிலுமிருந்தே உண்மையான சந்தோஷம் வருகிறது என்பது எனக்குத் தெரியும்."

டியேகோ: "அது உண்மைதான், ஆனால், கடவுளை நேசிப்பதென்றால் நாம் நமது சகமனிதர்களை நேசிப்பதும், அவர்களுக்கு உதவிடுவதுமே என்பதை நாம் மறக்க முடியாது."

கார்லோட்டா: "இறைவனின் சட்டங்களுக்குக் கீழ்ப்படிவதென்பது, ஏழைகளே இல்லாத ஓர் உலகத்தை நாமெல்லாரும் ஒன்றுசேர்ந்து உருவாக்குவதாகும் என்பதையும் நாம் நினைவுபடுத்திக்கொள்ள வேண்டும்."

பிறகு, திடீரென, தாங்கள் அதுவரையில் லௌகீக முன்னேற்றம் குறித்தே பேசி வந்துள்ளனர் என்பதைத் டியேகோ உணர்ந்தான். "ஆன்மீக முன்னேற்றம் என்னவாயிற்று?" என அவன் வினவினான். ஆனால், எல்லாருமே அப்போது களைப்புற்றிருந்தனர், ஆகவே அந்தக் கலந்தோலோசிப்பை அடுத்த முறை வைத்துக்கொள்ளலாம் என அவர்கள் தீர்மானித்தனர்.

இளைஞர்கள் பல ஒன்றுகூடல்களை லௌகீக மற்றும் ஆன்மீக முன்னேற்றம் குறித்த கலந்தாலோசனைகளுக்காக அர்ப்பணித்தனர். ஒரு மாதம் கழித்து, எலிசாவின் வருகைக்கு சற்று முன்பாக, இளைஞர்கள் தங்களுடைய கலந்தாலோசனையின் முடிவுகளை மறு ஆய்வு செய்வதற்கு ஒரு விசேஷ கூட்டத்தை ஏற்பாடு செய்தனர். இளைஞர்கள் தங்களுடைய யோசனைகளை எலிசாவிடம் சமர்ப்பித்தபோது, எலிசா மிகவும் சந்தோஷமடைந்தாள். அவர்கள் தங்களுடைய கலந்தாலோசனை முடிவுகளைத் தெளிவுடன் ஒழுங்குப்படுத்திடவும், பின்வரும் பிரகடனத்தை எழுதவும் அவள் அவர்களுக்கு உதவினாள்:

**இளைஞர் பிரகடனம்**

இன்னும் நாங்கள் குழந்தைகள் அல்லர் எமது எதிர்காலம் குறித்து நாம் கடுமையாகச் சிந்திக்க வேண்டும். நாம் வாழும் இவ்வுலகம் துன்பங்கள் நிறைந்தும், ஒற்றுமைக் குலைவினால் பாதிப்படைந்தும் உள்ளது. ஒரு புதிய உலகை நிர்மாணிக்க நாம் விரும்புகிறோம். அங்கு மக்கள் இணக்கத்துடன் வாழ்வார்கள் அத்துடன் அங்குப் போரும் வறுமையும் இனி இருக்காது. ஒரு புதிய உலகை நிர்மாணிக்கும் முயற்சியை நாம் முதலில் நமது சமூகத்திலிருந்து தொடங்கிட வேண்டும். அதனால்தான் நாம் இப்போது அலெக்ரியாஸ் எனப்படும் நமது சிறிய கிராமத்தின் லௌகீக மற்றும் ஆன்மீக முன்னேற்றம் குறித்துப் பேசுகின்றோம். லௌகீக ரீதியில் நாம் முன்னேற்றம் காண, நாம் நமது விவசாயத்தை மேம்படுத்த

வேண்டும், நமது சுகாதாரத்தை மேலும் நன்றாகப் பேண வேண்டும், அதிகமான பள்ளிகளைப் பெற வேண்டும், வணிகம் தொழில்துறை ஆகியவற்றில் நாம் ஆக்ககரமாகச் செயல்பட வேண்டும். நமது உழைப்பின் பயனாக, நாம் நமது இல்லங்களை, கிராமத்தை, சுற்றுச்சூழலைப் பெரும் அழகு வாய்ந்த இடங்களாக மாற்ற வேண்டும். அங்கு நாம் தூய்மையானதும் சுகாதாரம் மிக்கதுமான ஒரு சுற்றுச்சூழலை அனுபவிக்க முடியும்.

நாம் ஆன்மீக முன்னேற்றத்தை அடையவில்லையெனில் மக்கள் அனைவருக்குமான லௌகீக முன்னேற்றம் அடையப்பட முடியாது. ஆன்மீகமின்றி, வெகுசிலர் செல்வந்தர்களாகவும், மற்றவர்கள் அனைவரும் தொடர்ந்து ஏழ்மை நிலையிலும் வாழ்ந்து வருவர். ஒரு சமூகமெனும் முறையில் நாம் நமது இலக்குகளை அடைந்திட, நாம் ஒற்றுமையோடு இருக்கவேண்டும், நீதியுடன் நடக்கவேண்டும், ஒத்துழைத்தும், ஒருவரோடு ஒருவர் நட்போடும் பழகவேண்டும், தாராளமனப்பான்மை, நேர்மை, நம்பகம் ஆகியவற்றைப் பெற்றிருக்கவேண்டும். நீதி, தாராளமனப்பான்மை, அன்பு மற்றும் கருணை, நேர்மை மற்றும் நம்பகத்தன்மை ஆகியவை ஆன்மீகப் பண்புகள். அவற்றின் மூலமாக நாம் லௌகீக மற்றும் ஆன்மீக முன்னேற்றத்தை அடைகின்றோம்.

ஒரு சிறந்த உலகை உருவாக்குவதற்கு மட்டும் நமக்கு ஆன்மீகப் பண்புகள் தேவைப்படவில்லை. இவ்வுலகத்தோடு முடிவடைந்து விடாத நமது ஆன்மாவின் வாழ்விற்கும் அவை தேவைப்படுகின்றன. லௌகீக மற்றும் ஆன்மீக முன்னேற்றம் என்பது நமது வாழ்வின் லௌகீக மற்றும் ஆன்மீக அம்சங்கள் அனைத்திலும் தினசரி நாம் அதிசிறப்புற முயலுவதாகும், அதாவது நீதியும் அமைதியும் மிக்க ஓர் உலகை உருவாக்கிடவும்  கடுமையாக உழைப்பதும், மற்றும் மகிழ்ச்சி, சந்தோஷம் ஆகியவை நிறைந்த ஒரு நித்திய வாழ்விற்காக நம்மைத் தயார்படுத்திக்கொள்வதுமே ஆகும்.

டியேகோ தன்னுடைய சொற்பொழிவைப் பற்றிப் பல மணி நேரங்கள் சிந்தித்திருந்தான். இயல்பாகவே, அலெக்ரியாஸ் இன் லௌகீக மற்றும் ஆன்மீக முன்னேற்றம்," எனும் தலைப்பிலேயே அவன் பேச விரும்பினான். இருந்தபோதும், அவ்விஷயம் குறித்து கடுமையான சொற்பொழிவாற்ற அவன் விரும்பவில்லை; தன் நண்பர்களுக்கு அது

குறித்து உபதேசம் செய்யவும் அவன் விரும்பவில்லை. பின்வருமாறே அவனுடைய யோசனைகள் அமைந்திருந்தன:

அலெக்ரியாஸ் இன் இளைஞர் குழுவின் ஓர் அங்கத்தினராக இருப்பதை நான் பெரிதும் மதிக்கின்றேன். அதன் அங்கத்தினர்கள், நான் பெற்றிருந்த நண்பர்களிலேயே மிகவும் நெருக்கமான நண்பர்களாக இருந்துள்ளனர், நான் அவர்களுடன் இருக்கும் தருணங்களே மிகவும் சந்தோஷமான தருணங்களுள் சிலவாக விளங்குகின்றன. ஒன்றுகூட ஆரம்பித்ததிலிருந்தும், ஒன்றாகச் செயல்பட ஆரம்பித்ததிலிருந்தும் நாம் வெகுவாக மாறியுள்ளதாகவே நான் நினைக்கின்றேன். இந்நடவடிக்கையின் ஆரம்பத்தில் நாம் பெரும்பாலும் சிறுவர்களாகவே இருந்தோம், நமது ஒன்றுகூடலானது நாம் நம்முடைய வாழ்க்கையின் அடுத்தக் கட்டத்திற்குள் அர்த்தமுள்ள வகையில் நுழைந்திடப் பெரிதும் உதவியுள்ளது.நமது நடவடிக்கைகள், கலந்துரையாடல்கள் ஆகியவற்றின பயனாக, குழப்பம் மிகுந்ததாகவும், நம்பிக்கையற்றதாகவும் நாம் இளமைப் பருவத்தை எட்டவில்லை. நமது வாழ்க்கைக்கு ஒரு நோக்கம் உண்டென்பது நமக்குத் தெரியும், நமது இலக்குகளை அடைய நாம் ஒருவருக்கொருவர் உதவிக்கொள்பவர்களாக இருக்கப் போகின்றோம். நாம் என்றென்றும் நண்பர்களாகவே இருக்கப்போகின்றோம் என்பதே என் எண்ணம்.

நாம் நமது குழுவை அமைத்ததிலிருந்து அடிக்கடி நம் மனதில் உதித்த எண்ணங்களுள் ஒன்றாக அலெக்ரியாஸ் இன் ஆன்மீக மற்றும் லௌகீக முன்னேற்றமே இருந்துள்ளது. ஆரம்பத்தில் இதன் அர்த்தம் என்னவாக இருக்கும் என்பதை அறிய விரும்புபவர்களாக இருந்தோம் என்பதே என் எண்ணம். ஆனால், இப்போதோ, நம்மில் பெரும்பாலானவர்களுக்கு நமது சமூகத்தின் முன்னேற்றமென்பது நாம் நமது சக்திகளையெல்லாம் செலுத்திச் செயலாற்ற விரும்பும் ஒரு விஷயமாக ஆகிவிட்டது. நமது நம்பிக்கையார்வம் பரவக்கூடியதாகவும், கிராமத்தில் உள்ள ஒவ்வொருவரையும் அது சென்றடையும் என்பதே நம் எதிர்பார்ப்பு.

நம்மை மிகவும் அன்பாக வழிநடத்திவந்துள்ள எலிசாவின் மூலமாக, முன்னேற்றம் என்றால் என்ன என்பது குறித்துச் சில முக்கியமான விஷயங்களை நாம் அறிந்துகொண்டுள்ளோம். நாம் எப்போது ஒன்றுபட்டிருக்கவேண்டுமென்பதும் நமக்குத் தெரியும், இல்லையெனில், நமது முயற்சிகளெல்லாம் வீணாகிவிடும். நாம்

அதிசிறப்புத்தன்மை அடைவதற்கு முயலவேண்டும் என்பது நமக்குத் தெரியும்; ஒவ்வொரு நாளும் அதற்கு முந்திய நாளைவிட சிறந்ததாக இருக்கவேண்டும். அறிவொளியூட்டப்பெற்ற வார்த்தைகளும், தூயச் செயல்களும் மாற்றங்களை கொண்டுவரக்கூடியவையாக உள்ளன. எனினும், வார்த்தைகள் ஏன் இவ்வளவு சக்தியைப் பெற்றுள்ளன? அவற்றின் வாயிலாக நாம் அறிவைக் கண்டுபிடிக்கவும், பெறவும் வழங்கவும் செய்கின்றோம் என்பதே இதற்கான ஒரு முக்கியக் காரணமாகும். முன்னேற்றத்தின் மையத்தில் அறிவாற்றலே உள்ளது.

அன்றொரு நாள், என் வீட்டிற்கு அருகே புல்வெளியில் மேய்ந்துகொண்டிருந்த சில மாடுகளை நான் கண்டேன். அப்போது, “இந்த மாடுகளுக்குத் தேவையான அனைத்தும் கிடைக்கின்றது. அவை சாப்பிடத் தேவையான புல் அனைத்தும் அவற்றுக்குக் கிடைக்கின்றது. தாகமெடுக்கும் போது குடிப்பதற்கு மேய்ச்சல் புல்வெளியினூடே ஒரு நீரோடையும் உண்டு. வேண்டுமென்றால் அவை வெயிலின் கீழும் படுத்திருக்கலாம், அல்லது நிழல் தரும் மரத்தின் கீழும் ஓய்வெடுக்கலாம். இவற்றுக்கு வேறு என்னதான் தேவை?”. ஆனால், அவற்றுக்கு இருப்பதெல்லாம் அவைதாமே, அவை வேறு எதையும் பெற்றிருக்கவில்லை என்பதையும் நான் பிறகு உணர்ந்தேன். அவற்றுக்கு அறிவு கிடையாது, தாங்கள் செய்பவற்றை அவற்றால் புரிந்துணர முடியாது. அவை இயற்கையின் அடிமைகளாக இருக்கின்றன. ஆகவே, ஒரு மாட்டைப் போல் நான் வாழ மாட்டேன் என்று நான் முடிவெடுத்தேன். பிறகு, “ஒரு வேளை நான் பெரும் செல்வமும் சக்தியும் மிக்கவனாகி, ஆனால், அறிவிலியாக இருந்தால் என்னாவது? அதனால் என்ன நன்மை விளையப் போகின்றது? அப்படிப்பட்டச் செல்வத்தினாலும் சக்தியினாலும் நான் ஓர் அடிமை என்பதைத் தவிர வேறெதுவுமாக இருக்கமுடியாது - என் உணர்ச்சிகளுக்கு நான் அடிமையாகி, என்னால் புரிந்துகொள்ள முடியாதவற்றையெல்லாம் செய்திட நான் உந்தப்படுவேன், பேராசைக்கு அடிமையாவேன், என்னைவிட அதிகம் செல்வமும் சக்தியும் படைத்த பிறருக்கு நான் அடிமையாக இருப்பேன்,” என்று எனக்கு நானே சொல்லிக்கொண்டேன். அதனால்தான் அறிவென்பது முன்னேற்றத்தின் இதயத்தில் வீற்றிருக்கின்றது. அறிவு நமக்கு சுதந்திரத்தை தருகின்றது.

கீழ்வரும் இடங்களில் முன்னேற்றம் குறித்துப் இளைய இளைஞர்கள் என்ன புரிந்துகொள்ள வேண்டும் என நீங்கள் விரும்புகிறீர்கள் என்பது குறித்து சில பத்திகள் எழுதவும்:

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

## பகுதி 12

சமயத்தின் திருவாசகங்களில்ளில், "பேச்சு" என்பது பெரும்பாலும் "படிகத் தெளிவானது", "நாவன்மைமிக்கது", "ஊடுருவக்கூடியது" மற்றும் "சுவாரசியமானது" போன்ற சொற்களால் தகுதி பெறுகிறது மற்றும் "நிதானம்", "ஞானம்" மற்றும் “புரிதல்”. ஆகியவற்றின் அவசியத்தை சுட்டிக்காட்டும் சொற்றொடர்களுடன் உள்ளது. ”, இந்த பண்புகளை கொண்ட வார்த்தைகள் இந்தப் பண்புகளைக் கொண்ட வார்த்தைகள் "சுயம் மற்றும் பேரார்வத்தின் திரையை நுகர்வது" மற்றும் "பகைமை மற்றும் வெறுப்பின் நெருப்பை அணைப்பது" போன்ற அசாதாரண விளைவுகளை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், வார்த்தைகள் அவற்றை உச்சரிப்பவரின் நிலை மற்றும் ஆன்மீக குணங்களுக்கு ஏற்ப செல்வாக்கினை செலுத்துகின்றன.

**“கூறுவீராக: மனித பேச்சாற்றல் என்பது தனது ஆதிக்கத்ததை செலுத்திடும் இலட்சியம் கொண்டுள்ள ஒரு சாரமாகும் மற்றும் அதற்கு மிதத்தன்மைத் தேவைப்படுகின்றது. அதன் ஆதிக்கத்தைப் பொருத்தவரை, அது பண்பட்டமையை வேண்டுகின்றது. பண்பட்டமை, பற்றின்மையும் தூய்மையும் உடைய இதயங்களைச் சார்ந்திருக்கின்றது.”**[29]

**“மேலும் சொற்களும் பேச்சாற்றல்களும் மனதிற்-பதியத்தக்கவையாகவும் ஆழப்பதியத்தக்கவையாகவும் இருக்க வேண்டும். இருந்தபோதிலும், அவை முழுமையாகக் கடவுளுக்காகவும், அதுவும் சூழ்நிலையின் அவசியத்தேவைகளையும் அதன் மக்களையும் கருத்தில்கொண்டும் அவை உச்சரிக்கப்பட்டாலன்றி எந்த வார்த்தைக்கும் இவ்விரு பண்புகளும் உட்புகட்டப்பட்டிருக்காது.”**[30]

**“அவரது கிருபை எனும் முத்துக்களினால் உங்கள் சிரசுகளை அலங்கரித்திடவும்; உங்கள் இதயங்கள் கடவுளின் அன்பெனும் தீயினால் பற்றவைக்கப்படவும்; புனிதர்களின் ஒன்றுகூடல்களில் நாவன்மைமிகு வார்த்தைகள், நனிசிறந்த அர்த்தங்கள் மற்றும் மர்மங்களின் பேச்சாற்றலுக்கு உங்கள் நாவுகளை விடுவிக்கவும்; அப்ஹா சுவர்க்கத்தின் மலர்களாகவும், விண்ணுலகின் தேவதூதர்களாகவும், உங்கள் கருத்துக்களால் ஒன்றிணையவும் உங்கள் சிந்தனைகளில் இணக்கப்படவும்; மற்றும் உங்கள் முகங்களில் மக்களிடையே அவரது இராஜ்ஜியத்தின் புனிதத்தன்மையின் அடையாளங்கள் வெளிப்படவும் கடவுளை வேண்டுகிறேன்.”** [31]

**இறுகிய இதயங்களில் உங்கள் சொற்பொழிவும் பேச்சாற்றலும் விளைவுகள் ஏற்படுத்திட தாங்கள் விரும்பினால், நீங்கள் இவ்வுலகின் எல்லா பற்றுக்களில் இருந்தும் அறுபட்டுக் கடவுளின் இராஜ்ஜியத்தின்பால் உங்கள் முகத்தினை திருப்பிட வேண்டும்.”** [32]

1. மேற்கண்ட வாசகப்பகுதிகளிலிருந்து மனித உச்சரிப்புக்குச் சக்தியளிக்கும் சில ஆன்மீக பண்புகளை அடையாளங்காணவும். ____________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

2. ஆன்மீக சக்தியளிக்கும் திட்டத்தில் இளைய இளைஞர்கள் படிக்கும் நூல்களில் உள்ள கருத்துகளை ஆராய்வதென்பது இந்த குணங்களை வளர்த்துக் கொள்ள அவர்களுக்கு எவ்வாறு உதவுகிறது என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? ______________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

## பகுதி 13

பேச்சாற்றலானது மிக உயர்ந்த குறிக்கோள்களின் நிறைவேற்றத்தின்பால் வழிகாட்டப்பட வேண்டும் எனப் எழுத்தோவியங்களில் நமக்கு அறிவிக்கப்பட்டுள்ளது:

> **"அதிமேன்மைமிகு எழுதுகோலிலிருந்து வழிந்தோடிடும் பற்றின்மையெனும் நீர்களினால் உங்களை சுத்தப்படுத்திக்கொள்ளவும், ஆழ்ந்து சிந்திக்கவும் இதுவே தருணம், முற்றிலும் கடவுள் ஒருவருக்காக மட்டுமே, மீண்டும் மீண்டும், அனுப்பப்பட்டு அல்லது வெளிப்படுத்தப்பட்டும் உள்ள அவ்விஷயங்களைச் சிந்தித்தும், பிறகு உங்களால் இயன்ற அளவு முயற்சி செய்து, உலக மக்களின் இதயங்களில் புகைந்துகொண்டிருக்கும் பகைமை மற்றும் வெறுப்பு எனும் தீயினை, உங்கள் விவேகத்தின் வலிமையாலும், உங்கள் பேச்சாற்றலின் விசையினாலும் அணைத்திட முயலவேண்டும்."** [33]

> **"ஒருவரானவரும், தன்னிகரற்றவரும், சர்வவல்லமைப் பொருந்தியவரும், வழங்கிடுபவருமான இறைவனுக்காகத் தான் போற்றிவரும் அன்பின் காரணமாக, தனது முயற்சியைச் செலுத்திடவும், எல்லாப் பிரதேசங்களிலும் உள்ள சூழ்நிலைகளை மறுசீரமைப்புச் செய்திட எழுந்திடவும், விவேகம் மற்றும் பேச்சாற்றல் எனும் ஜீவ நீர்களினால் இறந்தோரை உயிர்ப்பிக்கவும், ஒவ்வொரு கவனமிக்க மற்றும் முயற்சியுடைய ஆன்மாவுக்கும் இச்சேவகன் வேண்டுகோள் விடுக்கின்றான்."**[34]

> **"ஒவ்வொரு வார்த்தையும் ஓர் உள்ளாற்றலைக் கொண்டுள்ளது. ஆகவே, பேச்சாளர் அல்லது விவரிப்பாளர் தமது வார்த்தைகளை மிகவும் கவனத்துடன் தக்க நேரம் இடம் ஆகியவற்றைக் கொண்டு வெளிப்படுத்தப்பட வேண்டும். ஏனெனில், ஒவ்வொரு வார்த்தையும் மனதில் பதிக்கக்கூடியவையாகவும் தெளிவானவையாகவும் உணரக்கூடியனவாகவும் உள்ளன. மாபெரும் திருவுரு கூறுவதாவது: ஒரு வார்த்தை நெருப்புக்கும், மற்றது ஒளிக்கும் ஒப்பிடப்படலாம், அவை இரண்டும் செலுத்தக்கூடிய செல்வாக்கு உலகில்**

**வெளிப்படையாகவே உள்ளது. ஆகவே, ஓர் ஒளிபெற்ற விவேகி மனிதர்களின் குழந்தைகள் பாரமரிக்கப்பட்டும், அறிவிக்கப்பட்டும் உண்மையான தெரிவு மற்றும் மேன்மையின் ஸ்தானமாக விளங்கும் மனித வாழ்வின் இறுதி இலக்கை அடைந்திடுமாறும், பாலைப்போன்ற மென்மையுடைய வார்த்தைகளையே முதன்மையாக பேசவேண்டும். மற்றும் அதுபோன்றே அவர் கூறுவதாவது: ஒரு வார்த்தை வசந்தகாலத்தைப்போன்று, அறிவெனும் ரோஜா தோட்டத்தின் துளிர்கள் பசுமையும் செழிப்புறவும் செய்கின்றன, அதே வேளை வேறொரு வார்த்தைக் கொடிய விஷத்தைப் போன்றும் இருக்கின்றது. கவனமுடைய விவேகி மிகுந்த பெருந்தன்மையுடனும் பொறுமையுடனும் பேசவேண்டும், அதனால் அவருடைய வார்த்தைகளின் இனிமை மனித ஸ்தானத்திற்கு ஏற்புடையதை அடைந்திட ஒவ்வொருவரையும் தூண்டிடுமாக.”[35]**

பின்வரும் கூற்றுகள் சரியா  என தீர்மானிக்கவும். வெளிப்படுத்தும் ஆற்றல் பின்வருமாறு வழிகாட்டப்பட வேண்டும்:

______ ஒரு விவாதத்தில் வெற்றி பெறுதல்

______ மேலும் தெளிவான விவாதங்களை முன்வைத்து உண்மையை விவரித்தல்

______ மக்களின் இதயங்களில் விரோதம் மற்றும் குரோதம்  எனும் தீயை அணைப்பதற்கு

______ மற்றவர்களை சூழ்ச்சியுடன் கையாள்வதற்கு

______ உண்மையை மறைப்பதற்கு

______ பிரபஞ்சத்தின் மர்மங்களை விளக்குவதற்கு

______ சிக்கலான விஷயங்களை விளக்குவதற்கு

______ தவறான புரிந்துகொள்ளல்களைத் தெளிவுபடுத்தவும் ஐக்கியப்பட்ட தூரநோக்கை உருவாக்கவும்

______ ஒருவரது கருத்தின் விஞ்சியநிலையை நிரூபிப்பது

______ மெய்மையைப் புலனாய்வு செய்வது

______ மக்களின் நிலைமைகளை மேம்படுத்துவது

______ ஒடுக்கப்பட்டோரின் உரிமைகளைத் தற்காப்பது

______ புகழ்ச்சி மற்றும் வியந்து பாராட்டுவது

2. தனிப்பட்ட தன்மைமாற்றம் குறித்த பாதை அதேபோல் சமுதாயத்தின் தன்மைமாற்றத்திற்கு பங்களிக்கும் முயற்சிகளில் வெளிப்படுத்தும் ஆற்றலை மேம்படுத்துவது இளைய இளைஞர்களுக்கு எவ்வாறு உதவுகின்றது என்பது குறித்து ஒரு சில வார்த்தைகள் எழுதவும்:

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

## பகுதி 14

இளைய இளைஞர்களின் பேச்சாற்றல் மேம்பாட்டிற்கு உதவுவதில், இறைவனின் திருமொழியே மனித உச்சரிப்புக்குச் சக்தியை உட்புகுத்தி மனித இதயம் மற்றும் அறிவு ஆகியவற்றுக்கு உண்மையான புரிந்துகொள்ளலை வழங்குகிறது என்பதை நாம் ஞாபகத்தில் கொள்ள வேண்டும். இங்கு இடைநிறுத்தம் செய்து கீழே உள்ள பகுதிகளைப் பற்றி சிந்திக்கும்படி கேட்கப்படுகிறீர்கள்.

**“பேச்சாற்றலெனும் பகல் நட்சத்திரம், தெய்வீக வெளிப்பாடெனும் ஒளியூற்றிலிருந்து பிரகாசமாக ஒளிவீசிக்கொண்டு, சுருள்ஓலைகளையும் நிருபங்களையும் ஒளியூட்டியிருப்பதானது பேச்சாற்றிலின் இராஜ்ஜியமும் அதி உயர்வான புரிதல் எனும் அரசும் களிப்புடனும் பரவசத்துடனும் அதிர்வுற்று அவரது ஒளியின் பிரகாசத்தினால் ஒளிர்ந்துகொண்டிருக்கின்றன..."[36]**

**"கூறுவீராக: எமது அரியாசனத்திலிருந்து தெய்வீகப் பேச்சாற்றல்களெனும் நதிகள் வெளிப்பட்டு, அதனால் விவேகம் மற்றும் புரிதல் எனும் துளிர்கள் உங்கள் இதயங்கள் எனும் மண்ணிலிருந்து மலரக்கூடும்."[37]**

**"உமது பேச்சாற்றல் எனும் மூச்சுகளினால் புரிதல் எனும் சுவர்க்கம் அலங்கரிக்கப்பட்டும், உமது எழுதுகோலின் வெளிப்பாடுகளால் அழுகிவரும் ஒவ்வொரு எலும்பும் உயிர்ப்பிக்கப்பட்டும் உள்ளது."[38]**

**"ஆகவே, இறைவனின் முதன்மையான கொடை 'சொல்லே' என்பது தெளிவானது மற்றும் வெளிப்படையானது, மற்றும் புரிதலெனும் சக்தியே அதன் கண்டுபிடிப்பாளரும் பெறுனருமாக இருக்கின்றது. படைப்பினம் எனும் பள்ளியில் 'இச்சொல்லே' முதன்மையான பயிற்சியாளரும் வல்லமைமிக்கவரின் வெளிப்படுத்துனருமாக இருக்கின்றது. தென்படக்கூடிய யாவும் அதன் விவேகம் எனும் ஒளியின் வாயிலாகவே காணப்படுகின்றது. வெளிப்படுத்தப்பட்டுள்ள யாவும் அதன் அறிவாற்றலின் ஒரு சான்றே ஆகும். பெயர்கள் யாவும் அதன் பெயரே ஆகும், மற்றும் அனைத்து விஷயங்களின் தொடக்கமும் முடிவும் அதனயே சார்ந்திருக்க வேண்டும்."[39]**

மேலே உள்ள மேற்கோள்களில் உங்களால் முடிந்தவரை மனப்பாடம் செய்யவிரும்பலாம்.

## பகுதி 15

மானிடம் நல்லொழுக்கச் சீர்கேட்டை எதிர்நோக்கியிருக்கும் ஒரு காலகட்டத்தில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம். பல நூற்றாண்டுகளாக மனிதர்களுக்கு வழிகாட்டிகளாக விளங்கி வந்த தரநெறிகள் சீராகத் தங்கள் செல்வாக்கை இழந்துவருகின்றன, மற்றும் கட்டுக்கடங்கா லௌகீகவாதம், தீவிரச் சார்பியல் மற்றும் கட்டுப்படுத்தப்படாதச் சுயதர்ம வாதங்களின் அடிப்படையில் அமைக்கப்பட்டுவரும் சித்தாந்தங்கள் ஆகியவை அத்தகைய வழிகாட்டிகளின் இடத்தைப் பிடித்துவருகின்றன. இளையவர்கள் மீது இவை ஏற்படுத்தக்கூடிய தாக்கங்களை கருதுவதற்கு முன்பாக இந்த நிகழ்வுகளை பற்றி மேலும் நாம் இப்போது சிந்திக்கலாம்.

கடந்த சில நூற்றாண்டுகளின் வரலாற்றில் மானுடத்தை ஒடுக்கி வைத்திருந்த பல சங்கிலிகளில் இருந்து மானுடம் படிப்படியாக விடுதலையடைந்ததை பார்க்க முடியும் - அவற்றுள் சில சங்கிலிகள், பிடிவாத கொள்கைகள், கொடுங்கோன்மை, மூடநம்பிக்கை ஆகியவையாகும். உண்மையில் இந்த சாதனைகள் போற்றப்பட வேண்டியவையாகும். ஆழமாக ஊடுரவியிருக்கும் துவேஷங்கள் எதிர்கொள்ளப்பட்டுள்ளன, நீதியை நிர்வகிக்கும் சட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன, தனிநபர்கள் மற்றும் குழுக்களின் உரிமைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இன்னும் நிறைய சாதிக்க வேண்டியிருந்தாலும், ஆழமாக வேரூன்றியிருந்த தப்பெண்ணங்கள் முறியடிக்கப்பட்டுள்ளன, நீதியை நிர்வகிப்பதற்கான சட்டங்கள் உருவாக்கப்பட்டன, தனிநபர்கள் மற்றும் குழுக்களின் உரிமைகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.துரதிஷ்டவசமாக, இந்த மதிப்புமிக்க வரலாற்று இயக்கம் இப்போது கறைபடிந்துள்ளது, பெரிதும், உச்சவரம்புகளால் தான் கரைந்தபடிந்துள்ளது. உச்சகட்ட சார்பியல்வாதம் மற்றும் கட்டுப்படுத்தமுடியாத தனிநபர்த்துவம் நடு மையத்திற்கு வந்துள்ளது, அதனால் நிறைவானவைகள் ஓரம் தள்ளப்பட்டுள்ளன. ஒருவரின் சுய விருப்பங்களை நாடுவதிலிருந்து விடுப்பட்டிருப்பதென்பது உச்சகட்ட பூரணத்துவமாக கருதப்படுகின்றது, அதன் விளைவாக சரி மற்றும் தவறு ஆகியவற்றிக்கு இடையில் இருக்கும் வேறுபாடுகள் மங்கி வருகின்றன. பல பல இடங்களில், பரவலாக வேறுபட்டிருக்கும் நெறிகளின் அடிப்படியில் இருக்கும் நடத்தை மாதிரிகள், ஒன்றென கருதப்பட்டு, பாரம்பரியமாக சமூகத்தின் உறுப்பினர்களை ஒன்றாக வைத்திருந்த பந்தங்கள் தனது வலுவை இழந்துள்ளன.

இத்தகையச் சூழ்நிலையில், இளைஞர்கள் எத்தகைய நல்லொழுக்க வழிகாட்டிகளும் இல்லாமல் நல்லவை கெட்டவை என்பனவற்றிற்கிடையில் உள்ள மாறுபாட்டைக் கண்டுகொள்ள முடியாமல் திணறுகின்றனர். இந்த சூழ்நிலையில், இளைஞர்கள் பெரும்பாலும் தார்மீக வழிகாட்டுதல் இல்லாமல் போய்விடுகிறார்கள், மேலும் உண்மையை பொய்யிலிருந்து பிரிப்பதில் சிரமத்தைக் காண்கிறார்கள்.

மனிதர்கள் அத்தகைய வேறுபாட்டை கண்டுகொள்வதற்குத் தேவைப்படும் ஆன்மீக புலன்களைக் கடவுளின் வார்த்தையை தவிர வேறெதுவுமே உருவாக்கமுடியாது. சிந்தனை மற்றும் நல்லொழுக்கப் புலன்களுக்கு இறைவனின் வார்த்தையே ஒளியூட்டுகின்றது என அப்துல்-பஹா நமக்குக் கூறுகின்றார்:

> **“...பகுத்தறிவு மற்றும் கொள்கைச்சித்தாங்களின் ஆன்மீக இராஜ்ஜியத்தில், ஒளியூட்டலுக்கான மையம் இருக்கவேண்டும், மற்றும் அம்மையம் நித்தியமாக என்றும்-பிரகாசிக்கும் இறைவனின் வார்த்தை எனும் சூரியனும் ஆகும். அதன் ஒளிக்கதிர்கள்**

**மானிடத்தின் மீது பிரகாசித்த மெய்மை எனும் ஒளிக்கதிர்களாகும், அவை சிந்தனை மற்றும் நன்னெறிகள் எனும் இராஜ்ஜியத்தை ஒளிரச்செய்து கொண்டும், அதன் வாயிலாகத் தெய்வீக உலகின் கொடைகளை மனிதன் மீது பொழியவும் செய்கின்றன.”[40]**

நல்லொழுக்கத் தேர்வுகள் செய்திட, விதிமுறைகளின் வரிசை ஒன்று இருந்தால் மட்டும் போதாது; வலுவான சமுதாய நோக்கத்தால் நிரப்பப்பட்ட இளைஞர் மனதில் ஒரு முழு நல்லொழுக்க கட்டமைப்பு உருவாக்கப்பட வேண்டும் - அத்தகைய கட்டமைப்பு ஆன்மீகக் கருத்துப்படிவங்கள், நடத்தை மாதிரிகள், பின்விளைவுகள் குறித்து அறிவு ஆகியவற்றை இணைத்து மற்றும் விடாமுயர்சி மற்றும் வீரம் ஆகிய விசைகளால் திடமாக நிலை நிறுத்தப்படும். இவ்வித நல்லொழுக்க கட்டமைப்பு தனிநபர்களின் சிந்தனையில் இயங்கக்கூடிய மொழியமைப்புடன் நெருக்கமாகப் பிணைக்கப்பட்டிருப்பதாகவே தோன்றுகிறது. இந்த மொழி, இதற்கு முன் வந்த பகுதிகளில் கூறப்பட்டது போல், இளைஞர்கள் சிதைந்து வரும் உலகில் மக்களின் நெறிமுறைகளை வடிவமைக்கும் சமுதாய, கலாச்சார மற்றும் சித்தாந்த விசைகளை அறிந்துக் கொள்ள உதவுவதற்கும் மற்றும் அவர்களை தன்மை மாற்றம் செய்வதற்குத் தேவையான ஆன்மீக ஆற்றல்களைப் புரிந்துகொள்வதற்கும் ஏதுவான செழுமையைப் பெற்றிருக்க வேண்டும்.

ஒரு மனிதர் தான் வெளிப்படுத்தும் சிந்தனைகளின் மொழியமைப்பிற்கும் அதே மனிதரின் சிந்தனைகளையும் நடத்தையையும் வழிநடத்தும் நல்லொழுக்க கட்டமைப்பிற்கும் இடையிலான நெருக்கமான தொடர்பு, மொழி மற்றும் நல்லொழுக்கநெறி இரண்டும் போதிக்கப்படக்கூடிய வகையின்பால் இன்றியமையாத தாக்கங்களைக் கொண்டுள்ளது. மொழியை போதிக்க பயன்படுத்தப்படும் உபகரணங்களின் உள்ளடக்கம் அவற்றை தயாரிப்போரின் நெறிமுறை வரம்புகளுக்கு ஏற்றவாறு வேறுபட்டிருக்கும். அஃது நல்லொழுக்க நெறி குறித்த அகக்கருத்துக்களை வழங்கலாம், நல்லொழுக்க நெறி குறித்துத் தொட்டும் தொடாமலும் இருக்கலாம் அல்லது ஆன்மீக ரீதியில் சேதமும் விளைவிக்கலாம். நல்லொழுக்க நெறிக் கல்வியின் உள்ளடக்கமும் கூட, நல்லொழுக்கநெறி என்று பரப்பப்படும் கருத்துருவிற்கு ஏற்ப மாறுபடலாம். உதாரணமாக, மொழியம்சம் மற்றும் ஆன்மீக நுண்ணறிவாற்றலை மேம்படுத்தி சமுதாய தன்மை மாற்றத்திற்கான கடமையுணர்வை ஊக்குவிக்கும் சிந்தனைகள் இன்றி நடத்தையை மேம்படுத்தும் நோக்கம் கொண்ட நல்லொழுக்க நெறிக்கான கருத்தாக்கங்களை நெறிமுறைகள், கடமைகள், விதிகள், மற்றும் பொருன்மைகளின் கோர்வைகளாக வழங்கப்பட்டுள்ள கல்விப்பாடங்களின் குவியல்களை நாம் அடையாளம் காணமுடியும். அதே போல மாணவர்களிடம் எளிமையாக அவர்களின் விருப்பங்கள் மற்றும் தேர்வுகளைப் பற்றி சிந்திக்குமாறு கேட்டுக் கொண்டு, அதனை தெளிவடைய வைப்பதன் மூலம், அவர்கள் தனிநபர்களாக தங்களைப் புரிந்துக் கொண்டு தங்களைத் தாங்களே செதுக்கிக் கொள்ளும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள நல்லொழுக்க கல்வி திட்டங்களையும் நம்மால் காண முடியும். மாணவர்களின் விருப்பங்கள் மற்றும் தேர்வுகள் பற்றி விவாதிக்கும்படி கேட்கும் நல்லொழுக்கக் கல்வித் திட்டங்களையும் ஒருவர் காணமுடியும், இவற்றைத் தெளிவுபடுத்துவதன் மூலம், அவர்கள் தாங்கள் யார் என்பதைக் கண்டறிந்து, தங்களின் திறனை உணருவார்கள்.

இளைய இளைஞர்களின் ஆன்மீக சக்தியளிப்பிற்கு அர்ப்பணிக்கப்படும் திட்டமானது, நிச்சயமாக, உயர்ந்த நல்லொழுக்க தரநெறியிலிருந்து தள்ளி நிற்க கூடாது, அதே போல அத்தகைய தரநெறி தனிநபரிடமிருந்து பெரும் கோரிக்கைகளை வைக்கும் என்பதை புறக்கணிக்கவும் செய்யாது. அதே நேரத்தில், நாம் முன்னதாக குறித்தது போல, அத்தகைய திட்டம், சிந்தனைகள் மீது போதுமான

கலந்துரையாடல்கள் மற்றும் படிப்படியான தெளிவிற்கு அனுமதிக்க வேண்டும். எனினும், அது மேலும் முன்னோக்கி செல்ல வேண்டும். அதே சமயம், நாம் முன்பு குறிப்பிட்டது போல, ஆன்மீகக் கருத்துகளைப் பற்றிய போதுமான விவாதத்திற்கு இத்தகைய திட்டம் அனுமதிக்கப்பட வேண்டும். இருப்பினும், இது மேலும் முன்னோக்கிச் செல்ல வேண்டும். குறிப்பாக, நல்லொழுக்க கட்டமைப்பை உருவாக்குவதில் மொழியின் பங்கு குறித்து கண்டிப்பாக கவனம் செலுத்த வேண்டும், இதனைப். பற்றி நாம் அடுத்த இரண்டு பகுதிகளில் சிந்திக்கவுள்ளோம்.

## பகுதி 16

ஆன்மீக சக்தியளிப்பிற்குத் தொடர்புடைய கல்வியளிப்பு திட்டத்தில் உபயோகப்படுத்தப்படும் உபகரணத்தில் பயன்படுத்தப்படும் மொழி திறந்த அமைப்பிற்கும் ஆய்விற்கும் உட்பட்டதாகவும் இருக்கவேண்டும், அதே வேளையில் கடந்த பல பத்தாண்டுகளாக நல்லொழுக்க கல்வியைப் பீடித்து வரும் சார்பியல் வாதத்தை அது தவிர்க்கவும் வேண்டும்.

*நேரான பாதையில் நடப்பது* என்ற நூல் இளைய இளைஞர் திட்டத்தின் பகுதியாக இருக்கும் பஹாய்-உத்வேகம் பெற்ரா பாடநூலின் மற்றொரு நூலாகும். அது இருபது கதைகளைக் கொண்டது, ஒவ்வொன்றும் ஒரு நன்னெறி கருத்துருவுடன் தொடர்புடையது. பல கலாச்சாரங்களில், ஒரு தலைமுறையிலிருந்து அடுத்தத் தலைமுறைக்கு விவேகத்தை எடுத்துச் செல்லும் ஒரு வழியாகக் கதைகள் பயன்பட்டு வந்துள்ளன. இப்பாடநூலில், நன்கு அறிமுகமான சில கதைகள் அவை வழிவழியாக தாங்கி வந்துள்ள தெளிவற்ற கருத்துக்கள் அகற்றப்பட்டு வேறு மாதிரி எழுதப்பட்டுள்ளன. ஒவ்வொரு பாடமும் நன்னெறி கட்டமைப்பின் வலுவான மேம்பாட்டிற்கு இன்றியமையாத மொழித்திறன்களையும் ஆற்றல்களையும் மேம்படுத்தும் பயிற்சிகளைக் கொண்டுள்ளது. கீழ்க்காணப்படும் பாடம் உங்களுக்கு மிகவும் பரிட்சயமான பழங்கதை ஒன்றுடன் தொடங்குகிறது. தெளிவான நன்னெறி செய்தியைத் தாங்கிக் கொண்டு சிந்தனாமுறை மற்றும் நடத்தையை பராமரிக்கக்கூடிய வகையில் மறு மாதிரி எழுதப்பட்டுள்ளது. அதைப் படித்த பின் அது தாங்கிவரும் செய்தியானது தவறான கலாச்சார வழக்கங்களை ஏற்கும் தன்மையிலிருந்து எவ்வாறு விடுபட்டுள்ளது என்பதைக் கலந்தாலோசியுங்கள்.

> *விவேகமானவர்கள் புகழ்ச்சிகளால் மதிமயங்குவதில்லை. எனினும், பாராட்டல்களால் ஒவ்வொருவரும் உற்சாகமே பெறுகின்றனர். ஆனால், பாராட்டல்களுக்காக ஏங்குவது நமது மதிப்பிடும் ஆற்றலை குன்றச் செய்கின்றது என்பதை நாம் நினைவில் கொள்வோமாக.*
>
> ஒரு முறை காக்கை ஒன்று தன் வாயில் ஒரு வடையை கவ்விக்கொண்டு செல்வதை ஒரு நரி கண்டது. “அந்த வடையை நான் அடைய வேண்டும்,” என அந்த நரி தனக்குள் சொல்லிக்கொண்டு அந்த காக்கை பறந்து சென்று ஒரு மரத்தின் கிளையில் உட்காரும் வரை அதனைத் தொடர்ந்து சென்றது.

“வணக்கம், அன்பு நண்பரே,” என நரி தனது சிறப்பான நடத்தையை வெளிப்படுத்தியது. “இன்று நீர் மிகவும் அழகாக இருக்கின்றீர். உமது இறகுகள் பளபளப்பாகவும், உமது கண்கள் இரத்தினங்களைப்போல் ஒளிவீசுகின்றன. நிச்சயமாக உமது குரலும் அதுபோன்றே இருக்கும் என நான் நம்புகிறேன். அடடா! நீர் பாடுவதை மட்டும் நான் ஒரு முறை கேட்க நேர்ந்தால் எப்படியிருக்கும்,” என நரி கூறியது.

புகழ்ச்சிக்காக ஏங்கும் அந்த காக்கையின் தாகத்தை இந்த வார்த்தைகள் குளிர்ந்த நீரைப்போல் தனியச் செய்தன. பிறகு அந்த காக்கை தன் தலையை பெருமையோடு உயர்த்தி கவர்ச்சியான தன் நண்பனுக்காக ஒரு பாடல் பாட ஆரம்பித்தது.

நினைத்தது போல், காக்கை தன் அலகை திறந்தவுடன், அந்த வடை கீழே விழுந்தது. வடை கீழே விழும் முன் நரி அதைக் கவ்விக்கொண்டு ஓடியது. காக்கையின் கட்டைக் குரல் காற்றில் தன்னந்தனியே ஒலித்துக்கொண்டிருந்தது.

**புரிந்துகொள்ளல்**

பின்வரும் கேள்விகளுக்கு முழு வாக்கியங்களாக பதில் எழுதவும்

1. நரி எதைக் கண்டது? ____________________________________________________________
   ____________________________________________________________________________
2. காக்கை தன் அலகில் எதைக் கவ்விக் கொண்டிருந்தது? __________________________
   ____________________________________________________________________________
3. வடையை அடைய நரி என்ன செய்தது? ________________________________________
   ____________________________________________________________________________
4. காக்கைக்கு உண்மையில் இனிய குரல் இருந்ததா? ______________________________
   ____________________________________________________________________________
5. காக்கையை நரி உள்ளப்பூர்வமாக புகழ்ந்ததா? __________________________________
   ____________________________________________________________________________
6. இக்கதை நடந்தது நகரத்திலா, கிராமத்திலா அல்லது காட்டிலா? ___________________
   ____________________________________________________________________________

**சொற்களஞ்சியம்**

கீழ்க்காணும் வார்த்தைகளில் ஒன்றை பயன்படுத்தி பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றையும் பூர்த்தி செய்யவும்.

புகழ்ந்து, ஆனந்தமாக, ஆவலும், ஊக்குவித்தார்,
விவேகமாக, திருப்தியடையாத, செருக்கு, நிழல்,
வசீகரிக்கும், நலிவுற்றிருந்தாலும்

1. தனது மாணவர்கள் ஆர்வம் மிகுந்தவர்கள் என அந்த ஆசிரியர் கருதுவதால், அவர்களை அவர் எப்போதும் _____________ கொண்டிருப்பார்

2. அர்மான்டோவும் அவன் சகோதரர்களும் ஒன்றாக வயலில் வேலை செய்தபடி தங்களின் வருங்கால திட்டங்கள் குறித்து ஒரு நாள் முழுவதையும் _____________ பேசி கழித்தனர்.

3. ஹொங் மேய் பிரயானம் செய்வதில் மிகுந்த விருப்பமும், புதிய இடங்களைக் காண்பதில் பெரிதும் _____________ கொண்டவர்.

4. அவளது குரல் மிகவும் இனிமையானது ஆகவே அவளது ஆசிரியர் அவளை சங்கீதம் பயிலுமாறு _____________.

5. அந்த விவசாயி மிகவும் _____________ மழைக்காலம் ஆரம்பித்தவுடனேயே விதைகளை விதைத்தார் .

6. பரிட்சையில் தான் பெற்ற மதிப்பெண்களால் _____________ சந்துரு மேலும் தீவிரமாக படித்திட முடிவெடுத்தான்.

7. சற்று _____________ அதிகம் கொண்ட ஜொங் ஜியாங் கஷ்ட சூழ்நிலையிலும் தனக்கு உதவிட யாரையும் அனுமதிக்கவில்லை.

8. அந்திப் பொழுதில் மரத்தின் நீண்ட _____________ தோட்டத்தின் மீது விழுந்தது.

9. அது மனதை பெரிதும் _____________ கதையாகையால், குழந்தைகள் அதை மீண்டும் மீண்டும் செவிமடுக்க ஆவலுற்றனர்.
10. அவன் நோயால் பெரிதும் உடல் _____________, விரைவில் உடல் நலம் பழைய நிலையை விரைவில் அடைந்துவிடும் எனும் நம்பிக்கையில் மீண்டும் வேலை செய்ய ஆரம்பித்தான்.

**கலந்துரையாடல்**

புகழ்ச்சிக்கு மயங்கிப்போகாமல் இருப்பதை நாம் எவ்வாறு உறுதி செய்திட இயலும்?

**மனனம்**

**"வஞ்சகம் மற்றும் சூது ஆகியவற்றின் வலையில் சிக்கிவிடாமல் இருந்திட, உங்களை முழு எச்சரிக்கையுடன் பாதுகாத்துக் கொள்ளுங்கள்."**

பின்வரும் கேள்விகளை உங்கள் குழுவில் கலந்தாலோசியுங்கள்:

1. ஒருவர் கவனமாக இல்லையெனில், மறைமுகமாக நரியின் வெளிப்படையாகத் தெரியும் அறிவுக்கூர்மையை போற்றும் வகையில் இக்கதை கூறப்படலாம் - அவ்வாறு கூறப்பட்டும் உள்ளது. அத்தகைய ஒரு தோற்றத்தை மேலுள்ள இக்கதையின் பதிப்பு எவ்வாறு தவிர்க்கின்றது?

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

2. கதையின் முக்கிய நன்னெறி செய்தி யாது? ______________________________________

______________________________________________________________________________

3. இந்த செய்தியுடன் சம்பந்தப்பட்ட பிற கருத்தாக்கங்கள் யாவை? ___________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

4. நன்னெறி கருத்தாக்கங்களை புரிந்துகொள்வதில் இளைய இளைஞர்களுக்கு இத்தகைய பழங்கதை எந்தளவு பயன்மிக்க கருவியாக இருக்கின்றது? ___________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

5. இளைய இளைஞர்களுள் பயிற்சி குறிப்புகள் என்ன ஆற்றல்களை மேம்படுத்துகின்றன?

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

6. ஒரு வெற்றிடத்தில் அல்லாது, ஆனால் கதையில் சொல்லப்படும் நல்லொழுக்கச் செய்தியின் சூழ்நிலைப் பொருத்தத்தில் நடத்தப்படும் விவாதமானது எவ்வாறு சிந்தனை மற்றும் பிரதிபலிப்பு ஆற்றலின் வளர்ச்சிக்கு பங்களிக்கிறது? அது எவ்வாறு வெளிப்பாட்டின் ஆற்றலை மேம்படுத்துகிறது? ____________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

7. பாடத்தின் இறுதியில் வரும் மனனப் பகுதி இந்த சக்திகளை வலுப்படுத்த எவ்வாறு உதவுகிறது?

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

## பகுதி 17

இளைய இளைஞர்கள் தாங்கள் எடுக்கக்கூடிய முடிவுகளுக்கு அடிப்படையாக விளங்கும் நன்னெறிசார்ந்த கோட்பாடுகளைக் கண்டுகொள்ள உதவிட, அவர்களுக்கு வழங்கப்படும் சூழ்நிலைகள் அவர்களின் மெய்நிலைக்கு பொருத்தமானவைகளாக இருக்க வேண்டும். அதற்காக, மெய்நிலைக்கு பொருத்தமாக இருக்க வேண்டும் எனும் பெயரில், மனிதர்களின் கீழான இயல்புகளின் வெளிப்பாடுகளுக்குத் தேவையற்ற கவனத்தைச் செலுத்த வேண்டும் என்பது பொருளல்ல. ஆய்வு செய்யப்படும் சூழ்நிலைகள், இளைய இளைஞர்கள் தொடர்புபடுத்தி கொள்ளும் விதத்தில் இருக்கும் அதே வேளையில், இன்றைய சீரழியும் சமுதாயத்தின் பரவலான விஷயங்களை அது பிரதிநிதிக்க வேண்டும் என்று அவசியமில்லை, மாறாக, மேலும் உயர்ந்த நிலைகளிலான சீர்சிறப்பை பெறுவதற்கு அவர்கள் ஊக்குவிக்கக்கூடியதுமான ஒரு சிந்தனா மற்றும் நடத்தை தரநெறி உருவாக்கப்பட வேண்டும். அப்படிச் செய்திட, அவர்களின் ஆன்மீக சக்தியளிப்பிற்கான திட்டத்திற்காக பயன்படுத்தப்படும் உபகரணங்கள், ஒரு புறம் தந்தை போன்ற மனப்பான்மை மற்றும் சிறுபிள்ளைத்தனமான பிதற்றல்கள் ஆகியவை தவிர்த்து, மறுபுறம் நன்னடத்தைக் குறித்த விளக்கப்பேருரை மொழிகள் ஆகியவை தவிர்க்கப்பட வேண்டும். *சீர்சிறப்பை பற்றிக் கற்பது* எனும் பஹாய்-உத்வேகம் பெற்ற மற்றொரு நூலிலிருந்து எடுக்கப்பட்ட பின்வரும் பாடத்தைக் கருதவும். அப்பாடத்தில் திருமதி சென் தூய்மை குறித்தக் கருத்துப்படிவத்தைத் தமது பேரப்பிள்ளைகளுக்கு விவரித்து, சில பயிற்சி குறிப்புகளின் உதவியோடு அதன் தனிச்சிறப்பு குறித்து மேலும் ஆழமான தெரிவை அடைந்திட அவர்களுக்கு உதவுகின்றார்:

> திருமதி சென் சீர்சிறப்பிற்கான இரண்டாவது நிபந்தனை கற்பு நெறி மற்றும் புனித வாழ்வு எனக் குறிப்பிட்டு, அது தன்னடக்கம், கட்டுப்பாடு, தூய்மை, பதமான நிலை, பண்பு நயம் மற்றும் மன சுத்தம் ஆகியவற்றை வலியுறுத்துவதாக அவர் கூறினார். கற்புநெறி வாழ்வு நிர்மாணிக்கப்பட்டிருக்கும் அஸ்திவாரமான தூய்மையைக் குறித்து அவர் வருணிக்க முற்பட்டார்:
>
> “கண்ணாடியை கற்பனைச் செய்து பாருங்கள். எல்லாத் தூசியையும் நன்றாகத் துடைத்து அதனைச் சுத்தம் செய்தால், அது ஒளியை நன்கு பிரதிபலிக்கும். இது போன்று, இதயமானது பொறாமை, வெறுப்பு, தற்பெருமை ஆகியவற்றிலிருந்து சுத்தப்படுத்தப்பட்டால் அது தூய்மையடைந்து தெய்வீக ஒளியைப் பிரதிபலிக்கும். உன்னத மனிதன் தன் குழந்தை போன்ற இதயத்தை இழக்கமாட்டார் என்று மென்சியஸ் கூறியுள்ளார். உண்மையிலேயே இது சரியென்றாலும், குழந்தையின் மனம்

தூய்மையாய் இருப்பது அப்பாவித் தனத்தினாலும் பலவீனத்தினாலும் ஏற்பட்டது என்பதையும் மற்றும் குழந்தையின் தூய்மை இன்னும் சோதிக்கப்படவில்லை என்பதையும் நீங்கள் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். இப்பொழுது நீங்கள் குழந்தையாக கருத முடியாத ஒரு பருவத்தில் இருக்கிறீர்கள். வளர, வளர நீங்கள் விவேகமுடையவர்களாகவும் வலிமையுடையவர்களாகவும் ஆவீர்கள். ஆனாலும், நீங்கள் எச்சரிக்கையாய் இருந்து இதயத்தின் தூய்மையை இழக்காமலிருக்க அதிகச் சிரத்தை எடுத்துக் கொள்ள வேண்டும். உலகின் அசுத்தங்கள் உங்கள் இதயம் எனும் கண்ணாடியைக் கறைப்படுத்திட நீங்கள் அனுமதிக்கக் கூடாது. இதனை நீ பகுத்தறிவு மற்றும் நம்பிக்கை மூலம் சாதிக்க வேண்டும். முயற்சி மற்றும் விருப்பத்துணிவாற்றலை செயல்படுத்துவது மூலமே நீங்கள் தூய்மையாக இருந்திட வேண்டும்."

திருமதி சென் தூய்மை எனும் சொல் பொதுவாக தவறாகப் புரிந்துக்கொள்ளப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டதோடு அவர் இளைஞர்களைக் கீழ்க்காணும் பட்டியலில் தூய்மையைக் குறிக்கும் பண்புகளையும் அதனுடன் தவறாகச் சம்பந்தப்பட்டவற்றையும் அடையாளம் காணுமாறு கேட்டுக் கொண்டார்.

- அசலாக இருத்தல்
- நேர்மையாய் இருத்தல்
- வெகுளியாக இருத்தல்
- போலி வேடத்திலிருந்து விடுபட்டிருத்தல்
- பரிசுத்த மனம் கொண்டிருத்தல்
- பரிசுத்த உடலைக் கொண்டிருத்தல்
- முட்டாள் தனமாய் இருத்தல்
- தற்புகழ்ச்சியிலிருந்து விடுபட்டிருத்தல்
- வெறியுணர்வு கொண்டிருத்தல்
- எளிய மனம் கொண்டவராய் இருத்தல்
- வஞ்சகத்திலிருந்து விடுபட்டிருத்தல்
- தன்னலமில்லாமல் இருத்தல்
- பலவீனமாய் இருத்தல்
- உணர்ச்சிவசப்படுபவராய் இருத்தல்
- அறிவு நுட்பம் மிக்கவராய் இருத்தல்
- இரக்கமுள்ளவராக இருத்தல்
- பாசாங்குச் செய்யாதவராய் இருத்தல்

கீழ்க்கண்ட மேற்கோள்களைக் இளைஞர்கள் மனனம் செய்த பிறகு பின்வரும் கேள்விகள் குறித்து அவர்களின் தாத்தா பாட்டியிடம் கலந்து பேசினர்.

**“எனது முதல் அறிவுரை இதுவே: தூய்மையும் அன்பும் பிரகாசமும் நிறைந்த உள்ளத்தினைக் கொண்டிருப்பாயாக. அதனால் தொன்மையும் அழியாத் தன்மையும் வாய்ந்த என்றும் நிலையான இராஜ்ஜியம் உனக்கே உரித்தாகுமாக.”**

**“மனித இனத்தின் வாழ்வு முறையில் முதன்மையாக இருக்க வேண்டியது தூய்மை, பிறகு புத்துணர்ச்சி, சுத்தம் மற்றும் சுதந்திரமான உயிராற்றல். முதலில் ஆற்றின் படுக்கை சுத்தப்படுத்தப்பட வேண்டும். பிறகு இனிய ஆற்று நீர் அதனில் வழிந்தோடக் கூடும்.”**

1. போலி வேடதாரி என்பவர், தான் நேர்மையற்றவராக இருந்த போதும் நெறித் தவறாதவன் போல் பாசாங்கு செய்பவன். எது மிகவும் மோசமானது, பல பலவீனங்களைக் கொண்டிருப்பதா, போலி வேடதாரியாக இருப்பதா?
2. நமது எண்ணங்கள், எந்த சில அசுத்தங்களில் இருந்து சுத்தம் செய்யப்பட வேண்டும்?
3. யார் உலகில் உண்மையிலேயே நிறைய சாதிக்கிறார்கள், தூய இதயம் கொண்டவரா அல்லது கபடமானவரா?

பின்வரும் கேள்விகளை உங்கள் குழுவில் கலந்தாய்வு செய்யவும்:

1. தூய்மை என்ற கருத்தாக்கத்தை பற்றி பொதுவாக இருக்கும் தவறான புரிந்துணர்வு களைய இப்பாடம் எவ்வாறு உதவுகிறது? ____________________________________________
______________________________________________________________
______________________________________________________________
______________________________________________________________

2. திருமதி சென்னால் பயன்படுத்தப்பட்ட மொழியின் சில குணவியல்புகள் என்ன? __________
______________________________________________________________
______________________________________________________________
______________________________________________________________
______________________________________________________________

3. இளைய இளைஞர்கள் ஆன்மீக சீர்சிறப்பை அடைய முயல்வதற்கு இந்த பாடம் உதவுகின்றதா?
______________________________________________________________
______________________________________________________________
______________________________________________________________
______________________________________________________________
______________________________________________________________

## பகுதி 18

கடந்த இரண்டு பகுதிகளில், குறுகியதாக இருந்தாலும், நன்னெறி கட்டமைப்பின் உருவாக்கத்தில் மொழியின் பங்கு குறித்து நாம் கருதினோம். இரண்டு பாடங்களை நாம் ஆய்வு செய்தோம், ஒன்று *நேரான பாதையில் நடத்தல்* என்ற நூலில் இருந்து மற்றொன்று *சீர்சிறப்பை பற்றி கற்றுக் கொள்வது* என்ற நூலில் இருந்து, அது எவ்வாறு குறிப்பிட்ட கருத்துருக்கள் மற்றும் கருத்தாக்கங்களை கலந்துரையாடுவதும், மொழித் திறன்கள் மற்றும் ஆற்றல்களை அதிகரிக்க வடிவமைக்கப்பட்டிருக்கும் பயிற்சிக் குறிப்புகளை மேற்கொள்வதும், ஆழமான நன்னெறி தேர்வுகளுக்கு சாதகமான நடத்தை மாதிரிகளை வலுப்படுத்தும் என்பதை காண உதவியது. இவ்வழியில் மொழி புலமையை அதிகரிப்பது எவ்வளவு முக்கியமானதாக இருந்தாலும், ஒரு தனி நபரின் தார்மீக கட்டமைப்பு பல இடைத்தொடருடைய காரணிகளை சார்ந்துள்ளது என்பதை நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். குறிப்பாக, இங்கு கலந்துரையாடப்படும் சிந்தனா மாதிரிகள் அறிவியல் சிந்தனைகளிடம் இருந்து பிரித்துப் பார்ப்பது கடினம். மெய்நிலை ஆராய்வை அறிவியல் முறையில் அணுக இளையவர்கள் தயார்படுத்தப்பட வேண்டும். அதனால், அவர்கள் படிக்கவிருக்கும் பல பாடநூல்கள், கணிதம் மற்றும் அறிவியல் துறைகளை பற்றியதாக இருக்கும் - அதனை பாடங்களாக படிக்கும் முயற்சியல்ல ஆனால் அவை வளர்க்கும் பகுத்தறிவை வலுப்படுத்துவதற்காகவே. இந்த நூலில் இருந்து பிரியும் கிளை பயிற்சிகள், பல வருடங்களை கொண்ட நீடிக்கப்பட்ட காலகட்டத்திற்கு இளைய இளைஞர்களுடன் பணிபுரிய அர்ப்பணித்துக் கொள்ள விரும்பமுடையவர்களுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது, அந்த கிளை பயிற்சியில் இந்த பாடநூல்களை பற்றி சற்று நீளமாக ஆராய்வோம். இப்போதைக்கு, இளைய இளைஞர்கள் ஈடுபடவுள்ள கல்வியளிப்பு செயல்முறையின் இந்த அம்சத்தை பற்றி விழிப்போடு இருப்பது போதுமானதாக இருக்கும்.

## பகுதி 19

ஆன்மீக புலனறிவை மேம்படுத்திக்கொள்வது, வெளிப்படுத்தும் ஆற்றலை அதிகரித்துக்கொள்வது, உறுதியான நன்னெறிக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்கிக்கொள்வது ஆகிய அனைத்தும் ஆன்மீக சக்தியளிப்பு எனும் செயற்பாட்டுக்கு அவசியமானவை. துரதிருஷ்டவசமாகப், பெரும்பாலான மக்களின் மனங்களில் சக்தியை பெற்றிருப்பதென்பது மனிதர்களின் ஆன்மீக இயல்பிற்கு மாறுபடுகின்ற கோட்பாடுகளோடு தொடர்பு படுத்தப்படுகின்றது. இந்த கருத்தாக்கத்தை அறிமுகப்படுத்தும் போது, கட்டுப்படுத்துதல், சூழியுடன் கையாளுதல், ஆக்கிரமிப்பு, அதிகாரம், ஆதிக்கம் மற்றும் அடிமைப்படுத்துதல் ஆகிய காட்சிகள் மனதில் தோன்றுகின்றன. எனினும், உங்களுடைய இலக்கு, இளைய இளைஞர்கள் வேறு விதமான சக்தியைப் பெறுவதற்கு உதவுவதாகும். அன்பு, நீதி, அறிவு, புரிதல், புலனறிவு, சேவை, மற்றும் எல்லாவற்றிக்கும் மேலான பணிவு ஆகியவற்றிலிருந்து தான் நன்னெறி சக்திகள் ஊற்றெடுக்கின்றன. உண்மையில், நாம் இங்கு கருதிக்கொண்டிருக்கும் சக்தியளிப்பு செயல்முறைக்கு பணிவென்பது ஒரு அவசியமான நிபந்தனையாகும், ஏனெனில் விண்ணிலிருந்து வரும் உதவியின் மூலம் மட்டுமே கொசு பருந்தாகவும், சிறு துளி நீர் ஆறுகளாகவும் கடல்களாகவும், அனு

தீபங்களாகவும் சூரியன்களாகவும் மாற்றக்கூடும். சில பண்புகளையும் குணங்களையும் நமக்கு வழங்குமாறு இறைவனை இறைஞ்சும் பஹாவுல்லா மற்றும் அப்துல் பஹாவின் பிரார்த்தனைகள் சிலவற்றின் பகுதிகளை பிரதிபலித்திடும் போது, ஆன்மீக மற்றும் நன்னெறி சக்தியளிப்பு குறித்துச் சில குறிப்பிட்ட உட்பார்வைகளை நாம் பெறலாம்.

**“நான் உம்மைப் பிரார்த்திக்கின்றேன், நாமங்களுக்கெல்லாம் பிரபுவாகவும் இவ்வுலகம் விண்ணுலகம் ஆகிய இரண்டிற்கும் ஆட்சியாளராகவும் இருப்பவரே, உமது நாட்களில் உமது அன்பிற்கு உகந்தவர் ஒவ்வொருவரும் உமது கருணைக்குக் கோப்பைகளாகி, அதனால் அவர்கள் உமது சேவகர்களின் இதயங்களை உயிர்ப்பிக்கக் கூடும். மேலும், உமது மேகங்களெனும் அருளிலிருந்து பொழியும் மழையாகவும், உமது அன்புக் கருணையெனும் சுகந்தங்களைச் சுமந்து வரும் காற்று போன்றும் இருப்பதற்கு அவர்களுக்கு சக்தியளிப்பீராக, அதனால் அவர்களின் வாயிலாக உமது படைப்புக்களின் இதயங்களெனும் நிலம் பசுமையினால் போர்த்தப்பட்டும், உமது ஆட்சி முழுவதும் அவற்றின் சுகந்தங்களைப் பொழியக்கூடியவற்றை வெளிக்கொணரவும், அதனால் ஒவ்வொருவரும் உமது வெளிப்பாடெனும் மேலாடையின் இனிய மணத்தை உணரட்டும்.”[41]**

**“என் இறைவா, உமது அடையாளச் சின்னங்களை உமது படைப்பினங்களின் மத்தியில் பரப்பிடவும், உமது சாம்ராஜ்ஜியத்தில் உமது சமயத்தை பாதுகாக்கவும், எங்களுக்கு சக்தியளிப்பீராக.”[42]**

**“உமது வதனத்தின் மீது தங்கள் கண்களைப் பதித்தும், உமது சட்டங்களையும் விதிகளையும் உங்கள் ஒருவருக்காக மட்டுமே பற்றிக்கொண்டுள்ளவர்களுள் நானும் ஒருவனாக இருந்திட எனக்கு சக்தியளிப்பீராக.”[43]**

**“நாங்கள் எங்களைக் கைவிட்டு அதி மேன்மையான, அதி உயர்ந்தவரான உமது தன்னகத்தின் வெளிப்பாட்டாளராக விளங்கும் அவரை நிலைத்தன்மையுடன் இறுகப்பற்றிக்கொள்ள எங்களுக்கு சக்தியளிப்பீராக.”[44]**

**“உமது நாமங்களின் ஒளியூற்றானவரும் உமது குணப்பண்புகளின் உதயபீடமாகவும் விளங்கும் அவர் வாயிலாக, உமக்கு சேவகம் செய்திடவும், உமது பண்பு நெறிகளைப் போற்றிடவும் எனக்கு ஆற்றலளிப்பனவற்றை எனக்கு விதித்திடுமாறு, உம்மை மன்றாடிக் கேட்டுகொள்கின்றேன்.”[45]**

**“உமது நல்விருப்பத்தினை அடைந்திடப் பணிப்பெண்களுள் நானும் ஒருத்தியாக ஆகிட எனக்கு ஆற்றலளிப்பீராக.”[46]**

**“இக்குழந்தைகளைப் பாதுகாப்பீராக, அவர்கள் கல்வியூட்டப்பட அருள்கூர்ந்து உதவுவீராக, மானிட உலகிற்கு அவர்கள் சேவை செய்திட அவர்களுக்கு ஆற்றலளிப்பீராக.”[47]**

**“எனது அன்பரே, உமது சமயத்தில் பற்றுறுதியுடன் இருக்க ஆற்றலளிப்பவற்றை என் மீது பொழியச் செய்வீராக, அதனால் நம்பிக்கையற்றோரின் சந்தேகங்கள், நான் உமது பக்கமாக திரும்பிடுவதிலிருந்து என்னைத் தடுத்துவிடாதிருக்கும்.”[48]**

**“உமது முன்னிலையில் மெய்மையெனும் ஆசனம் ஒன்றை அடைந்திட எனக்கருள்வீராக, உமது தயவின் அடையாளம் ஒன்றை எனக்கு வழங்கி, பயமோ சோகமோ கொள்ளாதவர்களான உமது சேவகர்களோடு இணைந்திட என்னை அனுமதிப்பீராக.”[49]**

**“என் இறைவா, வார்த்தையைப் பிரகடனப்படுத்திடவும், பயனற்றவற்றையும் தவறானவற்றையும் மறுத்துக்கூறவும், உண்மையை நிலைப்படுத்தவும், புனித செய்யுட்களைப் பாரெங்கும் பரப்பிடவும், ஒளிக்கதிர்களை வெளிப்படுத்திடவும், நேர்மையாளர்களின் உள்ளங்களில் வைகறையின் ஒளிக்கதிர்கள் உதயமாகிடவும் உமது சேவகனுக்கு உதவிடுவீராக.”[50]**

**“உமது வார்த்தையை மேன்மைப்படுத்திடவும் உமது சமயத்தைப் பரப்பிடவும், உமது மக்களிடையே அவர்கள் தனிச்சிறப்புறவும் உதவிடுவீராக. என் இறைவா, உமது நோக்கத்தையும் நல்விருப்பத்தையும் செயல்படுத்திட அவர்களுக்கு உதவியளிப்பீராக.”[51]**

## பகுதி 20

கடந்த பல பகுதிகளில் நாம் மேற்கொண்ட கலந்துரையாடல்களான - மெய்நிலையை புரிந்துக் கொள்வதற்கு மிகவும் முக்கியமான, ஆன்மீகப் புலனுணர்வின் இயல்பு பற்றிய நமது ஆய்வு; உயர்ந்த லட்சியங்களை அடைவதற்கு அவசியமான, வெளிப்படுத்தும் சக்திகளை பற்றிய நமது ஆராய்வு; தேர்வுகளை எடுக்கத் தேவையான, மொழி மற்றும் நன்னெறி கட்டமைப்பு ஆகியவற்றிற்கு இடையே இருக்கும் உறவுமுறை பற்றிய நமது ஆய்வு; நன்னெறி சக்தியளிப்பு செயல்முறை மீதான நமது பிரதிபலிப்புகள் - ஆகியவை மனதில் இருக்கும் இவ்வேளையில், இப்போது இளைய இளைஞர்கள் படிக்கவிருக்கும் நூல்களில் இருந்து இரண்டு நூல்களின் சில விவரங்களை நாம் கருதலாம். அடுத்த பகுதியிலும் அதற்கு அடுத்த பகுதியிலும் நாம் *உறுதிப்பாட்டின் தென்றல்கள்* நூலைக் காணப் போகிறோம், பகுதிகள் 22 மற்றும் 23ல் *நம்பிக்கையின் உள்ளாற்றல்* நூலையும் நாம் ஆராயப் போகிறோம். இரண்டுமே ஆன்மீக சக்தியளிப்பு திட்டத்தில் குழுக்கள் படிக்கவிருக்கும் நூல்களில் முதல் சில நூல்கள் ஆகும். ஆன்மீக சக்தியளிக்கும் திட்டத்தின் முதல் ஆண்டில் குழுக்களால் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நூல்களில் இரண்டும் பொதுவாக உள்ளன.

பஹாய் அகத்தூண்டல் பெற்ற நூலான *உறுதிப்பாட்டின் தென்றல்கள்* என்ற நூல், 13 வயதை அடைந்துவிட்ட முசோன்டா மற்றும் பள்ளி விடுமுறையை முசோன்டாவின் குடும்பத்தினரோடு கழிக்க வந்துள்ள அவளது உறவினரான ரோஸ் என்பவளின் கதையாகும். முசோன்டாவின் அண்ணன் கோட்வின், அவனுடைய நண்பனான சிஷிம்பா ஆகியோருடன் சேர்ந்து அவ்விரு பெண்களும் தங்கள் எதிர்காலம் குறித்து சிந்தித்தும் தங்கள் எதிர்பார்ப்புகள் மற்றும் வாய்ப்புகள் குறித்தும் ஆலோசிக்கின்றனர். இந்த நூல் குறித்து பல யோசனைகளை உங்கள் குழு ஆலோசிக்க வேண்டியுள்ளது. ஆனால், அவற்றை ஆலோசிப்பதற்கு முன்பாக இந்த நூலை நீங்கள் ஒரு முறை

வாசித்து, பின் கவனமாக மறுமுறை வாசித்த பிறகு கொடுக்கப்பட்டுள்ள பயிற்சி குறிப்புகளை செய்து முடிக்க வேண்டும். அவ்வாறு செய்த பிறகு, பின்வரும் மீளாய்வை நீங்கள் தொடரலாம். இந்நூல் 13 வயதை அடைந்துவிட்ட முசோன்டா மற்றும் முசோன்டாவின் குடும்பத்தினரோடு பள்ளி விடுமுறையை கழிக்க வந்துள்ள அவளது உறவினரான ரோஸ் என்பவளின் கதையாகும். முசோன்டாவின் அண்ணன் கோட்வின், அவனுடைய நண்பனான சிஷிம்பா ஆகியோருடன் சேர்ந்து அவ்விரு பெண்களும் தங்கள் எதிர்காலம் குறித்து சிந்தித்தும் தங்கள் எதிர்பார்ப்புகள் மற்றும் வாய்ப்புகள் குறித்தும் ஆலோசிக்கின்றனர். இந்த நூல் குறித்து பல கருத்துக்களை உங்கள் குழு ஆலோசிக்க வேண்டியுள்ளது. ஆனால், அவற்றை ஆலோசிப்பதற்கு முன்பாக இந்த நூலை நீங்கள் ஒரு முறை வாசித்தும், பின் கவனமாக மறுமுறை வாசித்தும், பிறகு கொடுக்கப்பட்டுள்ள பயிற்சிகளை செய்துமுடிக்க வேண்டும். நூலுடன் நீங்கள் ஒரு நல்ல பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டுள்ளீர்கள் எனத் தோன்றியவுடன், பின்வருவனவற்றை கருத்தில் கொள்ளவும்.

நீங்கள் சந்தேகமில்லாமல் ஏற்கனவே கவனித்துள்ளது போல், நூலின் வாசிப்புக்களினூடே இழையோடும் அகக்கருத்து “உறுதிப்பாடு” என்பதாகும். கதையின் முக்கிய கதாபாத்திரங்களுக்கிடையிலான கலந்தாலோசனையின் வாயிலாக அல்லது தெய்வீக உறுதிப்பாடு செயல்படும் நிகழ்ச்சிகளின் வாயிலாக இந்த அகக்கருத்தை எடுத்துக்காட்டும் பகுதிகள் கீழே உள்ளன. ஒவ்வொரு பகுதியும் நூலின் பாட வரிசையைப் பின்பற்றி அதில் வரும் பாடங்களிலிருந்து எடுக்கப்பட்டவையாகும். உறுதிப்பாடு எனும் தலைப்பு ஒவ்வொரு பகுதியிலும் எவ்வாறு எடுத்துக்காட்டப்படுகிறது எனவும், ஒவ்வொரு பாடத்தையும் பயின்று முடிக்கும் போது, அதனைப் பற்றி பங்கேற்பாளர்களின் புரிந்துணர்வு எவ்வாறு மேம்பாடு காணுகின்றது என்பதையும் கீழே கொடுக்கப்பட்டுள்ள காலியான இடங்களில் நிரப்பவும்.

> “நான் சேவை செய்வது பற்றி நினைக்கிறேன். மற்றவர்களுக்கு உதவக்கூடிய எதனையாவது நான் செய்ய விரும்புகிறேன். நான் ஒரு தாதியாகிட விரும்புகிறேன், ஆனால் நான் கஷ்டப்பட்டு படிக்க வேண்டும். அதற்கு அதிக செலவாகும், என் பெற்றோர்களிடம் போதிய பணம் இருப்பதாக நான் நினைக்கவில்லை,“ என முசோன்டா விளக்குகிறாள்.
>
> “உண்மைதான், ஆனால் நீ முயற்சி செய்யலாமே” என கூறுகிறாள் ரோஸ். ”‘உறுதிப்பாடு’ என்று ஒரு வார்த்தை உள்ளது. என்னுடைய வகுப்புப் பாடங்கள் ஒன்றில் சில வாரங்களுக்கு முன்பு நான் இதனைக் கற்றுக்கொண்டேன். நாம் ஒன்றைச் செய்யும்போது, கடவுள் நம்மை உறுதி செய்து நமக்கு உதவுகிறார் என என் ஆசிரியர் சொல்கிறார். இப்போது இந்தச் சொல் எனக்கு மிகவும் பிடித்துள்ளது. தாதியாகிட வேண்டும் என்பதில் நீ மனதை செலுத்தினால் நீ கடவுளின் உறுதிப்பாட்டை நிச்சயம் பெறுவாய் என நான் நம்புகிறேன்.”

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

பிறகு இரவு நேரத்தில் பெண்கள் படுக்கையில் இருக்கின்ற போது, முசோன்டா ரோஸிடம் இவ்வாறு இரகசியமாகப் பேசுகிறாள், “ரோஸ், ‘உறுதிப்பாடு’ என்ற ஒரு வார்த்தையை உச்சரித்தாய். அப்படி என்றால் பள்ளிக்கூடப்பாடத்தில் நான் மிகவும் கடுமையாக உழைத்தால், நான் தாதியர் படிப்பு மேற்கொள்வதற்காக கடவுள் பணத்தை நமக்கு அனுப்புவார் எனப் பொருள்படுமா?”

ரோஸ் புரண்டுப் படுத்து முசோன்டாவைப் பார்த்து, “உண்மையில் அப்படி அல்ல, எனக்குத் தெரியாது. நாம் காரியங்களை செய்ய முயற்சித்தப் பிறகு எந்தக் கதவுகள் திறக்கின்றன எனப் பார்க்கவேண்டும். ஆனால் கடவுள், நம் ஒவ்வொருவருக்கும் திறமைகளைக் கொடுக்கிறார் என்று எனக்குத் தெரியும். நம்முடைய திறமைகள் யாவை என்பதை நாம் கண்டுபிடித்து அவற்றைப் பயன்படுத்தும் முறையைக் கற்றுக்கொள்ள வேண்டும்.” என ரோஸ் பதில் கூறுகிறாள்.

கோட்வினுக்கு சகமாணவனும் நெருங்கிய நண்பனுமாகிய சிஷிம்பா என்பவன் இருக்கிறான். அவன் அடிக்கடி முலேங்கா குடும்பத்தாரைக் காண வருவான். இன்றிரவு அவன் இரவு உணவுக்காக தங்கிவிடுகிறான். மேசையைச் சுற்றி அவர்கள் அமர்ந்திருக்க பேச்சு ஒரு தலைப்பிலிருந்து அடுத்த தலைப்புக்குத் தாவுகிறது. முசோன்டா ‘உறுதிப்பாடு’ என்ற தலைப்பை எழுப்ப விரும்பி, பொறுமையின்றி காத்திருக்கிறாள். இறுதியில் ஒரு சில கனங்களுக்கு மௌனம் நிலவுகிறது. “ரோஸும் நானும் ‘உறுதிப்பாடு’ பற்றி பேசிக் கொண்டிருந்தோம்” என முசோன்டா கூறுகிறாள்.

“அதோ என் தங்கை மீண்டும் ஒரு புதிய விஷயத்தைப் பேசுகிறாள்” என கோட்வின் தொண்டையை தெளிவுபடுத்திப் பேசுகிறான். ஆனால் தான் வியக்கும் வகையில் சிஷிம்பா ஆவலைக் காட்டுகிறான்.

“அந்த வார்த்தை உனக்கு என்ன பொருளைக் கூறுகிறது?” என அவன் முசோன்டாவைக் கேட்கிறான்.

முசோன்டா தானும் வியப்புற்று, ரோஸ் பதில் கூறுவாள் என்ற நம்பிக்கையில் ரோஸை நோக்கிப் பார்க்கிறாள்.

“உறுதிப்பாடு.... நாம் செய்கின்ற ஒரு காரியத்தில் கடவுள் நம்மை உறுதிப்படுத்தி நமக்கு உதவுகிறார்” என ரோஸ் கூறுகிறாள்.

சிஷிம்பா, சிறிது நேரத்திற்கு எதனையும் சொல்லாமல் இருக்கிறான். தன் கண்களில் கவலை குடிக்கொள்கிறது. அவன் இவ்வாறு மெதுவாக தொடங்கிப் பேசுகிறான், “சில மாதங்களுக்கு முன்பு, என் தந்தை உத்தியோகத்தை இழந்தார். அவர் நேர்மையானவர் மற்றும் பொறுப்புள்ளவர் என்பது அனைவருக்கும் தெரியும். அவர் பதினெட்டு ஆண்டுகளுக்கு ஒரு நிறுவனத்தில் காவலராகப் பணிபுரிந்தார். பிறகு திடீரென அவர்கள் அவரை வேலை நீக்கம் செய்தனர். நம் அனைவருக்கும் காரணம் தெரியும். அவரை அவர்கள் இன்னும் இரண்டு ஆண்டுகளுக்கு வேலையில் வைத்திருந்தால், அவரும் பதவி ஓய்வுப் பெற்று அந்த நிறுவனமும் அவருக்கு ஓய்வூதியத்தைக் கொடுக்க வேண்டி வந்திருக்கும். எங்களிடம் அதிக சேமிப்பு கிடையாது. என் அண்ணன் எங்களுக்கு உதவினாலும் கூட, நான் தங்குவதற்கும் உணவிற்கும் கட்டணம் செலுத்த இயலாது என்பதனால் அடுத்த ஆண்டு நான் மீண்டும் பள்ளிக் கூடத்திற்குப் போக முடியாதது போல் தெரிகிறது. கடவுள் ஏன் எங்களுக்கு உதவுவதில்லை என நான் யோசிக்கிறேன்.”

திரு.முலேங்கா இக்கேள்விக்கு பதில் கொடுப்பார் என எதிர்ப்பார்த்தவாறு அனைவரும் அவரை நோக்கிப் பார்க்கின்றனர்.

திரு.முலேங்கா மென்சிரிப்புடன் இவ்வாறு கூறுகிறார், “நாம் ஒரு முயற்சியை மேற்கொள்ளும் போது, கடவுள் நமக்கு உதவுகிறார் என்பதனால் வாழ்க்கை சுலபமானது என்பது பொருளல்ல. உங்கள் வாழ்க்கை இன்னல்களால் நிரப்பப்பட்டிருக்கும், மற்றும் துரதிர்ஷ்டவசமாக, அவற்றில் பல அநீதியினால் உருவாக்கப்பட்டிருக்கும். ஆனால் நீங்கள் சிரமப்பட்டு உழைக்கவேண்டும். சிறிது காலத்திற்கு நீங்கள் விரும்பிய வழியில் காரியம் நடக்காமல் போனாலும் கூட, நீங்கள் கடவுளின் உறுதிப்பாட்டில் நிச்சயமாக நம்பிக்கை வைக்க வேண்டும். குறிப்பாக அநீதியைப் போக்குவதில் நீங்கள் எடுக்கின்ற முயற்சிகளில் அவர் உங்களை உறுதிப்படுத்துவார்.” பிறகு திரு. முலேங்கா சிஷிம்பாவிடம் திரும்பி இவ்வாறு கூறுகிறார், “உங்கள் குடும்பம் ஒற்றுமையுடன் கடினமாக உழைக்கிறது. நிலைமை உங்களுக்கு சாதகமாக மாறும் என என் உள்ளம் எனக்குச் சொல்கிறது. நீங்கள் உங்கள் படிப்பை முடிப்பீர்கள். என் வார்த்தையை நம்புங்கள்.”

____________________________________________________________

____________________________________________________________

மறு திங்கட்கிழமையன்று இரண்டு பெண்களும் திருமதி. ஃபிரியுடன் மருத்துவ சாலைக்குச் செல்கின்றனர். தாய்மார்கள் தங்கள் வகுப்பைத் தொடங்கும் நேரம் வந்ததும், முசோன்டாவும் ரோஸும் குழந்தைகளை வெளியே அழைத்துச் சென்று ஒரு மரத்தின் நிழலில் அமர்கின்றனர். அவர்கள் ஒன்றாகப் பாடல்களைப் பாடி விளையாடுகின்றனர், பிறகு ரோஸ் அவர்களுக்கு ஒரு கதையைக் கூறுகிறார். அந்தக் கதை முடிகின்ற வேளையில், தங்கள் குழந்தைகளை அழைத்துச் செல்வதற்காக தாய்மார்கள் வந்து சேர்கின்றனர். அனைவரும் மகிழ்கின்றனர். திருமதி. ஃபிரியும் மற்ற சுகாதாரப் பணியாளர்களும் மகிழ்ச்சியடைந்து அந்த பெண்களை அடுத்த வாரம் மீண்டும் வரும்படி கேட்டுக்கொள்கின்றனர்.

தங்கள் வீட்டுக்குத் திரும்பும் போது, முசோன்டா ஆழ்ந்த சிந்தனையில் இருக்கிறாள். இறுதியில் அவள் தன் மௌனத்தைக் கலைத்து ரோஸிடம் இப்படிக் கூறுகிறாள். “இன்று நடந்தது, ’உறுதிப்பாட்டுடன்’ தொடர்புடையது என நீங்கள் நினைக்கிறீர்களா? நீங்கள் ஆசிரியராக விரும்புகிறீர்கள், நானோ தாதியாக விரும்புகிறேன், இங்கே நாம் மருத்துவமனையில் இருந்துக்கொண்டு குழந்தைகளை போதித்து அவர்களை கவனித்துக் கொண்டிருந்தோம்.”

ரோஸ் தன்னுடன் தங்க வந்த வாரங்களில், இரண்டு பெண்களும் பல விஷயங்களைப் பற்றி பேசினர், அதனால் முசோன்டாவின் மனம் சிந்தனைகளால் நிரம்பியுள்ளது. ஆகவே ஒருநாள் காலையில் அவள் தனக்கு விருப்பமான இடத்திற்குச் செல்வதாக முடிவெடுக்கிறாள். அவள் பாறையின் மீது படுக்கும் போது, மருத்துவமனையில் அன்றைய நாளைக் கழித்ததை நினைத்துப்பார்க்கிறாள். “சில பலனுள்ள காரியங்களைப் புரிந்தது

நல்லதாகிவிட்டது” என அவள் தனக்கே சிந்தித்துக் கொள்கிறாள். மரங்கள் கனி கொடுத்தாக வேண்டும் என்று தன் தந்தை அடிக்கடி கூறுவதை அவள் நினைத்துப் பார்க்கிறாள். பிறகு அவள் “என் வாழ்க்கையும் நல்ல கனிகளைக் கொடுப்பதை நான் எவ்வாறு உறுதிசெய்யமுடியும்?” என நினைக்கிறாள். அவள் உடனே ‘உறுதிப்பாடு’ என்ற வார்த்தையை நினைத்துப் பார்க்கிறாள்.

அந்த நேரம் பார்த்து பலத்த காற்று வீசுகிறது. அது சில இலைகளைக் காற்றில் பறக்க வைக்கிறது. அந்த இலைகளுக்கு மத்தியில் முசோன்டா சிறிய மஞ்சள் நிறப் பறவை ஒன்றைப் பார்க்கிறாள். அந்தக் காற்று ஓய்ந்த பிறகு, இலைகள் தண்ணீருக்குள் விழ, பறவை மட்டும் தொடர்ந்து பறக்கிறது. அவள் அப்பறவையைப் பார்க்கையில், ஒரு சிந்தனை அவள் மனதுக்கு வருகிறது. அந்தக் காற்று அப்பறவையைக் கொஞ்சம் தள்ளிவிடவே, அது இப்பொழுது உயரப் பறக்கிறது. ஒருவேளை உறுதிப்பாடு என்பது அதுதானோ என்னவோ. அந்தப்பறவை பறக்க முயன்றபோது காற்று அதற்கு உதவுகிறது.

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

“நீங்கள் உங்கள் வருங்காலம் பற்றி நினைக்கிறீர்களா, கோட்வின்?” என முசோன்டா கேட்கிறாள். “நீங்கள் என்னவாக விரும்புகிறீர்கள்?“

கோட்வின் தொடர்ந்து சைக்கிளை பழுது பார்க்கின்றான். “எனக்குத் தெரியாது. நான் பணம் சம்பாதிக்க விரும்புகிறேன். நான் நம் பெற்றோர்களுக்கு உதவிசெய்து எனக்கென ஒரு நாள் குடும்பத்தை ஏற்படுத்த விரும்புகிறேன்“ என அவன் கூறுகிறான்.

“ஆனால் நீங்கள் எப்பொழுதாவது உங்களுடைய திறமைகளைப் பற்றியும் அவற்றை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதைப் பற்றியும் சிந்தித்திருக்கிறீர்களா ?” என முசோன்டா கேட்கிறாள். “நானும் ரோஸும் இதுபற்றி அதிகம் பேசுவோம்.“

அவன் மரை திருக உதவும் கருவி ஒன்றைத் தூக்கும்போது, “எனக்குத் தெரியும்,” எனக் கூறுகிறான். “நீயும் எப்போதும் ‘உறுதிப்பாடு‘ பற்றி பேசுகிறாய்.... ‘நாம் ஒரு முயற்சியை மேற்கொள்ளும்போது கடவுள் நமக்கு உதவுகிறார்.’“

“ஆனால் கோட்வின் அது உண்மை.” பிறகு அவள் மஞ்சள் குருவி மற்றும் காற்று பற்றிய கதையை அவனிடம் சொல்கிறாள். மருத்துவமனையில் அவளும் ரோஸும் செய்த பணியைப் பற்றியும் அவள் அவனிடம் சொல்கிறாள்.

அந்த நேரத்தில் சிஷிம்பா அங்கு வந்துசேர்கிறான். “வணக்கம், சைக்கிள் எப்படி இருக்கிறது ? பிரச்சனையைக் கண்டு பிடித்து விட்டாயா ?“ என அவன் கேட்கிறான்.

“பிரச்சனை இயந்திரத்தின் பல் சக்கரத்தில் இருந்தது. நான் இன்னும் அதனைப் பழுது பார்க்கிறேன்.“ என்று சைக்கிளைப் பழுது பார்க்கும்போது கோட்வின் பதில் கூறுகிறான்.

“உன்னால் அதனை சரிசெய்ய முடியும் என்று எனக்குத் தெரியும்“ என்று சிஷிம்பா கூறிவிட்டு முசோன்டாவைப் பார்க்கிறான். “உன் சகோதரன் ஒரு இயந்திர வல்லுனர் என்பது உனக்குத் தெரியுமா ?“

ரோஸ் வீட்டிலிருந்து வெளியே வந்து உரையாடலின் ஒரு பகுதியைக் கேட்கிறாள். “கோட்வின், அது உன்னுடைய திறமைகளில் ஒன்று! பழுது பார்ப்பதில் நீ கெட்டிக்காரன். நீ நல்ல இயந்திர வல்லுனராகிவிட முடியும்!” என்று கூறுகிறாள்.

“ஒரு சைக்கிளை சரிசெய்ய முடியும் என்பதனால் மட்டும் நான் ஒரு இயந்திர வல்லுனர் என்றாகிவிடாது. எனக்கு பயிற்சி தேவை.” என கோட்வின் கூறுகிறான்.

மற்ற மூன்று பேரும் மென்சிரிப்புடன் “ஆகவே ஒரு முயற்சியை மேற்கொள்வாயாக!” என்று கூறுகிறார்கள். கோட்வின் உட்பட அனைவரும் சிரிக்கின்றனர்.

“கோட்வின், சந்தைக்கு அருகிலுள்ள கடையில் இருக்கும் இயந்திர வல்லுனராகிய திரு.சியெசுவிடம் நீ பேசினால் என்ன? ஒரு வேளை அவர் உனக்கு பயிற்சி அளிப்பார் ?” என்று சிஷிம்பா குரலில் ஆவல் கலந்து பேசுகிறான்.

“ஆமாம், ஆரம்பிப்பதற்கு அதுவே நல்ல வழியாகும்“ என ரோஸ் கூறுகிறாள். “என்ன ?“ என்று கேட்கிறான் கோட்வின், “நான் வெறுமென அவரிடம் சென்று கேட்கமுடியாது. அவரை எனக்குத் தெரியாது.“

“எனக்கு அவரைத் தெரியும். அவரை நான் உனக்கு அறிமுகம் செய்ய முடியும். நாளை நாம் இருவரும் ஒன்றாகப் போகலாம்.” என்று சிஷிம்பா கூறுகிறான்.

பிறகு அவர்கள் தனியாக இருக்கும்போது, ரோஸ் முசோன்டாவிடம், ”நாளைக்கு உறுதிப்பாட்டின் பொருளை கோட்வின் புரிந்துகொள்வான்,” என்று கூறுகிறார். அவர்கள் சிரிக்கின்றனர், ஆனால் இளம் பையன்களிடம் எதுவும் சொல்லக்கூடாது என்று முடிவு செய்கின்றனர்.

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

குள்ளமான ஓர் முதியவராகிய திரு.சியெசு தம் கடைக்கு வெளியே அமர்ந்திருக்கிறார். அவர் ஒரு சிறிய இயந்திரத்தின் துண்டுகளை சுத்தம் செய்வதோடு, வேலை செய்யும் போது, ஒரு பாடலைத் தாழ்ந்த குரலில் பாடுகிறார். சிஷிம்பாவைக் கண்டதும் அவருடைய முகம் மலர்ச்சிப்பெற்று, கை குலுக்குவதற்காக அவர் எழுந்து நிற்கிறார்.

சிஷிம்பா கோட்வினை அறிமுகம் செய்து வைத்து, அவன் பழுது பார்ப்பதில் கெட்டிக்காரன் என்று விளக்குகிறான். கோட்வின் சற்று கூச்சப்பட்டாலும், பேசுவதற்கான தைரியத்தை வரவழைத்துக் கொள்கிறான். அவன் தன் தொண்டையை தெளிவுப்படுத்திக்கொண்டு, “திரு. சியெசு, நான் ஒரு இயந்திர வல்லுநராகிட ஆசைப்படுகிறேன். ஆகையினால், நான் உங்கள் கடையில் உங்களுக்கு உதவிப் புரிந்து, உங்களிடமிருந்து கற்றுக்கொள்ளலாம் என நினைக்கிறேன்.” என்று கூறுகிறான்.

“நல்லது உன் உதவியை நான் பயன்படுத்திக்கொள்கிறேன். ஆனால் உனக்குக் கொடுக்கவேண்டிய பணம் என்னிடம் இல்லை” என சியெசு சொல்கிறார்.

“அதைப் பற்றி கவலைப் பட வேண்டியதில்லை. நான் கற்றுக்கொள்ள மட்டுமே விரும்புகிறேன். நான் எப்போது தொடங்கலாம்?” என்று கோட்வின் கூறுகிறார்.

”இதனைக் காட்டிலும் நல்ல நேரம் கிடையாது !” என்கிறார் திரு.சியெசு இன்று காலையில் நீ இங்கு இருக்க முடியுமா? இந்தப் பாகங்களுக்கு எண்ணெய் விடவேண்டும், அதன் பின்னர் இயந்திரத்தைப் பொறுத்த வேண்டும்.” என்று திரு.சியெசு கூறுகிறார்.

”இப்பொழுதா? இப்பொழுதே நான் தொடங்கலாமா?” என்று கோட்வின் ஆச்சரியத்துடன் கேட்கிறான்

”நிச்சயமாக!” என்று திரு.சியெசு சிரித்துக் கொண்டே கூறுகிறார். “உன் சட்டையை மடித்துக் கொண்டு வேலையைத் தொடங்குவாயாக!”

கோட்வின் ஆவலுடன் தன் புதிய வேலையைத் தொடங்குகிறான். சில நிமிடங்களுக்குப் பிறகு சிஷிம்பா புறப்படுவதற்காக எழுந்து நிற்கிறான். அவன் திரு.சியெசுவிடமிருந்து விடைபெறுகிறான். அவன் கோட்வின் அருகில் வந்து ”உறுதிப்பாடு” என்று காதில் இரகசியமாய்ப் பேசுகிறான்.

வீட்டுக்குச் செல்லும் வழியில், சிஷிம்பா மருத்துவமனையைக் கடக்கிறான். அங்கே முசோன்டாவும் ரோஸும் குழந்தைகளுக்கு உதவுவதைக் காண்கிறான். என்ன நடந்தது

என்பதைத் தெரிந்துகொள்வதற்கு இளம் பெண்கள் ஆவல் கொள்கின்றனர். “எப்படி இருந்தது ?” என அவர்கள் கேட்கின்றனர்.

“கோட்வின் ஒரு முயற்சி செய்து அது வெற்றி பெற்றது. அவன் இப்பொழுது அங்குதான் இருக்கிறான். திரு.சியெசு அவனை சோதித்துப் பார்க்கிறார் என்று நான் நினைக்கிறேன்” என்று சிஷிம்பா பதில் உரைக்கிறான்.

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

ஒரு நாள் காலை, சந்தையில் மீன் வாங்குவதற்காக சிஷிம்பா தன் தாயாருடன் சென்று கொண்டிருக்கிறான். பள்ளிக்கூடம் செல்வதற்கு எவ்வாறு பணம் சம்பாதிப்பது என்பது பற்றி அவன் சிந்தித்துக் கொண்டிருக்கிறான். காய்கறி பயிரிட்டு விற்க நினைக்கிறான், ஆனால் நட, காலம் கடந்துள்ளது. சாலையோரத்தில் நிலக்கரி விற்கலாம் என நினைக்கிறான், ஆனால் பலர் இதைத்தான் செய்கின்றனர். ”வேறு எவரும் செய்யாத ஒன்றைச் செய்ய முயற்சிக்கவும்,” என்று ரோஸ் கூறியதை அவன் நினைத்துப் பார்க்கிறான்.

மீன் வாங்குவதற்கு திருமதி. முசோல் அவர்களின் அங்காடிக்கு வந்து சேரும் போது, அவர் அங்கே இல்லாததை அவன் அறிகிறான். “மீனைக் கொண்டுவருவதற்காக அவர் பட்டணம் சென்றிருக்கிறார். அவர் வாரத்திற்கு இரண்டு முறை போகிறார்,” என அடுத்த அங்காடியில் உள்ள பெண் கூறுகிறார். காரின் பாகங்களை வாங்குவதற்காக சில வேளைகளில் திரு.சியெசுவும் கூட பட்டணம் போவதுண்டு என்பது சிஷிம்பாவிற்குத் தெரியும்.

இது அவனுக்கு ஓர் சிந்தனையைக் கொடுக்கிறது. “ஒருவேளை பிறருக்காக நான் பட்டணம் சென்று அவர்களுக்குத் தேவைப்படுகிற பொருட்களைக் கொண்டுவரலாம்” என்று அவன் தனக்கே கூறிக்கொள்கிறான். “அவர்கள் இங்கேயே இருந்து வேலை செய்வதன் வழியாக பணத்தை இழக்கமாட்டார்கள்.”

அன்றிரவு சிஷிம்பா வீட்டில் தன் பெற்றோர்களுடன் கலந்துரையாட, அவர்களும் அந்த ஆலோசனையை விரும்புகின்றனர். ஆகவே அடுத்த நாள் அவன் சந்தைக்குத் திரும்பி திருமதி. முசோல் மற்றும் திரு. சியெசு ஆகியோரிடம் பேசுகிறான். “நீங்கள் இருவரும் பேருந்து கட்டணத்திற்கு பயன்படுத்தும் தொகையை எனக்குக் கொடுத்தால், நான் அதில் பாதி தொகையைக் கொண்டு பட்டணம் சென்று உங்களுக்குத் தேவைப் படுவதைக் கொண்டுவருவேன். மறு பாதியை நான் பள்ளிக்கூடத்திற்காக சேமிப்பேன்,” என்று சிஷிம்பா கூறுகிறான். அதை முயற்சிப்பதில் பலனுண்டு என்று அவர்கள் இருவரும் ஒப்புக்கொண்டு அவனை இன்னும் இரண்டு நாட்களில் வருமாறு கேட்டுக்கொள்கின்றனர். “இந்த சிந்தனை நன்கு செயல்படுமானால் உனக்கென்று ஓர் உத்தியோகத்தை நீ அமைத்துக் கொள்வாய்” என திரு.சியெசு கூறுகிறார்.

இந்த நற்செய்தியை தன் பெற்றோர்களிடம் கூறுவதற்காக இல்லம் செல்லும் வழியில், கோட்வின்னையும் அவரது குடும்பத்தையும் காண்பதற்காக சிஷிம்பா நிற்கிறான். தன் திட்டத்தை அவர்களுடன் பகிர்ந்துகொள்வதற்கு அவன் ஆவலாக இருக்கிறான். அவனுடைய கதையைக் கேட்டபின் திருமதி. முலேங்கா, சிஷிம்பாவிற்கு இன்னும் நல்ல செய்திகளைக் கொடுக்கிறாள். நேற்று காப்வே சென்றிருந்தபோது திரு.முலேங்கா தன் உறவுக்காரரிடம் பேசியிருக்கிறார். பள்ளிக்கூடத்திலிருந்து சுமார் ஒரு கிலோமீட்டர் தூரத்தில் வசிக்கும் அவர்களுடனும், அவர்களது குடும்பத்தினருடனும் சிஷிம்பா தங்க வரவேற்கப்படுவதாக கூறுகிறார். “அவர்கள் கொடுக்கும் உணவுக்கும் தங்கும் வசதிக்கும் கைமாறாக நீ அவர்களுடைய பண்ணையில் உதவி செய்யலாம்,” என அவர் கூறுகிறார்.

“அது மிகவும் சிறந்தது!” என சிஷிம்பா கூறுகிறான். “மிக்க நன்றி, திருமதி.முலேங்கா”

“சிஷிம்பா நீ விரைவில் பணம் சம்பாதிப்பாய் போலத் தெரிகிறது. உனக்கு சில வேளைகளில் சிரமமாக இருந்தாலும் கூட உன் பள்ளிக்கூடத்திற்காக சேமிப்பதை உறுதிசெய்துகொள். சிறு அற்பப் பொருட்களின் மீது செலவு செய்யும் ஆவலினால் தூண்டப்படாதே !” என திரு.முலேங்கா கூறுகிறார்.
“கவலைப்படாதீர்கள், திரு.முலேங்கா,” என்று புன்னகையால் மலர்ந்த முகத்துடன் பதிலளிக்கிறான் சிஷிம்பா. “அது நடக்க அனுமதிக்கமாட்டேன் என நான் உறுதிகூறுகிறேன்.” அவன் விடை பெறும்போது, அவன் ரோஸையும் முசோன்டாவையும் பார்த்து “கதவுகள் திறக்கின்றன!” என்று கூறுகிறான்.

______________________________________________________________________________

______________________________________________________________________________

விடுமுறைகள் ஒரு நிறைவிற்கு வருகின்றன. ரோஸ் வீட்டுக்குச் சென்று பள்ளிக்கூடத்திற்கு மீண்டும் செல்லவேண்டிய நேரம் வந்துவிட்டது. அவள் புறப்படுவதற்குத் தயாராகும் போது, அவளும் முசோன்டாவும் பேசுகின்றனர்.

“நீ திரும்பிச் செல்ல வேண்டாத நிலையிருக்குமாயின் அதை நான் விரும்புகிறேன்“ என முசோன்டா கூறுகிறாள்.

“நானும் அப்படித்தான் நினைக்கிறேன்,“ என்கிறாள் ரோஸ். “இது உண்மையில் ஓர் அற்புதமான விடுமுறையாக இருந்தது. நடந்தவை அனைத்தையும் என்னால் நம்ப இயலவில்லை“ என ரோஸ் கூறுகிறாள்.

“உண்மைதான்,” என்கிறாள் முசோன்டா. “கோட்வினைப் பார். அவன் தன் வேலையை மிகவும் விரும்புவதனால் பள்ளிக்கூடம் முடிந்த பின்பு அவன் தொழில்நுட்ப பயிற்சியைப் பெறுவது பற்றி இப்போது பேசுகிறான். சிஷிம்பாவின் யோசனையும் நன்கு செயல்பட்டது. அவனுக்கு நிறைய வாடிக்கையாளர்கள் வாய்க்கவே அவன் கிட்டத்தட்ட தினமும் பட்டணத்திற்குப் போகிறான்,” என முசோன்டா கூறுகிறாள்.

“நம்மையும் பார்“ என்கிறாள் ரோஸ். “மருத்துவமனையில் பணியாற்றியது ஓர் சிறந்த அனுபவமாக இருந்தது. நான் ஓர் ஆசிரியையாக வேண்டும் என்பதில் இன்னும் அதிக நம்பிக்கைக் கொண்டுள்ளேன். என் கிராம மன்றம் வெவ்வேறு வயதுடைய குழந்தைகளுக்கு வாராந்திர வகுப்புகளை ஏற்பாடு செய்கிறார்கள், அதற்கு கிட்டத்தட்ட எல்லாக் குழந்தைகளும் செல்கின்றன. இவ்வாண்டு, அவ்வகுப்புகளில் ஒன்றை கற்றுத்தருவதற்காக நான் திட்டம் கொண்டுள்ளேன்.“

“நான் மருத்துவமனையில் தொடர்ந்து பணிபுரிய முயற்சிப்பேன்“ என்கிறார் முசோன்டா. “பள்ளிக் கூடத்தினால் நான் திங்கட்கிழமைகளில் இனிமேல் போகமுடியாது. ஆனால் சில பிற்பகல் வேளைகளில் நான் உதவமுடியும். உனக்குத் தெரியுமா ரோஸ், முதல் நாள் நாம்

‘உறுதிப்பாடு’ பற்றி பேசினோமே. அது எவ்வளவு முக்கியமானது எனவும் அதனைப் புரிந்துகொண்டது நம் வாழ்க்கையை எவ்வாறு மாற்றும் எனவும் என்னால் கற்பனைக் கூட செய்து பார்க்கமுடியாது”.

“அது உண்மைதான்,” என ரோஸ் ஒப்புக்கொள்கிறாள். “முயற்சி செய்து உறுதிப்பாடுகளை எதிர்பார்ப்பது பற்றி நாம் கற்றதனால் நாம் அனைவரும் எவ்வளவு மாறி இருக்கிறோம் என்பதைப் பார்,”

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

வீடு திரும்பும்போது, ஆற்றின் ஓரத்திற்கு நாம் போகலாமா என முசோன்டா கேட்கிறாள். அவள் தன்னுடைய விசேஷமான இடத்திற்கு ஓடி, பாறையின் மீது ஏறி அன்னாந்து படுத்துக் கொண்டு வானத்தைப் பார்க்கிறாள். அவள் மனத்தில் பல சிந்தனைகள் எழுந்தோடுகின்றன. அவள் பள்ளி விடுமுறைப் பற்றி நினைத்து, வருகின்ற ஆண்டு எதனைக் கொண்டுவரும் என சிந்திக்கிறாள். அது காற்றடிக்கின்ற நாளாக இருப்பதால். அவள் மஞ்சள் நிறப் பறவையை நினைத்துக் கொள்கிறாள். “நான் எதனை முயற்சி செய்தாலும், கடவுள் எனக்கு உதவுவார்,” என்று தனக்குத்தானே இரகசியமாய் பேசுகிறாள். தான் புறப்படுவதற்கு எழும்போது, காற்று தன் முதுகு மீது வீசி, அவளுக்கு பலத்தைக் கொடுக்கிறது.

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

## பகுதி 21

நூலின் உள்ளடக்கத்துடன் பார்ட்சியப்படுத்திக்கொள்வதும் - இங்கு, *உறுதிப்பாட்டின் தென்றல்கள்*- மற்றும், அது எவ்வாறு அதன் குறிக்கோளை அடைந்திட முயலுகிறது என்பது குறித்த நல்ல புரிந்துணர்வைக் கொண்டிருப்பதும் இளைய இளைஞர் குழு ஒன்றுக்கு உயிர்ப்பூட்டுனரெனும் உங்கள் கடமையை ஏற்று நடந்திட உங்களுக்குப் பெரிதும் உதவும். மேலும், குழு நூல்களைப் பயின்று, அதன் வாயிலாக, அது வழங்கக்கூடிய நன்மைகளை அடைந்திட நீங்கள் பயன்படுத்தக்கூடிய வழிமுறைகள் குறித்து பிரதிபலிப்பது அவசியமாகும். மேலதிகமாக, புத்தகங்களைப் படிப்பதிலும் அவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கியக் கருத்துக்களைப் புரிந்துகொள்வதிலும் குழுவிற்கு உதவ நீங்கள் பயன்படுத்தும் முறைகளைப் பற்றி சிந்திக்க வேண்டும். இதற்காக உங்களுக்குத் தேவைப்படும் செயல்திறன்களும் ஆற்றல்களும், படிப்படியாக அனுபவம் மூலம் பெற்று வளரும், ஆனால் கீழ்வரும் பயிற்சி குறிப்புகள், குறிப்பாக *உறுதிப்பாட்டின் தென்றல்களுடன்* தொடர்புடைய பயிற்சி குறிப்புகள், இதன் தொடர்பில் உங்களுக்கு பல உட்பார்வைகளை வழங்கும்.

1. வாக்கிய கட்டமைப்பு மற்றும் அதன் ஓட்டத்தைப் பொருத்த வரையில் நூலின் வாசகங்கள் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு எளிமையைக் கடைப்பிடிக்க முயற்சிக்கின்றன. இருந்தபோதிலும், தேவைப்படும்போது கடினமான வார்த்தைகளும் சொற்றொடர்களும் தடையில்லாமல் பயன்படுத்தப்படுகின்றன. பாடங்கள், இத்தகைய வார்த்தைகளின் உள்ளர்த்தங்களை பல்வேறு சூழ்நிலைகளில் பயன்படுத்துவதன் வாயிலாகவும் பயிற்சிகளின் வாயிலாகவும் வெளிக்கொணருகின்றன. இவ்வழியில் செழுமையான சொற்தொகுப்பு ஒன்றை அனுமதிப்பதன் வழியாக, கதை சிறுபிள்ளைத்தனத்தையும் மேலோட்டப்போக்கையும் தவிர்க்கின்றது. உதாரணமாக, தினசரி உரையாடல்களில் பயன்படுத்தப்பட்டபோதும் அநீதி என்பது ஓர் பலக்கியமான கருத்தாக்கமாகும். பாடம் 6ல் அது அறிமுகப்படுத்தப்பட்ட விதம் மற்றும் அது தொடர்பான பயிற்சிகளும் அநீதி என்ற கருத்தாக்கத்தை கிரகித்துக் கொள்வதற்கு சற்று உதவுகின்றன. இவ்வயதுடைய இளைஞர்களுக்கு இந்த அணுகுமுறை பயன்மிக்கதாக இருக்குமென நினைக்கின்றீர்களா, அல்லது ஒவ்வொரு கடின வார்த்தைகளையும் அவர்களுக்கு வரையறுத்துக் காண்பிப்பது அவசியமென கருதுகின்றீர்களா?

2. துடிப்பான வேகத்தில், களிப்புமிகுந்த சூழ்நிலையிலும், ஆழ்சிந்தனைமிக்க பிரதிபலிப்புடனும் பயிலப்படுவதற்கு இந்நூலின் பாடங்கள் எழுதப்பட்டுள்ளன. இளைஞர்கள் கதையைப் படித்த பின் பயிற்சிகளை சற்று விரைவாக முடித்திடுவார்கள் என கணிக்கப்பட்டுள்ளது. இளைய இளைஞர்கள் கதையைப் படித்து, அவர்களின் மொழித் திறனை வளர்த்துக்கொள்ளவும், சொற்கள் மற்றும் கருத்துகளைப் பற்றிய புரிதலை வலுப்படுத்தவும் வடிவமைக்கப்பட்ட பயிற்சிகளை, துரிதமான வேகத்தில் ஆனால் தேவையான கவனத்துடன் மேற்கொள்வார்கள் என்று கருதப்படுகிறது. நீங்கள் ஒவ்வொரு பாடத்தின் உத்தேசிக்கப்பட்ட குறிக்கோளிற்கும் அதிகமாக சாதித்திடவும் அது கூறும் ஒவ்வொரு கருத்தையும் நீட்டித்து படிப்பதால் என்ன விளைவேற்படக்கூடும்?

__________________________________________________________________________________

__________________________________________________________________________________

__________________________________________________________________________________

__________________________________________________________________________________

__________________________________________________________________________________

__________________________________________________________________________________

__________________________________________________________________________________

3. ஊகித்துக்கொண்ட படி, இளைய இளைஞர்கள் கவனிக்கும் நேரத்தின் அளவு குறுகியதல்ல. வாழ்க்கையின் எளிய விஷயங்களை அனுபவிக்கும் திறனைத் தொடரும் அதே வேளை, அவர்களுக்குச் சவாலாக விளங்கும் சிந்தனைகள் குறித்து ஆழமாகச் சிந்திக்கும் ஆற்றலையும் அவர்கள் பெற்றுள்ளார்கள். குழுவின் சூழலானது நம்பிக்கை மற்றும் ஆதரவுடன் இருந்தால் - போட்டியால் உருவாக்கப்பட்ட பதற்றம் மற்றும் முன்னரே தீர்மானிக்கப்பட்ட விளைவுகளை சந்திப்பதற்கான அழுத்தம் ஆகியவற்றிலிருந்து விடுபட்டிருந்தால் - உறுதிப்பாட்டின் தென்றல்களில் உள்ள பாடங்களை படிப்பதென்பது, இளைய இளைஞர்களின் தேவைகள் மற்றும் திறன்களுக்கு ஏற்ற அளவில் விவாதம் மற்றும் பிரதிபலிப்புக்கு வழிவகுத்திடும். விரும்பப்படும் இந்த சூழ்நிலையை உருவாக்கிட நாம் எடுக்கக்கூடிய சில படிகள் யாவை?

__________________________________________________________________________________

__________________________________________________________________________________

__________________________________________________________________________________

__________________________________________________________________________________

__________________________________________________________________________________

__________________________________________________________________________________

__________________________________________________________________________________

4. நூல் பயிற்சி "வீட்டுப்பாடம்" எனும் ஒன்றைக் எதிர்நோக்குவதில்லை. பயிற்சி குறிப்புகள் குழுக்கூட்டங்களிலேயே செய்துமுடிக்கப்பட வேண்டும் மற்றும் உயிர்ப்பூட்டுனரின் உதவியுடன் கலந்தாலோசிக்கப்படவும் வேண்டும். வீட்டிலேயே பயிற்சிகளை முடிக்க இளைய இளைஞர்களிடம் விட்டுவிடாமல், இந்த அணுகுமுறையை மேற்கொள்வதால் என்ன பலன்?

____________________________________________________________________________________________

____________________________________________________________________________________________

____________________________________________________________________________________________

____________________________________________________________________________________________

____________________________________________________________________________________________

____________________________________________________________________________________________

____________________________________________________________________________________________

5. இந்த நூலின் பெரும்பாலான பாடங்கள், தாங்கள் கற்றுள்ள கதையின் ஒரு பகுதி குறித்தோ அல்லது ஒரு குறிப்பிட்ட சிந்தனை குறித்தோ அல்லது தங்கள் வாழ்க்கையில் ஒரு குறிப்பிட்ட கருத்து எவ்வாறு பயன்படுத்தப்படக்கூடும் என்பது குறித்தோ, பங்கேற்பாளர்கள் சில வரிகள் எழுத வேண்டும் எனும் ஒரு நடவடிக்கையை உள்ளடக்கியுள்ளன.. இளைய இளைஞர்களுக்கு இந்த வகையான செயல்பாட்டைச் செய்திட, அவர்கள் தங்களைத் தெளிவாக வெளிப்படுத்த கற்றுக்கொள்ள நீங்கள் எவ்வாறு உதவுவீர்கள்?

____________________________________________________________________________________________

____________________________________________________________________________________________

____________________________________________________________________________________________

____________________________________________________________________________________________

____________________________________________________________________________________________

____________________________________________________________________________________________

____________________________________________________________________________________________

6. நூலின் 2, 5, 9, 10, 13 மற்றும் 14ம் பாடங்கள் புனித எழுத்தோவியங்களிலிருந்து ஒரு வாசகக்குறிப்புடன் முடிவுறுகின்றன, அதனை இளைய இளைஞர்கள் மனனம் செய்ய கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். பாடத்தில் எடுத்தியம்பப்படும் கருத்தாக்கங்களை இந்த இறுதியான நடவடிக்கை எவ்வாறு வலுப்படுத்துகிறது என்பதை ஆய்வு செய்திட அவற்றுள் ஓரிரண்டை எடுத்துப் பார்ப்பது உங்களுக்கு உதவியாக இருக்கக் காணலாம்.

____________________________________________________________________________________________

____________________________________________________________________________________________

____________________________________________________________________________________________

____________________________________________________________________________________________

____________________________________________________________________________________________

____________________________________________________________________________________________

____________________________________________________________________________________________

7. முக்கிய கருப்பொருளுக்குக் கூடுதலாக, நூல் பல நன்னெறி கருத்தாக்கங்களைத் தொட்டு, பாராட்டுக்குறிய பண்புகளையும் மனப்பாங்குகளையும் வலுப்படுத்திடவும் முயலுகின்றது. உதாரணமாக, ரோஸ் தன்னோடு பேருந்தில் பயணம் செய்யும் ஒரு சிறுவனோடு தன் உணவைப் பகிர்ந்துகொள்கின்றாள். கோட்வின் மற்றும் சிஷிம்பா ஒரு முதிய பெண்மணிக்கு விறகுகளைச் சுமந்து செல்ல உதவுகின்றனர். தாய்மார்கள் உடல்நல மருந்தகத்தில், வகுப்பில் கலந்துகொள்ளும்போது ரோசும் முசோன்டாவும் குழந்தைகளுக்குப் பாடம் சொல்லிக்கொடுக்கின்றனர். கால்பந்து விளையாட்டு ஒரு நட்பு முறை நிகழ்வாகவும், “வெற்றியை” முக்கிய நோக்கமாக கொண்டிராத ஒன்றாகும். இவ்விஷயங்கள்பால் எவ்வளவு கவனம் செலுத்தப்பட வேண்டும்? அவை ஒவ்வொன்றும் அடையாளங்காணப்பட்டும் உண்ணிப்பாக ஆலோசிக்கப்படவும் வேண்டுமா? அல்லது, கலந்துரையாடலின்போது அவ்விஷயங்கள் இயல்பாக வெளிவர அனுமதித்தால் போதுமா?

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

8. கதை ஓர் ஆப்பிரிக்க கிராமத்தில் மடிப்பவிழ்கின்றது. இளைய இளைஞர் ஆன்மீக சக்தியளிப்பு பயில்திட்டத்தின் ஒரு பகுதியாக இருக்கும் நூல்கள் பல்வேறு கண்டங்களின் பல கலாச்சார மற்றும் சமூக அமைப்புகளின் மெய்நிலையை எடுத்துக்காட்டுகின்றன. இது பயில்திட்டத்தின் செழுமையை அதிகப்படுத்துகின்றது. சிலர் "ஒவ்வொரு நாட்டிலும் உள்ள இளைஞர்களுக்கு ஏற்றவாறு நூல்களை மாற்றியமைக்க வேண்டும்" என பரிந்துரைப்பார்கள், உதாரணத்திற்கு, கதைகளில் உள்ள கதாபாத்திரங்களின் பெயர்கள் மாற்றுவது. பல நூற்றாண்டுகளாக மக்கள் பிற கலாச்சாரங்கள் சார்ந்த பல நூல்களைப் படித்துவந்துள்ளனர், அவற்றைப் பரிந்துரைத்துள்ளனர் மற்றும் அவற்றிலிருந்து கற்றுக் கொண்டுள்ளனர். இவற்றை அவர்கள் விழிப்புணர்வுடனேயே செய்து வந்துள்ளனர். பயில்திட்டத்தின் இப்பரிமாணம் குறித்து இளைய இளைஞர்களை எவ்வாறு விழிப்புணர்வு பெறச் செய்வீர்கள். சிலர் நம்புவது போல், குழந்தைகளும் இளைஞர்களும் அவரவர் கலாச்சாரச் சூழலில் எழுதப்பட்ட உபகரணங்களின் வாயிலாக மட்டுமே கல்வி பெற முடியும் என்னும் கருத்து குறித்து உங்கள் எண்ணங்கள் யாவை?

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

## பகுதி 22

*நம்பிக்கையின் உயிராற்றல்*, நாம் ஏற்கனவே பார்த்தபடி, பஹாய் குழந்தைகள் வகுப்புகளின் தொடர்ச்சிக்கான உள்ளடக்கத்தை வழங்கும் பல பாடநூல்களில் ஒன்றாகும் மற்றும் இதில் சமயத்தின் மைய நாயகர்களைப் பற்றிய வெளிப்படையான குறிப்புகள் இருக்கும். நாங்கள் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளபடி வாழ்க்கையின் ஒரு கட்டமான வளரிளம் பருவத்தின் போது ஒரு தனிநபர் தத்துவ ரீதியான கேள்விகளைக் குறிப்பாக மனிதப் பிறவியின் நோக்கம் மற்றும் இயல்புடன் தொடர்பு கொண்ட கேள்விகளை ஆய்வு செய்வதில் பெரிதும் ஆர்வம் கொண்டிருப்பார்கள். *நம்பிக்கையின் உயிராற்றல்* "மனிதப் பிறவியாக இருப்பது என்றால் என்ன?" எனும் கேள்வியுடன் துவங்குகின்றது. இக்கேள்விக்கான பதிலைக் காண்பதற்கு முயற்சிக்கும் வேளையில், ஒன்றுக்கொன்று தொடர்புடைய பல கருத்துகளின் வரிசைகளை இந்நூலின் வெவ்வேறு பாடப்பிரிவுகள் ஆய்வு செய்கின்றன, அவை: மனிதனின் உன்னதத்தன்மை, மனிதனின் மேல் இயல்பு மற்றும் கீழ் இயல்பு, தீமை என்பதின் இல்லாமை, தன்தேர்வாற்றல், தன்விருப்பாற்றல், விதி, நுண்ணறிவு சக்தி, அறிவியல் ஆய்வு, பௌதீகப் பரிணாமம், மனித உயிராற்றல், மற்றும் இறுதியாக, நம்பிக்கை உயிராற்றல்.

*உறுதிப்பாட்டின் தென்றல்களில்* செய்தது போல், நீங்கள் இந்த பாடநூலை ஒரு முறை படித்தும், பிறகு "பிரதிபலித்தல்கள்" என குறிப்பிடப்பட்டுள்ள பகுதிகளின்பால் குறிப்பான கவனம் செலுத்தி மறுபடியும் படிக்க வேண்டும். அவ்வாறு செய்த பிறகு இந்த நூல் தன் குறிக்கோளை எவ்வாறு அடைகின்றது என்பதைப் பின்வரும் கேள்விகளுக்குப் பதிலளிப்பதன் வாயிலாக ஆய்வு செய்யுங்கள்.

1. பஹாவுல்லாவின் திருவாசகங்களிலிருந்து பல பத்திகள் பாடம் 1ல் மேற்கோளிடப்பட்டுள்ளது, அதில் வழங்கப்பட்டுள்ள காட்சிகள் தங்களின் உண்மையான அடையாளம் குறித்து சிந்திக்க இளைய இளைஞர்களுக்கு உதவும். இதன் தொடர்பில் ஒவ்வொரு காட்சியும் என்ன உட்பார்வைகளை வழங்குகின்றது? பாடத்திலுள்ள ஒவ்வொரு பிரதிபலிப்பும் அந்த கருப்பொருளை பற்றிய புரிந்துணர்வை எவ்வாறு மறுபலப்படுத்துகின்றது? ________________

   ____________________________________________________________________________

   ____________________________________________________________________________

   ____________________________________________________________________________

   ____________________________________________________________________________

2. பாடம் 2ன் முதல் பாகத்திலிருந்து இறைவனின் படைப்பு மற்றும் மனித உன்னதத்தன்மை குறித்து இளைய இளைஞர்கள் எவ்வாறு ஒரு மதிப்புணர்வைப் பெறுகின்றனர்? ___________

   ____________________________________________________________________________

   ____________________________________________________________________________

   ____________________________________________________________________________

3. அந்த பாடத்தின் முதல் பிரதிபலிப்பு நடவடிக்கை தங்கள் வாழ்க்கையில் உன்னதத்தன்மை குறித்த கருத்தாக்கம் பயன்படுத்தப்படுவதை அவர்கள் காண்பதற்கு எவ்வாறு உதவுகின்றது?

   ____________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

4. பாடத்தின் அடுத்த பகுதியில் மக்கள் தங்களை கீழ்மைப் படுத்திக்கொள்வதற்கான முக்கிய காரணத்தை அவர்கள் சிந்திக்கின்றனர். அது என்ன? ________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

5. மனிதனின் உயர்வான மற்றும் தாழ்ந்த இயல்புகளைப் பற்றிய இந்த சுருக்கமான ஆய்விலிருந்து ஒரு இளைய இளைஞர் எத்தகைய புரிதலைப் பெறுவார் என்று நீங்கள் நம்புகிறீர்கள்? ________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

6. இப்பாடத்தின் இரண்டாவது பிரதிபலிப்பின் வாயிலாக தங்கள் மேல் இயல்பின் மேம்பாடு குறித்து இளைய இளைஞர்கள் என்ன கற்றுக்கொள்கின்றனர்? ________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

7. தங்களின் கீழியல்பு ஒரு தீயநிலை அல்ல என்பதை அறிந்துக் கொள்வதானது ஒவ்வொரு முறையும் தாங்கள் தவறுகள் செய்யும் போது குற்ற உணர்வை தவிர்க்க இளைய இளைஞர்களுக்கு எவ்வாறு உதவுகிறது? இந்த கருப்பொருளை பற்றிய புரிதலை ஆழப்படுத்த உதவுவதற்கு என்னென்ன உதாரணங்கள் பயன்படுத்தப்பட்டன? ____________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

8. 2வது பாடத்தின் பிற்பகுதி, குறிப்பாக இறுதிப் பிரதிபலிப்புகள் இரண்டும், கீழியல்பின் தூண்டுதல்களை எவ்வாறு கட்டுப்படுத்துவது என்பது குறித்து என்ன உட்பார்வைகளை வழங்குகின்றன? ______________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

9. 3வது பாடத்தில் விவரிக்கப்பட்டுள்ள விருப்பாற்றல் குறித்த கருத்தாக்கம் எவ்வாறு கையாளப்பட்டுள்ளது? அப்பாடத்தில் ஆரம்பத்தில் வர்ணிக்கப்பட்டுள்ள சூழ்நிலை இளைஞர்களின் வாழ்க்கைக்குப் பொருத்தமுள்ளளதாக நீங்கள் நினைக்கிறீர்களா? ________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

10. தங்களின் மேலியல்பு குறித்த மேம்பாட்டில் தன்தேர்வாற்றலின் பங்கு குறித்து பாடம் 3ல் இளைய இளைஞர்கள் என்ன கற்றுக்கொள்கின்றனர்? ________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

11. இளைய இளைஞர்கள் தங்கள் வாழ்க்கையின் எக்கட்டங்களில் தன்தேர்வாற்றலைத் தாங்கள் செயல்படுத்த முடியும் என்பது குறித்துக் கண்டுகொள்கின்றனர்? தங்களின் தன்தேர்வாற்றலிற்கு எல்லையுண்டு என்பதை அவர்கள் புரிந்து கொள்வது ஏன் முக்க

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

12. பாடத்தின் இரண்டாம் பிரதிபலிப்பில் இருந்து தங்களின் தன்தேர்வாற்றலின் இயக்கம் குறித்து அவர்கள் என்ன உட்பார்வைகளை பெறுகின்றனர்? ____________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

13. மற்றவர்களைத் தங்கள் சுய கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருவதற்கும் அவர்கள் மீது ஒரு பயன்மிக்க செல்வாக்குச் செலுத்துவதற்குமிடையிலுள்ள வேறுபாட்டை இளைய இளைஞர்கள் கண்டுகொள்வது ஏன் முக்கியமாகின்றது? மூன்றாவது பிரதிபலிப்பின் போது உருவாகும் கலந்தாலோசனைகள் தங்கள் சுற்றுச்சூழலின் மீது பயன்மிக்கத் தாக்கம் விளைவித்திட எவ்வாறு அவர்களுக்கு உதவுகின்றன என நீங்கள் நினைக்கின்றீர்கள்?

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

14. விதி குறித்து இளைய இளைஞர்களுக்கு பாடம் 3 என்ன கற்றுக்கொடுக்கின்றது? __________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

15. விதியின் இயல்பு தொடர்பான எந்தத் தப்பெண்ணத்தை இப்பாடம் அகற்ற முயலுகிறது?

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

16. இளைய இளைஞர்கள் வாழ்க்கையில் தங்களின் சொந்த முயல்வுகளின் மதிப்பு மற்றும் தெய்வீக உதவியின் ஆற்றல் குறித்த ஒழுங்கான கண்ணோட்டத்தை அடைந்திட பாய்மரக்கப்பல் குறித்த உருவகம் எந்த அளவுக்கு உதவுகின்றது? ________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

17. பாடம் 4ன் முதல் பாகம் இளைய இளைஞர்கள் இயற்கையின் வரம்பெல்லையை கண்டறிய எவ்வழியில் உதவுகின்றது? ____________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

18. மனிதர்கள் இவ்வரம்புகளை விஞ்சும் வழிகள் குறித்து பாடம் என்ன கூறுகிறது? ___________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

19. விஞ்ஞானம் மனிதகுலம் அனைவருக்கும் சொந்தமானது என்கிற வாதம் பாடத்தில் முன்வைக்கப்படுகிறது. இது எம்மாதிரியான வாதம்? ___________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

20. பாடம் 4-ல் மேற்கோள் காட்டப்பட்ட விஞ்ஞானம் தொடர்பான பத்தியில், "கடவுள் இந்த யதார்த்தத்தின் அன்பை மனிதனில் உருவாக்கினார் அல்லது உள்ளே வைத்திருக்கிறார்"

என்று கூறப்பட்டுள்ளது. இளைய இளைஞர்களுக்குள் இந்த யதார்த்த அன்பை வளர்ப்பது எவ்வளவு முக்கியமாகிறது? ______________________________________________

______________________________________________________________

______________________________________________________________

______________________________________________________________

21. இளைய இளைஞர்களுக்கு அவதானிப்பின் ஆற்றல் எவ்வாறு விவரிக்கப்படுகின்றது? ______

______________________________________________________________

______________________________________________________________

______________________________________________________________

22. பாடம் 4ல் வழங்கப்பட்டுள்ள உதாரணம் அறிவியல் மேம்பாட்டில் அவதானிப்பு மற்றும் ஆராய்வின் பங்கை மதித்துணர்வதற்கு எவ்வாறு உதவுகின்றது? ____________________

______________________________________________________________

______________________________________________________________

______________________________________________________________

23. அவர்கள் வாழ்வின் ஒவ்வொரு அம்சத்திலும் அவர்களின் அவதானிப்பு சக்தியை பயன்படுத்த முடியும் என்று பாடம் சுட்டிக்காட்டுகின்றதா? மூன்றாவது பிரதிபலிப்பில் கேட்கப்படும் கேள்விகள், இந்த சக்தியை பயன்படுத்த உற்சாகப்படுத்தும் அக்கேள்விகள், அனைத்தும் மனிதனின் மேலியல்பு மீது ஏன் கவனம் செலுத்துவதாக நீங்கள் நினைக்கிறீர்கள்? ______________________________________________________

______________________________________________________________

______________________________________________________________

______________________________________________________________

24. நான்காவது பிரதிபலிப்பில் வழங்கப்பட்டுள்ள உதாரணங்கள் வாழ்வின் ஒவ்வொரு அம்சத்திலும் ஆராய்ந்திட பயன்படுத்தப்பட முடியாது எனச் சுட்டிக்காட்டுகின்றன. இக்கோட்பாட்டின் தனிச்சிறப்பை இளைய இளைஞர்கள் மதித்துணர அவை எவ்வாறு உதவுகின்றன? _________________________________________________________

______________________________________________________________

______________________________________________________________

______________________________________________________________

25. உயிரிணங்களின் பரிணாம வளர்ச்சியின் மிகவும் பலக்கிய குறித்து உட்பார்வைகளைப் பெற்றிட பாடம் 5 மற்றும் 6ல் பயன்படுத்தப்பட்டுள்ள பல்வேறு உதாரணங்கள் இளைய இளைஞர்களுக்கு எவ்வாறு உதவுகின்றன? ____________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

26. இப்பரிணாமச் செயற்பாட்டில் மனித ஆவியின் தோற்றம் எவ்வாறு விவரிக்கப்படுகின்றது?

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

27. பாடம் 6ல் உயிர்ப்பூட்டுனர், நட்டாலியா பெட்ரொவ்னா, அப்துல்-பஹாவின் திருவாசகங்களில் இருந்து இரு மேற்கோள்களை கதையில் வரும் இளைய இளைஞர்களுக்கு வாசித்துக் காட்டிய பிறகு அதனை படித்து புரிந்துக் கொள்ள அவர்களுக்கு உதவுகிறார். அதனை அவர் எவ்வாறு செய்கிறார் என்பதற்கான எந்த ஒரு அறிகுறியும் இல்லை. மேற்கோள்களை நீங்கள் எவ்வாறு விளக்குவீர்கள்? ____________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

28. பாடம் 7ன் முதல் பகுதியில் வர்ணிக்கப்பட்டுள்ள மனித ஆவியின் தனிச்சிறப்பம்சம் என்ன?

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

29. விழிப்புணர்வுத்தன்மை இப்பாடத்தின் முதல் பிரிதிபலிப்பில் எவ்வாறு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது? இளைய இளைஞர் வாழ்க்கைக்கு பிரதிபலிப்பு நடவடிக்கையின் இவ்விரண்டு பயிற்சி குறிப்புகளும் பொருத்தமுடையவையா? ____________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

30. எவ்வாறு மனித மன சக்தி மேலியல்பின் கருவியாக ஆகக்கூடும்? இரண்டாவது பிரதிபலிப்பில் செய்யப்பட்டுள்ளது போல், முரண்பாடுகளை வழங்குவது, மனித அறிவாற்றல் வழிகாட்டப்பட வேண்டும் என்பதன் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுவதற்கு ஒரு பயனுள்ள வழியாக இருக்குமா? ____________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

31. நம்பிக்கையின் உயிராற்றல் என்றால் என்ன? ____________________________________________

____________________________________________________________________________________

____________________________________________________________________________________

____________________________________________________________________________________

32. பாடம் 7ன் வரும் கடைசி இரண்டு பிரதிபலிப்புகள் இளைய இளைஞர்கள் தங்கள் வாழ்க்கைகளில் நம்பிக்கையின் உயிராற்றலின் செயற்பாட்டைக் கண்டுகொள்ள எவ்வாறு உதவுகின்றன? ____________________________________________________________________

____________________________________________________________________________________

____________________________________________________________________________________

____________________________________________________________________________________

## பகுதி 23

*நம்பிக்கையின் உள்ளாற்றலின்* இதயத்தில் இருப்பது அறிவியல் மற்றும் சமயங்களுக்கிடையிலான இணக்கம் என்ற கோட்பாடாகும். மனித வாழ்வில் இந்த ஆழமான கோட்பாட்டின் தாத்பரியங்கள் வரப்போகும் வருடங்களில் உங்களுடைய தொடர்ச்சியான பிரதிபலிப்புகளின் நோக்கமாக இருக்கும், மேலும் நீங்கள் தொடர்ந்து கற்றல், செயல், கலந்துரையாடல் மற்றும் அனுபவத்தின் மீது பிரதிபலித்தல் மூலம் அதன் செயல்பாட்டை பற்றிய புது உட்பார்வைகளை நீங்கள் பெறலாம். கலந்துரையாடலுக்காக, சமயம் மற்றும் அறிவியலுக்கிடையிலான உறவு குறித்த கூற்றுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன, இது உங்களுக்கு உதவக்கூடிய சில பயனுள்ள விவரங்களை வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனைப் படித்து கீழ்வரும் பயிற்சி குறிப்புகளை பூர்த்தி செய்யவும்.

*கோட்பாடு ரீதியில், சமயம் மற்றும் அறிவியலுக்கிடையில் பல விதமான உறவுமுறைகள் இருக்கக்கூடும். உதாரணமாக, ஆன்மீக இயல்நிகழ்ச்சிகள் குறித்து சமயம் உரைத்திடும் உண்மை எதுவும் அறிவியலால் ஒரு நாள் விளக்கப்படுத்தப்படக்கூடும் என கூறப்படலாம் மற்றும் மனித அனுபவத்தின் ஓர் அதி அவசிய அம்சமான சமயம், பல மர்மங்களுக்குப் பாதி விளக்கங்களையே வழங்குகின்றது, பின்னாளில் அறிவியல் மேம்பாடு காணும்போது அவை புரிந்துகொள்ளப்படலாம். சமயம் என்பது கடவுளின் திருவெளிப்பாட்டின் விளைவு என்பதாலும், கடவுள் யாவற்றையும் அறிந்தவர் என்பதாலும், கண்டறிவதற்கு சில வேளைகளில் கடினமாக இருந்தாலும் சமயம் அனைத்து உண்மைகளையும் ஏற்கனவே உள்ளடக்கியுள்ளது என வாதிடலாம். உறுதியாகவே, முதலாம் கருத்து சமயம் சார்ந்தவர்களால் நிராகரிக்கப்படலாம், ஏனெனில், அது சமயத்தின் உருவாக்கத்தில் கடவுள் மற்றும் திருவெளிப்பாட்டின் பங்கைக் குறைத்திடுவதாகக் காணப்படும். இரண்டாவது கருத்து கடவுளின் அவதாரத்திடம் உள்ள அறிவையும் அவர் வெளிப்படுத்தியதை படிப்பதன் மூலம் மனிதர்களாகிய நாம் என்ன புரிந்துகொள்ள முடியும் ஆகிய இரண்டையும் குழப்பிக் கொள்வதைப் போலத் தெரிகிறது.*

*மற்றொரு சாத்தியம் என்னவென்றால், சமயமும் அறிவியலும் முற்றிலும் தனித்திருப்பவை என்பதால் அவற்றுக்கிடையில் மிகவும் குறிப்பிடத்தக்க முரண்பாடு ஏற்படுவதற்கு வழியே இல்லை என வாதிடப்படலாம். அறிவியல் பௌதீகப் பிரபஞ்சத்தை ஆராய்கின்றது. அது உருவாக்கும் அறிவானது தொழில்நுட்பத்தின் முன்னேற்றத்திற்கு அடிப்படையாகிறது, தொழில்நுட்பத்தை மனுக்குலத்தின் நன்மை அல்லது அதன் தீமைக்கும் பயன்படுத்தப்படலாம், நாகரிகத்தின் உருவாக்கத்திற்கு அல்லது அதன் அழிவிற்கும் பயன்படுத்தப்படலாம். அறிவியலானது, அதன் விளைப்பொருள்கள் எவ்வகையில் பயன்படுத்தப்படவேண்டும் என்பதைத் தன்னியல்பாகத் தீர்மானிக்கும் ஆற்றலைப் பெற்றிருக்கவில்லை. அதே வேளை, சமயமானது, குறிப்பாக மனிதப் படைப்பின் ஆன்மீகப் பரிமாணம் பற்றி சிந்திக்கின்றது. அதன் கடமை தனிமனிதனின் அகவாழ்க்கையின் மீது ஒளியூட்டுவதாகும் மற்றும் ஊக்கத்தின் வேரைத் தூண்டுவது, மனித நடத்தையைப் பொருத்தமான வகையில் வழிகாட்டும் நன்னெறி மற்றும் ஒழுக்கநெறி முறை ஒன்றை உருவாக்குவதாகும். இவை ஒவ்வொன்றும் அதனதன் சொந்த வட்டத்திற்குள் இருக்கும் வரை, அவையிரண்டும் ஒன்றோடு ஒன்று முரண்படுவதற்கு காரணமே இல்லை.*

*அறிவியல் மற்றும் சமயத்திற்கிடையிலான இணக்கம் குறித்த இக்கண்ணோட்டமானது, பயன்பாட்டின் அளவில் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படலாம். இறுதியில், இவ்வணுகுமுறையில், அறிவியலும் சமயமும் பிரிக்கப்பட்டு அதனதன் வழியைப் பின்பற்றிச் சென்றிட அனுமதிக்கப்படுகின்றன, மற்றும் தொழில்நுட்பம் மற்றும் ஒழுக்கநெறிக்கிடையிலான தொடர்புறவு முக்கியத்துவம் பெறுகின்றது. ஆனால் அறிவியல் மற்றும் சமயத்திற்கிடையிலான உறவு குறித்த இப்பகுப்பாய்வு விரைவில் அதன் வரம்பை அடைகின்றது, ஏனெனில், நடைமுறையில், அவை இரண்டுமே பெரும் எண்ணிக்கையிலான இயல்நிகழ்வுகளைப் புரிந்துகொள்ளவும் விளக்கிடவும் முயலுகின்றன. இது பௌதீக உலகைப் பொருத்த அளவில் அதிகம் காணப்படாவிட்டாலும், மனிதன் மற்றும் சமூகம் குறித்த ஆய்வில் இது வெளிப்படையாகத் தெரிகின்றது. மேலும், மெய்நிலையை அவை அணுகும் விதத்தில் அறிவியல் மற்றும் சமயம் இரண்டிற்கும் இடையில் பல பொதுவான விஷயங்கள் உள்ளன. உதாரணமாக, படைப்பில் ஓர் ஒழுங்கு இருக்கின்றது என இரண்டுமே நம்பிக்கைக் கொண்டுள்ளன, மற்றும் ஒரு குறிப்பிட்ட அளவிற்காவது, மனித அறிவு இந்த ஒழுங்கைப் புரிந்துகொள்ளும் ஆற்றல் பெற்றுள்ளது என நம்புகின்றன. பிரபஞ்சத்தின் இயக்கமுறையைக் கண்டறிவதில் அறிவியலின் செயல்முறைகள் பெரிதும் பயன்மிக்கவையென நிரூபித்துள்ளன. ஆனால் என்றும் தொடர்ந்து மேம்பாடு காணும் ஒரு நாகரிகத்திற்குப் பங்காற்றிட மனுக்குலத்திற்கு வழிகாட்டும் முயற்சியில் சமயமும் இவ்வழிமுறைகளையே கையாள வேண்டியுள்ளது. அறிவியலும் சமயமும் ஒன்றல்ல, ஆனால் ஒன்றுடன் ஒன்று பேசிக்கொள்ளவும், இணக்கமுறவும், செல்வாக்குச் செலுத்தவும் மற்றும் ஒன்றையன்று ஈடு செய்வதற்கும் அவற்றிற்கிடையில் பல ஒற்றுமைகளைக் கொண்டுள்ளன.*

1. மேல் காணப்படும் வாக்குமூலத்தில் விளக்கப்பட்டுள்ள அறிவியல் மற்றும் சமயத்திற்கிடையிலான உறவு அறிவியல் சமயம் இரண்டுமே ஆய்வு செய்யக்கூடிய அறிவுத் துறைகளை எதிர்நோக்குகின்றது. இவற்றுள் மனித அறிவின் சக்திகள், மனித இனத்தின் பரிணாமம், நுண்ணறிவு மற்றும் நன்னெறி மேம்பாடு ஆகியவை குறித்த விஷயங்கள் அடங்கும். *நம்பிக்கையின் உள்ளாற்றல்* நூலானது அறிவியலின் சான்றை மதித்திடும் அதே வேளையில்

சமயத்தின் ஒளி கொண்டு புரிதலுக்கு ஒளிசேர்க்க அனுமதிக்கிறது, என்பது போன்ற விஷயங்களை எவ்வாறு கையாளுகின்றது என்பதை கலந்தாலோசியுங்கள்.

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

2. அறிவியல் சமயம் ஆகியவற்றிற்கிடையிலான இணக்கம் குறித்த கோட்பாடு, பொருத்தமான நேரங்களின் போது, ஆன்மீக மற்றும் அறிவியல் கருத்தியல்களை கல்விசார்ந்த உபகரணங்கள் ஒன்றுபடுத்தக்கூடும் என்பதை எடுத்துக்காட்டுகின்றது, ஆனால் இது மேலோட்டத்தையும், ஒழுங்குமுறையின்மையையும் தவிர்க்கும் வகையில் செய்யப்படவேண்டும். அறிவை ஒன்றிணைக்கும் இத்தகைய முறை புரிதலை மேம்படுத்தித் தவறான இமைகளை அகற்றிவிடும். நீங்கள் குறிப்பாக பாடம் 5 மற்றும் 6ல் உள்ள பிரதிபலிப்புகளைக் கண்ணோட்டமிடவும்.

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

3. நீங்கள் இப்போது நம்பிக்கையின் உள்ளாற்றல் நூலை மறு ஆய்வு செய்து உண்மையைத்தேடும் மற்றும் மெய்நிலையை ஆராய விரும்பும் ஒருவருக்கு இருக்கவேண்டிய சில மனப்பான்மைகளை அந்த நூல் எந்த அளவிற்கு வளர்கிறது என்பதைத் தீர்மானிக்க விரும்பலாம். இவற்றுள் சில மனப்பான்மைகள் யாவை மற்றும் இந்த உபகரணம் அவற்றை எந்த அளவிற்கு ஆக்கபூர்வமாக ஆய்வு செய்கின்றது?

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

## பகுதி 24

இளைய இளைஞர் ஆன்மீக சக்தியளிப்பு செயல்திட்டத்தில் படிக்கப்படும் பாடநூல்கள் தொடர்பாக பகுதி 3இல் நாம் ஆரம்பித்த கலந்துரையாடல்களை இங்கு நாம் முடிக்கலாம். உறுதிப்பாட்டின் தென்றல்கள் மற்றும் நம்பிக்கையின் உள்ளாற்றல் நூல்களைப் பற்றி நாம் மேற்கொண்ட விரிவான ஆய்வு செயல்திட்டத்தின் ஒவ்வொரு நூலிலும் நாம் அடைய வேண்டிய பரிட்சயத்தின் அளவைப் பற்றிய ஒரு குறியீட்டை வழங்கியிருக்கும். நூல் 5லிருந்து வரப்போகும் கிளை பயிற்சிகளில், மற்ற பாடநூல்களைப் பற்றி இதே போன்ற கலந்துரையாடலில் நாம் நுழைவோம், அது உங்களுக்கு உதவும்; எனினும், அத்தகைய கற்றல் நடைபெறாமல் போனால் கூட, பாடநூல்களை படிக்க போதுமான நேரத்தை நீங்கள் அர்ப்பணித்து அந்நூல்கள் தங்களது இலக்கை அடைய எவ்வாறு முயற்சிக்கிறது என்பதை ஆய்வு செய்ய வேண்டும். மற்ற உயிர்ப்பூட்டுனர்களுடனான காலந்தவராத பிரதிபலிப்பு கூட்டங்கள் உபகரணத்தை பற்றிய உங்களுடைய புரிதலை ஆழப்படுத்த மிகவும் பயன்மிக்க வாய்ப்புகளை வழங்கும். அத்தகைய நிகழ்ச்சிகளின் போது , நீங்களும் உங்களுடைய சக உயிர்ப்பூட்டுனர்களும் பகிர்ந்துக்கொள்ளக்கூடிய அனுபவங்களின் களஞ்சியம் இருப்பதை கண்டு, அதிலிருந்து உங்கள் பங்கை எடுத்துக் கொள்வீர்கள். ஏனெனில், இறுதி ஆய்வில், கற்றலுக்கான கடப்பாடானது மற்றவர்களின் முயற்சிகளில் அவர்களுக்கு உதவுவதற்கான விருப்பமாக மாறும் பரஸ்பர ஆதரவு மற்றும் உதவும் சூழலை உருவாக்குவதன் மூலம் மட்டும் தான் பாடநூல்களின் திறன் முழுதாக ஆராயப்பட்டு இறுதியில் மெய்ப்படும்.

## பகுதி 25

இந்த பாடப்பிரிவில் முன்னதாக குறிப்பிடப்பட்டதாவது, உபகரணங்களின் ஆய்வுக்குக் கூடுதலாக, இளைய இளைஞர்கள் சேவை நடவடிக்கைகள், விளையாட்டுகள் மற்றும் குறிப்பாக அவர்களின் உள்ளூர் கலாச்சாரத்தைச் சார்ந்த பல்வேறு கலை மற்றும் கைவினைக் கலைகளில் ஈடுபடுகிறார்கள். இந்த நூலில் இரண்டாவது பாடப்பிரிவில், இளையோர் மீது தாக்கத்தை உண்டாக்கும் சமூகச் சூழ்நிலை பற்றி ஒரளவுக்குக் கருதிட உங்களுக்கு வாய்ப்பேற்பட்டது, குறிப்பாக அதன் சில ஆபத்தான விளைவுகளைப் பற்றி நீங்கள் எச்சரிக்கப்பட்டீர்கள். இன்றைய சமுதாயத்தின் மோசமான சூழலை பற்றி அங்கு குறிப்பிடப்பட்டுள்ளதானது, சுற்றுச்சூழ்நிலைகளின் பல அம்சங்கள், ஒழுங்காகப் பயன்படுத்தப்பட்டால், வெளிப்படுத்தும் சக்திகள், சமூக செயற்பாடுகளை ஆய்வு செய்யும் ஆற்றலை மற்றும் சமூகத்திற்குச் சேவை செய்யும் விருப்ப ஆற்றலை மேம்படுத்துகின்றன என்ற உண்மையை மறைத்துவிடக்கூடாது. பின்வரும் செய்தித்தாள் கட்டுரை, சமூக நன்மையை முன்னேற்றுவதற்காக ஊடகம் எவ்வாறு பயன்பட்டுள்ளது என்ற கதையை கூறுகிறது:

குரலற்றோர்களின் குரல்

மேற்கு ஆப்பிரிக்காவில் டிரான்சிஸ்டர் வானொலி சமூகத்திற்காக இன்னமும் குரல் எழுப்பிக்கொண்டிருக்கிறது.

கினி நாட்டின் வனப்பகுதியில் ‘இன்’ஸெரெக்கோரே’ கிராம வானொலி நிலையத்தின் சிறிய ஸ்டூடியோவில் ஓர் ஒலிப்பதிவுச் சாதனத்தைச் **சுற்றி**, மூன்று இளைஞர்கள் பெண்கள் கல்விக் குறித்து கலந்துரையாடுகின்றனர்.

“பெண்கள் பள்ளிக்குச் செல்ல வேண்டும், ஏனெனில் அவர்கள் ஒரு நாளைக்குத் தாய்மார்களாக ஆகக்கூடும், மற்றும் அவர்களுக்குக் கல்வியூட்டப்பட்டால், அவர்கள் தங்கள் சொந்தக் குழந்தைகளுக்கும் கல்வியூட்டி அவர்களை நன்கு கவனித்துக்கொள்ள முடியும்,” என்றான் மோரிக்கோ காக்கே. “ஒரு பெண்ணுக்குக் கல்வியூட்டினால், நாம் ஒரு நாட்டிற்கே கல்வியூட்டுகின்றோம்,” என அவன் மேலும் அழுத்தத்துடன் கூறினான். அந்த ஒலிபரப்பு நிகழ்ச்சியின் 16 வயது ஒருங்கிணைப்பாளரான லான்சே தூரே, அவன் பெற்றோர் அவன் பள்ளிச் செல்வதை நிறுத்திவிட்டு வயலில் வேலைச் செய்வதை விரும்பிய போதிலும், அவன் அதை ஆமோதிக்கும் வகையில் தலையாட்டுகின்றான்.

லைபீரியா மற்றும் ஐவரி கோஸ்ட்டின் எல்லைகளுக்கு அருகேயுள்ள அண்டைய கிராமங்களுக்கு அந்த இளைஞர்களின் தெளிவான மற்றும் நாவன்மை மிக்க விவாதங்கள் ஒலிபரப்பப்படுகின்றன. அது அந்திப் பொழுது, மண்ணெண்ணெய் விளக்குகள் குடிசைகளுக்குள் எரிந்துகொண்டிருந்தன. கிராமத்தார்கள் வயல்களிலிருந்தும் சந்தைகளிலிருந்தும் வீடுதிரும்பியுள்ளனர். சமையல் செய்துகொண்டும் படுக்கச் செல்வதற்கு ஆயத்தம் செய்துகொண்டும் அவர்கள் வானொலியைச் செவிமடுக்கின்றார்கள்.

பெரும்பாலான வயது முதிர்ந்த மக்கள் படிப்பறிவின்றியும், பல குழந்தைகள் பள்ளி வசதியின்றியும், மின்சாரம் என்பது அரிதான ஒன்றாகவும் இருக்கும் கினியா போன்ற நாடுகளில் மின் இயந்திரத்தின் மின்சக்தியைக் கொண்டு இயங்கும் சமூக வானொலி நிலையங்கள் ஜீவநாடிகளாக விளங்குகின்றன.

“வானொலியே இங்கு சகலமும் ஆகும்,” என்றார் இன்’ஸெரெக்கோரே கிராம வானொலி நிலையத்தின் நிகழ்ச்சி இயக்குனரான க்னூமா கமாரா, அந்த வானொலி நிலையம் வாரத்திற்கு ஆறு நாட்கள் ஐந்து பிராந்திய மொழிகளுள் ஒன்றிலும், பிரஞ்சு மொழியிலும் 100 கிலோமீட்டர் சுற்றுவட்டத்திற்குள் ஒலிபரப்பு செய்கின்றது. மூன்றில் இரண்டு குடும்பங்கள் டிரான்சிஸ்டர் வைத்திருக்கின்றார்கள், மற்றும் வானொலி நிலையம் அதிகாலையிலும் மாலையிலும் ஒலிபரப்பு செய்யும்போது கிராமம் முழுவதும் செவிமடுக்கின்றது.

“நாங்கள் அவர்களின் மொழியிலேயே பேசுகின்றோம், அவர்களின் பாரம்பரியங்கள் மற்றும் மரபுகளை நாங்கள் அறிந்துவைத்திருக்கின்றோம், அவர்களின் செய்திகளை நாங்கள் ஒலிபரப்புகின்றோம், பிறப்பு இறப்புகளை அறிவிக்கின்றோம், விவசாயம், உழவு மற்றும் சமூக பிரச்சினைகள் சம்பந்தமான விஷயங்களை நாங்கள் கலந்தாலோசிக்கின்றோம்." மேலும் "சமூகத்தின் குரலாக நாங்கள் விளங்குகின்றோம். குரலற்றோரின் குரலாக,"... என்றார் கமாரா

“குழந்தைகளே நடத்துவதனால் நான் இந்த நிகழ்ச்சிகளைச் செவிமடுக்கின்றேன் மற்றும் அவர்கள் என் மொழியிலேயே பேசுகின்றனர்,” என்றார் உள்ளூர் மொழியான பூலார் மொழி பேசும் 15 வயதுடைய மமாடூ மாலிக்... “நிகழ்ச்சிகள் ஆரம்பிக்கும்போது, நான் என் சகோதர சகோதரிகள்

அனைவரையும் அழைத்து ஒன்றாகச் செவிமடுப்போம். அதன் மூலமாக நான் நிறைய கற்றுக்கொண்டுள்ளேன்.”

"பெற்றோர்களும் சமூகத் தலைவர்களும் இதைச் செவிமடுக்கின்றனர்," என்றார் கமாரா. “எங்கள் கலாச்சாரத்தில் குழந்தைகள் கூறுவதை யாரும் கேட்கமாட்டார்கள், ஆனால் இப்போது முதியவர்களும் அவர்களின் குரலைச் செவிமடுக்க ஆரம்பித்துள்ளனர். குழந்தைகள் தங்கள் பெற்றோர்களுக்கு அடிப்படை சுகாதாரம் பற்றி ஆலோசனை கூறுகின்றனர், உதாரணமாக... ஒரு தகப்பன் தன் பிள்ளையை அடிக்கும்போது அவரது அண்டையினர், 'நீர் வானொலியைச் செவிமடுப்பதில்லையா?' எனக் கூறுகிறார்கள்."

இன்றைய சமூகச் சுற்றுச்சூழலின் பல்வேறு அம்சங்கள் தங்களின் சமூகத்திற்கான சேவையின்பால் இளைஞர்களின் கலைத்திறன்களையும் செயல்திறன்களையும் வழிகாட்டக்கூடிய கணக்கிலடங்கா வழிகளில் ஒரு வழியை மட்டும் இக்கதை குறித்துக்காட்டுகின்றது. இசை, ஊடகங்கள் மற்றும் தொழில்நுட்பங்கள் உலகின் எல்லா பாகங்களிலும் உள்ள இளையோர்களின் வாழ்க்கைகளில் தாக்கம் செலுத்துகின்றன. உங்கள் குழுவின் உயிர்ப்பூட்டுனர் எனும் முறையில், இந்த சக்திமிக்க அம்சங்கள் குறித்து விழிப்போடு இருந்து இளைய இளைஞர்கள் அவற்றை பயன்படுத்தி பொருத்தமான நடவடிக்கைகளை உருவாக்க உதவ கற்றுக் கொள்ள வேண்டும். உங்களுடைய சமுதாய சுற்றுசூழலை பற்றி நீங்கள் சிந்தித்து பாருங்கள். கீழ்வருபவற்றைக் கொண்டு உங்கள் இளைய இளைஞர்கள் வேலை செய்ய அது என்னென்ன சாத்தியங்களை திறக்கும்? உங்கள் சிந்தனைகளை உங்கள் குழுவில் கலந்துரையாடி, உங்களுடைய சில சிந்தனைகளை கீழுள்ள காலியிடங்களில் எழுதவும்.

இசை: ______________________________________________________________

______________________________________________________________

______________________________________________________________

______________________________________________________________

______________________________________________________________

______________________________________________________________

ஊடகம்: ______________________________________________________________

______________________________________________________________

______________________________________________________________

______________________________________________________________

______________________________________________________________

______________________________________________________________

தொழில்நுட்பம் ______________________________________________________________

______________________________________________________________

______________________________________________________________

______________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

## பகுதி 26

இளைய இளைஞர்கள் தங்களின் சொந்த மேம்பாட்டிற்குத் தாங்களே பொறுப்பேற்று தங்களின் சமூகத்தின் மேம்பாட்டிற்குப் பங்காற்றிட ஆற்றலளிக்கப்படவேண்டுமானால், அவர்கள் தங்கள் சொந்தக் குழுக்களுக்கான பயன்மிக்க நடவடிக்கைகளை அமுல்படுத்துவதில் மட்டும் பங்கெடுத்தால் போதாது, அதனை வடிவமைப்பதிலும் முழுமையாகப் பங்கேற்க வேண்டும். சேவைத் திட்டங்கள் மற்றும் கலைகள் மற்றும் கைவினைகளுக்கு மேலதிகமாக, சில நடவடிக்கைகள், எடுத்துக்காட்டாக, ஒன்று அல்லது மற்றொரு பாடநூலின் நிறைவைக் கொண்டாடும் சிறப்புக் கூட்டங்களை உள்ளடக்கியிருக்கலாம், இதில் இளைய இளைஞர்கள் வியத்தகு விளக்கக்காட்சிகளை உருவாக்குகிறார்கள், பாடல்களைப் பாடுகிறார்கள், கவிதைகளை வாசிக்கிறார்கள், உரைகள் ஆற்றுகிறார்கள். தங்களின் நுண்ணறிவு மற்றும் ஆன்மீக ஆற்றல்களுக்குப் பயிற்சியளிக்கக்கூடிய நடவடிக்கைகளை வடிவமைத்து செயல்படுத்தும் நடவடிக்கைகளில் பங்கேற்றிட உங்களது இளைய நண்பர்களை எவ்வாறு ஊக்குவிப்பது, சேவையின் மூலம் அவர்களின் திடநம்பிக்கைகள் சிலவற்றைச் நடைமுறைச் செயல்களாக எவ்வாறு மாற்றுவது, மற்றும் சீர்சிறப்பை நோக்கிய அவர்களின் முயல்வுகளை மறுவுறுதிப்படுத்துவது போன்றவற்றை மற்ற பிற உயிர்ப்பூட்டுனர்களோடு சேர்ந்து கலந்துரையாடுவதில் நீங்கள் எப்போதுமே விருப்பம் கொண்டிருப்பீர்கள். உங்களுடைய சக உயிர்ப்பூட்டுனர்களுடன் நீங்கள் கருத வேண்டிய கேள்வி வகைகள் பின்வருவனவற்றை உள்ளடக்கியுள்ளன: சேவை நடவடிக்கையை வகுத்து அவற்றை செயல்படுத்தி, அது மடிப்பவிழும் விதத்தை பிரதிபலிக்க இளைய இளைஞர்களுக்கு நீங்கள் எவ்வாறு உதவுவீர்கள்? இளைய இளைஞர்களுக்கு கதை எழுதவும், எளிய நாடகங்களை நடத்தவும் எப்படி உதவுகிறீர்கள்?

கலை சார்ந்த நடவடிக்கை பற்றிய கலந்துரையாடலில் ஈடுபடுவதற்கான தருணம் இதுவல்ல என்றாலும், அத்தகைய நடவடிக்கை, கலாச்சாரத்தின் வெளிப்பாடாக இருப்பதால், தனக்கென்று சில நெறிகளை அது தன்னுடன் சுமந்து வருகிறது என்பதை பற்றி விழிப்போடு இருப்பது உங்களுக்கு முக்கியமாகும். அவ்வாறானால், இயல்பாகவே, ஒரு கல்வியளிப்பு செயல்முறை மீது பெரிதும் அது தாக்கத்தை செலுத்தும். இளைய இளைஞர் குழுவின் உயிர்ப்பூட்டுனராக, உங்கள் இளைய நண்பர்கள் பொருத்தமான கலை முயற்சிகளை அடையாளம் காணவும், அவர்கள் ஈடுபட்டிருக்கும் கல்வியளிப்பு செயல்முறைக்கு முரண்படும் நெறிகளை தெரியாமல் திணிப்பதை தவிர்க்கவும் உதவுவதில் நீங்கள் கவனம் செலுத்த விரும்புவீர்கள்.

## பகுதி 27

பத்து முதல் பதினைந்து உறுப்பினர்களைக் கொண்ட இளைய இளைஞர்களின் குழுவானது பெரும்பாலும் ஒரு சில நபர்களுடன் தொடங்குகிறது, அவர்கள் ஒரு உயரிய இலக்கிற்காகத் தங்கள் நண்பர்களைத் திரட்டும் திறனை வெளிப்படுத்தியிருக்கின்றனர். இந்த இளைஞர்கள் மற்றவர்களை

சேர ஊக்குவிக்கும் போது, அவர்கள் தொடர்ந்து உயிர்ப்பூட்டுனரை சந்திக்கத் தொடங்குவார்கள். அண்டைப்புறத்திலோ அல்லது கிராமத்திலோ பணிபுரியும் நண்பர்களின், குறிப்பாக பயிற்சியகத்தின் முதல் சில பயிற்சிகளில் முன்னேறிக்கொண்டிருப்பவர்களும், தங்களது பதின்ம வயதின் மத்தியில் அல்லது பின்பகுதியில் இருப்பவர்களுமான அந்த இளைஞர்களின விரிவடைந்து வரும் மையக்கருவின் உதவியுடன் ஒரு குழுவின் அங்கத்துவம் உறுதிபடுத்தப்படலாம். உலகின் சில பகுதிகளில், குழுக்களை முறைப்படி நிறுவுவதற்கு முன், ஒரு கிராமம் அல்லது சுற்றுப்புறத்தைச் சேர்ந்த இளம் உறுப்பினர்களை தொடர்ச்சியான நிகழ்வுகளுக்கு அழைப்பது ஒரு பயனுள்ள அணுகுமுறையாக நிரூபிக்கப்பட்டுள்ளது. மற்றொன்று இத்திட்டத்தை ஒரு பள்ளிக்கு அறிமுகப்படுத்துவது. பள்ளி அந்த யோசனைக்கு ஏற்புத்தன்மையைக் காட்டும்போது, அதற்கேற்ற தரநிலைகளின் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட விளக்கக்காட்சிகள் பொதுவாக பல இளைய இளைஞர் குழுக்கள் உருவாகும் விளைவினை ஏற்படுத்துகின்றன. அப்படியாக, அவர்கள் பள்ளி வளாகத்தில் சந்தித்தாலும் இல்லாவிட்டாலும், இத்திட்டத்தைப் பாடத்திட்டத்தை சாராத ஒரு நடவடிக்கையாக மேற்கொள்ளலாம். பள்ளியானது, இரண்டு நிலைகளிலும், அதன் மாணவர்களின் நல்லொழுக்க மற்றும் அறிவுசார் திறன்களின் சிறந்த வளர்ச்சிக்குத் திட்டத்தின் மதிப்புமிக்க பங்களிப்பினை அங்கீகரிக்கிறது.

உங்கள் சொந்த சூழ்நிலைகளைப் பற்றி சிந்தித்து, ஒரு இளைய இளைஞர் குழுவை உருவாக்க உதவும் ஆர்வமுள்ள உயிர்ப்பூட்டுனராக நீங்கள் பின்பற்றக்கூடிய சில அணுகுமுறைகளை விவரிக்கவும்.

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

## பகுதி 28

ஒரு துடிப்பான இளைய இளைஞர் குழுவை பராமரிப்பதற்கான ஒரு முக்கியமான தேவையானது பெற்றோருடன் நம்பிக்கை மற்றும் நட்புடன் கூடிய உறவை உருவாக்குவதாகும். உயிர்ப்பூட்டுனர்கள் குழுக்கள் உருவாவதற்கு முன்னரோ அல்லது அதற்குப் பின்னரோ பெற்றோரைச் சந்தித்து, திட்டத்தின் நோக்கத்தை அவர்களுக்கு விளக்க வேண்டும். அவர்கள் தொடர்ந்து ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று, இளைய இளைஞர்களின் உயர்ந்த லட்சியங்கள் மற்றும் திறனாற்றல்கள் மற்றும் அவர்களின் ஆன்மீக சக்தியூட்டும் திட்டத்திற்கு வடிவம் கொடுக்கும் கருத்துக்கள் மற்றும் அணுகுமுறைகள் பற்றி - புத்தகம் 2 இன் மூன்றாவது பாடப்பிரிவில் கோடிட்டுக் காட்டப்பட்ட ஆனால் இங்கே மிக அதிகமாக ஆராயப்பட்ட விவரங்களை அதன் உறுப்பினர்களுடன் கலந்துரையாட வேண்டும் இத்தகைய விஜயங்கள் அவர்தம் மகன்கள் மற்றும் மகள்களின் நல்வாழ்வு மற்றும் முன்னேற்றம் குறித்து பெற்றோருடன் கலந்தாலோசிக்க ஒரு வாய்ப்பினை வழங்குகின்றன. பெரும்பாலும், நூல் 2 இல்

பரிந்துரைக்கப்பட்டுள்ளபடி, உயிர்ப்பூட்டுனர்கள் திட்டத்தில் படித்த ஒன்று அல்லது இரண்டு நூல்களை பெற்றோருக்குக் காண்பிப்பார்கள், இதனால் அவர்கள் தங்கள் இளைஞர்கள் என்ன கற்றுக்கொள்கிறார்கள் என்பதைப் பார்க்க முடியும். ஒவ்வொரு உயிர்ப்பூட்டுனரும் பல மாதங்களுக்கு பெற்றோருடன் இத்தகைய நட்பை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்றாலும், முதல் சில விஜயங்களில் அவன் அல்லது அவள் கூடுதல் அனுபவம் வாய்ந்த ஒரு நபருடன் வரக்கூடும்.

ஆன்மீக சக்தியூட்டும் திட்டத்தில் இளைஞர்களின் பெற்றோருடன் தொடர்ந்து உரையாடுவதற்கான அடிப்படையை உருவாக்கும் கருத்துகளை உங்களுக்கு நினைவூட்டுவதற்காக, நூல் 2 இன் மூன்றாவது பாடப்பிரிவின் பிரிவு 14 க்குத் திரும்பிட நீங்கள் ஊக்குவிக்கப்படுகிறீர்கள். பின்னர், இந்தப் பாடத்திட்டத்தில் பங்கேற்பவர்களுடன், உங்கள் கிராமத்திலோ அல்லது அண்டைப்புறத்திலோ இளைய இளைஞர்களின் குடும்பங்களைப் பார்வையிடுவதில் பெற்ற அனுபவத்தைப் பற்றி விவாதிக்கவும். இந்தப் புத்தகத்தைப் பற்றிய உங்கள் ஆய்வில் இருந்து என்ன கூடுதல் யோசனைகள் அத்தகைய விஜயங்களின் போது உரையாடலை மேம்படுத்திடும்?

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

## பகுதி 29

தொடக்கத்தில் இளைய இளைஞர்கள் குழுவில் ஒரு உயிர்ப்பூட்டுனர் தொடங்கும் உரையாடல்கள் குறிப்பாக முக்கியத்துவம் வாய்ந்தவை. முதல் மூன்று அல்லது நான்கு கூட்டங்களில், உறுப்பினர்கள் குழுவின் நோக்கத்தை முழுமையாக விவாதிப்பது மற்றும் அவர்கள் கூட்டாக நிறைவேற்ற விரும்பும் சில இலக்குகளை அடையாளம் காண்பது அவசியம். அவர்கள் மேற்கொள்ள விரும்பும் நடவடிக்கைகளின் தன்மை குறித்தும் சில முடிவுகளை எட்ட வேண்டும். இந்தக் கூட்டங்களில் பேசப்படும் பாடங்கள் குழுவிற்குக் குழு மாறுபடலாம். ஆயினும்கூட, "சீர்சிறப்பு" மற்றும் "சேவை" போன்ற சில கருத்துக்கள் உள்ளன, அவை எல்லா கூட்டங்களிலும் வலியுறுத்தப்பட வேண்டும். கீழே உள்ள

புள்ளிகள் உங்களுக்கு உதவலாம், பின்னர், நீங்கள் உருவாக்க உதவும் குழுக்களின் உறுப்பினர்களுடன் நீங்கள் நடத்தும் முதல் சில உரையாடல்களை ஒழுங்கமைக்க உதவும். இந்த பாடத்திட்டத்தில் உங்கள் சக பங்கேற்பாளர்களுடன் நீங்கள் ஒவ்வொன்றையும் முழுமையாக ஆராய்ந்து, விரைவில் நீங்கள் ஈடுபடவிருக்கும் இளைய இளைஞர்கள் குழுவுடன் கலந்துரையாடலை எவ்வாறு அணுகுவீர்கள் என்பது பற்றிய உங்கள் ஆரம்ப சிந்தனைகளில் சிலவற்றை எழுதவும்.

- பல உயிர்ப்பூட்டுனர்கள் இளைய இளைஞர்கள் குழுவை ஆன்மீக மற்றும் அறிவுசார் சீர்சிறப்பினை விரும்பும் ஒரு இடமாக பார்க்க ஊக்குவிப்பது உதவியாக உள்ளது. ஆன்மீக மேன்மைக்காக பாடுபட, அன்பு, தாராள மனப்பான்மை, நேர்மை மற்றும் பணிவு போன்ற உயர்ந்த குணங்களை நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று அவர்கள் விளக்குகிறார்கள். அறிவார்ந்த சீர்சிறப்பிற்காக பாடுபட, நம் வாழ்க்கையையும் மற்றவர்களின் வாழ்க்கையையும் மேம்படுத்த உதவும் அறிவு மற்றும் நடைமுறைத் திறன்களை நாம் பெற்றிட வேண்டும். "ஒவ்வொரு காலையும் அதன் முந்தையநாள் மாயை விட சிறப்பாகவும், ஒவ்வொரு நாளையும் அதன் நேற்றை விட வளமானதாகவும் இருக்கட்டும்" போன்ற மேற்கோள்களைப் பிரதிபலிப்பதும், அவற்றை மனப்பாடம் செய்வதும், சீர்சிறப்பு என்கிற கருத்தை மேம்படுத்துவதில் பயனுள்ளதாக இருக்கும்.

- குழுவின் நோக்கத்தைப் பற்றி சில தெளிவுகளைப் பெற்ற பிறகு, அதன் உறுப்பினர்களுக்கு உயிர்ப்பூட்டுனரால் எந்த குறிப்பிட்ட செயல்பாடுகளில்-அறிவுசார், தடகள மற்றும் கலாச்சாரம்-அவர்கள் சீர்சிறப்பைத் தேட விரும்புகிறார்கள் என்பதைத் தீர்மானிக்க உதவலாம்.

- அறிவுசார் மற்றும் ஆன்மீக சீர்சிறப்பு தொடர்பாக, சிந்தனை வடிவங்களுடன் இணைக்கப்பட்டுள்ள மொழிவளம் குறித்த கேள்வியானது ஓரளவிற்கு விவாதிக்கப்பட வேண்டும். இந்த விஷயம் குறித்து இளைய இளைஞர்களுடனான ஒரு உரையாடலில், பொதுவாக, உயர்ந்த, மேலும் உயர்ந்த நிலைகளை அடைய, நமது வெளிப்படுத்தும் திறன்களை

வளர்த்துக் கொள்ள வேண்டும் என்பதை விளக்குவது போதுமானது. நாம் படிக்கவும் படித்ததன் பொருளைப் புரிந்துகொள்ளக் கூடியவர்களாகவும் இருக்கவேண்டும்; நம் எண்ணங்களைத் தெளிவாக வெளிப்படுத்தக் கற்றுக்கொள்ள வேண்டும். இந்தச் சூழலில்தான், உயிர்ப்பூட்டுனர்கள் பெரும்பாலும் இளைய இளைஞர்கள் படிக்கும் நூல்களை அறிமுகப்படுத்துவது பயனுள்ளதாக இருக்கும், அவற்றில் சிலவற்றை நீங்கள் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ, பாடப்பிரிவில் முன்னதாக ஆய்வு செய்தீர்கள்.

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

- இளைய இளைஞர்களின் ஆன்மீக சக்தியூட்டுவதற்கான ஒரு திட்டத்தில் திருவாசகங்களில் இருந்து பத்திகளை மனப்பாடம் செய்வதற்கு உரிய முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். மனப்பாடம் பற்றிய கேள்வி, குழுவின் ஆரம்ப கூட்டங்கள் ஒன்றில் உரையாடலின் தலைப்பாக இருக்க வேண்டும். உயிர்ப்பூட்டுனர்கள் தங்கள் இளம் நண்பர்களுக்கு கடவுளுடைய வார்த்தையின் தனித்துவமான சக்தி மற்றும் அவர்கள் சிறந்து விளங்க பாடுபடும்போது அவர்களின் வாழ்க்கையில் அதன் தாக்கத்தை அறிந்துகொள்ள உதவ வேண்டும். அத்தகைய விவாதத்தின் மூலம், திருவாசகங்களிலிருந்து பல பகுதிகளை மனப்பாடமாக அறிந்து கொள்வதன் நன்மைகளை அவர்கள் அடையாளம் கண்டுகொள்வார்கள்.

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

- குழுவானது ஆன்மீக சீர்சிறப்பிற்காகப் பாடுபட உயிர்ப்பூட்டுனர்கள் முதல் சில கூட்டங்களில் வலியுறுத்துவது பயனுள்ளதாக இருக்கும், அதன் உறுப்பினர்கள் வலுவான நட்பை வளர்த்துக் கொள்ள வேண்டும் மற்றும் அதிகளவிலான மேலும் அதிகளவிலான ஒற்றுமையை அடைய வேண்டும். உயிர்ப்பூட்டுனர்கள் பெரும்பாலும் இளைய இளைஞர்கள் நட்பு, ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தின் கருப்பொருள்களை திருவாசகங்களின் மேற்கோள்களின் அடிப்படையில் ஆராய்வதற்கு உதவுவது பயனுள்ளதாக இருக்கும்.

____________________________________________________________

____________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

- நட்பு மற்றும் ஒற்றுமையின் கருப்பொருள்கள் பற்றிய விவாதங்கள், குழுவின் உறுப்பினர்கள் ஒருவரையொருவர் எவ்வாறு தொடர்புகொள்வார்கள் என்பது பற்றிய உரையாடலுக்கு இயல்பான தொடக்கத்தை வழங்க முடியும். அவர்கள் ஒருவருக்கொருவர் கவனம் கொடுத்துக் கேட்பார்கள்; அவர்களில் ஒருவருக்கு ஒரு கருத்தை வெளிப்படுத்துவதில் சிரமம் இருந்தாலும், அவர்கள் எப்போதும் ஒருவரையொருவர் புரிந்துகொள்ள முயற்சிப்பார்கள்; அவர்களில் எவரும் பகிர்ந்து கொள்ள வேண்டியதை அவர்கள் ஒருபோதும் குறைத்து மதிப்பிட மாட்டார்கள் - இது போன்ற ஒரு உரையாடலின் மூலம் அவர்கள் ஒரு குழுவாக ஒன்றிணைக்கக்கூடிய சில முடிவுகளின் எடுத்துக்காட்டுகள் ஆகும்.

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

- குழுவின் ஆரம்ப கூட்டங்களில் ஒன்றில் சேவை என்பது ஒரு முக்கியமான தலைப்பாகும். மனிதர்களாகிய நாம் அனைவரும் ஒருவரையொருவர் சார்ந்து இருக்கிறோம் என்பதை இளைய இளைஞர்களுக்கு நினைவூட்டலாம். நாம் அனைவரும் ஒரே மனிதக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், நமது சமூகங்களின் நிலைமைகளை மேம்படுத்த எங்களால் முடிந்த அனைத்தையும் செய்ய வேண்டும். நம்மைச் சுற்றியுள்ளவர்களிடமிருந்து உதவி பெறாவிட்டால் அது எப்படி இருக்கும் என்று கற்பனை செய்வது சில நேரங்களில் இளைய இளைஞர்களுக்கு சேவையின் முக்கியத்துவத்தை அடையாளம் காண உதவக்கூடும்.

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

- சேவை பற்றிய விவாதமானது மற்றவர்களுக்கு சேவை செய்ய தனிநபரின் முயற்சிகள் பற்றிய கேள்விக்கு அப்பால் சென்று இளைய இளைஞர்கள் ஒரு குழுவாக என்ன செய்ய முடியும் என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும். நிச்சயமாக, அவர்களின் ஆரம்ப முயற்சிகள் குறுகிய காலத்திற்கு, எளிதில் அடையக்கூடிய இலக்குகளுடன் இருப்பது முக்கியம். இந்த வழியில், அவர்கள் தங்கள் கூட்டுத் திறனில் நம்பிக்கையைப் பெறுவார்கள் மற்றும் ஒன்றாக வேலை செய்யவும் கற்றுக்கொள்வதன் மூலம் மேலும் நீடித்த சேவைத் திட்டங்களை மேற்கொள்வதற்கான வாய்ப்பினைத் திறப்பார்கள். ஆரம்பத்திலிருந்தே, உயிர்ப்பூட்டுனர்கள் இளைஞர்களை தங்கள் சமூகத்தின் வாழ்க்கையைப் பற்றியும் அதன் முன்னேற்றத்திற்கு அவர்கள் எவ்வாறு பங்களிக்க முடியும் என்பதைப் பற்றியும் சிந்திக்கும் ஒரு செயல்முறையை அமைப்பதில் வழிகாட்ட வேண்டும். சமூகத்தைப் பற்றிய அவதானிப்பு கூற்றுகளைக் கூறிட அவர்களுக்குத் தேவைப்படும் கேள்விகளைக் கேட்பது இது தொடர்பாக அவர்களுக்கு உதவும். எனவே, அவர்கள் சமூகத்தில் நோய்வாய்ப்பட்ட ஒருவரைச் சந்திப்பது போன்ற எளிய சேவைச் செயலில் தொடங்கி, படிப்படியாக ஒரு திட்டத்தை மேற்கொள்வதற்குச் செல்லலாம்- உதாரணமாக, மரங்களை நடுதல்-அதில் அவர்கள் பொருத்தமான உள்ளூர் நிறுவனங்களுடன் கலந்தாலோசிக்க வேண்டும், நண்பர்கள் மற்றும் பெற்றோர்களிடமிருந்து உதவி பெற வேண்டும் மற்றும் நீண்ட கால ஏற்பாடுகளை செய்யுங்கள். இயற்கையாகவே, குழுவின் முதல் சில கூட்டங்களின் போது, திறமையான ஒத்துழைப்பிற்குத் தேவையான சில திறன்கள் மற்றும் திறனாற்றல்க்ள் மற்றும் மனோபாவங்கள் மற்றும் குணங்கள் ஆகியவை விவாதிக்கப்படுகின்றன.

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

- ஆரோக்கியமான பொழுதுபோக்கு, குறிப்பாக விளையாட்டு, இளைய இளைஞர் குழுவின் முதல் கூட்டங்களில் பேச வேண்டிய மற்றொரு தலைப்பு ஆகும். மீண்டும், சம்பந்தப்பட்ட கருத்துக்கள் மற்றும் பிரச்சனைகள் குறித்த ஆய்வுக்கு மேலதிகமாக, குழுவின் கூட்டங்களின் போது அல்லது சிறப்பு சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளக்கூடிய பொழுதுபோக்கு நடவடிக்கைகளை அடையாளம் காண உதவ உயிர்ப்பூட்டுனர்கள் விரும்புவார்கள். இந்த விஷயத்தில் ஒன்றை எச்சரிப்பது அவசியமாகிறது: தீவிர உடல்ரீதியான நடவடிக்கைகள் இளைய இளைஞர்கள் கொண்டிருக்கும் ஆற்றலின் இயல்பான வெளிப்பாடாகும். உலகெங்கிலும் உள்ள அனுபவமானது, அதாவது ஒரு குழுவில் விளையாட்டை விட கலைசார்ந்த நடவடிக்கைகளுக்கு ஆதரவளிப்பதானது ஒரு தேர்வு செயல்முறையைத் துவக்குகிறதென்றும், அதில் சில இளைஞர்கள் தங்கள் பங்கேற்பைத் தொடர்வதில் தயக்கமாக உணர்வார்கள் என்பபதைத் தெளிவுபடுத்தியிருக்கிறது.

________________________________________________________________________

________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

மேலே கொடுக்கப்பட்ட அனைத்து விவரங்களையும் பொறுத்தமட்டில், உயிர்ப்பூட்டுனர்கள் அனுபவத்தைப் பெறும்போது, அவர்கள் உயர்ந்த லட்சியங்களை நிலைநிறுத்தக் கடுமுயற்சி செய்யும் பல்வேறு பாடநூல்களைப் படித்ததன் மூலம் பெறப்பட்ட நுண்ணறிவின் நடைமுறை வெளிப்பாடான செயல்பாடுகளை ஒருவரையொருவர் பூர்த்தி செய்யும் செயல்களை வகுத்து செயல்படுத்துவதில் இளைய இளைஞர்களுக்கு சிறந்த முறையில் உதவ முடியும் என்பதை உணர வேண்டியது அவசியம்.

# பகுதி 30

இந்த நூலின் முதல் இரண்டு பாடப்பிரிவுகளில், முதன்மையாக கருத்தியல் சார்ந்ததாக இருந்த நமது விவாதங்களிலிருந்து, உயிர்ப்பூட்டுனராகப் பணியாற்றுவதற்கான உங்கள் ஆயத்தங்கள், இந்த பாடப்பிரிவில், சில நடைமுறை பரிமாணங்களுக்கு நகர்ந்துள்ளது. சேவையின் இந்த அரங்கில் உங்களுக்கு அனுபவம் கிடைக்கும் போது, பிரதிபலிப்பிற்கான யோசனைகளை இந்த நூலின் பக்கங்கள் உங்களுக்கு தொடர்ந்து வழங்கும். குறிப்பாக முந்தைய பகுதியில் இருக்கும் விவரங்கள் பயனுள்ளதாக இருப்பதை பல உயிர்ப்பூட்டுனர்கள் உணர்ந்து, மீண்டும் மீண்டும் அவற்றைப் பார்த்து, தங்களின் அனுபவங்களையும் தங்களுடைய சக உயிரிப்பூட்டுபவர்களுடனான கலந்துரையாடல்களையும் நினைவில் வைத்து கொள்ள ஒரு நோட்டுபுத்தகத்தை பராமரிக்கிறார்கள். அதே வேளை, நீங்கள் மேற்கொள்ளவிருக்கும் முயற்சிகளின் தாத்பரியங்கள் பற்றி பிரதிபலித்து இந்த பிரிவை முடிக்குமாறு ஆலோசிக்கப்படுகிறது. உலக முழுவதுமுள்ள இளைஞர்களுக்குக் கூறப்பட்ட, உலக நீதி மன்றத்தின் வார்த்தைகள், இந்த சேவை பாதையை பின்தொடர விரும்பும் அனைவருக்கும் பொருத்தமாக இருக்கும்:

> **“ஆச்சரியத்திற்கு இடமில்லாமல், அவர்களது நெறிமுறை மற்றும் ஆன்மீக முன்னேற்றத்துடன், கூட்டு சேவைக்கான ஆற்றல் மற்றும் மெய்யான நட்புறவு ஆகியவை அவர்களில் பேணிவளர்ப்பதில், இளைய இளைஞர்களுக்கு உதவுவதில், மற்றும் குழந்தைகளுக்கு உதவுவதிலும் கூட, அதிகப்படியான அனுபவங்களை உங்கள் வயது குழுமத்தினரே பெறுகின்றனர். அனைத்திற்கும் பிறகு, இந்த இளம் ஆன்மாக்கள் கடந்து செல்ல வேண்டிய உலகினுடன், அதன் படுகுழிகள் மற்றும் அதன் வாய்ப்புகள் பற்றிய விழிப்புணர்வு, ஆன்மீக உறுதிப்பாடு மற்றும் தயார்படுத்துதலின் முக்கியத்துவத்தை நீங்கள் உடனடியாக மதித்துணருகின்றீர்கள். மனிதகுலத்தின் அகவாழ்வு மற்றும் புற சூழ்நிலைகள் ஆகிய இரண்டையும் தன்மை மாற்றமடைய செய்வதற்காக பஹாவுல்லா தோன்றியுள்ளார் என்ற விழிப்புணர்வை கொண்டுள்ள நீங்கள், உங்களை விட இளையவர்களை அவர்களது குணவியல்புகளை செம்மைப்படுத்துவதற்கும் மற்றும் அவர்களது சமூகத்தின் நல்வாழ்விற்கான பொறுப்பினை ஏற்க தயார்படுத்துவதற்கும் நீங்கள் உதவுகிறீர்கள். அவர்கள் இளமை பருவத்தினை அடையும் போது, அவர்களின் உணர்வுகளின் சக்தியினை மேம்படுத்த**

உதவுகிறீர்கள், அதனுடன் ஒரே வலிமையான நெறிமுறை உணர்வினை அவர்களுக்குள் வேரூன்ற உதவுகிறீர்கள். இதை செய்கையில், பஹாவுல்லாவின் "சொற்களேயன்றி செயல்களேயே உங்கள் அணிகலனாக கொள்வீர்களாக" என்ற அறிவுறுத்தலுக்கு செவிசாய்க்கும் போது உங்களின் சொந்த குறிக்கோளின் உணர்வு மேலும் தெளிவாக வரையறுக்கப்படுகின்றது."[52]

## குறிப்பீடுகள்


1. From a letter dated 11 June 2006 written on behalf of the Universal House of Justice to an individual, in *Social Action: A Compilation Prepared by the Research Department of the Universal House of Justice* (Wilmette: Bahá'í Publishing Trust, 2020), no. 117, p. 62.
2. From a letter dated 19 July 2006 written on behalf of the Universal House of Justice to two individuals.
3. From a letter dated 17 April 1936 written on behalf of Shoghi Effendi to an individual, published in *Directives from the Guardian* (New Delhi: Bahá'í Publishing Trust, 1973), p. 84.
4. 'Abdu'l-Bahá, in the compilation *Social Action*, no. 190, pp. 112–13.
5. From a talk given on 20 September 1912, published in *The Promulgation of Universal Peace: Talks Delivered by 'Abdu'l-Bahá during His Visit to the United States and Canada in 1912* (Wilmette: Bahá'í Publishing, 2012), par. 9, p. 471.
6. From a talk given by 'Abdu'l-Bahá on 4 May 1912, ibid., par. 9, p. 125.
7. Report of 'Abdu'l-Bahá's words as cited by J. E. Esslemont, *Bahá'u'lláh and the New Era: An Introduction to the Bahá'í Faith* (Wilmette: Bahá'í Publishing, 2006, 2017 printing), p. 101.
8. *The Promulgation of Universal Peace*, p. 123. 9.
9. From a talk given by 'Abdu'l-Bahá on 26 May 1912, ibid., par. 1, p. 204.
10. 'Abdu'l-Bahá, *Some Answered Questions* (Wilmette: Bahá'í Publishing, 2014, 2016 printing), no. 84.2, p. 440.
11. *Tablets of Abdul-Baha Abbas* (New York: Bahá'í Publishing Committee, 1915, 1940 printing), vol. 2, p. 276. (authorized English translation)
12. *Khitábát: Talks of 'Abdu'l-Bahá* (Hofheim-Langenhain: Bahá'í-Verlag, 1984), pp. 131–32. (authorized English translation)
13. From a talk given by 'Abdu'l-Bahá on 4 May 1912, published in *The Promulgation of Universal Peace*, par. 8, p. 124.
14. *Selections from the Writings of 'Abdu'l-Bahá* (Wilmette: Bahá'í Publishing, 2010, 2015 printing), no. 230.1, p. 428.
15. From a talk given on 10 November 1911, published in *Paris Talks: Addresses Given by 'Abdu'l-Bahá in 1911*, Wilmette: Bahá'í Publishing, 2006, 2016 printing), no. 29.41, p. 113.
16. *Abdul Baha on Divine Philosophy* (Boston: The Tudor Press, 1918), p. 30.
17. *Selections from the Writings of 'Abdu'l-Bahá*, no. 24.1, pp. 78–79.
18. *Tablets of Abdul-Baha Abbas* (New York: Bahá'í Publishing Committee, 1909, 1930 printing), vol. 1, p. 63. (authorized English translation)
19. *Selections from the Writings of 'Abdu'l-Bahá*, no. 155.4, p. 253.
20. 'Abdu'l-Bahá, *The Secret of Divine Civilization* (Wilmette: Bahá'í Publishing, 2007, 2016 printing), par. 118, p. 83.
21. *The Tabernacle of Unity: Bahá'u'lláh's Responses to Mánikchí Ṣáḥib and Other Writings* (Haifa: Bahá'í World Centre, 2006), no. 1.11, pp. 7–8.
22. From a talk given by 'Abdu'l-Bahá on 27 October 1911, published in *Paris Talks*, no. 12.8, p. 42.
23. *Tablets of Abdul-Baha Abbas*, vol. 1, pp. 71–72.
24. *Selections from the Writings of 'Abdu'l-Bahá*, no. 97.1, pp. 177–78.
25. *Tablets of Bahá'u'lláh Revealed after the Kitáb-i-Aqdas* (Wilmette: Bahá'í Publishing Trust, 1988, 2005 printing), no. 6.40, p. 72.

26. *The Proclamation of Bahá'u'lláh to the Kings and Leaders of the World* (Haifa: Bahá'í World Centre, 1967, 1978 printing), p. 78.
27. *Gleanings from the Writings of Bahá'u'lláh* (Wilmette: Bahá'í Publishing, 1983, 2017 printing), XLIII, par. 2, p. 104.
28. From a talk given by 'Abdu'l-Bahá on 3 December 1912, published in *The Promulgation of Universal Peace*, par. 3, pp. 648–49.
29. *Tablets of Bahá'u'lláh Revealed after the Kitáb-i-Aqdas*, no. 9.20, p. 143.
30. Ibid., no. 11.28, p. 172.
31. *Tablets of Abdul-Baha Abbas*, vol. 1, p. 31. (authorized English translation)
32. Ibid., p. 194. (authorized English translation)
33. Bahá'u'lláh, *Epistle to the Son of the Wolf* (Wilmette: Bahá'í Publishing Trust, 1988, 2016 printing), p. 12.
34. *Tablets of Bahá'u'lláh Revealed after the Kitáb-i-Aqdas*, no. 11.27, p. 172.
35. Ibid., no. 11.30, pp. 172–73.
36. Ibid., no. 13.15, p. 199.
37. *Gleanings from the Writings of Bahá'u'lláh*, XVIII, par. 1, p. 47.
38. *Prayers and Meditations by Bahá'u'lláh* (Wilmette: Bahá'í Publishing Trust, 1987, 2008 printing), XXXII, p. 41.
39. *The Tabernacle of Unity*, no. 1.2, p. 4.
40. From a talk given by 'Abdu'l-Bahá on 5 May 1912, published in *The Promulgation of Universal Peace*, par. 3, p. 130.
41. *Prayers and Meditations*, CXIII, p. 191.
42. Bahá'u'lláh, in *Bahá'í Prayers: A Selection of Prayers Revealed by Bahá'u'lláh, the Báb, and 'Abdu'l-Bahá* (Wilmette: Bahá'í Publishing Trust, 2002, 2017 printing), pp. 181–82.
43. *Prayers and Meditations*, CLXXVIII, p. 299.
44. Ibid., LXXIX, pp. 131–32.
45. Bahá'u'lláh, in *Bahá'í Prayers*, pp. 219–20.
46. 'Abdu'l-Bahá, ibid., pp. 243–44.
47. Ibid., p. 28.
48. Bahá'u'lláh, ibid., p. 183.
49. The Báb, ibid., p. 186.
50. 'Abdu'l-Bahá, ibid., p. 197.
51. *Prayers and Meditations*, XCI, pp. 154–55.
52. From a message dated 1 July 2013 written to the participants in the forthcoming 114 youth conferences throughout the world, published in *Framework for Action: Selected Messages of the Universal House of Justice and Supplementary Material, 2006–2016* (West Palm Beach: Palabra Publications, 2017), no. 27.4, p. 176.